**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி - 627012**

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI - 627012**

**தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்**

**DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

# இலக்கணம் - நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை

**இளங்கலை இரண்டாமாண்டு**

**மூன்றாம் பருவம்**

**2024**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி012 627 –**

# இலக்கணம் - நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை

## இயல் 01. அகத்திணை மரபு

அகப்பொருள் வகை - கைக்கிளை - ஐந்திணை - பெருந்திணை - முதல், கரு, உரிப்பொருள்கள் - கைக்கோள் - களவிற் புணர்ச்சி - வகை - இயற்கைப்புணர்ச்சி - குறியிடம் - களவிற் பிரிவு - வரைவு - அறத்தொடு நிற்றல் - கற்பு - கற்பிற் பிரிவு.

## இயல் 02. களவொழுக்கம்

கைக்கிளை - இயற்க்கைகப் புணர்ச்சி - வன்புறை - பிரிவு - பிரிவுழிக் கலங்கல் - இடந்தலைப்பாடு - பாங்கற் கூட்டம் - பாங்கியற் கூட்டம் - வரைவு கடாதல் - ஒருவழி தணத்தல் - வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் - வரைவு மலிதலும் மறத்தோடு நிற்றலும் - களவு வெளிப்பாடு - கற்பொடு புணர்ந்தகவ்வை.

## இயல் 03. கற்பொழுக்கம்

இல்வாழ்க்கை - கற்பிற் பிரிவு - ஊடற்குரிய கிளவிகள் - கிளவித்தொகைகள் - கூற்றுக்குறியார் - கூற்றுக்கு உரிமை இல்லாதார் - உவமவகை - அகப்புறப்பெருந்திணை - தலைமக்கட் பெயர்.

## இயல் 04. புறத்திணைகள்

வெட்சி முதல் பாடாண்திணை வரை - புறப்பொருள் வெண்பாமாலை நூற்பாக்கள் மட்டும்.

## இயல் 05. புறத் துறைகள்

அரசவகை - உண்டாட்டு - இயன்மொழி வாழ்த்து - ஏறாண் முல்லை - எருமைமறம் - கடவுள் வாழ்த்து - குடைமங்கலம் - குதிரைமறம் - கையறு நிலை - செருவிடை வீழ்தல் - செவியறிவுறூஉ - தாபத நிலை - தபதார நிலை - தானை நிலை - தானை மறம் - தொகைநிலை - நல்லிசைவஞ்சி - நூழிலாட்டு - நெடுமொழி - பரிசில் துறை - புலவறாற்றுபடை - பூவை நிலை - பெருஞ்சோற்றுநிலை - பேய்க் காஞ்சி - பொருண்டிமாழிக் காஞ்சி - மகட்பாற் காஞ்சி - மறக்களவழி - மூதின் முல்லை - வஞ்சினக் காஞ்சி - வல்லாண் முல்லை - வாண்மங்கலம் - விறலியாற்றுப்படை.

**இயல் 01**

# அகப்பொருள் விளக்கம

**அகத்திணையியல்**

மனிதவாழ்வின் மேன்மைக்கு உதவுவளவாகத் தமிழர் அமைத்துக்கொண்ட உறுதிப்பொருட்கள் நான்கு அவை அறம், பொருள். இன்பம், வீடு என்பனவாம். அவற்றுள் இல்லற வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது இன்பமாகும். அவ்இன்பமே அகத்திணை என்று தமிழ் மக்களால் சிறப்பிக்கப்படுகிறது. அகத்திணைக்கு உரிய செய்திகளைப் பொதுவாகத் தொகுத்துக் கூறுகின்ற காரணத்தால் இவ்வியல் அகத்திணையியல் என அழைக்கப் பெறுகிறது. இதன்கண் அமைந்த நூற்பாக்கள் 116.

**அகப்பொருளின் வகைகள்**

01. **மலர்தலை உலகத்துப் புலவோர் ஆய்ந்த**
**அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை**
**பெருந்திணை எனஎழு பெற்றித்(து) ஆகும்.**

பரந்துபட்ட இடத்தை உடையது தமிழகம். இந்தமிழகத்துப் புலவர்களால் ஆராய்ந்து தெளிந்த அருந்தமிழாக விளங்குவது அகப்பொருள். இது 1. கைக்கிளை 2. ஐந்திணை 3. பெருந்திணை என்னும் ஏழு கூறுகளை உடையதாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. (ஐந்திணை - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன்.

**அகப்பொருளைச் சொல்லும் முறை**

02. **அதுவே,**
**புனைந்துரை உலகியல் எனும்திறம் இரண்டிலும்**
**தொல்லியல் வழாமல் சொல்லப் படுமே.**

அவ் அகப்பொருள் 1 சுவைபடக் கூறும் பொய்யுரை புனைந்துரை) 2. உள்ளதைக் கூறுதல் (உலகியல்) ஆகிய இரண்டு வகையிலும் முன்னோர் கூறிய பழையநெறி மாறாமல் கூறப்படுவதாகும்.

**விளக்கம்**

புனைந்துரை என்பது தலைவனும் தலைவியும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றிப் பிணி, மூப்பு, சாக்காடு இல்லாமல் வாழ்ந்தவர் எனக் கூறுதல், தலைவன் இடையூறு அடையாமல் தலைவியைக் கண்டு சென்றான் எனக் காட்டுதல் இவற்றைப் போன்று புலவரால் படைத்துக் காட்டும் பிறவும் புனைந்துரைகளாம். உலகியல் என்பது எப்புனைவும் இன்றி உலகில் நடப்பவற்றை அப்படியே கூறுதல் ஆகும்.

**கைக்கிளைக்கு உரிய இலக்கணம்**

**03. அவற்றுள்,**
**கைக்கிளை உடையது ஒருதலைக் காமம்**

மேற்சொல்லப்பட்ட ஏழு வகைகளுள் கைக்கிளையாவது ஒருதலைக் காமம் ஆகும்.

தலைவியைத் தனியிடத்துக் கண்ட தலைவனுக்குத் தலைவி மீது காதல் தோன்றுதல் ஒருதலைக் காமம் ஆகும். சிறுபான்மை, தலைவனைக் ’ கண்ட தலைவிக்கும் காதல் தோன்றுவதுண்டு. இக்காரணம் பற்றிக் கைக்கிளை 1. ஆண்பாற் கைக்கிளை 2. பெண்பாற் கைக்கிளை என இரண்டு வகைப்படும்.

(கை - சிறுமை’ கிளை-உறவு சிறுமையாகிய உறவே கைக்கிளை என்பதன் பொருள் ஆகும்)

**ஐந்திணைக்கு உரிய இலக்கணம்**

**04 ஐந்திணை உடையது அன்புடைக் காமம்.**

ஐந்திணையாவது அன்புடைக் காமம் ஆகும்.
ஒத்த தலைவன், தலைவி ஆகிய இருவருள் ஒருவர் மீது மற்றொருவருக்கு அன்பு தோன்றுதல். இது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று கூறப்படுகின்ற ஐவகை நிலத்தின்கண்ணும் தோன்றும் ஒழுக்கமாகும்.

**பெருந்திணைக்கு உரிய இலக்கணம்**

**05. பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்.**

பெருந்திணையாவது பொருந்தாத காதலாகும்.
அதாவது தலைவன், தலைவியைப் பொருந்தாத முறையில் விரும்புவது. இது ஒப்புமையில்லாத் தலைமக்கள் மாட்டுத் தோன்றுவது. இவ்வொழுக்கம் மிகுதியாகப் பின்பற்றப்பட்டதால் பெருந்திணை என வழங்கப்பட்டதாக இளம்பூரணர் குறிக்கின்றார். (பெருமை உலகத்தில் பெருவழக்காகிய,திணை- ஒழுக்கம்’ நடைமுறை) குறைந்த அகவையுடைய பெண்ணும் முதிர்ந்த ஆணும், குறைந்த அசுவையுடைய ஆணும் முதிர்ந்த பெண்ணும் விரும்புதல்.

**திணையின் பெயர் (5)**

**06. குறிஞ்சி பாலை முல்லை மருதம்**
**நெய்தல் ஐந்திணைக்கு எய்திய பெயரே.**

1 குறிஞ்சி 2 பாலை 3. முல்லை 4, மருதம் 5. நெய்தல் என்னும் இவ்வைந்தும் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பெயர்களாகும். எஞ்சிய கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டுக்கும் நிலம் என்பது தனித்து வருக்கப்படவில்லை. தொல்காப்பியர்.

**மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.**

**(அகத்.நூ.5)**

என நான்கு திணைகளுக்கு மட்டுமே நிலத்தை வரையறை செய்து கூறுகிறார். பாலை என்பது நிலையான நிலப்பிரிவு அன்று. குறிஞ்சியும்
முல்லையும் மழைவளம் பெறாவிட்டால் பாலையாக மாறும். மழை வளங்களைப் பெற்று அவ்வல் நிலங்களாக விளங்கும். இளங்கோவடிகள்,

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**நல்இயல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்,**

**(சிலம்பு)**

எனப் பாலை நிலத்தின் இயல்பைக் கூறுகிறார். மேலும்

பாலை சான்ற கரம்சேர்ந்து ஒருசார் என மதுரைக்காஞ்சி (அடி -314) குறிக்கிறது. தொல்காப்பியர் பாலை நிலத்தை நடுவுநிலைத் திணை எனக் குறிப்பிடுகிறார். இச்செய்திகளில் இருந்து தமிழரின் ஐவகை நிலப்பாகுபாட்டை அறியலாம்.

இவ்ஐந்து நிலங்களையும் இப்படித்தான் வரிசைப்படுத்திக் கூறவேண்டும் என்னும் நியதி இல்லை தொல்காப்பியரும் சொல்லிய முறையால் சொல்லவும் படும் எனக் குறிப்பிடுகிறார். குறிஞ்சி முதலாக அமைந்த ஐந்திணைகளும் அவ்வவ் நிலத்தைச் சேர்ந்த சிறந்த கருப்பொருள்களால் பெயர் பெற்றன.

**ஐந்திணைக்கும் உரிய பொருள்கள்**

07. **அவைதாம்,**
**முதற்பொருள்! கருப்பொருள் உரிப்பொருள் எனமுறை**
**நுதற்பொருள் மூன்றினும் நுவலப் படுமே.**

மேற்கூறப்பட்ட குறிஞ்சி முதலாகிய ஐந்திணைகளும் முதற்பொருள் 2 கருப்பொருள் 3. உரிப்பொருள் என்று கருதத்தக்க பொருள்கள் மூன்றாலும் சொல்லப்படும்.

திணைகளை உணர்வதற்கு அடிப்படையாய் அன்னவும் பொருள்களே முதல், கரு. உரி என்னும் மூன்றும் ஆகும். இவ இவற்றுள். முதற்பொருளினும் கருப்பொருள் சிறந்தது. கருப்பொருளினும் உரிப்பொருள் சிறந்ததாகக் கொள்ளப்படும்.

**முதற்பொருளின் வகைகள்**

**08. நிலமும் பொழுதும் என முதல் இரு வகைத்தே**

திணைகளுக்குரிய முதற்பொருளாவது 1. நிலம் 2. பொழுது (காலம் என்று இருவகைப்படும்.

முதற்பொருள் என்பது அடிப்படைப் பொருளாகும். அதாவது கருப்பொருள் பிறப்பதற்கு - தோன்றுவதற்கு இவ்விரு பொருள்களே அடிப்படையானமையால் இவற்றை முதற்பொருள் என- முன்னோர் குறித்தனர்.

**நிலங்களின் வகைப்பாடு**

**09. வரையே கரமே புறவே பழனம்**
**திரையே அவைஅவை சேர்தரும் இடனே**
**னர் ஐவகைத்து அனையியல் நிலமே**

முதற்பொருள்களுள் ஒன்றாகிய திலம் பத்து வகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. நிலங்களே அல்லாமல் அவ்வன் நிலத்தைச் சார்ந்த பகுதிகளும் முதற்பொருள் ஆகும். அவை

1. (அ) கவரை (மலை) (ஆ) வரை சார்ந்த இடம் (குறிஞ்சி)
2. (அ) சுரம் (மணல்) (ஆ)க சார்ந்த இடம் (பாலை)
3. (அ) புறவு (காடு) (ஆ) புறவு சார்ந்த இடம் ((முல்லை)
4. (அ) பழனம் (வயல்) (ஆ)பழனம் சார்ந்த இடம் (மருதம்)
5. (அ) திரை கடல் ஆ) திரை சார்ந்த இடம் (நெய்தல்)

**காளங்களின் வகைப்பாடு**

**10. பெரும்பொழுது என்றா சிறுபொழுது என்றா**
**இரண்டு கூற்றது இயம்பிய பொழுதே.**

முதற்பொருளின் கூறாகிய காலம் 1. பெரும்பொழுது 2. சிறுபொழுது என்னும் இரண்டு பகுதிகளை உடையது.
ஆண்டின் கூறாகக் கணக்கிடப் பெறுவது பெரும்பொழுது நாளின் கூறாகக் கணக்கிடப்பெறுவது சிறுபொழுது

**பெரும்பொழுதின் வகைகள்**

**11. காரே கூதிர் முன்பனி பின்பனி**
**சீர்இள வேளில் வேனில் என்றாங்கு**
**இருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே.**

புலவரால் ஆராயப்பெற்ற பெரும்பொழுது 1. கார் 2. கூதிர் 3. முன்பனி 4. பின்பளி 5, இளவேனில் 6. முதுவேனில் என ஆறுவகைப்படும்.

பெரும்பொழுது என்பது பருவத்தைக் குறிக்கும் அவை கார்முதல் ஆறுபருவங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஆவணி முதல் இவ்விரண்டு. திங்கள் ஒவ்வொன்றாக ஓர் ஆண்டு அறுவகைப்படும்.

அவற்றிற்குரிய காலம்,

1. ஆவணி, புரட்டாசி - கார்காலம்

2. ஐப்பசி, கார்த்திகை - கூதிர் காலம்

3. மார்கழி,தை - முன்பனிக் காலம்

4. மாசி, பங்குனி - பின்பனிக் காலம்

5.சித்திரை, வைகாசி - இளவேனிற்காலம்

6.ஆனி,ஆடி - முதுவேனிற்காலம்

என்பன ஆகும்.

**சிறுபொழுதின் வகைகள்**

**12. மாலை யாமம் வைகறை ஏற்படு**
**காலை வெங்கதிர் காயும்தண் பகல் எனக்**
**கைவகைச் சிறுபொழுது ஐவகைத்து ஆகும்.**

மாலை 2 நடு இரவு 1. வைகறை 4 கதிரவன் தோன்றும் காலை 5. கதிரவனின் ஒளிமிகுந்த பொழுதாகிய நண்பகல் ஆகிய ஐந்தும் அவ்வவ ஒழுக்கத்திற்குரிய சிறுபொழுதுகள் ஆகும்.

1. மாலை : 2 முதல் 10 மணி வரை

2. யாமம் : இரவு 10 முதல் 2 மணி வரை

3.வைகறை : 2 முதல் 6 மணி வரை

4. எற்படு காலை : விடியல் 6 முதல் 10 மணி வரை

5. நண்பகல் : 10 முதல் 2 மணி வரை

இவற்றுள் மாலையாவது, சூரியன் மறைவதற்கு முன்னும் பின்னும் உள்ள காலம்' யாமம் நள்ளிரவு, வைகறை-விடியற்காலை' எற்படு காலை- கதிரவன் தோன்றுகின்ற காலைப் பொழுது, நண்பகல்-உச்சிப் பொழுது,

சிறுபொழுது ஒன்றுக்கு நாழிகை பத்தாகும். ஒரு நாழிகை என்பது 24 நிமிடமாகும். 60 நாழிகை கொண்ட ஒரு நாளைத் தொல்காப்பியர் ஆறு சிறுபொழுதுகளாகப் பகுத்தார். ஆனால் நாற்கவிராச நம்பி ஐந்தாகப் பகுத்துள்ளார். ஆறு பெரும்பொழுதுகளுக்கு ஏற்பச் சிறுபொழுதுகளையும் ஆறாகப் பகுத்துரைப்பதே பொருத்தமுடையதாகும். இருப்பினும்,

**காலையும் பகலும் கையறு மாலையும்**
**ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்**
**பொழுதுஇடை தெரியின்**

**(பா.32)**

என்பது குறுந்தொகைப் புலவர் அள்ளூர் நன்முல்லையார் கூற்றாகும். முன்னோர் கருத்தை அடியொற்றி நாற்கவிராச நம்பியும் பொழுதை ஐந்தாகக் கொண்டார் எனக் கருதலாம்.

**குறிஞ்சிக்கு உரிய பொழுதுகள்**

13. **அவற்றுள்,**
**கூதிர் யாமம் முன்பனி என்றுஇவை**
**ஓதிய குறிஞ்சிக்கு உரிய ஆகும்.**

பெரும்பொழுதாகிய கூதிர்காலமும் சிறுபொழுதாகிய யாமமும் குறிஞ்சிக்குரிய சிறந்த பொழுதுகளாகும். பெரும்பொழுதாகிய முன்பனியும் குறிஞ்சிக்குப் பொருந்தும் பொழுதாயினும் கூதிர்காலத்தைப் போல் அத்துணைச் சிறந்தது ஆகாது.

**பாலைக்கு உரிய பொழுதுகள்**

14. **வேனில் நண்பகல் பின்பனி என்றுஇவை**
**பான்மையின் உரிய பாலை தனக்கே.**

பாலைக்குப் பெரும்பொழுதாகிய வேனிற்காலமும் சிறுபொழுதாகிய நண்பகலும் சிறப்புடைய பொழுதுகளாகும். பின்பனியாகிய பெரும்பொழுதும் பாலைக்குப் பொருந்தினும் வேனில் போல் அதுணைச் சிறந்தது ஆகாது.

**முல்லைக்கு உரிய பொழுதுகள்**

15. **மல்குகார் மாலை முல்லைக்கு உரிய.**

மிகுந்த கார்காலம் ஆகிய பெரும்பொழுதும் மாலைக்காலம் ஆகிய நிறுபொழுதும் முல்லைக்குரிய பொழுதுகளாகும்.

**மருதத்திற்கு உரிய சிறுபொழுது**

**16. இருள்புவர் காலை மருதத்திற்கு உரித்தே.**

இருள் புலர்கின்ற விடியற்காலை மருதத்திற்குரிய சிறுபொழுது ஆகும்.

**நெய்தற்கு உரிய சிறுபொழுது**

**17. வெய்யோன் பாடு நெய்தற்கு உரித்தே.**

கதிரவன் தோன்றுகின்ற எற்பாடு நெய்தல் திணைக்கு உரிய சிறுபொழுது ஆகும்.

**மருதம், நெய்தற்கு உரிய பெரும்பொழுதுகள்**

**18. மருதம் நெய்தல்என்று இவைஇரண் டற்க்கும்**
**உரிய பெரும்பொழுது இருமூன் றும்மே.**

மருதம், நெய்தல் ஆகிய இரண்டு நிணைகளுக்கும் (பெரும்பொழுதுகள் இவையென்று வரையிறை இன்மையால்) ஆறு பெரும்பொழுதுகளும் உரியன.

## கருப்பொருள்

முதற்பொருளாகிய நிலத்தையும் காலத்தையும் அடிப்படையாக கொண்டு பிறக்கும் (தோன்றும்) பொருள்களே கருப்பொருள்கள். இவை ஐவகை நிலத்திற்கும் இயற்கையாய் அமைந்தவை ஆகும்.

**கருப்பொருளின் வகைகள்**

**19. ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள் விலங்கு**
**ஊர் நீர் பூமரம் உணா பறை யாழ் பண்**
**தொழில் எனக் கருஈர் எழுவகைத்து ஆகும்.**

1. ஆரணங்காகிய தெய்வம் 2.உயர்ந்தோர் 3. அல்லோர் (உழைப்போர்) 4. பறவை
5. விலங்கு 6. ஊர் 7. நீர் 8. பூ 9. மரம் 10.உனர்வு 11. பறை 12. யாழ் 13. பண் 14. தொழில் என்னும் பதினான்கும் அவ்வம் நிலத்திற்கு உரிய கருப்பொருள்களாகும்.

**விளக்கம்**

இப்பதினான்கும் திணைகளுக்குப் பொதுவாகக் கூறப்பட்டுள்ளன. ஆயினும் அவை திணைக்கு ஏற்ப வேறுபடும். ஒரு நிலத்திற்குரிய கருப்பொருள் பிற நிலத்தில் காணப்படாது. அப்படிக் காணப்படின் அதனைத் திணைமயக்கம் எனக்கூறுவர்.

**குறிஞ்சித் திணையின் கருப்பொருள்**

20. **விறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்**
**குறத்தி கொடிச்சி குறவர் கானவர்**
**குறத்தியர் கிளிமயில் மறப்புலி குடாவடி**
**கறையடி சீயம்' சிறுகுடி அருவி**
**நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தள்**
**ஆரம் தேக்குஅகில் அசோகம் நாகம்**
**வேரல் ஐவனம் தோரை ஏனல்**
**கறங்கிசைத் தொண்டகம் குறிஞ்சியாழ் குறிஞ்சி**
**வெறிகோள் ஐவனம் வித்தல் செறிகுரல்**
**பைந்தினை காத்தல் செந்தேன் அழித்தல்**
**செழுங்கிழங்கு அகழ்தல் முழங்கிவீழ் அருவியொடு**
**கொழுஞ்சுனை ஆடல் குறிஞ்சிக் கருப்பொருளே.**

முருகன் முதலாகச் சுனையாடல் ஈறாகச் சொல்லப்பட்டன எல்லாம் குறிஞ்சிக்கு உரிய கருப்பொருள்களாகும்.

**விளக்கம்**

விறற்சேய்-வெற்றி, வலிமை உடைய முருகன், மறப்புலி வலிமை உடைய புலிர் குடாவடி - வளைந்த அடியை உடைய கரடி கறையடி (கறை -உரல்) உரல் போன்ற கால்களை உடைய யானை, சீயம்-சிங்கம். கறங்கிசைத் தொண்டகம் சுழன்று ஒலிக்கின்ற குறிஞ்சிப் பறை செறிஞரல் பைந்தினை - அடர்ந்த கதிர்களைக் கொண்ட பசிய நினைப்பயிர்.

**பாலைத்திணையின் கருப்பொருள்**

21. **கன்னி, விடலை காளை மீளி**
**இன்னகை எயிற்றி எயினர் எயிற்றியர்**
**மறவர் மறத்தியர் புறவுபருத்து எருவை**
**கழுகு, செந்நாய், கல்கெழு குறும்பு,**
**குழிவறும் கூவல், குராஅ மராஅ,**
**உழிஞ்சில் பாலை ஓமை இருப்பை**
**வழங்குகதிக் கொண்டன செழும்பதிக் கவர்ந்தன**
**பகைத்துடி, பாலையாழ், பஞ்சுரம் வெஞ்சமம்**
**பகற்சூறை யாடல் பாலைக்கருப் பொருளே.**

கன்னி முதலாகச் சூறையாடல் ஈறாகச் சொல்லப்பட்டன எல்லாம் பாலைக்கு உரிய கருப்பொருள்கள் ஆகும்.

**விளக்கம்**

கன்னி - அழிவற்ற துர்க்கை' மீளி-வலிமை மிக்க தலைவன், கல்கெழு குறும்பு - கல்லால் சூழப்பட்ட அரணை உடைய இருப்பிடம் குழிவறும் கூவல்-நீரற்ற கிணறு' வழங்குகதிக் கொள்ளல்

வழியில் போவோர், வருவோரிடம் இருந்து பறித்துக் கொள்ளுதல்’ செழும்பதிக் கவர்தல் வளமான ஊர்களுக்குச் சென்று பெரும்பொருளைக் கொள்ளை அடித்தல்.

**முல்லைத் திணையின் கருப்பொருள்**

**22. நெடுமால், குறும்பொறை நாடன் தோன்றல்**
**வடுவில் கற்பின் மனைவி கிழத்தி,**
**இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்,**
**கான வாரணம், மான்முவல், பாடி,**
**குறுஞ்சுனை கான்யாறு, குல்லை முல்லை**
**நிறங்கிளர் தோன்றி பிறங்கயர்ப் பிடவம்,**
**கொன்றை காபா மன்றலம் குருத்தம்,**
**தாற்றுக்கதிர் வரகொடு சாமை முதிரை,**
**ஏற்றுப்பறை முல்லை யாழ், சா தாரி,**
**சாலை வரகு தரமுடன் வித்தல்**
**அவைகளை கட்டல் அரிதல் கடாவிடல்**
**செலிகவர் கொள்றைத் தீங்குழல் ஊதல்**
**மூலின் மேய்த்தல் சேவினம் தழுவல்**
**கழுமிய குரலையொடு கான்யாறு என்றுஇவை**
**முழுதுடன் ஆடல் ஆடல் முல்லைக்கருப் பொருளே.**

நெடுமால் முதலாக முழுதுடன் ஆடல் ஈறாகச் சொல்லப்பட்டன எல்லாம் முல்லைக்குரிய கருப்பொருள்கள் ஆகும்.

**விளக்கம்**

கானவாரணம் — காட்டுக்கோழிர்: நிறங்கிளர் தோன்றி சிவந்த நிறமுடைய தோன்றிப் பூ’ பிறங்கலர்ப் பிடவம் - ஒளிர்கின்ற மலரை உடைய பிடவம்’ தாற்றுக்கதிர் வரகு - கொத்தாய்க் காய்க்கின்ற கதிரை உடைய வரகு மூவினம் - ஆடு, பசு, எருமை: கழுமிய குரவை -இணைந்து ஆடுகின்ற குரவை ஆட்டம்.

**மருதத்திணையின் கருப்பொருள்**

**23. இந்திரன்: ஊரன் பைந்தார் மகிழ்நன்**
**கெழுதகு கற்பின் கிழத்தி மனைவி,**
**உழவர் உழத்தியர் கடையர் கடைச்சியர்.**
**மழலை வண்டானம் மகன்றில் நாரை**
**அன்னம் போதா நன்னிறக் கம்புள்**
**குருகு தாரா, எருமை நீர்நாய்:**
**பெருகிய சிறப்பின் பேரூர் மூதூர்**

**ஆறு மனைக்கிணறு இலஞ்சி, தாமரை**
**நாறிதழ்க் கழுநீர் நறுமலர்க் குவளை,**
**காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதம்,**
**செந்நெல் வெண்நெல், அந்நெல் அரிகிணை**
**மன்றல் முழுவம்ப மருதயாழ், மருதம்,**
**மன்றணி விழாக்கோள் வயற்களை கட்டல்**
**அரிதல் கடாவிடல் அகன்குளம் குடைதல்**
**வருபுனல் ஆடல் மருதக் கருப்பொருளே.**

இந்திரன் முதலாக வருபுனல் ஆடல் ஈறாகச் சொல்லப்பட்டன எல்லாம் மருதத்திற்கு உரிய கருப்பொருள்கள் ஆகும்

**விளக்கம்**

நன்னிறக்கம்புள் நல்ல நிறமுடைய சம்பக்கோழி' இலற்சி குளம்பு நாறிதழ்க் கழுநீர்- மிகுந்த மணம் வீசும் இதழ்களைக் கொண்ட செங்கழுநீர் மலர்: மன்றல் முழவம் - திருமணத்தில் முழக்கப்பெறும் முரசு

**நெய்தல் திணையின் கருப்பொருள்**

**24.** **வருணன், சேர்ப்பன் விரிதிரைப் புலம்பன்**
**பரும அல்கும் பரத்தி நுளைச்சி**
**நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர்**
**அளவர் அளத்தியர், அலைகடல் காக்கை**
**சுறவம், பாக்கம் பெறலரும் பட்டிணம்,**
**உவர்நீர்க் கேணி கவர்நீர், நெய்தல்**
**கண்டகக் கைதை முண்டகம் அடம்பு:**
**கண்டல் புன்னை வண்டிமிர் ஞாழல்,**
**புலவு மீன்உப்பு விலைகளில் பெற்றன,**
**நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை,**
**விளரியாழ் செவ்வழி, மீன்உப்புப் படுத்தல்**
**உணங்கவை விற்றல்மீன் உணக்கல்புள் ஓப்பல்**
**நெடுங்கடல் ஆடல் நெய்தற்கருப் பொருனே.**

வருணன் முதலாக நெடுங்கடல் ஆடல் ஈறாகச் சொல்லப்பட்டன எல்லாம் நெய்தலுக்கு உரிய கருப்பொருள்கள் ஆகும்.

**விளக்கம்**

கண்டகக் கைதை வாள் போன்ற முள்உடைய பூவிதழைக் கொண்ட தாழை' முண்டகம் - சுடல்முள்ளி' வண்டிமிர் ஞாழல் - வண்டு மொய்க்கின்ற ஞாழல் மரம்' நளிமீன் கோட்பறை -

மிகுந்த மீனைக் கொள்ளுதற்குரிய பறை' நாவாய்ப் பம்பை - படகைச் செலுத்தும் போது முழக்குகின்ற பம்பை என்னும் தோற்கருவி.

## உரிப்பொருள்

உரி என்பது ஒழுக்கமாகும். அவ்வவ் நிலத்துக்குரிய உயர்ந்த மக்களிடத்துக் காணப்படும் ஒழுகலாறே உரிப்பொருள்.

**உரிப்பொருளின் வகைகள்**

**25. புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்**
**இரங்கலும் இவற்றின் நிமித்தமும் எனஆங்கு**
**எய்திய உரிப்பொருள் ஐஇரு வகைத்தே.**

இவ்உரிப்பொருள் 1. (அ) புணர்தல் (ஆ) புணர்தல் நிமித்தம் 2.(அ) பிரிதல் (ஆ) பிரிதல் நிமித்தம் 3. (அ) இருத்தல் (ஆ) இருத்தல் நிமித்தம் 4. (அ) ஊடல் (ஆ) ஊடல் நிமித்தம் 5. (அ) இரங்கல் (ஆ) இரங்கல் நிமித்தம் என்னும் பத்து வகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

**விளக்கம்**

1. தலைவன், தலைவி ஆகிய இருவரும் கூடுவது புணர்தல்.

2. தலைவன் தலைவியை விட்டுப் பிரிதலும் தலைவியோடு சேர்ந்து தமரைப் பிரிதலும் பிரிதல்.

3.தலைவன் பிரிந்து சென்றவிடத்துத் தலைவி பொறுத்துக் கொள்ளலே இருத்தல்.

4. தலைவனின் புறத்தொழுக்கத்தால் தலைவிக்கு ஏற்படும் மனமாறுபாடே ஊடல்.

5. பிரிந்து சென்ற தலைவனின் நிலை குறித்துத் தலைவி வருத்தமுற்றுக் கலங்கிப் புலம்புதலே இரங்கல்.

## கைகோள் (ஒழுக்கம்)

அகவாழ்வில் தனலவனும் தலைவியும் மேற்கொள்கின்ற ஒழுக்கமே கைகோள் எனப்பெறும் (கை - ஒழுக்கம் கோன் கொள்ளுதல் கொள்- கோள் என முதனிலை நீண்டதும்

**கைகோளின் வகைகள்**

**26. அளவில் இன்பத்து ஐந்திணை மருங்கின்**

**களவுகற்பு எனஇரு கைகோள் வழங்கும்.**

அளவில்லாத இன்பத்தைத் தருவது ஐந்திணை. இது 1 களவு (காதல்) 2. கற்பு (இல்வாழ்க்கை) என்னும் இருவகை ஒழுக்கத்தை உடையது.

## களவு

பிறர் அறியாமல் தலைவனும் தலைவியும் கூடி மகிழ்வது களவாகும்.

### களவப்பணர்ச்சியின் வகைகள்

**27. இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப் பாடு**
**பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டம் என்று**
**உணர்த்திய களவிற் புணர்ச்சிநால் வகைத்தே.**

மேற்சொல்லப் பட்ட களவொழுக்கம் 1. இயற்கைப் புணர் ழூசி 2 இடத்தலைப்பாடு 3. பாங்கற் கூட்டம் 4. பாங்கியின் கூட்டம் என நான்கு வகைப்படும்.

### கைக்கிளை நிகழும் காலம்

**28. மெய்க்கிளை யாழோர் வேண்டும் புணர்ச்சிமுன்**
**கைக்கிளை நிகழ்தல் கடன்னை மொழிப.**

பிழையற்ற இசையை எழுப்பும் நரம்புகளால் அமைந்த யாழை உடையவர் கந்தருவர். அவர்களால் விரும்பப்படும் களவுப் புணர்ச்சிக்கு முன் கைக்கிளையாகிய ஒரு மருங்கு பற்றிய காதல் தோன்ற வேண்டுமெனச் சொல்லுவர் புலவர்.

தலைவியைக் கண்ட தலைவனிடத்து ஒருதலைக்காமம் தோன்றிய பின்னரே களவுப்புணர்ச்சி நடைபெறும்.

## கைக்கிளை

தலைவி மீது தலைவலூர்கு வேட்கை தோன்றுதல்.

### கைக்கிளையின் இலக்கணம்

**29. அதுவே,**
**காமம் என்ற இளமை யோள்வயில்**
**குறிப்பறி காறும் குறுகாது நின்று**
**குறிப்படு நெஞ்சொடு கூறல் ஆகும்.**

காமம் துகர்தற்குரிய இளைமையுடைய தலைவியைக் கண்டான் தல அந்தலைமகளிடத்து உண்டாகிய உள்ளக் குறிப்பினைத் தன் அறியும் வரை அவளைச் சாராமல் நின்று வேட்கை கொண்டு தல் நெஞ்சினோடு பேசுனான் இந்திலை கைக்கிளை எனப்பெறும்

**விளக்கம்**

தலைவன் தலைவியரின் காதல் வாழ்க்கைக்கு இன்றியமையாத கைக்கிளை ஆகும். இதுவே காதலின் நுழைவாயிலாகக் கருதப்படும் தலைவியைக் கண்டு அவள்மீது ஒருதலையாக அன்பு கொண்டாம் மட்டுமே அவளை அடைய வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் எனவே கைக்கினை இன்றிக் காதல் வாழ்க்கை இல்லை.

**கைக்கிளைக்குரிய தனைமக்கள்**

**30. மறையோர் மன்னவர் வணிகள் சூத் திரர் எனும்**
**இறையோர் தத்தமக்கு எய்துமற்று அதுவே.**

1 அந்தனார் 2 அரசர் 3 வணிகர் 4. வேளாளர் என்னும் நாய்மை வருணத் தலைமக்கட்கும் இக்கைக்கிளை உரியதாகும்.

**கைக்கிளைக்கு உரிய பிறர்**

**31. அதுவே**
**மொழிந்தோர் தாய்வரும் ஒழிந்துரத் நிலத்துஉரை**
**இழிந்தோர் தம்முன் உயர்ந்தோரும் எய்தும்**

நால்வகை வருணத்து மக்களுக்கு உரியதாகக் கூறப்பட்ட கைக்கினை ஐந்து நிலத்திலும் வாழ்கின்ற உழைக்கும் மக்களுள் உயர்வு பெற்றோர்க்கும் உரியதாகும்.

**இயற்கைப் புணர்ச்சி**

கொடுப்போரும் கொள்வோரும் இன்றித் தலைவனும் தலைவியும் நல்வினையால் தாமே கூடுதலே இயற்கைப் புணர்ச்சியாகும்.

**இயற்கைப் பணர்ச்சியின் இலக்கணம்**

**32. தெய்வம் தன்னில் எய்தவும் கிழத்தியின்**
**எய்தவும்" படுஉம் இயற்கைப் புணர்ச்சி.**

களவுப் புணர்ச்சியுள் முதலாவதாகிய இயற்கைப் புணர்ச்சி என்பது 1. தெய்வத்தான் எய்துவது 2 தலைவியான் எய்துவது என இருவகைப்படும்.

**விளக்கம்**

இவ்இயற்கைப் புணர்ச்சி தெய்வம் கூட்டக் கூடுதலின் தெய்வப் புணர்ச்சி ஆயிற்று. விதி கூட்டக் கூடுதலாலும் அப்பெயர் பெற்றது. முதன் முதலாகக் கூடப் பெறுதலால் முன்னுறு புணர்ச்சி எனப்பட்டது. மனக்குறிப்பின்றி எதிர்பாராத நிலையில் இயல்பாக நிகழ்ந்ததால் இயற்கைப் புணர்ச்சி என்னும் பெயர் பெற்றது. அன்பினால் கூடும் கூட்டம் ஆதலால் காமப்புணர்ச்சி ஆயிற்று.

**தெய்வப் புணர்ச்சியின் இலக்கணம்**

**33. இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தின் எய்துழி**
**முயற்சி இன்றி முடிவது ஆகும்.**

இயற்கைப் புணர்ச்சியாவது தெய்வத்தான் எய்தப்படும் போது எவ்வித முயற்சியும் இன்றித் தானே முடியும், தலைவியால் எய்தப்படும்போது மிகுந்த முயற்சிக்குப் பின்னரே முடியும்.

**களவப் புணர்ச்சியின் வகைகள்**

**34. உள்ளப் புணர்ச்சியும் மெய்யறு புணர்ச்சியும்,**
**கள்ளப் புணர்ச்சியும் காதலர்க்கு உரிய**

1 தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் மனத்தால் விரும்பும் உள்ளப் புணர்ச்சி 2 தொட்டுப் பழகும் மெய்யுறு புணர்ச்சி ஆகிய இரண்டும் களவுப் புணர்ச்சிக்கு உரியன.

**உள்ளப் புணர்ச்சி நிகழ்தற்கு உரிய காரணம்**

**35. பொருவுஇறத் தோற்குப் பெருமையும் உரனும்**
**நல்நுதற்கு அச்சமும் நாணும் மடனும்**
**மன்னிய குணங்கள் ஆதலின் முன்னம்**
**உள்ளப் புணர்ச்சி உரியது ஆகும்.**

ஒப்பும் உயர்வும் அற்ற தலைமகனுக்குப் பெருமையும் உரனும் நிலைபெற்ற குணங்களாகும். ஒளிவீகம் நெற்றியை உடைய தலைவிக்கு அச்சம், நாணம், மடன் ஆகிய மூன்றும் நீங்காத குணங்களாகும். இக்குணங்களைப் பெற்ற தலைவன் தலைவியர்க்கு மெய்யுறு புனணர்ச்சி நிகழ்வதற்கு முன்னர் உள்ளப் புணர்ச்சி நிகழ்தல் இன்றியமையாததாகும்.

**விளக்கம்**

தலைவன் பழி பாவங்களுக்கு அஞ்சுதல் பெருமை ஆகும். தக்கது அறியும் அறிவே உரன் ஆகும். காணாத ஒன்று கண்டால் பெண்டிரிடத்துத் தோன்றுவது அச்சம். பெண்டிர்க்கு இயல்பாகத் தோன்றும் வெட்கமே நாணம் அறிந்தும் அறியான் போல இருத்தலே பேதைமை என்னும் மடன் ஆகும். ஆண், பெண் ஆகியோர்க்கு உரிய குணங்களைத் தொல்காப்பியர்,

**‘பெருமையும் உரனும் ஆடூஉ மேன்’**

**“அச்சமும் நாணும் மடனும்முந் துறுத்த**
**நீச்சமும் பெண்பாற்கு உரிய என்ப“ (களவியல்:7-8)**

என்னும் நூற்பாக்களின் மூலம் எடுத்துரைக்கிறார்.

### மெய்யுறு புணர்ச்சி

தலைவனும் தலைவியும் உள்ளத்தால் ஒன்றி நிற்பவர்கள். அவ்இருவருள் ஒருவராகிய தலைவன், தலைவியினுடைய உடம்பைத் தொட்டுப் பழகுதலே மெய்யுறு புணர்ச்சி எனப்படுகிறது. தலைவன் தலைவியின் மெய்யினைத் தீண்டிப் பழகுதல் என்பது பெரும்பாலும் நடைபெறுவது இல்லை. அது தமிழ்ப்பண்பாட்டிற்கு மாறாகவும் அமையும். கீழ்க்காணும் பத்துவகை நிலைகள் ஏற்பட்டால் மட்டுமே இம்மெய்யுறு புணர்ச்சி நடைபெறும். இது காதலில் அரிய நிலையாகும்.

**மெய்யறுபுணர்ச்சிக்கு உரிய காலம்**

**36. காட்சி முதலாச் சாக்காடு ஈறாக்**
**காட்டிய பத்தும் கைவரும் எனினே**
**மெய்யுறு புணர்ச்சி எய்துதற்கு உரித்தே.**

காட்சி முதலாகச் சாக்காடு ஈறாகிய பத்து அவத்தைகளும் (நிலைகள்) ஒருங்கே நிகழ்ந்த பின்னர் மெய்யுறு புணர்ச்சி எய்துதற்கு உரிய காலமாகும்.

**பத்துவகை அவத்தைகள்**

1. காட்சி (தலைவியைத் தலைவன் தனியிடத்துக் காணுதல்)

2. வேட்கை (தலைவியைப் பெற வேண்டும் என்னும் உள்ள நிகழ்ச்சி)

3. ஒருதலை உள்ளுதல் (இடைவிடாது தலைவியை நினைத்தல்)

4. மெலிதல் (உண்ணாமையால் உடல் மெலிதல்)

5. ஆக்கம் செப்பல் (தன்னிடத்துத் தோன்றிய வருத்தமிகுதியைப் பிறர்க்கு உரைத்தல்)

6. நாணுவரை இறத்தல் (நாணத்தின் எல்லையைக் கடத்தல்)

7. நோக்குவ எல்லரம் அவையே போறல் (தன்னால் காணப்பட்ட பொருள்களைக் காதலிக்கப்பட்டாரின் உறுப்புப் போலக் கருதுதல்)

8. மறத்தல் (இயல்பான செயல்களை மறந்து அறிவு திரிதல்)

9. மயக்கம் (செய்வதறியாது புலம்பிப் பேசுதல்)

10. சாக்காடு (இறந்து விடலாமா? என எண்ணுகின்ற நிலைக்கு ஆளாதல்),

இப்பத்துவகை அவத்தைகளுள் காட்சி நீங்கலாக எஞ்சிய ஒன்பதையும் தொல்காப்பியர் ஒருங்கே சுட்டுகிறார். இவற்றை,

**"வேட்கை ஒருதலை உள்ளுதல், மெலிதல்**
**ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்"**
**நோக்குவ எல்லாம் அவையே போறல்**
**மறத்தல்" மயக்கம்" சாக்காடு" என்றச்**
**சிறப்படை மரபின் அவை களவென மொழிப்"**

என்னும் தொல்காப்பியக் **களவியல் நூற்பா 30** எடுத்துரைக்கிறது.

## குறி

தலைவன் தலைவியை எதிர்ப்படுவதற்காகத் (சந்திப்பதற்காகக் குறிப்பிட்டுக் கூறும் இடம் குறியாகும். இது தலைவியாலோ தோழியாயோ குறிக்கப்படுவதாகும்.

**கள்ளப் பணர்ச்சிக்கு உரிய இடம்**

**37. பகற்குறி இரவுக் குறிஏனும் பால்மைய**
**புகற்சியின் அமைத்தோர் புணர்ச்சிநிகழ் இடனே.**

அன்பினால் அமைந்தோர் களவுப் புணர்ச்சி நிகழ்வதற்குரிய இடமாவது 1. பகற்குறி 2. இரவுக்குறி என்னும் இரண்டு பகுதிகளை உடையது.

**பகற்குறி - இரவக்குறி**

**38. இவ்வரை இகத்தது பகற்குறி இரவுக்குறி**
**இவ்வரை இகவா இயல்பிற்று ஆகும்.**

பகற்குறி என்பது இல்லத்தின் எல்லையைக் கடந்தது. இல்லத்தின் எல்லைக்குள் அமைவது இரவுக்குறியாகும்.

**விளக்கம்**

ஊரின் எல்லைக்கு உட்பட்டதாய் அமைந்த இடமே தலைவன் தலைவியர் கூடுதற்குரிய பகற்குறியாக அமையும். ஆனால் வீட்டின் எல்லைக்கு உட்பட்டதாய் வீட்டில் உள்ளோர் பேசும் பேச்சைக் கேட்கும் அணிமைத்தாய் அமைவது இரவுக் குறியாகும்.

**களவுப்பிரிவு**

களவின்கண் கூடிய தலைவன், தலைவியைப் பிரிவான். இச்செயல் களவுக் காலத்தில் தலைவன் பிரிகின்ற பிரிவெனக் கூறப்படும்.

**களவுப் பிரிவின் வகைகள்**

**39. ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்**
**பொருள்வயிற் பிரிதல்“என்று இருவகைத்து ஆகும்**
**நிறைதரு காதல் மறையினில் பிரிவே.**

நிறைந்த காதலை உடைய களவுப் புணர்ச்சிக்கண் பிரியும் பிரிவு 1. ஒருவழித் தணத்தல் (தலைவன் தன்னூர்க்குச் செல்லுதல்) 2 வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் (திருமணத்தை இடையில் வைத்து அதற்கு வேண்டிய பொருளைத் தேடிப் பிரிதல்) என இருவகைப்படும்.

**ஒருவழித்தணத்தல்**

ஓர் ஊருக்குள்ளோ ஒரு நாட்டிற்குள்ளோ தலைவன் பிரிதல், காதல் பற்றி ஊரார் பேசும் அலரைக் (பழிச்சொல்லைக்) குறைப்பதற்காகத் தலைவன் தலைவியைச் சிலநாள் காண வாராதிருத்தல்.

**வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்**

திருமணம் செய்து கொள்ளக் கருதிய தலைவன் பெரும்பொருள் சேர்த்து வருவதற்காகக் காடுகளையும் நாடுகளையும் கடந்து பலநாள் பிரிதல்.

**ஒருவழித் தணத்தலின் இலக்கணம்**

**40. அவற்றுள்,**
**ஒருவழித் தணத்தற்குப் பருவம் கூறார்.**

ஓர் ஊரின் கண்ணும் நாட்டின் கண்ணும் சில நாள் பிரிகின்ற ஒருவழித் தணத்தலுக்குப் பருவ வரையறையைப் புலவர்கள் கூறுவது இல்லை.

**பொருள்வயிற் பிரிதலின் இலக்கணம்**

**41. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவோர்**
**இருதுவின் கண்ணுடைத்து என்மனார் புலவர்**

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் இரண்டு திங்களைக் கொண்ட ஒரு பருவத்திற்கு உட்பட்ட வரையறையை (59 நாட்கள்) உடையதெனச் சொல்லுவர் ஆசிரியர் (இருது-பருவம்)

**வரைவு**

தலைவனுக்கும் தலைவிக்கும் நடைபெறும் திருமணம் வரைவு எனக் கூறப்பெறும். வரைதல் -இன்னானுக்கு இன்னாள் எனக் உரிமையுடையவள் எனப் பலருக்கும் அறிவிக்கின்ற நிகழ்ச்சி வரையறை செய்தலால் வரைதல் என்பது காரணப்பெயர்.

**வரைவ நிகழும் காலம்**

**42. களவு வெளிப்படா முன்னும் பின்னும்**
**விளையும் நெறித்தென விளம்பினர் வரைவே.**

வரைவாகிய திருமணம், களவு வெளிப்படா முன்னும் களவு வெளிப்பட்ட பின்னும் விளையும் நெறியினை உடையது என்று சொல்லுவர் புலவர்.

**களவ வெளிப்படாமுன் நிகழும் வரைவு**

**43. நான்'குவகைப் புணர்வினும் தான்தெருண்டு வரைதலும்**
**பாங்களின் பாங்கியின் தெருளுற்று வரைதலும்"**
**களவுவெளிப் படாமுன் வரைதல் ஆகும்.**

இயற்கைப் புணர்ச்சி முதலாகிய நான்கு வகைப் புணர்ச்சிக் கண்ணும் 1. தலைமகள் தானே தெளிவுபெற்று வரைதல் 2. பங்களாலோ பாங்கியாலோ அறிவுறுத்தப்பட்டு வரைதல் ஆகிய இரண்டும் களவு வெளிப்படர் முன் வரையும் வகைகளாகும்.

**களவ வெளிப்பட்ட பின் நிகழும் வரைவ**

**44. உடன்போய் வரைதலும் மீண்டு வரைதலும்**
**உடன்போக்கு இடையீடு உற்று வரைதலும்**
**களவுவெளிப் பட்டபின் வரைதல் ஆகும்.**

தலைவியோடு உடன்போக்கை மேற்கொண்ட தலைவன் தன் ஊரின்கண் வரைதல் 2. பிறிதோர் ஊருக்குச் சென்று மீண்டு வந்து தம்மூரின்கண் வரைதல் 3. உடன்போக்கை இடையில் கைவிட்டுத் தலைமகளின் உறவினரை வழிபட்டு அவர்கள் தலைவியைக் கொடுக்க வரைதல் ஆகிய மூன்றும் களவு வெளிப்பட்ட பின் நிகழும் வரைதலின் வகைகளாகும்.

**உடன்போய் வரைதல்**

தலைவனின் காதலுக்குத் தலைவியின் உறவினர் தடையாக திற்பர் ஆகையால் தலைவன் பிறர் அறியாதபடி தலைவியை அழைத்துக் கொண்டு திருமணம் செய்து கொள்வான். இதுவே

உடன்போய் வரைதல் எனக்கூ - றும் பிறர் அறியாமல் தலைவனும் தலைவியும் கூடிச் செல்லுதலே உடன்போக்கு ஆகும்.

**உடன்போய் வரைதல் நிகழும் இடம்**

**45. அவற்றுள்.**
**உடன்போய் வரைதல் ஒருவகைத்து ஆகும்.**

மேற்கூறப்பட்ட மூன்றனுள் உடன்போய் வரைதல் என்பது தலைமகன் தன் ஊரின் கண்ணே வரைதலாகிய ஒருவகையை மட்டும் உடையது.

**மீண்டு வரைதல்**

உடன்போக்கை மேற்கொண்ட தலைவனும் தலைவியும் இனித் தமக்கு வேற்று மணம் நிகழ வாய்ப்பில்லை என உறுதியாக நம்பி திரும்பி வருவர். அவர்களுக்குத் தலைவன் வீட்டிலோ தலைவி வீட்டிலோ திருமணம் நடைபெறும்.

**மீண்டு வரைதலின் வகைகள்**

**46. அவள்மனை வரைதலும்“ தன்மனை வரைதலும்**
**எனமீண்டு வரைதல் இருவகைத்து ஆகும்.**

மீண்டு வரைதலாவது 1. தலைமகளின் மனையின் கண்ணோ வரைதல் 2. தலைமகளின் மனையின்கண்ணே வரைதல் என்னும் இரண்டு வகையினை உடையது.

**அறத்தொடு நிற்றல்**

தலைவி தன் களவைத் தோழிக்கும் பிறருக்கும் முறையே வெளிப்படுத்துதலே அறத்தொடு நிற்றலாரும்.

**அறத்தொடு நினை நிகழும் சூழல்**

**47. ஆற்றுான்று அஞ்சினும் அவன்வரைவு மறுப்பினும்**
**வேற்றுவரைவு தேரினும் காப்புக்கை மிகினும்**
**ஆற்றத் தோன்றும் அறத்தொடு நிலையே.**

1. தலைமகள் களவின்கண் தன்னைக் காண வரும் வழியில் அவனுக்கு ஏற்படும் துன்பத்திற்குத் தலைவி அஞ்சுதல் 2. தலைமகள் வரைவினைத் தம் பெற்றோரும் உறவினர்களும்

ஏற்றுக் கொள்ளாமை 3 பிறர் வரையிற்குத் தம் பெற்றோர் உடன்படுதல் 4. தலைவிக்கு வீட்டுக்காவல் மிகுதியாதல் ஆகிய இந்நான்கிடத்தும் அறத்தொடு நிற்றல் நிகழும.

**விளக்கள்**

களவின்கண் கூடிய தலைவனோடு கற்பு வாழ்விலும் தலைவி கூடுவதே அறத்திற்கு மாறுபடாத நிலையாகும். இதன் பொருட்டுக் களவின்கண் பிறர் அறியாமல் கூடிய கூட்டத்தைத் தலைவி பிறர்க்கு வெளிப்படுத்தும் நிலையே அறத்தொடு நிற்றலாகும். அறம் என்பது முறை என்றும் பொருள்படும். தலைவி தன் நிலையைத் (களவைத்) தோழிக்கும் தோழி செவிலிக்கும். செவிலி நற்றாய்க்கும். நற்றாய் தமர்க்கும் முறையாக அறிவித்தவாகும். எனவே தலைவி, தலைவனோடு தான் நுகர்த்த களவுப் புணர்ச்சியை வெளிப்படுத்தி அத்தலைவனோடு வாழ்வதற்கு வித்திடும் நிலையே அறத்தொடு நிற்றலாகும்.

**அறத்தொடு நிற்கும் முறை**

**48. தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்கும்**
**பாங்கி செவியிக்கு அறத்தொடு நிற்கும்**
**செவியி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும்**
**நற்றாய் தந்தை தன்னைர்க்கு அறத்தொடு**
**நிற்கும் என்ப நெறிஉணர்ந் தோரே.**

1. தலைவி தோழிக்கும் 2. தோழி செவிலிக்கும் 3. செவிலி நற்றாய் 4. தற்றாய் தன் குடும்பத்தினரிக்கும் அறத்தொடு நிற்பர் என அகப்பொரு இலக்கணம் உணர்ந்தோர் கூறுவர்.

**தலைமகள் அறத்தொடு நிற்கும் இடம்**

**49. ஒருபுணர்வு ஒழிந்தவற்று ஒருவழித் தணப்பவும்**
**வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரியவும்**
**இறைவனைச் செவிலி குறிவயின் காணவும்**
**மனைவயின் செறிப்பவும் வருத்தம் கூறின்**
**வினவியக் கண்ணும் வினவாக் கண்ணும்**
**அனநடைக் கிழத்தி அறத்தொடு நிற்கும்.**

தலைவியின் கூட்டத்திற்குத் தோழி துணையாய் நிற்கும் பாங்கியிற் கூட்டம் ஒழிந்த ஏனைய மூவகைப் புணர்ச்சிக்குப் பின் 1. தலைவன் ஒருவழித் தணத்தல் 2. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் 3. இரவில் காணவரும் தலைவனைச் செவிலி குறியிடத்துக் காணுதல் 4 தலைவி, தலைவனைக் காண முடியாதபடி கட்டுக்காவல் மிகுதல் ஆகிய இந்நான்கு செயல்களின் காரணமாகத் தான்படும் துன்பம் குறித்து வினவினும் வினவா விட்டாலும் அன்னம் போன்ற நடையை உடைய தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிற்பாள்.

**பாங்கி அறத்தொடு நிற்கும் நிலை**

**50. முன்னிலைப் புறமொழி முன்னிலை மொழிகளில்**

**சின்மொழிப் பாங்கி செவிலிக்கு உணர்த்தும்.**

1. தலைவியின் களவு நிலையை முன்னிலையாய் நிற்கின்றவரை நோக்கிப் பிறரைக் கூறுவது போலக் குறிப்பாகக் கூறுதல் 2. தெளிவுபடத் தலைவியின் நிலையை நேரே கூறுதல் ஆகிய இரண்டு நிலையிலும் பாங்கி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்பாள்.

**செவிலி அறத்தொடு நிற்றல்**

**51. செவிலிநற் றாய்க்குக் கவலையின்றி உணர்த்தும்.**

செவிலி, நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும் காலத்துத் தலைவியின் நிலையை விளங்க (வெளிப்படையாக) எடுத்துரைப்பாள்.

**நற்றாய் அறத்தொடு நிற்றல்**

**52. நற்றாய் அறத்தொடு நிற்கும் காலைக்**
**குரவனும் தன்னையும் குறிப்பின் உணர்ப.**

நற்றாய் அறத்தொடு நிற்கும் காலத்து வெளிப்படையாகப் பேசாமல் குறிப்பால் உணர்த்துவாள். தந்தையும் உடன்பிறந்தோரும் அதனைக் குறிப்பால் உணர்வர்.

**களவுக் காலத்தில் வினாநிகழும் இடம்**

தலைவியைக் காண வரும் போது ஏற்படும் இடையூறுகளால் தலைவன் வரவு தடைப்படும். இதன் காரணமாகத் தலைவியின் உடலில் வேறுபாடு தோன்றும். அது குறித்து வினவுதலே வினா நிகழும் இடம் ஆகும்.

**வினவும் முறை**

**53. பாங்கி தலைவியை வினவும், செவிலி**
**பாங்கியை வினவும், பாங்கி தன்னையும்**
**நற்றாய் தானும் வினவும் செவிலியின்**
**பொற்றொடிக் கிழத்தியை உற்று நோக்கின்.**

பிரிவால் வாடும் தலைவியின் வேறுபாட்டை உணர்ந்து 1. தலைவியைத் தோழி விளவுவாள் 2. தோழியைச் செவிலியும் நற்றாயும் வினவுவர். இவ்வாறு வினவும் காரணத்தால் அறத்தொடு நிற்றல் நிகழும்.

உடன்போக்கில் அறத்தொடு நிற்றற்கு உரியர்

54. ஆங்குடன் போயழி அறத்தொடு நிற்ப
பாங்கியும் செவிலியும் பயந்த தாயும்.

தலைமகனும் தலைமகளும் புணர்ந்து உடன்போய காலத்துத் தோழியும் செவிலியும் நற்றாயும் அறத்தொடு நிற்பர்.

## கற்பு

தலைவன் தலைவியர்க்கு இல்வாழ்க்கை அமையும் முறையே கற்பாகும். தலைளியும் தலைவனும் அறவோர்க்கு அளித்தல், அந்தணரைப் பாதுகாத்தல், துறவிகளைப் போற்றுதல், விருந்தினர்களை எதிர் கொள்ளுதல் ஆகிய செயல்களைச் செய்வதற்குத் துணையாக நிற்பது கற்பு நெறியாகிய இவ்இல்லறமே ஆகும்.

### கற்பின் வகைகள்

**55. களவின் வழிவந்த கற்புமி பொற்பமை**
**களவின் வழிவாராக் கற்பும் என்றாங்கு**
**முற்படக் கிளந்த கற்புஇரு வகைத்தே**

தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொண்டு உலகறிய இல்லறம் நடத்தும் முறை கற்பாகும். இக்கற்பு ஒழுக்கம் 1. களவின் வழி வந்த கற்பு 2. அக்களவு என்பது நிகழாமல் கூடும் கற்பு என இருவகைப்படும்.

### கற்பிற் பணர்ச்சியின் வகைகள்

**56. குரவரிற் புணர்ச்சி வாயிலிற் கூட்டம் என்(று)**
**இருவகைத்(து) ஆகும் கற்பிற் புணர்ச்சி**

கற்பில் புணரும் புணர்ச்சி இருவகைப்படும். அவை 1. களவில் புணர்ந்த தலைவன் தலைவியர்க்கு அவர்களின் பெற்றோர் செய்யும் திருமணத்தால் கூடும் கூட்டம் (குரவரிற் புணர்ச்சி) 2. இல்லறத்தில் வாழும் தலைவன் தலைவியர் வாயில்களால் வாடல் நீங்கிப் புணரும் புணர்ச்சி (வாயிலிற் கூட்டம்) ஆகிய இரண்டும் ஆகும்.

### களவின் வழிவந்த கற்பின் சிறப்ப இலக்கணம்

**57. அவற்றுள்,**
**களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சி**
**கிளைஞரின் எய்தாக் கேண்மையும் உடைத்தே**
**உடன்போய் வரைதலும் உண்மை யான**

களவில் கூடிய தலைமகளைத் தலைமகன் உடன் அழைத்து வந்து தன் ஊரின்கண்ணே வைத்து மணந்து கொள்ளுதலும் உண்டு. ஆதலால் தலைமகளின் பெற்றோரும் உறவினரும் அவளைக் கொடுக்காமலும் கற்பிற் புணர்ச்சி நிகழ்தல் உண்டு.

### கற்பில் தலைவனுக்கு நிகழும் ஒழுக்கம்

**58. மறையின் புணர்ச்சியும் மன்றல் புணர்ச்சியும்**
**இறைவற்கு எய்தலுண்டு இருவகைக் கற்பினும்**

கற்பில் புணரும் இருவகைப் புணர்ச்சியின்கண் 1. தலைமகனுக்கு மறைவாகப் பரத்தை முதலானவரோடு கூடும் கூட்டம் 2. திருமணத்தால் பின்முறை வந்த பெருங்குலக் கிழத்தியரோடு கூடும் கூட்டம் ஆகிய இரண்டும் பொருந்துதலும் உண்டு.

**இருவகைக் கற்பிற்குரிய மகளிர் (3)**

**59. காதல் பரத்தையர் காமக் கிழத்தியர்**
**பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தி என்(று)**
**அன்னவர் உரியர் அவைஇரண் டற்கும்**

களவுப் புணர்ச்சி, வதுவைப் (கற்புப்) புணர்ச்சி ஆகிய இருவகை ஒழுக்கத்திற்கும் 1. காதல் பரத்தையர் 2. காமக்கிழத்தியர் 3. பின்முறை வந்த பெருங்குலக் கிழத்தி ஆகிய மூவகையினரும் உரியராவர்.

**களவிற் பணர்ச்சிக்கு உரியார்**

**60. அவருள்.**
**காதல் பரத்தையர் களவிற்கு உரியர்.**

மேற்கூறப்பட்ட மூவகையோரில் காதற் பரத்தைய களவொழுக்கத்திற்கு மட்டும் உரிமை உடையவர்.

**மன்றல் (திருமணம்ஸ பணர்ச்சிக்கு உரியார்**

**61. ஒழிந்தோர் மன்றல் புணர்ச்சிக்கு உரியர்.**

1 காமக் கிழத்தி 2. பின்முறை வந்த பெருங்குலக் கிழத்தி ஆகிய இருவரும் திருமணத்தால் கூடும் புணர்ச்சிக்கு உரியராவர்.

## கற்புப் பிரிவு

தலைவனும் தலைவியும் கூடி நடத்தும் இல்வாழ்க்கையில் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதலே கற்புக் காலத்தின்கண் பிரியும் பிரிவாகும்.

**கற்பில் நிகழும் பிரிவுகள்**

**62. பரத்தையின் பிரிதல் ஓதற்குப் படர்தல்**
**அருள்தகு காவலொடு தூதிற்கு அகறல்**

**உதவிக்கு ஏகல் நிதியிற்கு இகத்தல் என்று**
**உரைபெறு கற்பின் பிரிவுஅறு வகைத்தே.**

இல்லறத்தில் தலைவன் பிரிகின்ற பிரிவு 1. பரத்தையர் பிரிவு 2. ஓதற் பிரிவு 3. காவல் பிரிவு 4 தூதிற் பிரிவு 5. துணைவயிற் பிரிவு உதவிக்கு ஏகல் 6. பொருள்வயிற் பிரிவு (நிதியிற்கு இகத்தல்) என அறுவகைப்படும்.

## பரத்தையிற் பிரிவு

பரத்தையர்மேல் காதல் கொள்ளும் தலைவன், தலைவியைப் பிரிந்து பரத்தையர் சேரிக்குச் செல்வான். இதுவே பரத்தையிற் பிரிவாகும்.

### பரத்தையிற் பிரிவின் வகைகள்

**63. அயல்மனைப் பிரிவுஅயற் சேரியின் அகற்சி**
**பரநகர்ப் போக்கு இவை புரவலர்க்கு உரிய**
**பரத்தையிற் பிரியும் பருவத் தான**

பரத்தையிற் பிரியும் தலைவனுக்கு 1. அருகில் இருக்கும் மனைக்கண பிரிதல் 2. பக்கத்துச் சேரிக்குப் பிரிதல் 3, நகர்க்கு வெளியில் செல்லுதல் என்னும் மூன்று பிரிவுகளும் உரியன.

### அயன்மனைப் பிரிவு

**64. கெழீ இய காமக் கிழத்தியர் பொருட்டாத்**
**தழீஇய அயல்மனைத் தலைவன் பிரியும்.**

மனம் பொருந்திய காமக்கிழத்தியின் காரணமாகத் தலைமகள் தன்மனைக்கு அருகில் இருக்கும் அயன்மனையின் கண்ணே பிரிவது உண்டு. இதுவே அயன்மனைப் பிரிவு எனக் கூறப்படும்.

### அயற்சேரிப் பிரிவு (3)

**65. பின்னர் வரைந்த பெதும்பையும் பரத்தையும்**
**இன்னியல் விழவும் ஏது வாக**
**அவன்அவற் சேரியின் அகலும் என்ப**

1. இரண்டாவதாக வரைந்து கொள்ளப்பட்ட பெதும்பைப் பருவ கிழத்தி 2. காதற் பரத்தை 3, இனிமையைத் தருகின்ற விழா ஆகிய மூன்றன் காரணமாகத் தலைவன் பக்கத்துச் சேரிக்கண் பிரிவான்.

### புறநகர்ப் போக்கு

**66. விருத்தியற் பரத்தையைப் பெருந்தேர் மிசைக்கொண்டு**
**இளமரக் காவில் விளையா டற்கும்**
**புனல்ஆ டற்கும் புறநகர்ப் போகும்.**

1 மகிழ்ச்சி தரும் பூஞ்சோலைக்கண் (இளமரக்கா) விளையாடுதல் காரணமாகவும் 2. நீரில் விளையாடுதல் காரணமாகவும் புதியவளாகிய பரத்தையைத் தேர்மேல் ஏற்றிக் கொண்டு தலைவன் நகரை விட்டு வெளியில் செல்லுவான்.

**ஊடல்**

தலைவன் அயன்மனைப் பிரிவு முதலாகிய பிரிவுகளில் பிற பெண்களோடு தொடர்பு கொள்வான். இதனை அறிந்து தலைவி வருத்தமுறுவாள். அதன் காரணமாகத் தலைவிக்குத் தலைவனோடு மனப்பிணக்கு ஏற்படும். அதுவே ஊடல் எனக் குறிக்கப் படுகிறது.

**தலைவிக்கு ஊடல் நிகழும் இடம்**

**67. ஊடல் அவ்வழிக் கூடும் கிழத்திக்கு.**

மேற்கூறப்பட்ட மூவகைப் புறத்தொழுக்கம் காரணமாகத் தலைவிக்குத் தலைவளோடு ஊடல் ஏற்படும்.

**வாயில்கள்**

தலைவியின் ஊடலை நீக்கி ஆற்றுப்படுத்துகின்ற தூதர்கள் வாயில்கள் ஆவார்.

**ஊடல் தணிக்கும் வாயில்கள்**

**68. கொளைவல் பாணன் பாடிவி கூத்தர்**
**இளையர் கண்டோர் இருவகைப் பாங்கர்**
**பாகன் பாங்கி செய்யி அறிவர்**
**காமக் கிழத்தி காதல் புதல்வன்**
**விருந்து ஆற றாமை என்றுஇவை ஊடல்**
**மருந்தாய்த் தீர்க்கும் வாயில்கள் ஆகும்.**

1. இசைப்பாடலில் பாணன் 2. பாடினி. 3. கூத்தர் 4. ஏவலர் 5. கண்டோர் 6 சூத்திரப் பாங்கள் 7. பிரப்பனப் பாங்கள் 8. தேர்ப்பாகன் 9. பாங்கி தோழி 10. செவிலி 11. அறிவர்
12 காமக்கிழத்தி 13 அன்புப் புதல்வன் 14 விருந்து 15 ஆற்றாமை என்கின்ற இப்பதினைந்தும் தலைவியின் ஊடல் நோயைத் தீர்க்கும் மருந்தாகிய வாயில்கள் ஆவர்.

**ஓதற் பிரிவு**

அரிய கலைகளைக் கற்பதற்காகத் தலைவன் தலைவியைப் பிரியும் பிரிவே ஓதற்பிரிவு எனப்படும். இல்லற வாழக்கையிலும் தலை கல்விக்காகப் பிரிவான் எனக் கூறப்படுவதிலிருந்து தமிழர் கல்விக்குத் கொடுத்த சிறப்பை உணரலாம்.

**ஓதற் பிரிவுக்கு உரியோர்**

**69. ஓதல் தொழில்உரித்து உயர்ந்தோர் மூவர்க்கும்.**

வேதக் கல்வி கற்றல் (ஓதல்) பொருட்டுப் பிரியும் பிரிவு அரசர். அந்தணர், வணிகர் ஆகிய மூவர்க்கும் உரியதாகும்.

**ஏனைக் கல்விக்குரியர்**

**70. அல்லாக் கல்வி எல்லார்க்கும் உரித்தே**

வேதம் அல்லாத பொதுக்கல்வி வேளாளர் உள்ளிட்ட நால்வர்க்கும் உரியதாகும்.

**நால்வருக்கும் உரிய கள்வி ()**

**71. படைக்கலம் பயிறலும் பகடுபிற ஊர்தலும்**
**உடைத்தொழில் அவர்க்குனை உரைத்திசி னோரே**

1. போர்த்தொழிற்குரிய படைக்கலங்களைக் கற்றல் 2 யானை, தேர், குதிரை ஆகியவற்றின் மீது ஊர்ந்து செல்லக் கற்றல் ஆகியவை நால்வகை வருணத்தாருக்கும் உரிய தொழிலெனப் புலவர் கூறுவர்.

## காவற்பிரிவு

உள்நாட்டில் ஏற்படும் கலகங்களை அடக்குதல், விழாவில் ஏற்படும் பெரிய கூட்டங்களைக் கட்டுப்படுத்துதல், இயற்கைச் சீற்றங்களால் மக்களுக்கு ஏற்படும் துயரைப் போக்குதல், பகைவர்களால் நாட்டிற்கு ஏற்படும் தீமைகளைத் தடுத்தல் என்பன போன்றவற்றிற்காகத் தலைவன் தலைவியைப் பிரியும் பிரிவு காவற்பிரிவு எனப்படும்.

**காவற்பிரிவின் வகைகள்**

**72. அறப்புறங் காவல் நாடுகா வல் எனச்**
**சிறப்புறு காவல் திறம்இரு வகைத்தே**

1.அறந்தை நிலைநாட்டும் பொருட்டுப் பிரிதல் 2. நாட்டைக் காவல் புரியும் பொருட்டுப் பிரிதல் என இருவகைப் பிரிவை உடையது காவற் பிரிவாகும்.

**அறப்புறங் காவற்கு உரியர்**

**73. அவற்றுள்.**
**அறப்புறம் காவல் அனைவர்க்கும் உரித்தே**

மேற்கூறப்பட்ட அறப்புறங் காவல் அந்தணர் முதலாகிய நால்வர்க்கும் உரியதாகும்.

**நாடு காவற்கு உரியர்**

**74. மற்றைக் காவல் கொற்றவர்க்கு உரித்தே**

நாட்டை நன்முறையில் பாதுகாக்கும் தொழில் அரசர்க்கு மட்டுமே உரிய சிறப்புத் தொழிலாகும்.

**தூது**

இரு அரசர்கள் தம்முள் மாறுகொண்டு போரிடத் துணிவர், அவ்இருவரின் பகையைத் தணிவித்துப் போரைக் கைவிடச் செய்வதற்குச் செல்வதே தூது ஆகும். அவ்வாறு செல்பவரைத் தூதர் என உரைப்பர்.

**தூதிற் பிரிவிற்குரியர் ஐ2ஸ**

**75. வேத மாந்தர் வேந்தர் என்று இருவர்க்கும்**
**தூது போதல் தொழில்உரித்து ஆகும்**

1. அந்தணர் 2 அரசர் ஆகிய இருவருக்கும் பகைதணி வினை எனப்படும் தூது போகின்ற தொழில் உரியதாகும். அந்தணர் தூதராகச் சென்றதை.

**வயலைக் கொடியின் வடிய மருங்குல்**
**உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்**
**எல்லி வந்து நில்லாது புக்குச்**
**சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே**
**ஏணியும் சீப்பும் மாற்றி**
**மாண்வினை யானையும் மணிகளைந் தனவே. (புறம் - 305)**

என்னும் மதுரை வேளாசானின் கூற்று எடுத்துரைக்கிறது. அரசர் தூதராகச் சென்றதைக் கண்ணன் தூதால் அறியமுடிகிறது.

**சிறப்பு விதி நாடு காவல், தூது**

**76. சிறப்புப் பெயர்பெறின் செப்பிய இரண்டும்**

**உறற்குரி மரபின ஒழிந்தோர் இருவர்க்கும்.**

அரசனால் ஏனாதி, காவிதி போன்ற சிறப்புப் பெயர் பெற்ற வணிகருக்கும் வேளாளர்க்கும் நாடு காவல், தூது போதல் ஆகிய தொழில் இரண்டும் பொருந்திய மரபினை உடையனவாம்.

**துணைவயிற் பிரிவுக்கு உரியர்**

**77. உதவி அந்தணர் ஒழிந்தோர்க்கு உரித்தே**

வேந்தர்க்கு உற்றுழி உதவுதலாகிய தொழில் அந்தணர் ஒழிந்த மூவர்க்கும் உரியதாகும்.

**அனைவர்க்கும் உரிய பிரிவுகள்**

**78. பரத்தையிற் பிரியும் பொருள்வயிற் பிரிவும்**
**உரைத்த நால்வர்க்கும் உரிய ஆகும்.**

அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வகை வருணத்தார்க்கும் பரத்தையிற் பிரிவும், பொருள்வயிற் பிரிவும் உரியன ஆகும்.

**உழைக்கும் தலைமக்களுக்கு உரிய பிரிவு (3)**

**79. இழிந்தோர் தமக்கும் இவற்றுளமேம் பட்டவை**
**ஒழித்தன ஆம்என மொழிந்தனர் புலவர்.**

ஆறுவகைத் தொழில்களுள் மேம்பட்டனவாக விளங்குவன ஓதல், நாடுகாவல், தூது போதல் என்னும் மூன்றுமாகும். ஒழிந்த 1 பரத்தையிற் பிரிவு 2. துணைவயிற் பிரிவு 3. பொருள்வயிற் பிரிவு ஆகிய மூன்றும் உழைக்கும் நிலமக்களாகிய அல்லோருள் (இழிந்தோர்) தலை மக்களுக்கும் உரியன.

**தலைமகள் பிரிவு**

**80. கல்வி முதலா எல்லா வினைக்கும்**
**சொல்லி அரறலும் சொல்லாது அகற்லும்**
**உரியன் கிழவோன் பெருமனைக் கிழத்திக்கு**

கல்வியாகிய ஓதல் பிரிவு முதலாகக் கூறப்பட்ட அறுவகைப் பிரிவின் கண்ணும் தலைவன் சொல்லிப் பிரிதலுக்கும் சொல்லாமல் பிரிதலுக்கு உரியன்.

**பிரிவின் வகை**

களவொழுக்கத்திலும் கற்பொழுக்கத்திலும் தலைவன், தலைவியை விட்டுப் பிரிவான் களவுக் காலத்தில், தலைவன் பிரிவும் பிரிவு 1. ஒருவழி தணத்தல் 2. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் இருவகைப்படும். கற்புக்காலத்தில் பிரியும் பிரிவு ஆறு வகைப்படும். அவை

1.ஓகற் பிரிவு
2. காவற் பிரிவு
3. தூதிற் பிரிவு
4. துணைவயிற் பிரிவு
5. பொருள் வயித பிரிவு
6. பரத்தையர் பிரிவு

என்பனவாம். இப்பிரிவுகளையும் இவற்றிற்கு உரிவாரையும் காலத்தையும் பின்வரும் பட்டியல் வழி அறியலாம்.

**தோழியிடம் கூறிப் பிரிதல்**

**81. சொல்லாது அகலினும் சொல்லும் பாங்கிக்கு.**

அறுவகைப் பிரிவிலும் தலைவன் தலைவியிடம் சொல்லாது பிரியினும் தோழியிடத்துச் சொன்ன பின்னரே பிரிவு நிகழும்,

**குறிப்பால் உணர்த்தல்**

**82. குறிப்பின் உணர்த்தும் பெறற்கருங் கிழத்திக்கு.**

தலைவன் தன் பிரிவைத் தலைவிக்கு நேரடியாகக் கூறாவிடினும் குறிப்பாக உணர்த்துவான்.

**பிரிந்து செல்லும் திறன்**

**83. காலிற் சேறலும் கலத்திற் சேறலும்**
**ஊர்தியிற் சேறலும் நீதி ஆகும்.**

தலைவியைப் பிரிந்தவிடத்துத் தலைவன் 1. நடந்து செல்லுதல் 2. கலத்தில் (கப்பல்) ஏறிச் செல்லுதல் 3. குதிரை முதலான ஊர்திகளில் ஏறிச் செல்லுதல் ஆகியவை முறைமையாகும்.

**அந்தணர்க்கு உரிய சிறப்பு விதி**

**84. புலத்தில் சிறந்த பரிநூல் முதல்வர்க்குக்**
**கலத்தில் சேறல் கடன்அன்று என்ப.**

பூணூல் அணிந்த அந்தணர்க்குக் கலத்தில் சேறலாகிய (கடல் கடந்து செல்லுதல்) தொழில் பொருந்தாது என்று கூறுவர்.

**குலமகளோடு செல்வற்கு ஆகாப் பிரிவுகள்**

**85. வலனுயர் சிறப்பின் மற்றை மூவர்க்கும்**
**குலமட மாதரொடு கலமிசைச் சேறலும்**
**பாசறைச் சேறலும் பழுதுஎன மொழிப**

வெற்றி மிகுந்த சிறப்பினை உடைய வேந்தர், வணிகர், வேளாளர் ஆகிய மூவரும் குலமாந்தரொடு சுலத்தில் செல்லுதலும், குலமாந்தரொடு பாசறைக்கண் செல்லுதலும் குற்றமுடையதாகும் எனக் கூறுவர்.
குலமட மாதரோடு கூடித் தலைவன் கலத்தில் செல்லுதல் இல்லை என்பதைத்

**மணம்மலி பூங்கானல் வருகலன்கள் நோக்கிக்**
**கணவன்வரக் கல்உருவம் நீத்தாள். (சிலம்பு)**

என்னும் இளங்கோவடிகள் கூற்று எடுத்துரைக்கிறது.

**செலவழுங்கல்**

தலைமகளைப் பிரிந்து செல்லக் கருதிய தலைவன் அச்செல்வினை மேற்கொள்ளாமல் இருப்பது செவ்வழுங்கல் எனப்படும் செலவு பயணம்: அழுங்கள் ஒழிக்க தள்ளிப்போடுதல்

**செலவழுங்கும் பிரிவுகள்**

**86. ஓதல் முதலா ஓதிய ஐந்தினும்**
**பிரிவோன் அழுங்கற்கும் உரியன் ஆகும்.**

ஓதல் முதலாகச் சொல்லப்பட்ட ஐந்து பிரிவின் (பரத்தையிற் பிரிவு நீங்கலாக) கண்ணும் தலைவன் பிரிந்து செல்லுதற்கே அல்லாமல் செல்லாமைக்கும் உரியனாவான்.

**செலவழுங்கற்கு உரிய இடம்**

**87. இவ்லத்து அழுங்கலூர் இடைச்கரத்து அழுக்கலும்**
**ஒல்லும் அவற்குனை உரைத்திசி மோரே**

பிரியக் கருதிய தலைமகனுக்குத் 1. தம் இல்லத்தின் கண்ணே செல்வழுங்குதல் 2. போகின்ற வழியில் த்தின் கண்ணே செலவழுங்குதல் ஆகிய இரண்டும் பொருத்தும் எனச் சொல்லுவர் புலவர்.

**இல்லத்து அழுங்கள் (எ-டு)**

புணரின் புணராது பொருளே பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே ஆயிடைச்
சேரிலும் செல்லாம் ஆயினும் நல்லதற்கு
உசியை வாழியஎன் நெஞ்சே பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பன்
ஓடுமீன் வழியிம் கெடுவ யானே
விழுநீர் வியலகம் தானி யாக
எஜமான் அளக்கும் விழுந்தி பெறினுங்
கனங்குழைக்கு அமர்ந்த சேயரி மழைக்கண்
அமர்ந்துஇனிது நோக்கமொடு செருத்தனன்
என்ன தாகுக வழிய பொருளே.

(நற்றிணை -16)

இடைச்சுரத்து அழுங்கல் (எ-டு)

புறத்தாற்பு இருண்ட கூந்தல் போதின்
நிறங்கிளர் நிரைஇதழ்ப் பொவிந்த உண்கண்
உள்ளம் பிணிகான் போள்ளயின் நெஞ்சே
செல்லல் தீர்கம் செல்வாம் என்னும்
செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யா மையோடு இழிவுதலைத் தரும்என
உறுமீ தூக்கத் தூங்கி அறிவே
சிறிகுநனி விரையல் என்னும் ஆயிடை
ஒளிறேந்து மருப்பில் களிறுமாறு பற்றிய
தேய்யுரிப் பழங்கயிறு போல
வீவது கொல்மென் வருந்திய உடம்மே.

(நற்றிணை 294)

செலவழுங்குதற்கு உரிய காரணம்

88. தலைவி தன்னையும் தன்மனம் தன்னையும்?
அமைரல் ஒலித்தற்கு அழுங்குவது அல்லது
செய்யத் தோன்றல் செல்லான் அல்லன்

1. இல்லத்தில் பிரிவிற்காக வாடும் தலைமகளையும் தன் நெஞ்சினையும் தேற்றுதல் 2 இடைச்சுரத்தின்கண் தன் நெஞ்சினைத் தேற்றுதல் ஆகிய காரணத்தால் தற்காலிகமாகச் செலவழுங்குதல் நிகழும். அன்றிச் செல்வக்குடியில் தோன்றிய தலைவன் செலவினைத் தவிர்த்தல் என்பது இல்லை.

ஓதற்பிரிவுக்குரிய கால வரையறை

89. அவற்றுள்,
ஓதற் பிரிவுடைத்து ஒருமூன்று ஆண்டே

கல்வி கற்பதற்காகப் பிரியும் பிரிவு மூன்று ஆண்டு எல்லையினை உடையதாகும்.

**பிரிவுகளுக்கு உரிய காலவரையறை**

**90. தூதிற் பிரிவும் துனைவயிற் பிரிவும்**
**பொருள்வயிற் பிரிவும் ஓர்ஆண்டு உடைய**

தூதிற்பிரிவுக்கும், துணையிற் பிரிவுக்கும். பொருள் வயிற் பிரிவிற்கும் ஓராண்டு வரையறை ஆகும்.

**பரத்தையர் பிரிவுக்குப் பொருந்தாத காலம்**

**91. பூத்த காலைப் பணையிழை மனையியை**
**நீரா டிப்பின் ஈர்ஆறு நாளும்**
**கருவயிற்று உறூஉம் காலம் ஆதலின்**
**பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்**

தலைவிக்குப் பூப்பு நிகழ்ந்து நீராடிய பின்னர் வரும் பன்னிரண்டு நாளும் கரு உருவாகும் காலம் ஆகும். ஆகையால் அக்காலத்து அணிகலன் அணிந்த அழகிய மனைவியைப் பிரிந்து தலைமகன் பரத்தையிற் பிரிவை மேற்கொள்ளல் இல்லை (யூப்பு-வீட்டுக்கு விலக்காகிய காலம்)

பூப்பு நிகழ்ச்சியின் பின்னர்ப் பன்னிரண்டு நாட்களிலும் தலைவன் பரத்தையிற் பிரியான் என்பதைத் தொல்காப்பியர்,

**பூப்பின் புறப்பாடு ஈர்அறு நாளும்**
**நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்.**
**பரத்தையிற் பிரித்த காலை யான (தொல் பொருள், கற் நூ.46)**

எனக்கூறுகிறார். ஆசாரக்கோவையின் ஆசிரியராகிய பெருவாயின் முள்ளியாரும்,

**தீண்டாதான் முந்நாளும் நோக்கார்நீர் ஆடியபின்**
**ஈர்ஆறு நாளும் இகவற்க என்பவே**
**பேரறி வாளர் துணிபு (ஆசாரக்கோவை -2)**

என இதனை வழிமொழிகிறார்.

**ஓதற்பிரிவிற்கு ஆகாதன**

**92. ஓதற்கு அகன்றோன் ஒழிந்திடை மீண்டு**
**போதற்கு இயையயும் புலம்பவும் பெறாஅன்.**

கல்வி கற்கப் பிரிந்த தலைமகள் 1. அல்ஒதலைப் பாதியில் விட்டு வருதல் 2 தலைமகளை நினைத்துப் புலம்புதல் ஆகிய செயல்களில் ஈடுபட மாட்டான். (பிற சிந்தனை இன்றிக் கருத்தூன்றிக் சுற்றலைச் செய்வான்.

**பாசறைக்கண் புலம்புதல்**

**93. தூதும் துணைமையும் எது வாகச்**
**சென்றோன் அவ்வினை நின்றுநீட் டித்துழிப்**
**புலந்து பாசறைப் புலம்பவும் பெறுமே.**

ஓராண்டுக் காலத்திற்கு வரையறை செய்யப்பட்ட தூது, துணை ஆகியவற்றின் காரணமாகத் தலைவன் பிரிந்து செல்வான் அப்பிரிவுகளில் குறித்த காலத்தில் வினை முடியாது நீட்டிக்கும். அந்நிலையில் பாசறைக் கண்ணே இருக்கும் தலைமகன் தலைவியை நினைத்து வெறுப்போடு புலம்புதலைச் செய்வாள்.

## இற்கிழத்தியின் இயல்பு

இல்லறத்தின் உயிராக விளங்குபவள் தலைவி. அவளுக்குத் திருமணத்திற்கு முன்னும் பின்னும் பல ஒழுக்கங்கள் உண்டு களவு வாழ்க்கையில் தலைவியின் ஒழுக்கங்கள் வெளிப்படத் தோன்றா ஆனால் கற்புக் காலத்தில் இன்னவாறு நடந்து கொள்ள வேண்டும் எனப்பிறரால் கற்பிக்கப்பட்டதை ஏற்றுத் தலைவி செயல்படுவாள். ஆகவே கற்புக் காலத்தில் தலைவியின் பட்டியலிடப்படுகின்றன.

**கற்பில் தலைமகளுக்கு உரிய ஒழுகலாறுகள்**

**94. பூத்தமை சேடியிற் பரவலர்க்கு உணர்த்தலும்**
**நீத்தமை பொறாது நின்றுகிழ வோனைப்**
**பழிக்கும் காமக் கிழத்தியைக் கழறலும்**
**கிழவோற் கழறலும் வழிமுறை மனைவியைக்**
**கொழுநனொடு வந்துஎதிர் கோடலும் அவனொடு**
**பாங்கொடு பரத்தையைப் பழித்தலும் நீங்கிப்**
**புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச்**
**சோலையும் காவும் மாலையம் கழனியும்**
**மாலைவெள் அருவியும் மலையும் கானமும்**
**கண்டுவிளை யாடலும் கடும்புனல் ஆறும்**
**வண்டிமிர் கமல வாவியும் குளனும்**

**ஆடிவிளை யாடலும் கூடும் கிழத்திக்கு**

1. தலைவி தான் பூப்படைத்தகளைச் சேடிப் பெண்கள் வாயிலாகத் தலைவனுக்கு உணர்த்துதல் 2 தன்னைப் பிரிந்தமையைப் பொறுக்க சாட்டாமல் தலைவனைப் பழித்துப் பேசும் காமக்கிழத்திக்கு அறிவுரை கூறுதல் 3. தலைவனை இடித்துக் கூறுதல் 4. பின் முறையாகிய மனையாளொடும் வரும் தன் கணவனை எதிர் கொள்ளுதல் தலைவனையும் பாங்கனையும் பரத்தையையும் பழித்துப் பேசுதல் 6. தலைவனோடு நகரைவிட்டு நீங்கிய தலைவி மலர் மிருந்த சோலை, பொழில், சுழனி அருவி, மலை, காடு ஆகியவற்றைக் கண்டு விளையாடுவதோடு 7ஆற்றிலும் வாவியிலும் குளத்திலும் நீராடி மகிழ்தல். இந்நிலைகள் அனைத்தும் கற்புக் காலத்துத் தலைமகளுக்குப் பொருத்தி வரும் ஒழுகலாறுகள் ஆகும்.

## பாணர்

தமிழகத்தில் வாழ்ந்த பண்டைக் குடிகளுள் ஒன்றாக விளங்கியது பாண்குடி இக்குடியைச் சார்ந்தவர் ஆதலால் பாணர் என அழைக்கப்பட்டனர். இனிய இசைப்பாட்டுக்களைப் பாடி மகிழ்வித்தலைத் தொழிலாகக் கொண்ட இம்மரபினர் சங்ககாலத்தில் மிகுந்த புகழ்பெற்று வினங்கினர். இப்பாணர் 1 இசைப்பாணர் (பாடுவோர்) 2. யாழ்ப்பாணர் (யாழ் இசைப்போர்)
3. மண்டைப் பாணர் என்பன போலப் பலவகைப்படுவர்.

அரசனைப் புகழ்ந்து பாடிப் பெரும்பொருளைப் பரிசிலாகப் பெற்றுத் தம் சுற்றத்தைப் பாதுகாப்பர். இசைப்பாடலில் வல்லவராய் உவகைச் சுவையைத் தூண்டித் தலைவன், தலைவியரின் டைலைப் போக்குபவர் பாணர் இல்லறத்தில் இனிமை சேர்க்கும் இப்பாணர் அறிவுநுட்பம் மிக்கவர்.

**பாணர்க்கு உரிய செயல்கள்**

**95. வாயில் வேண்டலும் வாயில்நேர் வித்தலும்**
**சேயிழை ஊடல் தீர்த்தலும் போயழி**
**அவள்நலம் தொலைவுகண்டு அழுங்கலும் அவன்வயின்**
**செல்ல விரும்பலும் சென்றுஅவற்கு உணர்த்தலும்**
**சொல்லிய கூற்றுஎனச் சொல்லலும்“ கிழவோன்**
**வரவு மீண்டுவந்து அறிவைக்கு உணர்த்தலும்**
**அணிதலம் பெற்றமை அறியான் போன்று.அவன்**
**பணிவொடு வினாதலும்“ பாணற்கு உரிய**

1. தலைவியிடம் நெருங்கி வாயில்(தூது) வேண்டுதல் 2. வாயிலை அமைத்துத் தருதல் 3. தலைவியின் ஊடலைத் தீர்த்தல் 4. தலைவியின் நலன் அழிவு கண்டு வருத்துதல் 5 தலைவன்பால் சென்று கூறி வருகிறேன் எனச் சொல்றாதல் 6. தலைவியின் நிலையைத்தலைவனிடம் உணர்த்துதல் 7. தலைவி கூறியதைக் கூறியபடி தலைவன்ட சொல்லுதல் 8. தலைவன் பரத்தையிடம் இருந்து பிரிந்து தலைவியைக் காண வருவதை உணர்த்துதல் 9. தலைவி அணிநலம் பெற்றதை அறியாதனை போன்று பணிலொடு வினவுதல் ஆகிய செயல்கள் ஒன்பதும் பாணர்க்கு உரியனவாகும்.

## விறலியர்

திறம்பட ஆடுவோர் விறலியர் ஆவர். இவர்கள் பாணரின் பாடலுக்கு ஏற்ப ஆடும் தொழிலைச் செய்தனர். இவர் எண்வகைச் சுவைகளும் மனத்துள் பொதிந்த குறிப்புக்களும் காண்போர்க்கும் புலப்படுத்தும் வண்ணம் ஆடும் திறத்தால் விறலி எனத் சிறப்பிக்கப்பட்டனர். இவர்கள் ஆடுவதோடு இனிமையாகப் பாடும் தொழிலையும் செய்பவர். இச்செயலால் இவரைப் பாடினி எனவும் சங்க இலக்கியங்கள் சிறப்பிக்கின்றன. பாணருக்கு அரசர்களும் வள்ளல்களும் பல பொருள்களைக் கொடுத்தபோது பாடினிக்கு விலைமதிப்பற்ற அணிகலன்களைக் கொடுத்துச் சிறப்புச் செய்ததைப் பண்டைய நூல்கள் எடுத்துரைக்கின்றன. இவர்கள் பாடல், ஆடல் திறங்காட்டியதோடு தலைவன் தலைவியரின் ஊடலைப் போக்கும் செயலையும் செய்து வந்தனர்.

### விறலிக்கு உரிய செயல்கள்

**96. செலவில் தேற்றலும் புலவியில் தணித்தலும்**
**வாயில் வேண்டலும்" வாயில்நேர் வித்தலும்**
**தெரியிழை விறலிக்கு உரிய ஆகும்.**

1. தலைவன் பிரிந்த காலத்துத் தலைவியைத் தேற்றுதல் 2. தலைவியின் ஊடலைத் தணியச் செய்தல் 3. வாயில் வேண்டுதல் 4. அதனை அமைத்துக் கொடுத்தல் ஆகிய நான்கும் விறலிக்கு உரிய செயல்கள் ஆகும்.

## கூத்தர்

கூத்தாடுகின்ற செயலைச் செய்பவர் கூத்தர் இவர் எண்வகைச் கலையும் மனத்தின்கண் பட்ட குறிப்புக்களும் புறத்துப்போந்து புலப்பட ஆடுபவர் ஆவர். இக்கூத்தைச் சாதி வரையறையின்றிப் பலரும் ஆடி வந்தனர். இந்தொழிலினர் அரசர்களிடமும் வள்ளல்களிடமும் சென்று தம் திறமையைக் காட்டிப் பொன்னும் பொருளும் பெற்று வாழ்ந்தனர். இவ்வறத்தாரைச் சார்ந்தும் வாழ்ந்தனர். அதனால் தலைவன் தலைவியரின் ஊடலைப் போக்குபவராகச் செயல்பட்டனர்.

### கூத்தர்க்குரிய செயல்கள்

**97. செய்வம் வாழ்த்தலும் நல்லறிவு கொளுத்தலும்**
**கலன் அணிபு உணர்த்தலும் காமநுகர்பு உணர்த்தலும்**
**புலவிமுதிர் காலைப் பலங்கொள ஏதுவில்**
**தேற்றலும் சேய்மை செப்பலும் பாசறை**
**மேற்சென்று உரைத்தலும் மீண்டுவரவு உணர்த்தலும்**
**கூற்றரு மரபின் கூத்தர்க்கு உரிய**

1. தலைவன் தலைவியரின் செல்வ நிலையை வாழ்த்துதல் 2.அறிவையும், ஒழுக்கத்தையும் ஒருங்கே சுற்றுத் தருதல் 3. ஆடை அணிகலன் அணிதலை உணர்த்துதல் 4. காம நுகர்ச்சியையும் உணர்த்துதல் 5. ஊடல் மிகுந்தவிடத்து அதனால் ஏற்படும் தீமையைக் காரணம்

காட்டி அதனைக் கைவிடத் தெளிவுபடுத்துதல் 6. தலைவன் தொலைவில் உள்ளதை உரைத்தல் 7.பாசறைக்கண் சென்று தலைவியின் நிலையைத் தலைவனுக்கு உரைத்தல் 8 தலைவனின் வருகையைத் தலைவிக்கு எடுத்துரைத்தல்.

மரபை உடைய இச்செயல்கள் எட்டும் சொல்லுதற்கு அருமைப்பாடு வாய்ந்த கூத்தர்க்குரியன ஆகும்.

**இளையர்**

செல்வம் மிகுந்த மனைக்கண் தங்கித் தலைவன், தலைவியரின் கட்டளைகளை நிறைவேற்றுபவர் இளையர் எனப்படுவார். இவர் குற்றேவல்களைச் செய்தும் வாழ்பவர் ஆவார். ஊடல் காலத்தில் அதனைத் தணிவித்துத் தலைவன் தலைவியரைச் சேர்த்து வைப்பதில் இவ்இளைஞர் பெருந்துணை புரிபவர்.

**இளையோர்க்கு (ஏவலர்) உரிய செயல்கள்**

**98. மடந்தையை வாயில் வேண்டலும் வாயில்**
**உடன்படுத் தலும் அவள் ஊடல் தீர்த்தலும்**
**கொற்றவற்கு உணர்த்தலும் குற்றேவல் செய்தலும்**
**சென்றுமுன் வரவு செப்பலும் அவன்திறம்**
**ஒன்றிநின்று உரைத்தலும் வினைமுடிபு உரைத்தலும்**
**வழிஇயல்பு கூறலும் வழியிடைக் கண்டன**
**மொழிதலும் இளையோர் தொழில்லன மொழிப**

1. தலைவியிடம் சென்று வாயிலை ஏற்றுக் கொள்ளுமாறு கூறுதல் 2. வாயில் அமைத்துக் கொடுத்தல் 3. தலைவியின் ஊடலைத் தீர்த்தல் 4.ஊடல் நீங்கிய தலைவியின் நிலையைத் தலைவனுக்குக் கூறுதல் 5.ஏவல் தொழில் செய்தல் 6. தலைவன் வருகையைக் கூறுதல் 7.தலைவனின் நிலையை அவள் பக்கம் நின்று பேசுதல் 8. தலைவன் மேற்கொண்ட வினையின் முடி பினைக் கூறுதல் 9. தலைவன் வந்த, வழியில் இயல் கூறுதல் 10. வழியிடைக் கண்டவற்றைக் கூறுதல் ஆகிய அனைத்தும் இளையோர்க்கு பிரவலர்க்கு உரிய செயல்களாகும்.

**கண்டோர்**

தலைவனோடும் தலைவியோடும் நெருங்கிய தொடர்பில் அயலோரே கண்டோர் ஆவர். இவர்கள் தலைவன் தலைவியரில் செயல்பாடுகளைக் கண்டு அவற்றுக்கேற்ற வழிவகை கூறுவர்.

**கண்டோர்க்கு உரிய செயல்கள்**

**99. தீதுடைப் புலவி தீர்த்தலும் அவன்வரல்**
**காதலிக்கு உரைத்தலும் கண்டோர்க்கு உரிய**

1. தீமையைத் தருகின்ற பெரும் ஊடலைத் தீர்த்து வைத்தல் 2 பிரிந்து சென்ற தலைவனின் வரவினைத் தலைவிக்கு உரைத்தல் ஆகிய இரண்டும் கண்டோர்க்குரிய செயல்கள் ஆகும்.

இன்பத்தைத் தரும் அளவில் இருக்க வேண்டிய ஊடல் மிருந்தால் தீமையாக முடியும் எனவே ஊடல் தீதுடைப் புலவி ஆயிற்று.

## பாங்கர்

தலைவனுக்கு உற்ற தோழனாய் அமைபவரே பாங்கள் எனப்படுவர். இவர் அறிவுத்திறந்தாலும் உடல் வலிமையாலும் தலைவனுக்குத் துணையாய் நிற்பர். கல்வி, கேள்விகளால் சிறந்த அறிவைப் பெற்றுத் தலைவனுக்குப் பாங்காக நிற்பவரே பாங்கர் ஆவார். இவருள் ஒருவகையினர் பார்ப்பனச் சாதியுள் தோன்றியதால் பார்ப்பனப் பாங்கர் எனப்பட்டார்.

**பார்ப்பனப் பாங்கர்க்கு உரிய செயல்கள்**

**100. இளமையும் யாக்கையும் வளமையும் ஏனவும்**
**நிலையாத் தன்மை நிலைபெடுத்து உரைத்தலும்**
**செலவுஅழுங்கு வித்தலும்“ செலவுஉடன் படுத்தலும்**
**பிறயும் எல்லாம் மறையோர்க்கு உரிய**

1. இளமை, யாக்கை, செல்வம் ஆகியவற்றுடன் பிறவும் நிலையாத் தன்மை கொண்டவை என எடுத்துரைத்தல் 2. தலைவனின் செலவைத் தடுத்தம் சென்று வா எனக் கூறுதல் 4 இவை போன்ற பிறவும் பார்ப்பனப் பாங்கர்க்குரிய செயல்கள் ஆகும்

**சூத்திரப் பாங்கர்**

தால்வகை வருணத்தாருள் வேளாளர் குலத்தில் தோன்றித் தலைவனுக்குப் பாங்கால்சிற்பவனர ஆக்கிரப் பாங்கர் ஆவார் மதிநுட்பழம் உடல்வலிமையும் கொண்ட இவர்கள் தலைவனுக்குப் பல வழிகளிலும் துணை நிற்பவராவார்.

தலைவனுக்குத் துணையாக அமையும் இருவகைப் பாங்கரும் தானாக அமையார். அவர் பெற்றோரால் அமைக்கப்படுபவர் ஆவார்.

**சூத்திரப் பாங்கர்க்கு உரிய செயல்கள்**

**101. நன்மையின் நிறுக்கலும் தீமையின்அகற்றலும்**
**சொன்னவை பிறவும் சூத்திரர்க்கு உரிய**

1. நன்மையான செயல்களைச் செய்யத் தூண்டுதல் 2 தீய செயல்களில் ஈடுபடாமல் பாதுகாத்தல் ஆகிய இரண்டுடன் வாயில் வேண்டல் முதலாகக் கூறப்பட்ட பாணர்க்கு உரிய செயல்கள் எல்லாம் சூத்திரப் பாங்கர்க்கும் உரியனவாம்.

**பாகர்**

யானை, குதிரை ஆகியவற்றை நடத்துவோர் பொதுவாகப் பார் என அழைக்கப்படுவர். ஆயினும் அகவாழ்வில் இடம்பெறும் பாகராவார் தேரினை வகையறிந்து செலுத்துகின்ற தேர்ப்பாகர் ஆவார்.

**பாகற்கு உரிய செயல்கள்**

**102. சேயிழைக் கிழத்தியை வாயில் வேண்டலும்**
**வாயில்நேர் வித்தலும்“ வயங்குதுனி தீர்த்தலும்**
**வினைமுடித்து அதன்பின் வியன்பதி சேய்த்துனை**
**வினையோன் தேற்றலும் பாகற்கு இயல்பே**

1 தலைவியிடம் வாயிலை ஏற்றுக் கொள்ளக் கூறுதல் 2 வாயில் அமைத்துக் கொடுத்தல் 3. ஊடலைத் தீர்த்தல் 4. வினையை முடித்து மீளும் தலைவன், தன்ர் தொலைவில் உள்ளதென வருத்திக் கூறியவிடத்து அவனைத் தேற்றுவித்தல் ஆகிய நான்கும் தேர்ப்பாகற்கு உரிய செயல்களாகும்.

**பாங்கி**

தலைவியின் காதல் வாழ்விலும் இல்லற வாழ்விலும் அவளுக்கு உயிர்த்துணையாய் விளங்குபவன் தோழி இவன் தனக்கென வாழாமல் தலைவிக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொள்பவன். இத்தன்மை பெற்றவளே தலைவியின் உயிர்த்தோழி எனச் சிறப்பிக்கப்படு ஆனான். செவிலியின் மகளே இந்தோழி

**பாங்கிக்கு உரிய செயல்கள்**

**103. பிரிவூழி விலக்கலும் பிரிவுஉடன் படுத்தலும்**
**பிரிவுழித் தேற்றலும் பிரிவுழி அழுங்கலும்**
**பிறயும் உரிய இறைவனைப் பாங்கிக்கு**

1. பிரியக் கருகிய தலைவனின் செயலைத் தடுத்தல் 2. பிரிவுக்கு உடன்படுதல் 3 பிரில் தலைவியைத் தேற்றுதல் 4 பிரிவை நீக்குதல் ஆகிய நான்குடன் வாயில் வேண்டல் முதலாகக் கூறப்பட்ட பாணற்கு உரிய செயல்கள் அனைத்தும் ஒலிக்கும் வளையலை அணிந்த தோழிக்கும் உரியஆகும்

**செவிலி**

தமிழரின் அகவாழ்வியலில் நீங்கா இடம் பெறுபவள் செனி இவள் தலைவியை ஈன்றெடுத்த நற்நாய்க்குத் தோழியாவாள், தலைவியை நல்லமுறையில் வளர்த்த வளர்ப்புத் தாயாகவும் விளங்குபவன். தோழியைப் பெற்றெடுத்தவளே செவிலி

**அறிவர்**

அறிவி எனக் குறிக்கப்படுபவர் சான்றோர் ஆவார். இவர் தலைவன் தலைவி ஆகிய இருவருக்கும் உறுதி பயக்கின்ற நல்லுரை கூறும் மேலோர் ஆவார். அறிவரைக் கணிவன் (சோதிடர் என்றும் கூறுவர்.

**செவிலி, அறிவர்க்கு உரிய செயல்கள்**

**104. முன்வரு நீதியும் உலகியல் முறைமையும்**
**பின்வரும் பெற்றியும் பிறவும் எல்லாம்**
**தெற்றெனக் கூறல் செவிலித் தாய்க்கும்**
**உற்று அறிவர்க்கும் உரியன ஆகும்.**

1.அரத்தின் வழி நடக்க வேண்டியதன் இன்றியமையாமையை விளக்குவது 2. அதனால் பின்வரும் பெருமையைக் கூறுவது 3. மக்களின் வாழ்க்கை முறைகளை எடுத்துரைப்பது 4. பிறவற்றையும் தெளிவாகக் கூறுவது ஆகிய செயல்கள் அனைத்தும் செவிலித் தாய்க்கும் முழுநும் அறிந்த அறிவர்க்கும் உரியனவாகும்.

**காமக்கிழத்தியர்க்கு உரிய செயல்கள்**

**105. குடிப்பிறந் தோரை வடுப்படுத்து உரைத்தலும்**
**மனைவியைப் பழித்தலும் வாடா ஊடலுள்**
**தலைவன் கழறலும் மனைவிக்கு அமைந்த**
**ஒழுக்கமும் காமக் கிழத்தியர்க்கு உரிய**

1. நற்குடிக்கண் பிறந்த தலைவன், தலைவி போன்றோர்க்கும் குற்றம் உண்டாகும்படி பழித்துப் பேசுதல் 2. மனைவியாகிய இற்கிழத்தியைப் பழித்துக் கூறுதல் 3 குன்றாத ஊடல் காலத்துத் தலைவனை நெருங்கி இடித்துக் கூறுதல் 4. மனைவிக்கு அமைந்த ஒழுக்கம் உடைமை ஆகிய தான்கும் காமக்கிழத்தியின் செயல்கள் ஆகும்.

**பரத்தையர்**

ஒருவருக்கென வாழாமல் ஆடவர் பலர்பால் பரந்து சென்று ஒழுகியவரே பரத்தையர் எனப்பட்டார். இவர் ஆடல், பாடல் என்னும் களைகளில் வல்லவர். தன் அழகையும் இளமையையும் காட்டி இன்பத்தையும் பொருளையும் விரும்புவர். ஒருவரிடத்தில் நிலையாகத் தங்கி வாழும் இயல்பற்றவர். இவரை நாடகக்கணிகை என்றும் வேசியர் என்றும் குறிப்பர்.

**பரத்தையர்க்கு உரிய செயல்கள்**

**106. கிழவோன் தன்னையும் கிழத்தி தன்னையும்**
**இகழ்தலும் தம்மைப் புகழ்தலும் நிகழ்பொருள்**
**காத்தலும் பரத்தையர் கடன்என மொழிப்**

1. தலைவனையும் தலைமகளையும் இகழ்ந்து கூறுதல் 2. தம்மைத் தாமே உயர்வாகப் புகழ்ந்து பேசுதல் 3. கிடைத்த பொருட்களைச் செலவு செய்யாமல் சேர்த்து வைத்துக் கொள்ளுதல் ஆகிய மூன்றும் பரத்தையரின் செயல்களாகும்.

**சிறப்பு விதி**

**107. பரத்தையர் காதற் பரத்தையைப் புகழ்தலும்**
**தம்மை இகழ்தலும் தம்முளும் கூறுப**

1. அன்பினால் தலைவனைக் கூடும் காதற்பரத்தையைப் புகழ்தல் தம்மைத் தாமே இகழ்தலைத் தங்களுக்குள் கூறிக் கொள்ளுதல் (நொந்து பேசுதல்) ஆகிய செயலை உடையவர் பரத்தையர்.

**இளையர்க்கு உரிய உரிமை**

**108. இளையர் கிழவோற்கு இரவும் பகலும்**
**களைதல் இல்லாக் கவசம் போல்வார்.**

முற்ககூறப்பட்ட இளையர் தலைவனுக்குக் குற்றேவல் புரிவதோடு அவனுக்கு உற்ற மெய்க்காப்பாளனாகவும் விளங்குபவர். பகலிலும் இரவிலும் நீங்காமல் உடன் இருந்து தலைமகனுக்கு உதவும் இளையர் தலைவனின் உடலுக்கு அமைந்த சுவசம் போன்றவர்.

**இருவகைப் பாங்கரின் உரிமை**

**109. இருவகைப் பாங்கரும் ஒருபெரும் குரிசிற்கு**
**இன்னுயிர்த் துணையா இருபெருங் குரவரும்**
**தன்னை அளித்த தகைமை யோரே**

பார்ப்பனப் பாங்கர், சூத்திரப் பாங்கர் ஆகிய இருவரும் பெருமையுடைய தலைவனுக்கு இனிய உயிர்த்துணைவர் ஆவார். அவ்இருவரும் அவர்தம் தாய், தந்தையர்களால் அடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட தன்மையுடையோர்.

**தோழியின் உரிமை**

**110. தோழி செவிலி மகளாய்ச் சூழ்தலோடு**
**உசாத்துணை ஆகி அசாத்தணி வித்தற்கு**

**உரிய காதல் மருவிய துணையே**

1. தோழியாகக் குறிக்கப்படுபவள் செவிலியின் மகளாவாள். 2. தலைவியின் நன்மை, தீமைகளை ஆராய்வதும் 3. வருத்தம் தீர்ப்பதும் அன்பு பொருத்திய துணையாகிய தோழிக்கு உரியன.

**செவிலியின் உரிமை**

**111. செவிலி நற்றாய் தோழி ஆகி**
**அவலம் நீக்கி அறிவும்ஆ சாரமும்**
**கொளுத்தித் தலைவியை வளர்த்த தாயே.**

1. செவிலி என்பவள் நற்றாயின் தோழியாவாள். இவன் 2. தலைவியின் துன்பங்களை நீக்கி 3. நல்லறிவையும் ஒழுக்கங்களையும் கற்பித்து வளர்த்த தாயாக விளங்குபவள்.

**அறிவரின் உரிமை**

**112. அறிவர் கிழவோன் கிழத்திஎன்று இருவர்க்கும்**
**உறுதி மொழித்த உயர்பெரும் குரவர்**

அறிவர் என்பவர் தலைவனுக்கும் தலைவிக்கும் உறுதியைப் பயக்கின்ற நல்லுரை உபதேசம் சொல்கின்ற குரு ஆவார்.

## காமக்கிழத்தியர்

தலைவன் தன் காமம் (அன்பின்) காரணமாக இந்கிழமை மனைவியராகும் உரிமைக்காகப் பெரும்பொருள்) கொடுத்துத் தலைவனால் உரிமையாக்கிக் கொள்ளப்பட்டவரே காமக்கிழத்தியர் எனப்படுவர். இவர் 1. ஒத்த கிழத்தியர் 2. இழிந்த கிழத்தியர் 3. வரையப்பட்டார் என மூவகைப்படுவர். இவருள் ஒத்த கிழத்தியரும் இழிந்த கிழத்தியரும் பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தி எனவும் குறிக்கப்பெறுவர். கணிகையர் (பரத்தையர்) குலத்தில் தோன்றித் தலைவனால் இற்கிழமை கொடுத்துத் தனக்கென உரிமையாக்கிக் கொள்ளப்பட்டாரும் காமக்கிழத்தியர் எனப்படுவர்.

**காமக்கிழத்தியின் இலக்கணம்**

**113. ஒருவன் தனக்கே உரிமை பூண்டு**
**வருகுலப் பரத்தையர் மகளிர் ஆகிக்**
**காமக்கு வரைந்தோர் காமக் கிழத்தியர்**

சேரிப் பரத்தையரைப் போலப் பலருக்கும் உரிமையாகாமல் ஒருவனுக்கே உரிமை பூண்டு வரும் குலப்பரத்தையரின் மகளே காமக்கிழத்தியராவார். இவர் காமம் காரணமாகத் தலைமகனால் மணந்து கொள்ளப்பட்டவராவர்.

## காதற்பரத்தையர்

இவர் ஆடல், பாடல் ஆகிய இரண்டிலும் வல்லவர் ஆவர். தன் அழகையும் இளமையையும் காட்டி இன்பத்தையும் பொருளையும் விரும்பும் இயல்பினர். இவருள் ஒரு பிரிவினராகிய சேரிப் பரத்தையர் என்பார் தனிப்பட்ட யாரையும் விரும்பாத இயல்பினராய்ப் பலருக்கும் உரியவராவர் இச்சேரிப்பரத்தையின் மகளாய்ப் பிறந்து அப்பரத்தையரின் இயல்பிலிருந்து மாறி ஒருவனுக்கு மட்டுமே உரிமை பூண்டு அவன் மீது கொண்ட காதல் காரணமாகப் புணர்வோள் காதற் பரத்தையர் ஆவார்.

### காதற்பரத்தையின் இலக்கணம்

**114. யாரையும் நயவா இயல்பில் சிறந்த**
**சேரிப் பரத்தையர் மகளிர் ஆகிக்**
**காதலிற் புணர்வோர் காதற் பரத்தையர்**

காதற்பரத்தையர் என்போர் யாவரையும் விரும்பாத இயல்பினால் மிகுந்த சேரிப் பரத்தையருடைய மகளிராய்த் தம் அன்பினால் தலைமகளோடு கூடுபவராவார்.

### காதற்பரத்தையர் உரிமை

**115. அவருளும் வரைதற்கு உரியோர் உளரே.**

தலைவனால் திருமணம் செய்து கொள்ளும் உரிமை காத பரத்தையர்க்கும் உண்டு.

## துறவறம்

தலைவனும் தலைவியும் துறவினை மேற்கொள்ளுதல்,

### தலைமக்களின் துறவறம்

**116. மக்களொடு மகிழ்ந்து மனையறம் காத்து**
**மிக்க காம வேட்கை தீர்ந்துழித்**
**தலைவனும் தலைவியும் தம்பதி நீங்கித்**
**தொலைவுஇல் சுற்றமொடு துறவறம் காப்ப**

இல்லறவாழ்வின் பயனாகிய மக்களைப் பெற்று அவர்களுடன் கூடி மகிழ்ந்து காம வேட்கை முற்றிலுமாகத் தீர்ந்த காலத்துத் தலைமகனும் தலைமகளும் நம் ஊரை விட்டு நீங்கிக் காட்டின்கண் சென்ற எல்லையில்லாத சுற்றத்தோடு துறவறத்தினையும் காப்பர்.

**மாதிரி வினாக்கள்:**

1. அகத்திணையியல் விளக்கம் தருக.

2. அகப்பொருக்களின் வகைகள் யாவை?

3. ஐந்திணை இலக்கணத்தை வரையறுக்க.

4. கருப்பொருளின் வகைகள் யாவை?

5. களவுப் பிரிவு குறித்து எழுதுக.

6. அறத்தொடு நிற்றல் நிலை குறித்து கட்டுரைக்க.

7 ஊடல் தணிக்கும் வாய்ல்கள் பற்றி ஆய்க.

8. அகத்திணையில் பாங்கர், பாங்கி நிலைப்பாடு குறித்து கட்டுரைக்க.

9. காலங்களின் வகைப்பாடு குறித்து விவரிக்க

10. மெய்யுறுப்புணர்ச்சிக்கான காலம் மற்றும் அவற்றின் பத்து வகையான அவத்தை பற்றி விவரிக.

**இயல் 02**

## களவியல்

தலைவனும், தலைவியும் பிறர் அறியாமல் மேற்கொள்கின்ற அன்பு வாழ்வை விளக்குவது களவு எனப்படும் இக்கனவின் பல்வேறு இயல்புகளைத் தொகுத்துக் கூறுவதால் இவ்வியல் களவியல் எனப் பெயர் பெற்றது. இவ்இயலின்கண் அமைந்த நூற்பாக்கள் 54.

முற்பிறவியில் செய்த நல்வினையின் காரணமாகத் தலைவியைத் தலைவன் காண்பான். பின்னர்த் தலைவன் தலைவியை இயற்கைப் புணர்ச்சியால் அடைவான் அப்புணர்ச்சியால் பிறந்த காதல் வாழ்க்கை பிறருக்குத் தெரியாமல் மறைக்கப்படுவதால் களவெனப் பெயர் பெற்றது. இது களவெனப் பொதுவாகக் கூறப்படினும் அறநெறியாகவே அமையும். உலகத்தில் நடைபெறும் களவெல்லாம் பிறருக்கு உரிய பொருளைத் தெரியாமல் கவர்வதால் அச்செயல் உரிமையாளருக்குத் துன்பத்தைத் தருவதாய் அமையும். அவ்வாறு களவு செய்பவர்கள் பல்வேறு தண்டனைகளோடு நரகத் துன்பமும் எய்துவர். ஆனால் தலைவன், தலைவி மேற்கொள்ளுகின்ற களவு வாழ்க்கை தொன்றுதொட்டுத் தமிழ் மக்களால் போற்றப்படுகின்ற உயர்ந்த ஒழுக்கமாகும். இது இம்மையில் வாழ்வாங்கு வாழ்வதற்கு அடிப்படையாய் நின்று வீடுபேறாகிய மறுமை உலகத்தை அடையச் செய்யும் அறமாகத் நிகழும் சிறப்பு உடையது. எனவே தலைமக்களின் களவு வாழ்க்கை போற்றத் தக்கதாகும்.

**களவின் இயல்பு**

**117.　உளமலி காதல் களவுஎனப் படுவது**
**ஒருநான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்**
**யாழோர் கூட்டத்து இயல்பினது என்ப.**

உள்ளம் மகிழ்வதற்குக் காரணமாகிய காதல் வாழ்க்கை அன்பின் ஐந்திணையாகும். இது களவு, கற்பு என்னும் இரு பிரிவுகளை உடையது. அவற்றுள் களவு வாழ்க்கையானது, நான்கு வேதத்துள் கூறப்படும் எண்வகை மணங்களுள் யாழோர் கூட்டமாகிய காந்தர்வ மணத்தை ஒத்ததாகும்.

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பவை நான்கும் வேதங்களாகும். அவற்றுள்,பிரமம் முதலாகக் கூறப்பெறுவன எண்வகை மணங்களாகும். அவை

1. பிரமம் (பிரம்மசரிய விரதம் காத்த தக்கான் ஒருவனுக்குக் கள்ளியை அலங்கரித்துத் தீயின் முன்னர்க் கொடுப்பதும்

2. பிரசாபத்தியம் (தலைமகனின் பெற்றோர் பெண் வேண்ட தலைமகளின் பெற்றோர் மறுக்காமல் பெண்ணை அலங்கரித்துத் தீயின் முன்னர்க் கொடுப்பதும்

3ஆரிடம் (தலைமகனிடமிருந்து ஓரிரு ஆவையும் (பசு) ஆனேற்றையும் எருது) வாங்கிக் கொண்டு கன்னியை அலங்கரித்துத் தீயின் முன்னர்க் கொடுப்பது)

4. தெய்வம் (வேள்வி ஆசிரியனுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீயின் முன்னர்க் கொடுப்பது)

5.காந்தர்வம் (கொடுப்பாரும் கேட்பாரும் இன்றித் தலைமகனும், தலைமகளும் தனியிடத்துக் கண்டு கூடுவதும்

6. ஆகரம் (தலைமகட்கு, உரிய பொன் கொடுப்பதோடு அவளது சுற்றத்தாருக்கும் வேண்டுவன கொடுத்துப் பெண் கொள்வது)

7.இராக்கதம் (தலைமகள் மற்றும் அவள்தம் பெற்றோர். உடன்பாடின்றி வலிதிற் கொள்வதும்

8. பைசாசம் மறுங்கும் பெண்ணிடமும் கள் உண்ட பெண்ணிடமும் வலிதிற் சேர்வது).

இவற்றுக்கு உரிய வேறு பெயர்கள் (இறையனார் அகப்பொருள்)

1. பிரமம் - அறநிலை 2. பிரசாபத்தியம் - ஒப்பு 3 ஆரிடம் - பொருள்கோள் 4. தெய்வம் - வேறுபெயரில்லை 5. காந்தர்வம் - யாழோர் கூட்டம் 6. ஆகாம் - அரும்பொருள்வினைநிலை 7. இராக்கதம் வேறுபெயரில்லை 8 பைசாசம் பேய்நிலை என்பன.

இவற்றுள் ஆசுரம் முதலிய மூன்றும் கைக்கிளை எனவும் பிரமம் முதலிய நான்கும் பெருந்திணை எனவும் பாகுபடுத்தப்படுகின்றன. சுந்தர்வ மணம் அன்பின் ஐந்திணைக்கு ஒப்பானது.

**கைக்கிளையின் பாகுபாடு**

**118. காட்சி ஐயம் துணிவு,குறிப்(பு) அறிவு என**
**மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை.**

ஒருதலைக் காமமாகிய கைக்கிளை 1. காட்சி 2. ஐயம் 3. துணிவு 4. குறிப்பறிதல் என நான்கு வகைப்படும்.

**1. காட்சி**

தலைவன், தலைவி ஆகிய இருவருள் ஒருவர் மற்றவரைக் காணுதல்.

**காட்சியின் இலக்கணம்**

**119. புணர்ப்பதும் பிரிப்பதும் ஆகிய பால்களுள்**
**புணர்க்கும் பாலில் பொருவஇறந்(து) ஒத்த**
**கறைவேற் காளையும் கன்னியும் காண்ப**
**இறையோன் உயரினும் குறைவின்று என்மனார்.**

முற்பிறப்பில் உறவும் நுகர்ந்த தலைவன், தலைவியை மறுபிறப்பில் கட்டுவதும் பிரிப்பதும் நல்வினை, தீவினை ஆகிய இரு வினைகள் ஆகும். இவற்றுள் நல்வினையின் காரணமாகத் தலைவனும், தலைவியும் தனியிடத்தில் ஒருவரை ஒருவர் காண்பர். இதுவே காட்சி என்று கூறப்படும். அத்தலைவனும் தலைவியும் குலம், செல்வம், அறிவு ஆகியவற்றால் ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்வர் அவருள் தலைவன் தலைவியை விட உயர்ந்தவனாக இருப்பினும் அதனால் குற்றம் இல்லை என்று புலவர் கூறுவர்.

**தலைவன், தலைவியர்க்குரிய ஒப்புமைகள் (10)**

காதல் வாழ்வில் இடம்பெறும் தலைவனும் தலைவியும் பத்து
வகைப் பொருத்தங்களை உடையவராதல் வேண்டும் அவை 1. ஒத்த குலத்தில் பிறத்தல் 2. அக்குலத்திலும் நற்குடித்தோற்றம் 3. ஆளும் தன்மை 4. ஒத்த வயது 5. தோற்றப்பொலிவு 6. அன்பு 7. மனஅடக்கம் 8. அருளுடைமை 9. நுண்ணறிவு 10. செல்வம் என்பனவாம். இப்பத்தையே பழந்தமிழர் தலைவன், தலைவியர்க்குரிய பொருத்தங்களாகக் கொண்டனர். ஆனால் தற்காலத்தார் சாதகத்தில் அமையும் பத்துவகைப் பொருத்தங்களைக் கொண்டு திருமணம் செய்கின்றனர். இது தமிழர் தம் கொள்கைக்கு ஏற்புடையதன்று.

**விளக்கம்**

பொருவு இறந்து ஒத்த-தம்மொடு ஒத்தாகும் மிக்காரும் இன்றித் தமக்குத் தாமே ஒப்பாக அமைந்த தலைமகன், தலைமகள்.

**கறைவேல் காளை:** குருதிக் கறைபடிந்த வேலைத் தாங்கிய வீரம் செறிந்த தலைவன்

**கறைவேல் கன்னி:** குருதிக் கறைபடிந்த வேல்போன்ற கண்களை உடைய தலைவி,

**2 ஐயம்**

பொழிலின்கண் தலைவியைக் காண்கிறான் தலைவன். அத்தலைவியின் தோற்றமும் தலைவி நிற்கும் இடமும் தலைவனுக்கு மயக்கத்தைத் தருகின்றன. அவற்றின் காரணமாகத் தலைவி மானுடப் பெண்ணோ தெய்வமகளோ என்னும் ஐயம் தோன்றுகிறது. இவ்வாறு தலைவனுக்குதி தலைவியைப் பற்றித் தடுமாற்றம் தோன்றுதலே ஐயம் எனப்படும்.

**ஐயத்தின் இலக்கணம்**

**120. மடமான் நோக்கி வடிவும் கண்ட**
**இடமும் சிறந்துழி எய்துவது ஐயம்.**

இளமையான மாவைப் போன்று நோக்கும் தலைவியின் அழகும் அவனைக் கண்ட இடமும் சிறப்புடையதாக அமையும் காலத்துத் தலைவனுக்கு ஐயம் தோன்றும்.

## துணிவு

**துணிவின் இலக்கணம்**

தன்னால் காணப்பட்ட பெண் மானுட்ப பெண் என்பதைத் தலைவன் பல அடையாளங்களால் அறிதலே துணிதலாகும்.

**121. எழுதிய வல்லியும் தொழில்பனை கலனும்**
**வாடிய மலரும்! கூடிய வண்டும்**
**நடைபயில் அடியும் புடைபெயர் கண்ணும்**
**அச்சமும் பிறவும் அவன்பால் நிகழும்**
**கச்சமில் ஐபம் கடிவன ஆகும்.**

1.தலைவியின் தோளிலும் மார்பிலும் ஓவியமாக எழுதிய கொடி 2.உலகத்தாரால் செய்யப்பெற்ற அணிகலன்களை அணிந்திருத்தல் 3. சூடி வாடிய மலர் 4. பூவைச் சுற்றும் வண்டு 5. நிற்காமல் அங்கும் இங்கும் நடக்கின்ற கால்கள் 6 பல திசைகளையும் பார்க்கின்ற கண் 7. ஆண்மகளைக் காணும் போது ஏற்படும் அச்சம் ஆகியவற்றுடன் .(அ) கால் நிலந்தோய்தல் (ஆ) வியர்த்தல் (இ) நிழல் வீழ்தல் (ஈ) உடம்பிலும் ஆடையிலும் மாசுபடல் போன்றவையும் தலைவனின் ஐயத்தை நீக்குவனவாகும்.(எ-டு) திருநுதல் வேர்அரும்பும் தேன்கோதை வாடும்

**4. குறிப்பறிதல்**

தலைவி, தன் மீது கொண்ட வேட்கையைத் தலைவன் குறிப்பினால் அறிதலே குறிப்பறிதல் ஆகும்.

**குறிப்பறிதனின் இலக்கணம்**

**122. அரிவை நாட்டம் அகத்துநிகழ் வேட்கை**
**தெரிய உணர்த்தும் குரிசிற்கு என்ப**

தலைமகளின் உள்ளத்தில் தோன்றும் வேட்கையினைத் தலைவனுக்கு அவளுடைய கண்கள் தெளிவுபட உணர்த்தலே குறிப்பறிதல் ஆகும்.

**களவிற்கு உரிய கிளவிகள்**

களவிற்குரிய கூற்றுக்கள் தொகுத்துக் கூறப்படுதலே கிளவித் தொகையாகும். இவை பதினேழாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் பல கூற்றுக்களை உடையன.

**களவிற்கு உரிய கிளவித் தொகை**

**123. இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே**
**பிரிவுழி மகிழ்ச்சி“ பிரிவுழிக் கலங்கல்**
**இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்**
**பாங்கிமதி உடம்பாடு பாங்கியிற் கூட்டம்**
**பாங்கமை பகற்குறி பகற்குறி இடையீடு**
**இரவுக் குறியே” இரவுக்குறி இடையீடு**
**வரைவு வேட்கை வரைவு கடாதல்**
**ஒருவழித் தணத்தல் வரைவுஇடை வைத்துப்**
**பொருள்வயிற் பிரிதல் என்று ஒருபதின் எழும்**
**களவிற்கு உரிய கிளவித் தொகையே**

1. இயற்கைப்புணர்ச்சி
2. வன்புறை
3. தெளிவு
4. பிரிவுழி மகிழ்ச்சி
5. பிரிவுழிக் கலங்கள்
6. இடந்தலைப்பாடு
7. பாங்கற் கூட்டம்
8. பாங்கிமதியுடம்பாடு.
9. பாங்கியிற் கூட்டம்
10. பாங்கமை பகற்குறி
11. பகற்குறி இடையீடு
12. இரவுக்குறி
13 இரவுக்குறி இடையீடு
14. வரைவு வேட்கை
15 வரைவு கடாதல்
16. ஒருவழித் தணத்தல்
17, வரைவுஇடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்

ஆகிய பதினேழும் களவிற்கு உரிய கிளவித் தொகையாகும்.

**1. இயற்கைப் பணர்ச்சியின் தன்மை**

**124. தெய்வம் புணர்ப்பச் சிந்தைவேறு ஆகி**
**எய்தும் கிழத்தியை இறையோன் என்ப**

சிந்தையால் வேறுபட்ட தலைவன், தெய்வம் கூட்டத் தலையை கண்டு கூடுவது இயற்கைப் புணர்ச்சி ஆகும்.

**தெய்வப் பணர்ச்சியின் விரி(5)**

**125. கலந்துழி மகிழ்தலும் நலம்பா ராட்டலும்**
**ஏற்புற அணிதலும் என்னும்இம் மூன்றும்**
**போற்றிய தெய்வப் புணர்ச்சியின் விரியே**

நூலோரால் சிறப்பிக்கப் பெறுவது தெய்வப் புணர்ச்சியாகும். தலைவன், தலைவியர் புணர்ச்சியில் மகிழ்தல் 2. தலைவியின் அழகைத் தலைவன் பாராட்டுதல் 3. புணர்ச்சியால் கலைந்த தலைவியில் அணிகலன்களைத் தலைவன் ஒழுங்குபடுத்துதல் ஆகிய மூன்றும் அகத்திணையியலில் போற்றப்பட்ட தெய்வப் புணர்ச்சியின் விரியாகும்.

**தலைவியால் எய்தும் புணர்ச்சி வகைகள்**

**126. வேட்கை உணர்த்தல் மறுத்தல் உடன்படல்**
**கூட்டம் என்று இறைவியின் கூட்டம்நால் வகைத்தே**

தலைமகளாலும் இயற்கைப் புணர்ச்சி ஏற்படுவதுண்டு. அப்புணர்ச்சி 1. தலைவன் தன் வேட்கையைத் (விருப்பத்தைத்) தலைவியிடம் தெரிவித்தல் 2. தலைவி அதனை மறுத்தல் 3. பின் ஏற்றுக் கொள்ளல் 4 தலைவன் தலைவியரிடையே கூட்டம் ஏற்படுதல் என்னும் நான்கு நிலைகளைக் கொண்டது.

**தலைவியால் கூடும் பணர்ச்சியின் விரி**

**127. இரந்துபின் நிற்றற்கு எண்ணலும் இரந்து**
**பின்னிலை நிற்றலும்" முன்னிலை ஆக்கலும்**
**மெய்தொட்டுப் பயிறலும்" பொய்பா ராட்டலும்**
**இடம்பெற்றுத் தழாஅலும்" வழிபாடு மறுத்தலும்**
**இடையூறு கிளத்தலும்" நீடுநினைந்து இரங்கலும்**
**மறுத்துஎதிர் கோடலும்" வறிதுநகை தோற்றலும்**
**முறுவற்குறிப்பு உணர்தலும்" முயங்குதல் உறுத்தலும்**

**புணர்ச்சியின் மகிழ்தலும்” புகழ்தலும் பிறவும்**
**உணர்த்திய தலைவியின் புணர்ச்சியின் விரியே**

தலைவித்து மனம் மகிழும்படியாக அவனைப் புகழ்ந்து கூற எண்ணுதல் 2 புகழ்த்து கூறுதல் 3. தலைவியின் செயல் தனக்காக என ஒரு காரணம் கூறுதல் 4 தலையின் தலைவியின் உடம்பைத் தீண்டி நெருங்குவரு 5. பொய்யாக வெவற்றைக் கூறித் தலைவியைப் புகழ்தல்
6. சிறந்ததொரு இடத்தைக் காட்டி அவ்விடத்தில் தலைவியைத் தலைவன் தழுவ விரும்பம்
7. பலபடப் புகழ்ந்து பேசும் தலைவனின் செயலைத் தலைவி தடுத்தல் 8. தலைவியின் நாணத்தால் தான் அடைந்த துன்பத்தைத் தலைவன் கூறுதல்
9. தலைவியைக் கூட முடியாமை நோக்கி நீண்ட நேரம் வருத்திக் கூறுதல் 10. தலைவனின் பாராட்டைத் தலைவி ஏற்றுக் கொள்ளல் 1. தலைவன் மகிழும்படி சிறுநகை தோன்றத் தலைவி நிற்றல் 12. அம்முறுவல் குறிப்பைத் தலைவன் உணர்தல் 13. தலைவி தன்னைத் தழுவ உடன்பட்ட அருமைப் பாட்டைக் கூறுதல் 14 தலைவியைக் கூடித் தலைவன் மகிழ்தல் 15. தலைவியின் அழகைப் புகழ்ந்து பேசுதல் என இவ்வாறாகக் கூறப்பட்ட பதினைந்தும் இவற்றைப் போன்ற 16. பிறவும் தலைவியால் எய்தும் புணர்ச்சியின் விரியாகும்.

இவற்றுள் இரந்து பின் நிற்றற்கு எண்ணல் முதலாக நீடு நினைத்து இரங்கல் ஈறாகக் கூறப்பட்ட ஒன்பதனுள் வழிபாடு மறுத்தலை நீக்க மற்றைய எட்டும் வேட்கை உணர்தற்கு உரியன வழிபாடு மறுத்தல் தலைவி மறுத்தற்கு உரியது. 10,11 தலைவி உடன்படுதலுக்கு உரியன. 12,8 தலைவி உடன்பாட்டிற்கு உரியன 14, 15 தலைவன் கூட்டத்திற்கு உரியன.

**2. வன்புறை**

இயற்கைப் புணர்ச்சியில் மகிழ்ந்த தலைவி, பிரியும் தலைவன் மீண்டும் வருவானோ என ஐயப்படுவாள் அவளின் ஐயத்தைப் போக்கத் தலைவன் மீண்டும் வருவேன் என வற்புறுத்திக் கூறுதல் வன்புறையாகும். (வன்புறை -உறுதிபட்டக் கூறுதல்)

**வன்பறையின் வகைகள்**

**128. ஐயம் தீர்த்தல் பிரிவுஅறி வறுத்தல் என்று**
**எய்திய வன்புறை இருவகைத்து ஆகும்.**

வன்புறையாவது 1. தலைவி தன்மீது கொண்ட ஐயத்தைத் தலைவன் தீர்த்து வைத்தல் 2. தலைவன் தன் பிரிவைத் தலைவிக்குக் கூறுதல் என்னும் இருவகைப் பிரிவுகளை உடையதாகும்.

**வன்பறையின் விரி**

**129. அணிந்தழி நாணியது உணர்ந்துதெளி வித்தலும்**
**பெருநயப்பு உரைத்தலும் தெய்வத்திறம் போலும்**
**பிரிவேன் என்றலும் பிரித்துவருக என்றலும்**
**இடம்அணித்து என்றலும் என்றுஇவை ஆறும்**

**மடன்.அறத் தெரிந்த வன்புறை விரியே**

1.புணர்ச்சியால் கலைந்த அணிகலன்களைத் தலைவன் திருத்துவான் இதனைத் தோழி கண்டால் ஐயப்படுவாள் எனத் தலைவி கூறுவாள். அப்போது தலைவன் தலைவிக்குத் தெளிவுபடுத்துதல் 2. தலைவன் மீண்டும் வருவானோ, மாட்டானோ எனத் தலைவி ஐயப்படம் தலைவன் தலைவி மீது கொண்ட பெருங்காதலைக் கூறுதல் 3. தலைவ இறைவனாகிய ஊழின் திறத்தை எடுத்துக் கூறுதல் 4. தலைவியை இனிப்பிரியேன் எனத் தலைவன் கூறுதல் 5. தலைவன் பிரிந்து மீண்டும். வரத் தலைவி உடன்படல் 6. தலைவியின் ஐயத்தைத் தீர்க்கத் தலைவன் தன் ஊர், அருகில் உள்ளமையை எடுத்துரைத்தல் என இவை ஆறும்

## 3.தெளிவு

தலைவனுடன் கூடி இன்பமுற்ற தலைவி, தலைவனின் சொல்லை மெய்யென ஏற்றுப் பிரிவைப் பொறுத்துக் கொள்ளும் நிலையே தெளிவாகும்.

**தெளிவின் இலக்கணம்**

**130. தலைவன் மாற்றம் தலைவி தேற்றம்**
**தெளிவாம் என்பர் தெளித்திசி னோரே.**

உறுதி கூறிய தலைவனின் சொல்லை உண்மையெனத் தலைவி உணர்ந்து துணிவுபடுதலைத் தெளிதல் என்று சொல்லுவர் புலவர்.

## 4. பிரிவுழி மகிழ்ச்சி

தலைவன் தெளிவுபடுத்தத் தெளிந்த தலைவி, தலைவனிடமிருந்து பிரிந்து செல்வாள் பிரிந்து போகின்ற தலையியின் செயல் கண்டு தலைவன் மகிழ்ச்சியடையும் நிலையே பிரிவுழி மகிழ்ச்சியாகும்.

**பிரிவழி மகிழ்ச்சியின் விரி**

**131. செல்லும் கிழத்தி செலவுகண்டு உளத்தொடு**
**சொல்லலும் பாகனொடு சொல்லலும்“ இரண்டும்**
**பிரிவுழி மகிழ்ச்சியின் விரிஎனக் கொளலே.**

1. புணர்ச்சியில் கூடிக் களித்த இடத்திலிருந்து பிரிந்து செல்லும் தலைமகளின் செலவைக் கண்டு தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுதல் 2. தன்னைத் தேடி வந்த பாகனிடம் தலைவி செல்வதைக் காட்டிக் கூறுதல் என்னும் இவ்விரண்டும் பிரிவுழி மகிழ்ச்சியின் விரியாகும்.

## 5. பிரிவுழிக் கலங்கல்

தலைவி பிரிந்த இடத்தில் அதற்காகத் தலைவன் வருத்தும் நிலையே பிரிவுழிக் கலங்கலாகும்.

**பிரிவழிக் கலங்களின் விரி**

**132. மருளுற்று உரைத்தல் தெருளுற்று உரைத்தல்என்று**
**இருவகைத்து ஆகும் பிரிவுழிக் கலங்கல்**

பிரிவுழிக் கயங்கள் என்பது 1 ஆய வெள்ளமாகிய தோழிகள் கூட்டத்தால் வழிபாடு செய்யப்படும் தலைமகளைக் கண்டு செதகையாளை நாம் கூடியதும் என்ன வியப்போர் எனத் மயங்கிக் கூறுதல் 2. தலைவன் தன் மனம் தெளிந்து கூறுதல் என இருவகைப்படும்.

**பிரிவழிக் கனங்களின் விரி**

**133. ஆய வெள்ளம் வழிபடக் கண்டுஇது**
**மாயமோ என்றலும் வாயில்பெற்று உய்தலும்**
**பண்புபா ராட்டலும் பயந்தோர்ப் பழிச்சலும்**
**கண்படை பெறாது கங்குல்நோ தலும் எனும்**
**ஐந்தும் பிரிவுழிக் கலங்கல்விரி ஆகும்.**

தலைவியைத் தோழியர் கூட்டம் வழிபடக் கண்டு தோழியர் கூட்டத்தாரிடையே உள்ளவள் என்னைத் தனித்துக் கூடியது மாயமோ? எனத் தலைவன் மயங்கிக் கூறுதல் 2. கூட்டத்தாரிடை இருக்கும் தலைவியின் உயிர்த்தோழியைத் தூதாகப் பெற்றுத் தலைவியை அடைவேன் எனத் தலைவன் கூறுதல் 3. தலைவியின் அழகைக் கொண்டாடல் 4. தலைவியின் பெற்றோரைத் தலைவன் வாழ்த்துதல் 5. இரவு முழுவதும் தலைவி மீது வேட்கை கொண்டு உறங்காமல் வருத்திக் கூறுதல் ஆகிய ஐந்தும் பிரிவுழிக் கலங்கலின் விரி ஆகும்.

இவற்றுள் ஆயவெள்ளம் வழிபடக் கண்டு இது மாயமோ? என்பது மயங்கிக் கூறுதலுக்கு உரியது. மற்றைய நான்கும் தெளிந்து கூறுதலுக்கு உரியன. ஆய வெள்ளம் தோழியர் கூட்டம்)

## 6. இடந்தலைப்பாடு

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைப் புணர்ந்த தலைவன் அடுத்த நாளும் அவ்விடத்தில் அத்தலைவியைக் கூடுதல் இடந்தலைப்பாடு ஆகும்.

**இடந்தலைப் பாட்டின் வகைகள்**

**134. தெய்வம் தெளிதல் கூடல் விடுத்தல் என்று**
**இல்ஓர் மூவகைத்து இடத்தலைப் பாடே**

1. முன்னர்க் கூட்டுவித்த தெய்வம் மீண்டும் தலைவியைக் கூட்டுவிக்கும் எனத் தெளிதல் 2 முதல்நாள் கூடிய இடத்திற்குச் சென்ற தலைவன் அத்தலைவியைக் கூடல் 3 கூடிய தலைவியைத் தோழி கூட்டத்துள் செல்ல விடுத்தல் ஆகிய மூன்றும் இடந்தலைப்பாட்டின் வகைகளாகும்.

**இடத்தனைப்பாட்டின் விரி**

**135. தந்த தெய்வம் தரும்எனச் சேறலும்**
**முந்துற்க் காண்டலும்  முயங்கலும் புகழ்தலும்**
**உடன்புணர் ஆயத்து உய்த்தலும் எனஐந்து**
**இடந்தலைப் பாட்டின் இலக்கண விரியே**

1. இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைத் தந்த தெய்வம் பின்னரும் தரும் என எண்ணித் தலைவன் அவ்விடத்திற்குச் செல்லல் 2. முதல் நாள் கண்டது போலவே அத்தலைவியை அவ்விடத்துக் காணுதல் 3, தலைவியை ஆரத் தழுவுதல் 4. தழுவிய தலைவியைத் தலைவன் புகழ்ந்து கூறல் ஞ. தோழியர் கூட்டத்தோடு செல்லக் கூறல் என்னும் இவ்வைந்தும் இடந்தலைப் பாட்டின் விரியாகும்.

மேற்கூறப்பட்ட இடந்தலைப்பாட்டின் விரியினுள் தந்த தெய்வம் தரும் எனச் சேறல் என்பது தெளிதற்கு உரியது. காண்டல், முயங்கல், புகழ்தல் இம்மூன்றும் கூடற்கு உரியன. ஆயத்து உய்த்தல் என்பது விடுத்தற்கு உரியது.

## 7. பாங்கற் கூட்டம்

மூன்றாம் நாள் பாங்கனின் உதவியால் தலைவன் தலைவியைக் கூடுதல் பாங்கற் கூட்டம் ஆகும்.

**பாங்கற் கூட்டத்தின் வகைகள்**

**136. சார்தல் கேட்டல் சாற்றல் எதிர்மறை**
**நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டல் என்று**
**ஆங்குஎழு வகைத்தே பாங்கற் கூட்டம்.**

1 வேட்கையால் துன்பமுற்ற தலைவன் பாங்கனைச் சார்தல் 2 உனக்கு யாது நேர்ந்தது? எனப் பாங்கள் தலைவனை வினாதல் 3. தலைவன் தன் நிலையைக் கூறுதல் 4. பாங்கள் எதிர்மறுத் எதிர்மறுத்து மொழிதல் 5. அப்பாங்கள் தலைவியைக் காணுதல் 6. தலைவன் தலைவியைக் கூடல் 7. தலைவியை தோழியர் கூட்டத்தோடு கூடச் செய்தல் ஆகிய ஏழும் பாங்கற்கூட்டத்தில் வகைகள் ஆகும்.

**பாங்கற் கூட்டத்தின் விரி**

**137. தலைவன் பாங்கனைச் சார்தலும் பாங்கன்**
**தலைவனை உற்றது வினாதலும் தலைவன்**
**உற்றது உரைத்தலும்“ கற்றறி பாங்கன்**
**சுழறலும் கிழவோன் கழற்றுஎதிர் மறுக்கலும்**
**கிழவோர் பழித்தலும் கிழவோன் வேட்கை**
**தாங்கற்கு அருமை சாற்றலும் பாங்கன்**
**தன்மனத்து அழுங்கலும் தலையலோடு அழுங்கலும்**

**எவ்விடத்து எவ்வியற்று என்றலும் அவன்அ.்.து**
**இவ்விடத்து இவ்வியற்று என்றலும் பாங்கன்**
**இறைவனைத் தேற்றலும் குறிவழிச் சேறலும்**
**இறைவியைக் காண்டலும் இகழ்ந்ததற்கு இரங்கலும்**
**தலையனை வியத்தலும் தலைவியை வியத்தலும்**
**தலைவன் தனக்குத் தலைவிநிலை கூறலும்**
**தலைவன் சேறலும்" தலைவியைக் காண்டலும்**
**கலவியின் மகிழ்தலும் புகழ்தலும் தலைவியைப்**
**பாங்கியொடு வருகஎனப் பகர் தலும் பாங்கிற்**
**கூட்டலும் என்றுஎங்கு ஈட்டுநால் ஆறும்**
**காட்டிய பாங்கற் கூட்டத்து விரியே.**

தலைவன் பாங்கள் உதவியால் தலைவியைக் கூடும் கூட்டம் பாங்க. கூட்டம் ஆகும். அது இருபத்து நான்கு விரிகளை உடையது.

1. தலைவன் தான் உற்ற வேட்கை நோய் பாங்கனால் மட்டுமே தீருமென எண்ணி அவனைச் சார்தல் 2. தலைவனின் துன்பத்திற்குரிய காரணத்தைப் பாங்கன் கேட்டல் 3. தலைவன் காரணத்தைக் கூறல் 4.கற்றறிந்த பார்ப்பனப் பாங்கள் தலைவனை இடித்துரைத்தல் 5. பாங்கள் கூற்றைத் தலைவன் மறுத்துப் பேசுதல் 6 எதிர் உரையாடிய தலைவனைப் பாங்கள் பழித்தல் 7. தலைவி மீது கொண்ட வேட்கையை என்னால் தாங்க முடியவில்லை எனத் தலைவன் கூறுதல் 8. தலைவன் நிலைகண்டு பாங்கள் தனக்குள் வருத்துதல்.

9. பாங்கன் தலைவனோடு வருந்துதல் 10. நீ கண்ட தலைவி எவ்விடத்தாள்? எவ்வியல்பினள்? எனப் பாங்கன் வினவுதல் 11.இவ்விடத்து இவ்வியல்பினள் எனத் தலைவன் கூறுதல் 12. தலைவியைக் கண்டு வருகிறேன் எனப் பாங்கன் தலைவனைத் தேற்றுதல் 13. தலைவன் கூறிய இடத்தில் தலைவியைக் காணப் பாங்கள் செல்லல் 14. பாங்கள் அத்தலைவியைக் காணுதல் ஐளு. தலைவியின் பேரழகைக் கண்டு தலைவனை இகழ்ந்தது தவறு எனப் பாங்கன் தன் மனத்து வருந்துதல் 16. தலைவியின் கண்வலையில் சிக்கிய தலைவன்அவளிடமிருந்து தப்பித்து நம்மிடம் வந்திருப்பது வியப்புக்குரியது எனக் கூறுதல்.
17. தலைவியைப் பாங்கன் வியந்து போற்றுதல் 18. குறியிடத்துத் தனித்து நிற்கும் தலைவியின் நிலையைத் தலைவன் கூறுதல் 19 பாங்கள்
சொற்படி தலைவன் குறியிடத்துச் செல்லல் 20. தலைவியைக் காணாதல் 1.புச்சியில் மகிழ்தல் 22. தலைவியைத் தலைவன் புஈழ்ந்து போதல் 3.உயிர்த் தோழியோடு வருமாறு கூறுதல் 24. தலைவியைத் தலைகள் தோழியர் கூட்டத்திற்குச் செல்லவிடுதல்.

இவ்வாறு கூறப்பட்ட 24 துறைகளும் பாங்கற் கூட்டத்தின் விரியாகும். இவற்றுள் முதல் மூன்றும் சார்தல், கேட்டல், சாற்றல் ஆகிய மூன்றுக்கும் உரியன 4 முதல் 7 வரை எதிர் மறுத்தற்கு உரியன. 6 முதல் 18 வரை நேர்தற்கு உரியன. 19 முதல் 22 வரை கூடற்கு உரியான தலைவன் பாங்கியொடு வருகெனப் பகர்தலும், பாங்கிற் கூடலும் ஆகிய இரண்டும் பாங்கற் கூட்டற்கு உரியனவாம்.

### 8. பாங்கி மதிஉடன்பாடு

தலைவனும் தலைவியும் கூடி மகிழ்ந்ததைத் தோழி தன்னுடைய அறிவால் (மதியால்) ஆராய்ந்து அறிந்து கொள்ளுதலே பாங்கிமதி உடன்பாடாகும். அதாவது தலைவியிடம் வேறுபாடு கண்ட தோழி அவளுடைய சொல், செயல்களை ஆராய்ந்து உண்மையைத் தெளிதல் பின்னர்த் தலைவன் தலைவியரின் காதலுக்கு உடன்படுதல் ஆகியவை இதனுள் அடங்கும்.

**பாங்கி மதிஉடன்பாட்டின் வகைகள்**

**138. முன்னுற உணர்தல் குறையுற உணர்தல்**
**இருவரும் உள்வழி அவன்வர உணர்தல் என்று**
**ஒருமூன்று வகைத்தே பாங்கிலதி உடன்பாடு.**

பாங்கிமதி உடன்பாடு 1. முன்னுற உணர்தல் 2.குறையுற உணர்தல் 3. இருவரும் உள்வழி அவன்வர உணர்தல் என்னும் மூன்று வகைகளை உடையதாகும்.

## 1 முன்னுற உணர்தல்

தலைவியின் தோற்றத்தில் வேறுபாடு கண்ட தோழி சில குறிப்புக்களால் அத்தலைவியின் புணர்ச்சி உண்மையை அறிவது முன்னுற உணர்தல் ஆகும். முதன் முதலில் உணரப்படுதலால் இது முன்னுற உணர்தல் ஆயிற்று. தன் முன்தோன்றும் தலைவியைக் கண்ட தோழி அவளின் நிலையை உணர்வதாலும் இப்பெயர் பெற்றது. நாற்றம் தோற்றம் போன்ற குறிப்புக்களால் (முன்னங்களால்) ஆராய்ந்து அறியப்படுதலால் முன்னுறவுணர்தல் ஆயிற்று. (முன்னம் - குறிப்பு)

முன்னுர் உணர்தளின் வகைகள்

**139. தாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்**
**செய்வினை மறைப்பும் செலவும் பயில்வும்என்று**
**இவ்வகை ஏழினும் ஐயமுற்று ஓர்தலும்**
**அவ்வகை தன்னால் ஐயம் தீர்தலும்**
**மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது**
**பல்வேறு கவர்பொருள் சொல்லின்நா டலும்என**
**முன்னுற உணர்தல் மூன்றுஆ கும்மே.**

1.தலைவியின் உடம்பில் ஏற்படும் புதுமணம் (ஆ) தோற்றத்தில் புதுப்பொலிவு (இ)நெய்வம் தொழாமை (ஈ) முன்பு போல் அல்லாமல் குறைந்த உணவு உண்ணல் (உ) தன் செயல்களைப் பிறர் அறியாதவாறு மறைத்தல் (ஊ) தோழியர் கூட்டத்தைப் பிரிந்து தனியே செல்லுதல்) ஒரே இடத்தில் செயல்படுதல் ஆகிய இவ்ஏழு குறிப்பினாலும் தோழி ஐயமுறுதல் 2. ஆராய்ந்து பின்னர் ஐயம் தீர்தல் 3.மெய்யாகவும், பொய்யாகவும் இருபொருள்படும்படியான சொற்களை மரபு பிறழாமல் கூறி அதன்படியும் ஆராய்தல், இம்மூன்றும் முன்னுற உணர்தலின் வகைகளாகும்.

## 2. குறையுற உணர்தல்

தலைவன் கையுறை (தழையும்) தலைவன் கையுறை (தழையும் கண்ணியும்) ஏந்திச் சென்று தோழியிடத்துத் தன் மனக்குறையைத் தீர்க்க வேண்டுவான். அதன் வழித் தலைவிக்குப் புணர்ச்சி உண்மையைத் தோழி அறிதலே குறையுற உணர்தல் ஆகும்.

**குறையுற உணர்தலின் வகைகள்**

**140. பெட்ட வாயில்பெற்று இரவுவலி உறுத்தோன்**
**கண்ணியும் தழையும் ஏந்தி நண்ணி**
**ஊர்பெயர் கெடுதியோடு ஒழிந்தவும் வினாவழி**
**விலங்கை யாரே இவர்மனத்து எண்ணம் யாது?எனத்**
**தேர்தலும் எண்ணம் தெளிதலும்" எனஆங்கு**
**ஓர்இரண்டு ஆகும் குறையுற உணர்தல்**

1. தலைவியின் உர்த் தோழியைக் கண்டு தன் குறையைப் போக் கொள்ள நினைத்த தலைவன் கையுறை ஏந்தி ஊர், பெயர், வேட்டையில் தப்பிய விலங்கு கெடுதி) பற்றி அவளிடம் வினவுவாள். அதன் காரணமாகத் தோழி இவன் யார்? எனவும் இவனுடைய உள்ளக் கருத்து யாது? எனவும் ஆராய்தல் 2. தலைவனின் எண்ணத்தினை அறிதல் ஆகிய இரண்டும் குறையுற உணர்தலின் வகைகளாகும்.

**இருவரும் உள்வழி அவன் வர உணர்தல்**

தலைவியும் தானும் சேர்ந்து இருக்கின்ற இடத்திற்குத் தலைவன் கையுறை ஏந்தி வருவாள் அவனைக் கண்ட தோழி தலைவியின் புணர்ச்சியை அறிதலே இருவரும் உள்வழி அவன் வர உணர்தல் எனப்படும்.

**இருவரும் உள்வழி அவன் வர உணர்தலின் வகைகள்**

**141. கையுறை ஏந்திவந்து அவ்வகை வினாழி**
**எதிர்மொழி கொடுத்தலும் இறைவனை நகுதலும்**
**மதியின் அவர்அவர் மனக்கருத்து உணர்வும் என்று**
**இருவரும் உள்வழி அவன்வர உணர்தல்**
**ஒருமூன்று ஆகும் தெரியும் காலே.**

1.தலைவியும் தோழியும் சேர்த்திருக்கக் கண்ட தலைவன் கையுறை ஏந்தி வந்து முன்புபோல ஊர் முதலானவற்றை வினவுதல், அதற்குத் தோழி மறுமொழி கூறுதல் 2. தலைவன் அவ்விடத்தை விட்டுச் சென்ற பின்னர்த் தோழி தலைவியைப் பார்த்துக் குறும்பு மொழி கூறி நகைத்தல் 3. தோழி தன் அறிவினால் தலைவன் தலைவியரின் மனக்கருத்தினை உணர்தல்.

இம்மூன்றும் ஆராய்ந்து பார்க்கும் காலத்து இருவரும் உள்வழி அவன் வர உணர்தல் ஆகும்.

**பாங்கிமதியுடன்பாட்டின் விரி**

**142. ஈங்கனம் இயம்பிய இருநான்கு கிளவியும்**

**பாங்கி மதியுடன் பாட்டது விரியே.**

மேற்கூறப்பட்ட (139,140,141) எட்டுக் கூற்றுக்களும் பாங்கி மதியுடம்பாட்டின் விரியாகும்.

### 9. பாங்கியிற் கூட்டம்

பாங்கியின் உதவியினால் தலைவியைத் தலைவன் கூடும் கூட்டம்

**பாங்கியிற் கூட்டம் ஆகும். பாங்கியிற் கூட்டத்தின் வகைகள் (12)**

**143. இரந்துபின் நிற்றல் சேட்படை மடற்கூற்று**
**மடல்விலக்கு உடன்படல் மடற்கூற்று ஒழிதல்**
**குறைநயப் பித்தல் நயத்தல் கூட்டல்**
**கூடல் ஆயம் கூட்டல் வேட்டல் என்று**
**ஈர்ஆறு வகைத்தே இகுளையிற் கூட்டம்**

1.தலைவன் தன் குறையைத் தீர்க்க வேண்டுமெனத் தோழியைப் புகழ்தல் 2 தோழி தலைவனை அவ்விடத்தை விட்டு அகற்றுகல் 3.தலைவன் மடல் ஏறுவேன் எனக் கூறுதல் 4. அவன் மடல் ஏறுதலைத் தோழி விலக்குதல் 5. தலைவன் குறையை நீக்கத் தோழி உடன்படல் 6. அதன் காரணமாகத் தலைவன் மடலேறலை விடுத்தல் 7. தலைவன் குறையை முடிக்கத் தலைவியை வற்புறுத்தல் 8.தலைவி அதற்கு உடன்படுதல் 9.தலைவியைக் குறியிடத்து விடுத்தல் 10 தலைவன் கூடுதல் 11. தோழி தலைவியைப் பாங்கியரிடம் சேர்த்தல் 12. பாங்கியின் சொற்படி தலைவன் விருந்தினை விரும்புதல் ஆகிய பன்னிரண்டும் பாங்கியிற் கூட்டத்தின் வகைகளாகும்.

### 1 இரந்து பின் நிற்றல்

தலைவன் தன் மனக் குறையாகிய தலைவியின் காதலை நிறைவேற்றக் கோரித் தோழியைப் புகழ்ந்து கூறுதல்.

### 2. சேட்படை

தலைவியின் குலமுறை முதலானவற்றைத் தோழி எடுத்துக்கூறித் தலைவனை அவ்விடத்தை விட்டு அகற்றுதல்.

**இரந்து பின் நிற்றலும் சேட்படையம்**

**144. தலைவன் உட்கோள் சாற்றலும் பாங்கி**
**குலமுறை கிளத்தலும்" தலைவன் தலைவி**
**தன்னை உயர்த்தலும்" நல்நுதல் பாங்கி**
**அறியாள் போன்று வினாதலும் இறையோன்**
**இறைவி தன்மை இயம்பலும் பாங்கி**

தலைவி அருமை சாற்றலும் தலைவன்
இன்றியமை யாமை இயம்பலும்“ பாங்கி
நின்குறை நீயே சென்றுஉரை என்றலும்
பாங்கிவைத் தலைவன் பழித்தலும் பாங்கி
பேதைமை ஊட்டலும்” காதலன் தலைவி
மூதறிவு உடைமை மொழிதலும் பாங்கி
முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறலும்
தன்னிலை தலைவன் சாற்றலும் பாங்கி
உலகியல் உரைத்தலும்” தலைமகள் மறுத்தலும்
பாங்கி அஞ்சிஅச் சுறுத்தலும்” ஆங்கு அவன்
கையுறை புகழ்தலும்” தையல் மறுத்தலும்
ஆற்றா நெஞ்சினோடு அவன்புலத் தலும் அவள்
ஆற்றுவித்து அகற்றலும் ஆகும்நால் ஐந்தும்
இரந்துபின் நிற்றற்கும் சேட்படுத் தற்கும்
பொருந்துவ என்மனார் தெரித்திசி னோரே

1. தலைவன் தலைவியின் மீது கொண்ட காதலைக் கூறுதல் 2 தலைவியின் குலத்தைக் கூறித் தலைவன் அதற்குப் பொருத்தம் அற்றவன் எனத் தோழி மறுத்தல் 3. தலைவன் தலைவியை உயர்த்திக் கூறுதல் 4நீ எவளிடத்துக் காதல் கொண்டாய்? என அறியாதவள் போலப் பாங்கி வினவுதல் 5. தலைவன், தலைவியின் இயல்பைக் கூறுதல் 6.தலைவி அடைதற்கு எளியவள் அல்லள் எனத் தோழி கூறுதல் 7.தலைவி அன்றி என்னுயிர் இல்லை எனத் தலைவன் இன்றியமையாமையை எடுத்துக் கூறுதல் 8. உன் மனக்கருத்தை நீயே தலைவியிடம் கூறுக எனத் தோழி கூறுதல் 9. உதவாத தோழியைத் தலைவன் பழித்துக் கூறுதல் 10. தலைவி பிறர் துயரறியாத சிறுபெண் (பேதை) எனத் தோழி கூறுதல்.

11. தலைவி முதிர்ந்த அறிவுடையவள் எனத்தலைவன் மறுத்துக் கூறுதல் 12. முன்பு கூடிய முறையில் தலைவியை மீண்டும் கூடுக எனத் தோழி உபாயம் கூறுதல் 13. தலைவன் வேட்கை நோயால் வருந்தும் நிலையைத் தோழியிடம் கூறுதல் 14. சான்றோரை முன் வைத்து வரைந்து கொள்ளும் உலகியல்பைப் பின்பற்றுமாறு தோழி கூறுதல் 15. அதனைத் தலைமகன் மறுத்துக் கூறுதல் 16. தோழி தான் அஞ்சியவளாய்த் தலைவனையும் அச்சுறுத்தி நீங்கக் கூறுதல் 17. தலைவன் தான் கொண்டு வந்த கையுறையைப் புகழ்ந்து கூறுதல் 18. அதனை வாங்கத் தோழி மறுத்தல் 19. கையுறையைப் பெறாத நிலையில் தலைவன் வருத்தமுற்று நெஞ்சுடன் கலங்கிக் கூறுதல் 20. அஞ்சாமல் நாளை வா எனத் தோழி தலைவனைத் தேற்றி அனுப்புதல். இவ்வாறு கூறப்பட்ட இவ்இருபதும் இரந்துபின் நிற்றற்கும் சேட்படுத்தற்கும் பொருந்துவன ஆகும்.

### 3. மடற்கூற்று

தோழியின் உதவியால் தலைவி கிடைப்பாள் என நினைக்கிறான் தலைவன் தோழியால் அது கூடாமல் போகவே தலைவிக்காக மடல் ஏறுவேன் எனத் தலைவன் உறுதிபடக் கூறுதல்.

### 4. மடல்விலக்கு

கருணை நிரம்பிய தலைவனுக்கு மடல் ஏறுதல் இயலாது எனக் கூறித் தலைவன் மடல் ஏறுதலைத் தோழி தடுப்பது.

**மடற்கூற்றும் மடன் விலக்கும் (7)**

**145. இருந்து குறைபெறாது வருத்திய கிழவோன்**
**மடலே பொருள்ளன மதித்தலும் பாங்கிக்கு**
**உலகின் மேல்வைத்து உரைத்தலும் அதனைத்**
**தன்மேல் வைத்துச் சாற்றலும்" பாங்கி**
**தலைமகள் அவயவத்து அருமை சாற்றலும்**
**தலைமகன் தன்னைத் தானே புகழ்தலும்**
**அவர்முலைப் பாங்கி அருளியல் கிளத்தலும்**
**கொண்டுநிலை கூறலும்" என்றுஇவை ஏழும்**
**மடல்கூற் றிற்கும் மடல்விலக் கிற்கும்**
**கடவ என்மனார் கற்றறிந் தோரே.**

1 தன் மனக்கருத்து நிறைவேறப் பெறாமல் வருந்திய தலைவன் மடல் ஏறுவதே தனக்குப் பொருத்துவது எனத் தன்னுள் கூறுதல் 2. தலைவன் மடவேறலை உலகின்மேல் வைத்துக் கூறுதல் 3.தான் மடலேறப் போகிறேன் எனக் கூறுதல் 4. தலைவியின் உறுப்புக்களை ஓவியமாகத் தீட்டமுடியாதெனத் தலைவனிடம் தோழி கூறுதல் 5. தலைவி உருவைத் தான் ஒருவனே எழுதக் கூடியவன் எனத் தலைவன் தன்னுடைய ஆற்றலை எடுத்துக் கூறித் தன்னைத் தானே புகழ்தல் 6. மடலேறுதலால் பிற உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்களைக் கூறி அருளுடையார்க்கு இது ஆகாதெனத் தோழி மறுத்தல் 7. தலைவன் தன் உயிரைத் தாங்கிக் கொண்டு நிற்பதற்குரிய வழியைத் தோழி கூறுதல்.

இவ்வாறாகக் கூறப்பட்ட ஏழு வகையுள் தலைமகள் கூற்றுக்கள் மடல் ஏறலாகவும், தோழி கூற்றுக்கள் மடல் விலக்காகவும் அமைந்துள்ளன

**5.குறைநேர்தல் (உடன்படல்)**

மடல் ஏறுவேன் எனக் கூறிய தலைவனின் சொல்லைக் கேட்டுத் தோழி அவன் தந்த கையுறையை ஏற்றுக் காதலுக்குத் துணை புரிதல்

6. மடற்கூற்று ஒழிதல்

தோழி தனக்காக மனம் இரங்கிக் கையுறையை ஏற்றுக் கொண்டதால் மகிழ்ந்த தலைவன் மடல் ஏறுதலைக் கை விடுதல்.

**குறைநேர்தலும் மடற்கூற்று ஒழிதலும் (ரு)**

**146. தலைவி இளமைத் தன்மை பாங்கி**
**தலைவற்கு உணர்த்தலும் தலைவன் தலைவி**

**வருத்திய வண்ணம் உரைத்தலும் பாங்கி**
**செவ்வி அருமை செப்பலும் தலைவன்**
**செவ்வி எளிமை செப்பலும் பாங்கி**
**என்னை மறைப்பின் எளிதுஎன நகுதலும்**
**அந்நகை பொறாஅது அவன்புலம் பலும் அவள்**
**தேற்றலும் கையுறை ஏற்றலும் கிழவோன்**
**ஆற்றலும் என்னும் அவ்ஒன் பானும்**
**குறைநேர் தற்கும்மடற் கூற்றுஒழி தற்கும்**
**முறைமையின் உரிய முன்னுங் காலே.**

தலைவி இளமைப் பருவமுடையவள் எனத் தோழி தலைவனுக்கு உணர்த்தல் 2. அதனை மறுத்துத் தலைவி வருந்திய விதத்தைத் தலையின் கூறுதல் 3. தலைவியிடம் நெருங்கிக் கூற முடியா அருமையைத் தோழி கூறல் 4.தலைவி நெருங்கிக் கூறுதற்கு எளியன் எனத் தலைவன் கூறுதல் 5. எனக்குத் தெரியாமல் களவு மேற்கொள்ளல் எளிதெனத் தோழி நகையாடிக் கூறுதல் 6. தோழி நகையாடிக் கூறுவதைப் பொறுக்காமல் தலைவன் புலம்பிக் கூறல் 7. தோழி தலைவனை வருந்த வேண்டாமெனக் கூறுதல் 8. தலைவனின் கையுறையைத் தோழி ஏற்றல் 9. தலைவன் துயர்மாறி ஆற்றியிருத்தல் ஆகிய ஒன்பதும் தலைவனின் குறையைப் போக்குவதற்கும் மடற்கூற்று ஒழிதற்கும் உரியன ஆகும்.

**மறுத்தல்**

தலைவி வலிதாகச் சொல்லி காதலை மறுத்துக் கூறுதல்

**குறைநயப்பித்தலும் மறுத்தலும்**

147. **இறைவன் தனக்குக் குறைநேர் பாங்கி**
**இறைவிக்கு அவன்குறை உணர்த்தலும் இறைவி**
**அறியாள் போன்று குறியான் கூறலும்**
**பாங்கி இறையோற் கண்டமை பகர்தலும்**
**பாங்கியைத் தலைவி மறைத்தலும் பாங்கி**
**என்னை மறைப்பது என்எனத் தழாஅலும்**
**கையுறை புகழ்வும் என்று இவ்இரு மூன்றும்**
**மெலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்**
**வலிதாகச் சொல்லி மறுத்தற்கும் உரிய**

1. தலைவியின் கூடலை விரும்பும் தலைவனின் நிலையைத் தோழி தலைவிக்கு உணர்த்துதல் 2. தலைவி அதனைக் காதில் வாங்காதவள் போல வேறொன்றைக் கூறுதல் 3. தலைவன் உன்னைக் காண ஆவலுடன் இங்கு வந்தான் எனத் தோழி கூறுதல் 4. பாங்கியிடம் தலைவி உண்மையை மறைத்துக் கூறல் 5. நான் வேறோ? என்னிடம் மறைப்பது ஏனோ? எனத் தோழி தலைவியைத் தழுவிக் கூறல் 6. பாங்கி தலைவன் தந்த கையுறையைப் புகழ்ந்து பேசுதல் ஆகிய ஆறும் மென்மையாகக் கூறித் தலைவன் குறையைப் போக்குதற்கும், வன்மையாகச் சொல்லித் தலைவி மறுத்தலுக்கும் உரியன.

**குறைநயப்பித்தல்**

தலைவனது துயர்நிலையை அறிந்தவன் தோழி அத்தோழி அதனைத் தலைவியிடம் எடுத்துக் கூறித் தலைவனின் மனக்குறையைய போக்க இசைவுபடச் செய்தலே குறைநயப்பித்தல் ஆகும்.

## 8. நயத்தல்

தோழியின் வாயிலாகத் தலைவனின் துயர் நிலையை அறிறோன் தலைவி அதனைப் போக்கத் தலைவி விரும்பும் நிலையே

**நயத்தலாரும் குறைநயப்பித்தலும் நயத்தலும்**

**148. தோழி கிழவோன் துயர்நிலை கிளர்த்தலும்**
**மறுத்தற்கு அருமை மாட்டலும் தலைவன்**
**குறிப்புவேறு ஆக நெறிபடக் கூறலும்**
**தலைவியை முனிதலும் தலைவி பாங்கி**
**தன்னை முனிதலும் தன்கைக் கையுறை**
**ஏற்றலும் எனமுறை சாற்றிய ஆறும்**
**வலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்**
**மெலிதாகச் சொல்லி மேவற்கும் உரிய**

1. தோழி தலைவனது வேட்கையாற் கொண்ட துயர்நிலையைத் தலைவிக்குக் கூறுதல்
2. மறுமொழி கூறாத தலைவியிடம் தலைவன் தொடர்ந்துவரின் அதனை மறுத்தல் அரிதெனத் தோழி கூறுதல் 3.தலைவனின் எண்ணம் வேறாகத் தெரிகிறது எனத் தோழி கூறுதல் 4தோழி தலைவி மீது சினம் கொள்ளுதல் 5. தலைவி தோழியை மனத்துள் சினந்து பேசுதல் 6. தலைவி கையுறையைப் பெற்றுக் கொள்ளல் மேற்குறிப்பிட்ட ஆறும் வலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தற்கும் மெலிதாகச் சொல்லி மேவற்கும் உரியனவாம்.

## 9.கூட்டல்

தலைவனின் மனக்குறையைப் புரனெயன உடன்படுகிறான். அதனை ஏற்ற தோழி அத்தலைவியைத் தலைவன் கூடுமாறு குறியிடத்துக்கு அனுப்புவாள். இதுவே கூட்டல் ஆகும்.

### 10. கூடல்

தோழியால் அனுப்பப்பட்ட தலைவி குறியிடத்தில் தலையனோடு கூடி மகிழ்தலே கூடல் ஆகும்.

### 11 ஆயங்கூட்டல்

தலைவனோடு கூடி மீண்டு வந்த தலைவியைத் தோழிய கூட்டத்தோடு கூடுமாறு பாங்கி செயல்படுதலே ஆயங்கட்டல் ஆகும்.

### 12. வேட்டல்

தலைவியைக் கூடி மகிழ்ந்த தலைவன் இக்கூட்டம் நீட்டிக் வேண்டுமெனத் தோழியிடம் கூறுகிறான். அவளின் சொற்படி விருத்தினை விரும்புதலே வேட்டல் ஆகும்.

**கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், வேட்டல்**

**149.** **இறைவி கையுறை ஏற்றமை பாங்கி**
**இறைவற்கு உணர்த்தலும் குறியிடம் கூறலும்**
**குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறலும்**
**குறியிடத்து உய்த்து நீங்கலும் இறையோன்**
**இடத்துஎதிர்ப் படுதலும் இயைதலும் புகழ்தலும்**
**விடுத்தலும்" பாங்கி மெல்லியல் சார்ந்து**
**கையுறை காட்டலும் மையுறை கண்ணியைப்**
**பாங்கிற் கூட்டலும் நீங்கித் தலைவற்கு**
**ஓம்படை சாற்றலும் உலகியல் மேம்பட**
**விருந்து விலக்கலும் பெருந்தகை விருந்துஇறை**
**விரும்பலும் என்னத் தெரிந்தபன் மூன்றும்**
**கூட்டல் முதலா வேட்டல் ஈறாப்**
**பாங்கிக்கு வகுத்த நான்கிற்கும் உரிய**

தலைவி கையுறை ஏற்றமையைத் தோழி தலைவளுக்கு உணர்த்த 2. கூடுமிடத்தின் அடையாளத்தைத் தோழி தலைவனிடம் உறுத அவ்விடத்திற்குத் தலைவியைத் தோழி அழைத்துச் செல்லல் அவ்இடத்திலிருந்து தோழி நீங்குதல் 5. தலைவன் குறியிடத்தில் தலைவியைக் காணுதல் 6. கூடலில் மகிழ்வு அடைதல் 7. தலையின் தலைவியைப் புகழ்தல் 8. பின்னர்த் தலைவியைத் தோழியர் கூட்டத்துள் செல்லவிடுதல் 9. தோழி தான் கொணர்ந்த கையுறையைத் தலைவியிடம் காட்டல் தலைவியைத் தோழியர் கூட்டத்துள் செலுத்துதல் 11 தலைமகளைத் தோழியர் கூட்டத்துள் சேர்த்த தோழி தலைவனிடம் மறவாதிருக்கக் கூறுதல் 12. விருந்துண்ண வருமாறு அழைத்துப் பாங்கி பகற்குறி விலக்கம் 13. விருந்தினைத் தலைவன் விரும்புதல்.

மேற்குறிப்பிட்ட பதின்மூன்றும் கூட்டலும், கூடலும், பாங்கி கூட்டலும், வேட்டலும் என்னும் நான்கிற்கும் உரியன. இவற்றுள் பாக்கி கூற்று எல்லாம் கூட்டற்கும் வேட்டற்கும் உரியன தலைவன் கூற்று எல்லாம். கூடற்கும் கூட்டற்கும் உரியன

**பாங்கியிற் கூட்டத்து விரி**

**150. அற்றம்இல் சிறப்பின்இவ் அறுபத்து ஒன்றும்**
**குற்றம்இல் பாங்கியிற் கூட்டத்து விரியே,**

தலைமகள் உட்கோள் சாற்றல் முதலாக விருந்திறை விரும்பல் ஈறாகச் சொல்லப்பட்ட அழிவில்லாத சிறப்பினை உடைய இவ்அறுபத்து ஒன்றும் (20,7,9,6,6,13) குற்றமற்ற பாங்கியிற் கூட்டத்து விரியாகும்.

## 10 பகற்குறி

பகற்பொழுதில் தலைவன் தலைவியைக் காண்பதற்காகம் குறிக்கப்படும் இடம் பகற்கும்

**பகற்குறியின் வகைகள்**

**151. கூட்டல் கூடல் பாங்கித் கூட்டல்**
**வேட்டல்என்று ஒருநால் வகைத்தே பகற்குறி**

கூட்டல் முதலாக வேட்டல் ஈறாகப் பகற்குறி நான்கு வகையினை உடையதாகும். அவை 1. கூட்டல் 2. கூடல் 3.பாங்கிற்கூட்டல் ரூ வேட்டன். என்பனவாம்.

**பகற்குறியின் விரி**

**152. குறியிடம் கூறல் முதலாப் பெறல்அரும்**
**விருந்துஇறை விரும்பல் ஈறாப் பொருந்தப்**
**பகர்ந்தபன் னிரண்டும் பகற்குறி விரியே**

குறியிடம் கூறல் முதலாக விருந்து இறைவிரும்பல் ஈறாகக் கூறப்பட்ட (நூ.149) பன்னிரண்டும் பகற்குறியின் விரியாகும்.

## ஒருசார் பகற்குறி

பகற்குறிக்கண் தலைவியைப் புணர்ந்து மகிழ்ந்த தலைவன் இரவுக்குறிக்கண் கூடி மகிழ விரும்பி அதற்கு உடன்பட்டான் ஆயினும் முதல் நாள் பகற்குறிக்கண் மகிழ்ந்த வேட்கையில் மறுநாளும் தலைவன் பகலில் அவ்விடம் வந்து தலைவியைக் கூட விரும்பினான், தோழி அதற்கு

இசைவு தெரிவிக்காமல் தலைவி வீட்டாரின் காவலினைக் காட்டித் தலைவனை அவ்விடத்திலிருந்து போகச் செய்வாள், குறிக்கண் வந்த தலைவன், தலைவியைக் காணாது செல்வதால் இது பகற்குறி ஆகாது ஒருசார் பகற்குறி ஆயிற்று.

**ஒருசார் பகற்குறியின் வகைகள்**

**153. இரங்கல் வன்புறை இற்செறிப்பு உணர்த்தல் என்று**
**ஒருங்கு மூவகைத்து ஒருசார் பகற்குறி**

1.வருந்துதல் 2 வற்புறுத்துதல் 3 தலைவிக்கு நேர்காவை உணர்த்துதல் ஆகிய மூன்றும் ஒருசாரி கூற்றுப் பகற்குறி ஆகும்

**திருசார் பகற்குறியின் விரி (14)**

**154. கிழயோஸ் பிரித்துழிக் கிழத்தி மாலையம்**
**பொழுதுகண்டு இரங்கலும் பாங்கி புலம்பலும்**
**தலைவன் திடத் தலைவி வருந்தலும்**
**தலைவியைப் பாங்கி கழறலும் தலைவி**
**முன்னிலைப் புறமொழி மொழிதலும் இன்னுயிர்ப்**
**பாங்கியொடு பகர்தலும் பாங்கிஅச் சுறுத்தலும்**
**நீங்கற்கு அருமை தலைவிநினைந்து இரங்கலும்**
**தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றலும்**
**சிறைப்புறம் ஆகச் செறிப்பஅறி வறுத்தலும்**
**முன்னிலைப் புறமொழி மொழித்துஅறி வறுத்தலும்**
**முன்நின்று உணர்த்தலும் முன்நின்று உணர்த்தி**
**ஓம்படை சாற்றலும் மேம்படு கிழவோன்**
**தஞ்சம் பெறாது தெஞ்சொடு கிளத்தலும்**
**என்றார் எழும் எல்லுக்குறி விரியே.**

1.குறிக்கண் வந்து காணாமல் மீளும் தலைவனின் பிரிவால் தலைவி மாலைப்பொழுது கண்டு வருந்துதல் 2. தலைவியின் வருத்தங்கண்டு பாங்கி புலம்புதல் 3 தலைவன் குறித்த நேரத்தில் வாராது காலம் நீட்டித்த இடத்துத் தலைவி வருத்துதல் 4 நீ வருந்துவது முறையற்றது எனத் தலைவியிடம் பாங்கி இடித்துரைத்தல் 5. பாங்கி மீது கொண்ட வெறுப்பைத் தலைவி மறைமுகமாய்க் கூறுதல் 6. அதனை உணர்ந்த பாங்கி, தலைவியின் துயரைப் போக்குதல், அதனால் வெறுப்பு நீங்கிய தலைவி பாங்கியிடம் பேசுதல் தலைவியைப் பாங்கி அச்சமுறுத்திக் கூறுதல், 8. உயிர்போன்ற தலைவனை விட்டு நீங்குவது அரிதெனத் தலைவி தன்னுள் வருத்திக் கூறுதல் 9. தலைவனின் வரவைப் பாங்கி கூறுதல் 10 வீட்டின் வேலிப்பக்கமாகத் தலைவன் வரத் தலைவிக்குற்ற காவலைப் பாங்கி அறிவுறுத்தல் ஐஐ தலைவிக்கு இடப்பட்டக் கட்டுக் காவலைத் தோழி தலைவனிடம் மறைமுகமாய் அறிவுறுத்துதல் 12 உணராத தலைவனிடம் நேர் நின்று உணர்த்துதல் 13. இவ்வாறு கூறிய எம்மை மறவாமை வேண்டுமெனப் பாங்கி வேண்டுதல் 14. இதனைக் கேட்ட தலைவன் வேறொரு வழியின்றி நெஞ்சொடு கூறுதல் ஆகிய பதினான்கும் ஒருசார் பகற்குறியின் விரியாகும்.

## 11 பகற்குறி இடையீடு

பகற்குறிக்கண் தலைவியைக் காண வரும் தலைவனுக்குச்செய தடைப்பட்டுப் போதல் பகற்குறி இடையீடு எனக் கூறப்படும் பகற்குறி

**இடையீட்டின் வகைகள்**

**155. விலக்கல் சேறல் கலக்கம் என்றாங்கு**
**இகப்பின்மூ வகைத்தே பகற்குறி இடையீடு,**

1. குறியிடம் வராமல் இருவரையும் தோழி விலக்குதல் 2.ஆடுகளத்திலிருந்து தலைவியைத் தோழி அழைத்துச் செல்லுதல் 3.இதனால் தலைவன் தலைவி ஆகிய இருவரும் கலங்குதல் என்னும் மூன்றையும் கடவாதது பகற்குறி இடையீடாகும்.

**பகற்குறி இடையீட்டின் விரி**

**156. இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கலும்**
**இறைவியைக் குறிவரல் விலக்கலும் இறைமகள்**
**ஆடிடம் நோக்கி அழிதலும் பாங்கி**
**ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறலும் பின்னாள்**
**நெடுந்தகை குறிவயின் நீடுசென்று இரங்கலும்**
**வறுங்களம் நாடி மறுகலும்" குறுந்தொடி**
**வாழும்ஊர் நோக்கி மதிமயங் கலும் எனும்**
**ஏழும் பகற்குறி இடையீட்டு விரியே**

1. பகற்குறிக்கண் வரவேண்டாம் எனத் தோழி தலைவனிடம் கூறுதல் 2. அதுபோலத் தலைவியும் கூறுதல் 3. தலைவனோடு கூடி மகிழ்ந்த இடங்களைக் கண்டு தலைவி தன்னுள்ளே வருந்துதல் 4. பாங்கி விளையாடுமிடம் விட்டு நீங்கித் தலைவியை அழைத்துக் கொண்டு தம்முடைய ஊர்க்குப் போதல்.

5. தலைவன் குறியிடத்தில் நீண்ட நேரம் நின்று தலைவியை நினைத்து வருந்துதல் 6. தலைவன், தலைவி இல்லாத தினைப்புனத்தைப் பார்த்து வருந்திக் கூறுதல் 7. தலைவியின் ஊரை அறிந்திலேம் என்று மதி மயங்கித் தலைவன் கூறுதல் இவ்வாறு கூறப்பட்ட ஏழும் பகற்குறி இடையீட்டின் விரியாகும்.

இவற்றுள் முதல் இரண்டும் விலக்கற்கு உரியன. பாங்கி ஆடிடம் விடுத்துக் கொண்டு அகறல் என்பது சேறற்கு உரியது. மற்றைய நான்கும் சுலக்கத்திற்கு உரியனவாம்.

## 12. இரவுக்குறி

இரவுப் பொழுதில் தலைவன் தலைவியைக் காண்பதற்காகக் குறிக்கப்படும் இடம் இரவுக்குறி ஆகும். இது பகற்குறியின் தொடர்ச்சியாகும்.

**இரவுக்குறியின் வகைகள்**

**157.** **வேண்டல் மறுத்தல் உடன்படல் கூட்டல்**
**கூடல் பா ராட்டல் பாங்கியிற் கூட்டல்**
**உயங்கள் நீங்கல் என்று ஒன்பது வகைத்தே**
**இயம்பிப் போந்த இரவுக் குறியே**

தலைவன் தோழியிடம் இரவுக்குறி வேண்டல் 2. தோழி அதனை ஏறுத்தல் 3. தோழி உடன்படுதல் 4. தோழி தலைவன் தலைவித் கூட்டுதல் 5 தலைவன் தலைவியைக் கூடல் 6. கூடலில் மகிழ்ந்த தலைவன் தலைவியைப் பாராட்டல் 7. பின் தலைவியைத் தோழிவிடத்துச் செல்லவிடுதல் 8 வருத்துதல் 9. நீங்குதல் ஆகிய ஒன்பதும் இரவுக் குறியின் வகைகளாகும்

**இரவுக்குறியின் விரி**

**158.** **இறையோன் இருட்குறி வேண்டலும் பாங்கி**
**நெறியினது அருமை கூறலும் இறையோன்**
**நெறியினது எளிமை கூறலும் பாங்கி**
**அவன்நாட்டு அணியியல் வினாதலும் கிழவோன்**
**அவள்நாட்டு அணியியல் வினாதலும் அவற்குத்**
**தன்நாட்டு அணியியல் பாங்கி சாற்றலும்**
**இறைவிக்கு இறையோன் குறைஅறி வறுத்தலும்**
**நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தலும்**
**நேரிழை பாங்கி பொடுநேர்ந்து உரைத்தலும்**
**நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக்கு உரைத்தலும்**
**குறியிடை நிறீஇத் தாய்துயில் அறிதலும்**
**இறைவிக்கு இறைவன் வரவுஅறி வுறுத்தலும்**
**அவள்கொண்டு சேறலும் குறிஉய்த்து அகறலும்**
**வண்டுஉறை தாரோன் வந்துஎதிர்ப் படுதலும்**
**பெருமகள் ஆற்றினது அருமைநினைந்து இரங்கலும்**
**புரவலன் தேற்றலும் பணர்தலும் புகழ்தலும்**
**இறைமகம் இறைவனைக் குறிவிலக் கலும் அவன்**
**இறைவியை இவ்வயின் விடுத்தலும் இறைவியை**
**எய்திப் பாங்கி கையுறை காட்டலும்**
**இற்கொண்டு ஏகலும்" பிற்சென்று இறைவனை**
**வரவு விலக்கலும் பெருமகன் மயங்கலும்**
**தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தலும்**
**திருமகள் புணர்ந்துஅவன் சேறலும் என்று ஆங்கு**
**இருபத்து ஏழும் இரவுக்குறி விரியே**

1 தலைவன் இரவுக்குறியை விரும்பிப் பாங்கியிடம் கூறல் 2.பொங்கி தலைவியைக் காண வரும் 3.வழியின் அருமைப்பாட்டைக் கூறுதல் வழியின் எளிமையைத் தலைகூறுதல் 4.தலைவன் நாட்டுப் பெண்களின் அணியையும் அவர்களின் இயல்பையும் பாங்கி வினவுதல் 5. தலைவன் பாங்கியின் குறிப்பினை அறிந்து அவள் நாட்டுப்பெண்களின் அணியையும் இயல்பையும் வினவுதல்

6. பாங்கி தன்நாட்டுப் பெண்களின் அணியையும் இயல்பையும் கூறுதல் 7. பாங்கி தலைவியின் பக்கம் சென்று தலைவனின் விருப்பத்தைக் கூறுதல். 8. இதனைக் கேட்ட தலைவி அதனை ஏற்காமல் தன் நெஞ்சொடு கூறுதல் 9. தலைவி கூடுவதற்கு உடன்படுதல் 10. இதனைப் பாங்கி தலைவனிடம் எடுத்துரைத்தல் 11. பாங்கி தலைவனைக் குறியிடத்து நிறுத்தித் தாயின் உறக்க நிலையை அறிதல் 12. தலைவன் குறியிடத்தின்கண் வந்ததைப் பாங்கி தலைவியிடம் கூறல் 13. பாங்கி தலைவியைக் குறியிடத்து விடுதல் 14.பாங்கி அவ்விடத்தை விட்டு அகலுதல்.
15. தலைவியைத் தலைவன் குறியிடத்துக் காணுதல் 16. தலைவன் வரும் வழியினது இடையூறுகளை நினைந்து தலைவி வருந்துதல் 17.தலைவியைத் தலைவன் தேற்றுதல் 18. தலைவன் தலைவியைக் கூடுதல் 19. தலைவன் தலைவியைப் புகழ்தல் 20. தலைவி தலைவனை இரவுக்குறிக்கண் வராதே என விலக்குதல் 21. தலைவன் தலைவியை வீட்டுக்குச் செல் என விடுத்தல். 22. பாங்கி தலைவியை அடைந்து கையுறை காட்டுதல் 23. பாங்கி தலைவியை வீட்டிற்கு அழைத்துப் போதல் 24. பாங்கி தலைமகனிடம் சென்று இரவுக்குறிக்கண் வரவேண்டாம் எனக் கூறுதல் 25.அதனைக் கேட்டுத் தலைமகன் மயங்கிக் கூறுதல் 26. தலைவன் ஊர் போய்ச் சேர்ந்ததைக் குறிமூலம் காட்டித் தலைவியின் துயரைப் போக்குக எனத் தோழி கூறுதல் 27. இலக்குமி போன்ற தலைவியைப் புணர்ந்த தலைவன் தன் ஊரை அடைதல் ஆகிய இருபத்தேழும் இரவுக்குறியின் விரியாகும்.

இவற்றுள் 1, 3, 5,7 ஆகிய நான்கும் வேண்டற்குரியன. 2,20, 24 ஆகிய மூன்றும் மறுத்தற்குரியன. 4, 6, 8 ஆகிய மூன்றும் உடன்படற்கு உரியன. 9, 10, 11, 12, 13 ஆகிய ஐந்தும் கூட்டற்குரியன. 15,17,18 ஆகிய மூன்றும் கூடற்குரியன. 19,22 ஆகிய இரண்டும் பாராட்டுதற்கு உரியன. 21,23 ஆகிய இரண்டும் பாங்கிற் கூட்டற்குரியன. 16, 25, 26 ஆகிய மூன்றும் முயங்கற்குரியன. 14, 27 ஆகிய இரண்டும் நீங்கற்கு உரியனவாம்.

2. தலைவியைக் காண வரும் வழியின் அருமைப்பாட்டைத் தோழி தலைவனுக்கு எடுத்துரைத்தல்.

**அல்லகுறி**

தலைவியைக் காண வரும் தலைவன் குறியிடத்திற்கு வந்தவுடன் கை ஒலியிட செய்தல், நீரில் கல் எறிந்து ஓசை எழச் செய்தல் ஆகிய இரண்டாலும் தன் வரவைத் தலைவிக்கு உணர்த்துவான். இச்செயல்கள் தலைவன் நிகழ்த்தாமல் தாமாக நடைபெறுவதும் உண்டு. அஆநேரத்தில் தலைவன் வந்து விட்டதாக எண்ணிக் குறியிடத்திற்குத் தலைவி வந்து திரும்பிச் செல்வாள். இதுவே அல்லகுறி ஆகும்.

**அல்லகுறியின் வகைகள்**

**160. இறைவிக்கு இருளை இறைவரவு உணர்த்துழித்**
**தான்குறி மருண்டமை தலைவிஅவட்கு உணர்த்தலும்**
**பாங்கி தலைவன் தீங்குஎடுத்து இயம்பலும்**
**பலந்துஅவன் போதலும் பலர்ந்தபின் வறும்களம்**

தலைவிகண்டு இரங்கலும் தன்துணைக்கு உரைத்தலும்
தலைமகள் அவலம் பாங்கி தணித்தலும்
இறைவன்மேல் பாங்கி குறிபிழைப்பு ஏற்றலும்
இறைவிமேல் இறைவன் குறிபிழைப்பு ஏற்றலும்
அவள்குறி மருண்டமை அவன் அவற்கு இயம்பலும்
அவன்மொழிக் கொடுமைசென்று அவள்அவட்கு இயம்பலும்
என்பிழைப்பு அன்று என்று இறைவி நோதலும் என
ஒன்றுபன் ஒன்றும் அல்லகுறிக்கு உரிய

1. தலைவிக்குப் பாங்கி தலைவனின் வரவைக் கூறுதல் பாங்கியிடம் தலைவன் குறியிடத்து வராமல் செய்த தீங்கைத் தலைவி எடுத்துக்கூறுதல் 3 குறிக்கண் தலைவி வாராமை கண்டு வருத்திய தலைவன் தன் ஊருக்குச் செல்லுதல் 4. விடிந்த பின்னர்த் தலைவி வெற்றிடத்தை நோக்கி வருத்திக் கூறுதல் 5. தலைவி தோழிக்கு உரைத்தல் 6. தலைமகளின் துன்பத்தைப் பாங்கி தணித்தல் 7. அல்லகுறியினால் ஏற்பட்ட குற்றத்தைப் பாங்கி தலைவன் மேல் ஏற்றிக் கூறுதல் 8.அக்குற்றத்தைத் தலைவன் தலைவி மேல் ஏற்றிக் கூறுதல் 9. தலைவி குறிமயங்கியதைத் தலைவனுக்குப் பாங்கி உணர்த்துதல் 10. தலைவன் கூறிய கொடுஞ்சொல்லைப் பாங்கி தலைவியிடத்துக் கூறுதல் ஐடு குறி பிழைத்தது என் பிழை அன்று எனத் தலைவி வருத்திக் கூறுதல் ஆகிய பதினொன்றும் அல்லகுறிக்கு உரியன. தலைவியைக் காணத் தலைவன் குறிக்கண் வந்துள்ளதைத் தோழி தலைவியிடம் எடுத்துக் கூறுதல்

**வருந்தொழிற்கு அருமையின் வகைகள்**

161. தாயும் நாயும் ஊரும் துஞ் சாமை
காவலர் கடுத்தல் நிலவுவெளிப் படுதல்
கூகை குழறுதல் கோழிகுரல் காட்டுதல்
ஆகிய ஏழும் அல்லுக்குறித் தலைவன்
வருந்தொழிற்கு அருமை பொருத்துதல் உரிய

1. தாய் விழித்திருத்தல் 2 ஊரில் உள்ள நாய்கள் தூங்காமை 3ரில் உள்ளார் விழித்து இருத்தல் 4. நகர் நகர் காப்போர் விரைந்து ஊரைச் சுற்றி வருதல் 5. நிலவு வெளிப்பட்டு இருளைப் போக்குதல் நீ. கூகை அலறுதல் 7கோழி கூவுதல் ஆகிய ஏழும் தலைவன் வருவதற்கு அருமைப்பாட்டை ஏற்படுத்துவனவாம். (எ-டு -1)

**இரவக்குறி இடையீட்டின் விரி**

162. திரட்டிஇவ் வாறு செப்பிய ஒன்பதிற்று
இரட்டிஷர் இரவுக்குறி இடையீட்டு விரியே

இப்படியாகக் கூட்டி உரைக்கப்பட்ட பதினெட்டும் இரவுக்குறி இடையீட்டின் விரியாகும்.

## 14. வரைதல் வேட்கை

அல்லகுறியாலும் வருந்தொழிற்கு அருமையாலும் வருந்திய தலைவி, தலைவளை மணந்து கொள்ளும் விருப்பத்தினைக் கூறுதலே வரைதல் வேட்கையாகும்.

**வரைதல் வேட்கையின் வகைகள்**

**163. அச்சமி உவத்தல் ஆற்றா மை என**
**மெச்சிய வரைதல் வேட்கைமூ வகைத்தே**

கொண்டாடப்பட்ட வரைதல் வேட்கை 1 அச்சமும் 2 உவத்தலும் 3.ஆற்றாமையும் என்னும் மூன்று வகையினை உடையது.

**வரைதல் வேட்கையின் விசி**

**164. பருவரல் விளவிய பாங்கிக்கு இறைவி**
**அருமறை செவிரி அறிந்தமை கூறலும்**
**தலைமகன் வருத்தொழிற்கு அருமை சாற்றலும்**
**தலைமகள் ஊர்க்குச் செல்வஒருப் படுதலும்**
**பாங்கி இறைவனைப் பழித்தலும் பூங்கொடி**
**இறையோன் தன்னைநொந்து இயற்பட மொழிதலும்**
**கனவுதவிபு உரைத்தலும்" கவின்அழிவு உரைத்தலும்**
**தன்னுயர் தலைமகற்கு உரைத்தல் வேண்டலும்**
**துண்புறல் பாங்கி சொல்எனச் சொல்லலும்**
**அவர்பார்த்து உற்ற அச்சக் கிளவியும்**
**ஆறுபார்த்து உற்ற அச்சக் கிளவியும்**
**காமம் மிக்க கழிபடர் கிளவியும்**
**தன்னுள் கையாறு எய்திடு கிளவியும்**
**தெறிவிலக்கு வித்தலும்" குறிவிலக்கு வித்தலும்**
**வெறிவிலக்கு வித்தலும்" பிறவிலக்கு வித்தலும்**
**குரவரை வரையுளதிர் கொள்ளுவித் தலும் என**
**உரைபெற வகுத்த ஓன்பதிற்று இரட்டியும்**
**வரைதல் வேட்கை விரிஎனப் படுமே.**

1. தன் துன்பத்தை வினவிய பாங்கியிடம் தலைவியானவள் தன்னுடைய அரிய கயாவொழுக்கத்தைச் செவிலித்தாய் அறிந்தான் எனக் கூறுதல் 2. தலைமகள் வருகின்ற தொழிலின் அருமையைப் பாங்கிக்குக் கூறுதல் 3. தலைவன் தன் ஊர்க்குச் செல்ல விரும்புதல் 4 அனதக் கேட்டுப் பாங்கி தலைவனைப் பழித்துரைத்தல் 5. அதனை மறுத்துத் தலைவனின் இயல்பைத் தலைவி புகழ்ந்து பேசுதல் 6. தலைவன் தன் கனவில் மெய்யாகவும் நனவில் பொய்யாகவும் தோன்றித் துன்பத்தைத் தருவதாகத் தலைவி எடுத்துரைத்தல், 7. தலைவன் மீது கொண்ட வேட்கை நோயால் அழகு அழிந்ததைத் தலைவனுக்கு அறிவிக்கும்படி தலைவி பாங்கியிடம் கூறுதல் 8 தானுற்ற துயரத்தைத் தலைவனுக்கு அறிவிக்கும்படி தலைவி பாங்கியிடம் கூறுதல் 9. நீயே சொல்லெனப் பாங்கி தலைவனிடம் கூறுதல் 10. ஊரார் பேசும் அலரைக் கேட்டுத் தலைவி துன்பமுற்று வருத்திக் கூறுதல் 11. தலைவன் வரும் வழியில் அவனுக்கு ஏற்படும் துன்பத்திற்கு அஞ்சித் தலைவி கூறுதல் 12. அ∴றிணைப் பொருள்களைக்

கண்டு வேட்கை மிகுந்த தலைவி புலம்பிக் கூறுதல். 13.தலைவி தன் துள்பத்தைப் பிற பொருள்களின் மேல் ஏற்றிக் கருதல் 14 .தலைவனின் வருகையை விலக்கு எனத் தலைவி பாங்கியிடம் கூறுதல் 15 குறியை விலக்கு எனப் பாங்கியிடம் கூறுதல் 16.வெறியாட்டை விலக்கும்படி கூறுதல் 17. பிறர் வரைவை நீக்கும்படி தலைவனிடத்துக் கூறுமாறு தலைவி பாங்கியிடம் கூறுதல் 18. தலைவனின் பெற்றோர் வழி திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு தலைவி தோழியிடம் கூறுதல் இவ்வாறு கூறிய பதினெட்டுக் கிளவிகளும் வளைதல் வேட்கையின் விரியாகும்.

## 15. வரைவு கடாதல்

களவில் கூடும் தலைவனை, விரைந்து வந்து தலைவியை ம கொள்ள வேண்டும் எனத் தோழி வற்புறுத்துவது வரைவு கடால் எனப்படும் (வரைவு -திருமணம் ’ கடாதல் - விரைவு படுத்துதல்)

### வரைவு கடாதலின் வகைகள்

**165. பொய்த்தல் மறுத்தல் கழறல் மெய்த்தல் என்று**
**ஒருநால் வகைத்தே வரைவு கடாதல்**

1 தோழி பொய்யானவற்றைப் புனைந்து கூறுதல் 2. தலைவனைக் குறியிடம் வராதே என மறுத்தல் 3. சுளவினை நீட்டித்தல் தகாது எடுத்துரைத்தல் 4. உலகினாகிய மெய்யினை எடுத்துரைத்தல் என வரைவு கடாதல் நான்கு வகையினை உடையது.

### வரைவ கடாதலின் விரி

**166. வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பலும்**
**அவர்அறி வறுத்தலும்“ தாய்அறி வுணர்த்தலும்**
**வெறிஅச் சுறுத்தலும் பிறர்வரைவு உணர்த்தலும்**
**வரைவுஎதிர் உணர்த்தலும் வரையும்நாள் உணர்த்தலும்**
**அறிவுஅறிவு றுத்தலும் குறிபெயர்த்து இடுதலும்**
**பகல்வரு வானை இரவுவருக என்றலும்**
**இரவுவரு வானைப் பகல்வருக என்றலும்**
**பகலினும் இரவினும் பயின்றுவருக என்றலும்**
**பகலினும் இரவினும் அகல்இவண் என்றலும்**
**உரவோன் நாடும் ஊரும் குலனும்**

**மரபும் புகழும் வாய்மையும் கூறலும்**
**ஆறுபார்த்து உற்ற அச்சம் கூறலும்**
**ஆற்றாத் தன்மை ஆற்றக் கூறலும்**
**காவல்மிக உரைத்தலும் காமம்மிக உரைத்தலும்**
**கனவுநலிவு உரைத்தலும் கவின்அழிவு உரைத்தலும்**
**எனமுறை நாடி இயம்பிய இருபதும்**
**வரைவு கடாதல் விரிஎனப் படுமே.**

1. தலைவியின் களவு குறித்துத் தன்னைச் செவிலி வினவ அதனைத் தான் மறைத்து மொழிந்ததாகப் பாங்கி தலைவனிடம் கூறுதல் 2. ஊரில் உள்ளார் தலைவியைப் பழித்துக் கூறும் அலர் பற்றிப் பாங்கி தலைவனுக்கு அறிவுறுத்தல் 3. நற்றாய் அறிந்தாள் எனப் பாங்கி தலைவனிடம் கூறுதல் 4. வெறியாட்டு நடத்தித் தலைவியின் நிலையை அறிய தாய் முற்பட்டாள் எனத் தலைவனுக்கு அச்சமூட்டுதல் ஞ. பிறர் பெண் (வரைவு) கேட்டு வந்ததனைத் தலைவனுக்கு உணர்த்துதல் 6.தலைவியை வரைவு கேட்டு வந்தால் எம் சுற்றத்தார் ஏற்பர் எனக் கூறுதல். 7.மணம் செய்கின்ற நாளை அறிவித்தல் 8. தலைவியின் நுட்ப அறிவைத் தலைவனிடம் கூறுதல் 9. வேறொரு குறிக்கண் வரச் சொல்லுதல் 10. பகற்குறிக்கண் வந்தானை இரவுக்குறிக்கண் வருக என்றல் 11 பகல் வருக என்றல் 12. இவ்இரு பொழுதும் நெருங்கி வருக எனக் கூறுதல் 13. பகலினும் இரவினும் வாராதே எனக் கூறுதல். 14. தலைமகனின் நாடு, ஊர், குலம், மரபு, புகழ், வாய்மை ஆகியவற்றைப் புகழ்தல் 15. வரும் வழியில் விலங்குகளால் ஏற்படும் அச்சத்தை எடுத்துக் கூறல் 16. தலைவியின் ஆற்றாமையைப் போக்கும்படி கூறுதல் 17. குறிக்கண் நெருங்க முடியாதபடி மிகுந்துள்ள கட்டுக்காவலை எடுத்துரைத்தல் 18. தலைவியின் வேட்கை மிகுதியைக் கூறுதல் 19. கனவால் தலைவி உற்ற துன்பம் உரைத்தல் 20. தலைவியின் அழகு அழிந்து வருதலைக் கூறுதல் ஆகிய இவ்இருபதும் வரைவு கடாதலின் விரியாகும்.

தலைவனும் தலைவியும் பிறர் அறியா வண்ணம் கூடி மகிழ்வதே களவாகும். இக்களவொழுக்கம் சிலருக்கும் பலருக்கும் தெரிய வரும்.சிலர் அறிவது அம்பல் என்றும், பலர் அறிவது அலர் என்றும் கூறப்படும்.

## 16. ஒருவழித் தணத்தல்

கனவுக் காலத்தில் தலைவன், தலைவியைப் பற்றி அவர் எழும் அது அடங்குவதற்காகத் தலைவன் சில நாட்கள் தலைவியைக் காண வராமல் னில் இருப்பான். இச்சிறு பிரிவே ஒருவழித் தணத்தல் ஆகும்.

### ஒருவழித் தணத்தலின் வகைகள்

**167. செலவுஅறி வுறுத்தல் செலவுஉடன் படாமை**
**செலவுஉடன் படுத்தல் செலவுஉடன் படுதன்**
**சென்றுழிக் கலங்கல் தேற்றி ஆற்று வித்தல்**
**வந்துழி நொந்துரை என்றுஎழு வகைத்தே**
**ஒன்றக் கூறிய ஒருவழித் தணத்தல்**

1.தலைவன் தன் ஊருக்குச் செல்வதைத் தோழியிடம் கூறுதல் அதற்குத் தோழி உடன்படாமை 3. தலைவனைத் தோழி சென்று வரக் கூறுதல் 4. அதனை ஏற்றுத் தலைவன் தன் ஊருக்குச் செல்லுதல் 5தலைவனைப் பிரிந்த தலைவி கலங்குதல் 6. தலைவிக்குத் தேறுதல் கூறித் தோழி ஆற்றுவித்தல் 7. மீண்டு வந்த தலைவனிடம் துன்பப்பட்டு வினவுதல் ஆகிய எழும் ஒருவழித் தணத்தலின் வகைகளாகும்.

**ஒருவழித் தணத்தலின் விரி**

**168. தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றலும்**
**மென்சொல் பாங்கி விலக்கலும்“ தலைவன்**
**நீங்கள் வேண்டலும்“ பாங்கி விடுத்தலும்**
**தலைவிக்கு அவன்செலவு உணர்த்தலும் தலைவி**
**நெஞ்சொடு புலத்தலும்“ சென்றோன் நீடலில்**
**காமம் மிக்க கழிபடர் கிளவியும்**
**கோல்தொடிப் பாங்கி ஆற்றுவித் தலும் அவன்**
**வந்தமை உணர்த்தலும் வந்தோன் தன்னொடு**
**தொந்து வினாதலும் வெந்திறல் வேலோன்**
**பாங்கியொடு நொந்து வினாதலும் பாங்கி**
**இறைவியை ஆற்றுவித்து இருந்த அருமை**
**கூறலும் என்னும் ஆறுஇரு கிளவியும்**
**ஒருவழித் தணத்தலின் விரினைப் படுமே.**

1.தன் ஊருக்குச் செல்லப் போவதைத் தலைவன் அறிவித்தல் தோழி அப்பிரிவை விலக்கல் 3 தலைவன் பாங்கியை உடன்படச் செய்து தன்செல்ல விரும்புதல் 4 சென்று வா எனத் தலைவனைப் பாங்கி விடுத்தல் 5. தலைவனில் பிரிவைப் பாங்கி தலைவிக்கு உரைத்தல்

**17 வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு**

களவுக் காலத்தில் தோழி தலைவனிடத்தில் தலைவியை வரைந்து கொள்ள வேண்டும் என விரைவுபடுத்துவாள், தலைவன் அதற்கு உடன்பட்டுப் பொருள் தேடுவதற்காகப் பிரியும் பிரிவே வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலாகும். 6.தலைவி நெஞ்சொடு நொந்து கூறுதல் 7. பிரிந்த தலைவன் மாலையில் வாராமையால் காமம் மிகுந்து வருத்தமுற்றுக் கூறுதல் 8. தோழி தலைவியின் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளும்படி கூறுதல் 9. தலைவன் வந்ததைப் பாங்கி தலைவிக்கு உணர்த்துதல் 10. மீண்டு வந்த தலைவனிடத்தில் தலைவி துன்பப்பட்டு வினவுதல் 11. தலைவன், எவ்வண்ணம் ஆற்றிஇருந்தீர் எனப் பாங்கியிடம் வினவுதல் 12. தலைவியை ஆற்றுவித்திருந்த தன்மை பற்றித் தோழி கூறுதல். இப்பன்னிரண்டும் ஒருவழித் தணத்தலின் விரியாகும்.

**வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலின் வகைகள்**

**169. பிரிவுஅறி வுறுத்தல் பிரிவுஉடன் படாமை**
**பிரிவுஉடன் படுத்தல் பிரிவுஉடன் படுதல்**
**பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை**
**வருவழிக் கலங்கள் வந்துழி மகிழ்ச்சி என்று**
**ஒருமையிற் கூறிய ஒன்பது வகைத்தே**
**வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவே.**

1. தலைவன் தோழியிடம் பொருள்வயிற் பிரிவை அறிவுறுத்தல் 2தோழி அதற்கு உடன்படாமை 3. பிரிவுக்கு உடன்படச் செய்தல் 4. பிரிந்து செல்ல உடன்படுதல் 5. பிரிவுக்காகத் தலைவி மனம் கலங்குதல் 6.தலைவிக்கு வற்புறுத்திக் கூறுதல் 7. தலைவனின் பிரிவைத் த பொறுத்துக் கொள்ளுதல் 8. தன் பிரிவால் தலைவிக்கு ஏற்பட்ட துன்பத்தை எண்ணி வழியில் தலைவன் கலங்குதல் 9. மீண்டு வந்த தலைவனைக் கண்டு தலைவி மகிழ்தல் ஆகிய ஒன்பதும் வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதலின் வகைகளாகும்.

**வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலின் விரி**

**170. என்பொருள் பிரிவுஉணர்த்து ஏந்திழைக்கு என்றலும்**
**நின்பொருள் பிரிவுரை நீ அவட்கு என்றலும்**
**நீடேன் என்றவன் நீங்கலும் பாங்கி**
**ஓடரிக் கண்ணிக்கு அவன்செலவு உணர்த்தலும்**
**பூங்குழை இரங்கலும் பாங்கி கொடுஞ்சொல்**
**சொல்லலும் தலைவி கொடுஞ்சொல் சொல்லலும்**
**வருகுவர் மீண்டுஎனப் பாங்கி வலித்தலும்**
**பருவம் கண்டு பெருமகள் புலம்பலும்**
**இருளைவம்பு என்றலும் இறைமகள் மறுத்தலும்**
**அவர்தூது ஆகிவந்து அடைந்ததுஇப் பொழுதுஎனத்**
**துணைவி சாற்றலும் பிணைவிழி ஆற்றலும்**
**அவன் அவண் புலம்பலும் அவன்வரும் காலைப்**
**பாகன் தன்னொடும் மேகம் தன்னொடும்**
**சோகம் கொண்டுஅவன் சொல்லலும் பாங்கி**
**வலம்புரி கேட்டுஅவன் வரவுஅறி வுறுத்தலும்**
**வலம்பரி கிழத்தி வாழ்த்தலும் வந்துழி**
**நினைத்தமை வினாதலும் நினைத்தமை செப்பலும்**
**அனைத்தகை அவளை ஆற்றுவித்து இருந்தமை**
**பாங்கிகூ றலும் என ஆங்குஎழு மூன்றும்**
**வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவின்**
**விரிஎன விளம்பினர் தெரிமொழிப் புலவர்.**

தான் மேற்கொள்ளும் பொருள்வயிற் பிரிவைத் தலைவிக்குக் கூறுமாறு பாங்கியிடம் தலைவன் கூறுதல். 2. தலைவியிடம் நீ போய்க்றுக் எனத் தலைவனிடம் தோழி மறுமொழி கூறுதல. 3.

காலம் நீட்டிக்காமல் விரைந்து வருவேன் எனத் தலைவன் பாங்கியிடம் கூறி நீங்குதல் 4. பங்கி தலைவன் பிரிந்து சென்றமையைத் தலைவிக்கு உணர்த்துதல் 5. பிரிவைக் கேட்டுத் தலைமகள் வருந்துதல் 6. எதற்காக வருந்துகிறாய் என்று பாங்கி இடித்துக் கூறுதல் 7. இடித்துரைத்த பாங்கியை நினைத்துத் தலைவி மனம் நொந்து கூறுதல் 8. மீண்டு வருவர் எனப் பாங்கி வலியுறுத்துதல் 9. கார்ப்பருவம் கண்டு தலைமகள் புலம்பிக் கூறுதல் 10. இது கார்கால மேகம் அன்று எனப் பாங்கி தலைவியைத் தேற்றுதல் 11. தலைவி பாங்கியின் சொல்லை மறுத்துப் பேசுதல் 12. கார்காலம் தலைவனின் வருகையைச் சொல்லும் தூதாக வந்தது எவத் தோழி கூறுதல் 13. அதைக் கேட்டுத் தலைவி பொறுத்திருத்தல் 14 பொருள் ஈட்டச் சென்ற தலைவன் அச்செயலை முடித்துத் தலைவியை நினைத்துப் புலம்புதல், 15. மீண்டு வருகின்ற தலைவன் விரைவாகத் தேர் ஓட்டும்படி பாகனிடம் கூறுதல் 16. தலைவன் வரும் வழியில் மேகத்தைப் பார்த்துக் கூறுதல் 17 வலம்புரிச் சங்கின் ஓசையைக் கேட்டுத் தலைவன் வரவைப் பாங்கி தலைவிக்குத் தெரிவித்தல் 18. தலைவன் வரவை உணர்த்திய வலம்புரிச்சங்கைத் தலைவி வாழ்த்துதல் 19. தலைவனிடம் தலைவி தாங்கள் வந்தவிடத்தும் பிரிந்தவிடத்தும் எம்மை நினைத்துப் பார்த்தீரோ? என வினவுதல் 20 நினைத்து இருந்ததைத் தலைவன் கூறுதல் 21, பிரித்து இருந்த தலைவியை ஆற்றி இருக்கச் செய்த அருமைப்பாட்டைப் பாங்கி தலைவனிடம் கூறுதல் ஆகிய இவ்இருபத்தொன்றும் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலின் விரி ஆகும்.

**மாதிரி வினாக்கள்**

1. களவின் இயல்பு குறித்து எழுதுக.

2. களவிற்கான ஐயங்களின் இலக்கணத்தை வரையறுக்க.

3. களவிற்கு உரிய கிளவி தொகைகள் குறித்து விளக்குக.

4. வன்புறையின் வகைகள் குறித்து எழுதுக.

5. இரவுக்குறி இடையீடுகளை விளக்குக.

6. களவொழுகத்தில் பாங்கர் கூட்டம் மற்றும் பாங்கியற் கூட்டம் பங்கு பெறும் இடங்களை விவரிக்க.

7. வரைவுகெடாதல் பற்றிக் கட்டுரைக்க.

8. பகற்குறி மற்றும் இரவுக்குறி குறித்து கட்டுரைக்க.

9. களவொழுகத்தில் நிகழும் பிரிவுகளை பற்றி கட்டுரைக்க.

10. பிரிவிழிக் கலங்கல், இடந்தலைப்பாடு குறித்து விவரி.

**இயல் 03**

## கற்பியல்

பிறர் அறியாதபடி களவின்கண் பழகிவந்த தலைவனும். தலைவியும் ஊரார் அறியத் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவது கற்பாகும். தலைவிக்குத் தலைவனும் அவ்இருவருக்கும் இருமுது குரவர் (பெற்றோர்), செவிலி, அந்தணர் போன்றோர் அறிஇருமவுற்று ஒழுக்கத்தையும் கற்பித்தலால் லால் கற்பு என்பது காரணப் பெயராகும். கற்பொழுக்கத்தின் இயல்புகளை எடுத்துரைக்கும் இவ்வியல் கற்பியல் எனப்பெயர் பெற்றது. இவ்இயலின்கண் அமைந்த நூற்பாக்கள் 10.

**கற்பின் இலக்கணம்**

**200. பொற்பமை சிறப்பின் கற்புஎனப் படுவது**
**மகிழ்வும் ஊடலும் ஊடல் உணர்த்தலும்**
**பிரிவும் பிறவும் மருவியது ஆகும்.**

பொலிவினைத் தருகின்ற சிறப்பினை உடையது கற்பாகும். இது 1. தலைவன் தலைவியர் கூடலால் தோன்றும் உள்ள மகிழ்ச்சி 2. அது சிறக்கத் தோன்றும் ஊடல் 3. அவ்ஊடலை உணர்த்தல் 4. தலைவன் தலைவியைப் பிரிதல் ஆகியவற்றுடன் பிறவும் பொருந்தியது ஆகும்.

**கற்பிற்கு உரிய கிளவித்தொகை**

201. இல்வாழ்க் கையே பரத்தையின் பிரிவே
ஓதல் பிரிவே காவல் பிரிவே
தூதின் பிரிவே துணைவயின் பிரிவே
பொருள்வயின் பிரிவே எனப் பொருந்திய ஏழும்
வளமலி கற்பின் கிளவித் தொகையே

இல்வாழ்க்கை முதலாகப் பொருள்வயிற் பிரிதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும் வளமிகுந்த கற்பிற்குரிய கிளவித் தொகை ஆகும். அவை 1. இல்வாழ்க்கை 2. பரத்தையற் பிரிவு 3. ஓதற் பிரிவு 4.காவல் பிரிவு 5. தூதிற் பிரிவு 6. துணைவயிற் பிரிவு 7. பொருள்வயிற் பிரிவு என்பனவாம்.

## 1. இல்வாழ்க்கை

தலைவன், தலைவி ஆகிய இருவரும் கூடி மகிழ்ந்து இல்லின்கண் வாழும் வாழ்க்கையின் சிறப்பினைக் கூறுதல்.

**இவ்வாழ்க்கையின் வகைகள்**

202. கிழவோன் மகிழ்ச்சி கிழத்தி மகிழ்ச்சி
பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சி
என்று ஈங்கு நால்வகைத்து இல்வாழ்க் கையே

இல்வாழ்க்கையாவது 1. தலைவனின் மகிழ்ச்சி 2. தலைவியின் மகிழ்ச்சி 3. தோழியின் மகிழ்ச்சி 4. செவிலியின் மகிழ்ச்சி என்னும் நான்கு வகையினை உடையது.

**இவ்வாழ்க்கையின் விரி**

203. தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தலும்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலும் தலைவியை
வரையும்நாள் அளவும் வருந்தாது இருந்தமை
உரையாய் என்றலும் பெருமகள் உரைத்தலும்
தலைவனைப் பாங்கி வரையும்நாள் அளவும்
நிலைபெற ஆற்றிய நிலைமை வினாதலும்
மன்றல் மனைவரு செவிலிக்கு இருளை
தோழி அன்புற உணர்த்தலும் வாழ்க்கைநன்று அறைதலும்
மணமனைச் சென்று வந்த செவிலி
பொற்றொடி கற்பியல் நற்றாய்க்கு உணர்த்தலும்
நன்மனை வாழ்க்கைத் தன்மை உணர்த்தலும்
அன்னவர் காதல் அறிவித் தலும் எனும்
இன்னவை பத்தும் இல்வாழ்க்கை விரியே.

1. பலவழிகளிலும் தன் காதலுக்கு உதவிபுரிந்த தோழியைத் தலைவன் தலைவிமுன் புகழ்ந்து கூறுதல் 2. தலைவியை வரைந்து கொண்ட தலைவனைத் தோழி வாழ்த்தல் 3. திருமணம் கூடும் வரை வருந்தாமல் இருந்த நிலையைத் தலைவியிடம் தோழி வினவுதல் 4. தான் வருந்தாது இருந்தமையைத் தலைவி கூறுதல் 5. வரையும் நாள் அளவும் ஆற்றியிருந்த நிலையைத் தோழி தலைவனிடம் கேட்டல். 6. திருமண வீட்டிற்கு வந்த செவிலிக்குத் தலைவன் தலைவியர் அன்புறவினைத் தோழி கூறுதல் 7. தலைவியின் இல்வாழ்க்கை நன்றென்று பாங்கி செவிலியிடம் கூறுதல் 8. தலைவியின் வீட்டிற்குச் சென்று வந்த செவிலி தலைமகளின் கற்பறிவுத் திறத்தை நற்றாய்க்கு உணர்த்தல் 9. தலைமகளின் மனைவாழ்க்கைச் சிறப்பைச் செவிலி தற்றாய்க்குக் கூறுதல் 10. தலைவன் தலைவியரின் ஒத்த அன்புத்திறத்தைச் செவிலி நற்றாய்க்குக் கூறுதல் ஆகிய இப்பத்தும் இல்வாழ்க்கையின் விரியாகும்.

## 2. பரத்தையிற் பிரிவு

பரத்தைமேல் கொண்ட காதல் காரணமாகத் தலைமகன் தலைவியைப் பிரிந்து செல்லுதல் பரத்தையிற் பிரிவாகும்.

**பரத்தையிற் பிரிவின் வகைகள் (4)**

**204. வாயில் வேண்டல் வாயில் மறுத்தல்**
**வாயில்தேர் வித்தல் வாயில் நேர்தல் என்று**
**ஆய பரத்தையின் அகற்சிநால் வகைத்தே.**

1 தலைவியின் ஊடல் போக்கத் தலைவியின் தோழியைத் தூதாக வேண்டுதல் 2. வாயில்களை ஏற்காமல் தலைவி மறுத்துக் கூறுதல் 3. வாயிலைத் தலைவி ஏற்கும்படிச் செய்தல் 4. வாயிலை ஏற்றுக் கொண்டு தலைவி ஊடல் தீர்தல் ஆகிய நான்கும் பரத்தையிற் பிரிவின் வகைகளாகும்.

## ஊடல் வகைகள்

பரத்தையர் காரணமாகத் தலைவன் பிரிந்து செல்வான் அதனால் தலைவிக்குத் தலைவன் மீது சினம் ஏற்படும். அச்சினமே ஊடல் எனப்படுகிறது. வாயில்கள் எடுத்துச் சொல்லத் தலைவி ஊடல் தீர்வது உணர்த்த உணரும் ஊடல் ஆகும். ஊடலைத் தீர்க்க வாயில்கள் கூறும் சொற்களை ஏற்காமல் அவ்ஊடலைத் தலைவி நீட்டிப்பது உணர்த்த உணரா ஊடல் ஆகும். இவ்விரு நிலைகளிலும் கூற்றுக்கள் நிகழும்

**உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள்**

**205. காதலன் பிரிவழிக் கண்டோர் புலவிக்கு**
**ஏதுஈ தாம்இவ் இறைவிக்கு என்றலும்**
**தனித்துழி இறைவி துனித்துஅழுது இரங்கலும்**
**ஈங்குஇது என் எனப் பாங்கி வினாதலும்**
**இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தலும்**

**தலைவியைப் பாங்கி கழறலும் தலைவி**
**செவ்வணி அணிந்து சேடியை விடுப்பழி**
**அவ்வணி உழையர்கண்டு அழுங்கிக் கூறலும்**
**பரத்தையர் கண்டு பழித்தலும் பரத்தையர்**
**உலகியல் நோக்கி விடுத்தலில் தலைவன்**
**வரவுகண்டு உவந்து வாயில்கள் மொழிதலும் வ**
**ரவுஉணர் பாங்கி அரிவைக்கு உணர்த்தலும்**
**முதிரா மென்முலை எதிர்கொண்டு பணிதலும்**
**புணர்ச்சியின் மகிழ்வும் என்று உரைத்த பன்னொன்றும்**
**உணர்த்த உணரும் ஊடற்கு உரிய**

1. தலைவனின் பரத்தையிற் பிரிவைக் கண்டோர் தலைவியின் ஊடலுக்குக் காரணம் இதுவெனக் கூறுதல் 2. தலைவன் பிரிவால் தனித்திருக்கும் தலைவி துன்பமுற்று வருந்துதல் 3. நீ அழுது புலம்பக் காரணம் யாது? எனத் தோழி தலைவியிடம் வினவுதல் 4. தலைவனின் புறத்தொழுக்கத்தைத் தலைவி கூறுதல் 5. தலைவனின் பரத்தையர் ஒழுக்கத்தைக் கூறுதல் முறைமை அன்று எனத் தோழி அறிவுரை கூறுதல் 6. தலைவியின் பூப்பினைச் சேடி மூலம் தலைவனுக்கு உணர்த்த அதைக் கண்டு அயல்மனையில் உள்ளவர் மனம் வருந்துதல் 7. தலைவியின் நிலையைச் செவ்வணி மூலம் உணர்த்தும் சேடியைப் பரத்தையர் பழித்தல் 8. செவ்வணி கண்ட பின்னர்த் தலைவன் இங்கிருத்தல் முறையன்று எனத் தலைவனைட் பரத்தையர் விடுக்க அவன் வரவை வாயில்கள் பாங்கியிடம் கூறுதல் 9. தலைமகன் வரவைத் தோழி தலைவிக்கு உணர்த்துதல் 10. தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல் 11. தலைவனும் தலைவியும் புணர்ச்சியில் மகிழ்தல் ஆகிய பதினொன்றும் உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள் ஆகும்

**உணர்த்த உணரா ஊடற்கு உரிய கிளவிகள்**

**206. வெள்ளணி அணிந்து விடுத்துழிப் புள்ளணி**
**மலைவேல் அண்ணல் வாயில் வேண்டலும்**
**தலைவிநெய் ஆடியது இகுளை சாற்றலும்**
**தலைவன் தன்மனத்து உவகை கூறலும்**
**தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றலும்**
**தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தலும்**
**பாணன் முதலாப் பாங்கன் ஈறாப்**
**பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழி**
**மறுத்தலும் விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்டு**
**இறையோன் மகிழ்தலும்“ இறைமகள் விருந்துகண்டு**
**ஒளித்த ஊடல் வெளிப்பட நோக்கிச்**
**சீரேல் என்றுஅவள் சீறடி தொழலும் இ∴து**
**எங்கையர் காணின் நன்றுஅன்று என்றலும்**
**அங்கவர் யாரையும் அறியேன் என்றலும்**
**காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தலும்**
**தாமக் குழலியைப் பாங்கி தணித்தலும்**

**தணியா ளாகத் தலைமகன் ஊடலும்**
**அணிவளைப் பாங்கி அன்பிலை கொடியைஎன்று**
**இணர்த்தார் மார்பனை இகழ்தலும்**
**பிறவும் உணர்த்த உணரா ஊடற்கு உரிய.**

தலைவி புதல்வனைப் பெற்று நெய்யாடியதை உணர்த்தும் அடையாளமாக வெள்ளாடை அணிந்து சேடியை விடுத்த நிலையில் அச்சேடியிடம் தலைவன் வாயில் வேண்டுதல் 2. தலைவி நெய்யாடியதைப் பாங்கி தலைவனுக்குக் கூறுதல் 3. தலைவன் தன் உள்ளத்தில் தோன்றிய மகிழ்ச்சியை வெளிப்படுத்துதல் 4. தலைவனின் வருகையைத் தோழி தலைமகளிடம் கூறுதல் 5. தலைவனின் புறத்தொழுக்கம் உணர்ந்து தலைவி அவனுடன் ஊடல் கொள்ளல் 6. பாணன் முதலாகப் பாங்கன் ஈறாகிய வாயில்கள் தூதாக வந்தபோது தலைவி அதனை மறுத்தல் 7 விருந்தினரொடு தலைவன் வந்தபோது தலைவி ஊடல் நீங்கிப் பொறுத்தல் கண்டு தலைவன் மகிழ்தல். 8. விருந்தினர் சென்றவுடன் தலைவி ஊடலை வெளிப்படுத்தத் தலைவன் அதுகண்டு சினம் கொள்ளாதே எனக் கூறி அவளுடைய சிறிய அடியில் வீழ்ந்து வணங்குதல் 9. என்னை வணங்குவதைப் பரத்தையராகிய என் தங்கையர் கண்டால் அது உனக்குக் குற்றமாய் முடியும் எனத் தலைவி கூறுதல் 10. அன்னவர் யாரையும் நான் அறியேன் எனத் தலைவன் பொய்யுரைத்தல் 11. காமக்கிழத்தியைக் கண்டேன் எனத் தலைவி தலைவனிடம் கூறுதல் 12 தோழி தலைவியின் சினத்தைப் போக்குதல் 13. அந்நிலையிலும் தலைவியின் ஊடல் தணியாமை கண்டு தலைமகன் ஊடல் கொள்ளல் 14, பாங்கி தலைவனை அன்பில்லாக் கொடியோன் என இகழ்ந்து கூறுதல் ஆகிய பதினான்கும் பிறவும் உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள் ஆகும்.

### அணிவழி உணர்த்தல்

பிரிந்து இருக்கும் தலைவனுக்குத் தலைவியின் நிலை ஆடை அணிகலன்கள் வாயிலாக உணர்த்தப்படும். இதுவே அணி வழி உணர்த்தவாகும். இவ்வணி நிறவேறுபாட்டால் செவ்வணி என்றும் வெள்ளணி என்றும் இருவகைப்படும்.

### செவ்வணி

தலைவிக்குப் பூப்பு நிகழ்ச்சி நடந்த பின்னர் நான்காம் நாள் நீராடுவாள். அந்நிகழ்ச்சியைப் பரத்தையர் பிரிந்த தலைவனுக்குச் செவ்வணி மூலம் உணர்த்துவர். தலைவி தன் உயிர்த்தோழிக்குச் செந்நிற ஆடை அணிவித்துச் செஞ்சாந்து பூசி சிவந்த பவளமும் பிறவுமாகிய அணிகலன்களை அணிவித்துச் செந்நிறப் பூவைச் சூட்டித் தலைவன் இருக்கும் இடம் நோக்கி அனுப்புவாள் அத்தோழி செப்புப் பாலிகையுள் செம்பூவையும் நீரையும் ஏந்திப் பரத்தையர் சேரிக்குச் செல்லுவாள். அங்குத் தலைவனைக் கண்டு அவன் அடி வணங்கிப் பாலிகை நீரையும் பூவையும் அவன் கால்களில் பெய்து திரும்புவாள். இச்செயல் கண்டு தலைவன். தலைவியின் நிலையறிந்து தன் மனைக்கண் திரும்பி வருவான் தலைவியின் பூப்பு நிலையைத் தலைவனுக்கு உணர்த்தக் கைக்கொள்ளும் இம்முறையே செவ்வணி ஆகும்.

### வெள்ளணி

புதல்வனை ஈன்றெடுத்த தலைவி பதினைந்து நாள் கழித்துப் பதினாறாம் நாள் நெய்யாடுவாள். அந்நிகழ்ச்சி தோழி வாயிலாகத் தலைவனுக்கு உணர்த்தப்படும். இதற்காகத் தோழிக்கு வெண்ணிற ஆடை உடுத்தி வெஞ்சாந்து பூசி வெண்ணிற முத்துக்களால் ஆன அணிகலன்களை அணிவித்து வெண்ணிறப்பூ அணிவித்துத் தலைவன் இருக்கும் இடம் நோக்கி அனுப்புவாள். அத்தோழி செப்புப் பாலிகையுள் வெண்பூவையும் நீரையும் ஏந்திப் பரத்தையர் சேரிக்குச் செல்லுவாள். அங்குத் தலைவனைக் கண்டு அவன் அடி வணங்கிப் பாளிகை நீரையும் பூவையும் அவன் கால்களில் பெய்து திரும்புவாள். இச்செயல் கண்டு தலைவன் தலைவியின் நிலையறிந்து தன் மனைக்கண் திரும்பி வருவான் இவ்வாறு தலைவியின் மகப்பேற்று நிலை உணர்த்தக் கைக்கொள்ளும் முறையே வெள்ளணி ஆகும்.

**இதுவம் அது**

**207. ஆயிழை மைந்தனும் ஆற்றா மையுமே**
**வாயில் ஆக வரவுஎதிர் கோடலும்**
**மணந்தவன் போயபின் வந்த பாங்கியோடு**
**இணங்கிய மைந்தனை இனிதிற் புகழ்தலும்**
**தலைவனைப் புகழ்தலும் சிலைநுதல் பாங்கி**
**மனைவியைப் புகழ்தலும் இனையவை பிறவும்**
**அனைவகை மொழிந்த அதன்பாற் படுமே.**

1. அழகிய அணிகலன் அணிந்த தம் புதல்வனையும் ஆற்றாமையையும் வாயிலாகக் கொண்டு தலைமகன் வர அவர்களைத் தலைவி எதிர்சென்று ஏற்றுக் கொள்ளல் 2. புணர்ந்த தலைவன் நீங்கிச் சென்ற பின்னர் ஊடல் தீர்த்த மகனைத் தோழியுடன் தலைவியும் புகழ்தல் 3. தலைவனைப் புகழ்ந்து கூறுதல் 4. பாங்கி தலைவியைப் புகழ்ந்து பேசுதல் ஆகியவையும் 5. இவை போன்ற பிறவும் உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள் ஆகும்.

**பரத்தையிற் பிரிவின் விரி**

**208. மூன்றுசூத் திரத்து மொழிந்தவை எல்லாம்**
**ஆன்ற பரத்தையின் அகற்சியின் விரியே.**

மேல் மூன்று நூற்பாக்களில் (205, 206, 207) கூறப்பட்ட அனைத்தும் பரத்தையிற் பிரிவின் விரியாகும்.

## 3. ஓதல் முதலாகிய ஐவகைப் பிரிவுகள்

கற்பொழுக்கத்தில் தலைமகன் பிரியும் பிரிவு அறுவகைப்படும். அவற்றுள் தனித்தன்மை கொண்ட பரத்தையிற் பிரிவு நீங்கலாக ஐந்தும் ஒத்த தன்மையுடையன. அவற்றுக்குரிய கிளவிகள் ஒன்பது வகைப்படுவதாகும்.

**ஐவகைப் பிரிவுகளுக்கு உரிய கிளவிகள்**

**209.  பிரிவுஅறி வுறுத்தல்  பிரிவுஉடன் படாமை**
**பிரிவுஉடன் படுத்தல் பிரிவுஉடன் படுதல்**
**பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை**
**வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சி என்று**
**ஒருமையில் கூறிய ஒன்பது வகைய**
**கல்வி முதலா எல்லாப் பிரிவும்**

1.தலைவன் தன்பிரிவைத் தோழிக்கு அறிவுறுத்தல் 2. அதற்குத் தோழி உடன்படாமை 3. தலைவன் பிரிவைத் தோழி ஏற்றல் 4.தலைவன் பிரிதல் 5. தலைவன் பிரிவால் தலைவி மனம் வருந்துதல் 6.பிரிவின் இன்றியமையாமையைத் தோழி வற்புறுத்திக் கூறல் 7. அதனை ஏற்றுத் தலைவி பிரிவுத் துயரைப் பொறுத்தல் 8. வருகின்ற வழியில் கண்டவற்றால் தலைவன் மனம் கலங்கிக் கூறுதல் 9. தலைவனும், தலைவியும் கூடி மகிழ்தல் என்னும் ஒன்பதும் ஐவகைப் பிரிவுகளுக்கும் உரிய பொதுக் கிளவிகளாகும்.

**மாதிரி வினாக்கள்**

1. கற்ப்பின் இலக்கணம் தருக.
2. ஊடல் வகைகளை விளக்குக.
3. இல்வாழ்க்களின் வகைகள் குறித்து எழுதுக.
4. பரத்தையற் பிரிவின் வகைளைக் கூறுக.
5. கற்ப்பிற்குரிய கிளவித்தொகையை விளக்குக.
6. ஐவகைப் பிரிவுகள் குறித்து எழுதுக.
7. உணர்த்த உணரா ஊடற்க் கிளவிகைளை விளக்குக.
8. செவ்வெணி, வெள்ளணி குறித்து கட்டுரைக்க.
9. உணர்த்த உணரும் ஊடற்க் கிளவிகள் குறித்து விவரிக்க.
10. கூற்றிற்குரியவர் யார்? கூற்றிற்க்கு உரிமையில்லாதவர் யார்? என்பதை விவரி.

**இயல் 04**

# . 1.வெட்சிப் படலம்

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சித் திணையாகும் இக்குறிஞ்சி நிலத்திற்குரியது வெட்சிப் பூவாகும். இது சிவந்த நிறத்தை உடையது. இம்மலைநாட்டுப் பூவைச் சூடிய மறவர் மலைகளிலும் பிற நிலப்பகுதிகளிலும் மேய்ந்து கொண்டிருக்கும் ஆநிரைகளைப் (பசுக்கூட்டம்) பிறர் அறியாதவாறு கவர்ந்து வருவர். இவ்ஒழுக்கத்தை முன்னோர் வெட்சித்திணை என வழங்கினர்.

இவ்வெட்சிக்குரிய ஆதிரையினைக் கவர்தலாவது மன்னனின் கட்டளையை ஏற்றும் நடைபெறும். மன்னன் ஏவுவதற்கு முன் அவனுடைய மனக்குறிப்பினை அறிந்து தடைபெறுவதும் உண்டு இவ்வெட்சித்திணை 20 பகுதிகளை உடையது. அவற்றுள் முதல் பகுதி திணை விளக்கம் ஆகும். எஞ்சியவை வெட்சித்திணையின் துறைகளை விளக்குவனவாம்.

**வெட்சித் திணையும் அதன் துறைகளும்**

**வெட்சி வெட்சி அரவம் விரிச்சி செலவு**
**வேயேபுறத்திறை ஊர்கொலை ஆகோள்**
**பூசல் மாற்றே புகழ்கரத் துய்த்தல்**
**தலைத்தோற் றம்மே தந்துநிறை பாதீடு**
**உண்டாட்டு உயர்கொடை புலனறி சிறப்பே**
**பிள்ளை வழக்கே பெருந்துடி நிலையே**
**கொற்றவை நிலையே வெறியாட்டு உளப்பட**
**எட்டுஇரண்டு ஏனை நான்கொடு தொகைஇ**

**வெட்சியும் வெட்சித் துறையும் ஆகும்.**

பகையரசனுடைய ஆநிரைகளைக் கைப்பற்றி வர மறவர் வெட்சிப்பூச்சூடிச் செல்வர். அம்மறவர் 1. ஆரவாரித்துச் செல்லுதல் 2.தற்சொல் கேட்டல் 3. காட்டகத்துச் செல்லுதல் 4. பகைவர் நிலையினை ஒற்றின் மூலம் அறிதல் 5.ஊர்ப்புறத்தே தங்குதல் 6. பகையரணை அழித்தல் 7. ஆவினைக் கைப்பற்றுதல் 8. கரந்தையாரைக் கொன்று குவித்தல் 9. ஆதிரை வருந்தாவண்ணம் வழிக்கண் செலுத்துதல் 10. மறவர் நிரைகளுடன் தம் ஊருக்கு அருகில் வருதல் 11. ஆதிரைகளை ஊர்மன்றத்தில் நிறுத்துதல் 12. அவற்றை வீரர்களின் செயலுக்கு ஏற்பப்பகுத்துக் கொடுத்தல் 13. கள் உண்டு மகிழ்தல் 14. மறவர் தத்தம் தகுதிக்கு ஏற்பத் தாம்பெற்ற ஆநிரைகளைப் பிறருக்குக் கொடுத்தல் 15.ஒற்றறிந்து வந்த மறவருக்குச் சிறப்புச் செய்தல் 16. நிமித்தம் (குறி) கூறிய புலவர்களுக்குச் சிறப்புச் செய்தல் 17.துடி கொட்டுபவனின் மரபினைப் போற்றுதல் 18. கொற்றவையின் அருட்சிறப்பினை வியந்து போற்றுதல் ஆகிய செயல்களைச் செய்வர் 19. மறக்குலப் பெண்கள் வேலனோடு வள்ளிக்கூத்து ஆடுவர். இப்பத்தொன்பது பகுதிகளும் வெட்சித்திணையின் துறைகளாகும். இவற்றோடு வெட்சித் திணையைக் கூட்ட உண்டாகும் இருபதும் (8ஒ 2 ¸ 4 ஸ்ரீ 20) வெட்சித் திணையும் அதன்துறைகளும் ஆகும்.

**வெட்சி**

வெட்சிப்பூவினைச் சூடி மாற்றாரின் ஆக்களைக் (பசுக்களைக்) கைப்பற்றக் கருதுவது வெட்சித் திணை ஆகும். இது மன்னுறு தொழில். தன்னுறு தொழில் என இருவகைப்படும்.

**கொளு :** **வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்**
**சென்று இகல்முனை ஆதந் தன்று.**

1. வெற்றியை உடைய அரசன் தன்னுடைய வீரர்களை நோக்கிப் பகைவருடைய ஆநிரைகளைக் கவர்ந்து வருமாறு கட்டளை இடுவான். 2. அரசன் ஏவாமல் இருக்கவும் அவன் குறிப்பறிந்த மறவர் தாமே சென்று பகைப்புலத்தில் உள்ள ஆநிரைகளைக் கவர்ந்து வருவர். இவ்இரு தன்மைகளையும் கொண்டதாக விளங்குவது வெட்சித் திணையாகும். இகல் - பகை முனை -இடம்.

**1. வெட்சி அரவம்**

பகைவரின் ஆநிரைகளைக் கவரச் செல்லும் வெட்சி மறவர் பல்வகை இசைக்கருவிகள் முழங்க ஆரவாரித்துச் செல்லும் நிலையே வெட்சி அரவம் என்னும் துறையாகும். அரவம் பேரொலி.

**கொளு :** **கலவார் முனைமேல்**
**செலவுஅமர்ந் தன்று.**

தன்னொடு பொருந்தாத தன்மை கொண்டவர் பகைவர். அப்பகைவரின் போர் செய்யும் இடத்தை நோக்கி ஆநிரைகளைக் கவர்வதற்காக விரும்பிச் செல்வர். இதுவே வெட்சி அரவம் ஆகும். கலவார் -பகைவர், முனை பகைவர் நிலம்.

**2. விரிச்சி**

தாம் மேற்கொள்ளும் செயலின் நிலையை அறியும் பொருட்டுச் சொல்லை ஆராய்தலே விரிச்சி என்னும் துறையாகும். இச்செயல் தற்காலத்தில் சகுனம் பார்த்தல் என்றும் குறிகேட்டல் என்றும் வழங்கப்படுகிறது.

**கொளு:** **வேண்டிய பொருளின் விளைவுநன்கு அறிதற்கு**
**ஈண்டுஇருள் மாலைச் சொல்ஓர்த் தன்று.**

பகைவர் நாட்டுக்குச் சென்று அவருடைய ஆக்களைக் கவர்ந்து வர எண்ணிய வெட்சி மறவர் ஓரிடத்தில் கூடி நின்றனர். தாம் விரும்பிய அச்செயல் இனிது நிறைவேற வேண்டும் என்று எண்ணினர். அதற்காக இருள் கவ்வுகின்ற மாலைப் பொழுதில் நற்சொல்லைக் கேட்டு ஆராய்ந்து அறிவர். இதுவே விரிச்சி ஆகும். ஓர்தல்- ஆராய்தல்.

**3.செலவு**

வெட்சி மறவர் ஆநிரைகளைக் கவரக் கருதிப் பகைவர் நிலத்திற்குப் புறப்பட்டுச் செல்வது செலவு என்னும் துறையாகும்.

**கொளு:** **வில்லேர் உழவர் வேற்றுப் புலம்உன்னிக்**
**கல்லேர் கானம் கடந்துசென் றன்று.**

வில்லாகிய ஏரினை உடையவராகிய உழவர் வெட்சி மறவர். அவர்கள் பகைவருடைய ஆநிரை நின்ற இடத்தை அடையக் கருதினர். அதற்காகக் கல் பொருந்திய காட்டைக் கடந்து சென்றனர். அந்நிலையே செலவு எனக் கூறப்பெறுகிறது. வில்லேர் உழவர் - வெட்சிமறவர். வில்லாகிய ஏரினைக் கொண்டு பகைவர் உடம்பை உழுதலால் அவ்வாறு குறிக்கப்பட்டார். வேற்றுப்புலம் - பகைவர் நிலம். உன்னல் - கருதுதல், கானம் காடு.

**4. வேய்**

தம் பகைவர் அறியாதவாறு அங்குள்ள ஆநிரை பற்றிய செய்திகளை ஒற்றர் ஆராய்ந்து வந்து கூறுவது வேய் ஆகும். வேய்-ஒற்று: உளவுபார்த்தல்.

**கொளு:** **பற்றார் தம்முனைப் படுமணி ஆயத்து**
**ஒற்றுஆ ராய்ந்த வகைஉரைத் தன்று.**

வெட்சி ஒற்றர் பகைவருடைய நாட்டிற்குள் புகுவர். அங்கு ஒலிக்கும் மணிகள் பூட்டிய ஆதிரை நின்ற இடத்தை ஆராய்ந்து அறிந்து வந்து தம் கூட்டத்தார்க்குக் கூறுவர். இதுவே வேய் ஆகும். பற்றார் பகைவர்,படுதல் - ஒலித்தல். ஆயம் கூட்டம்.

**5. புறத்திறை**

பகைவரின் அரணத்தைச் சுற்றி வளைத்துப் புறத்தில் தங்குவது புறத்திறை என்னும் துறையாகும். புறம் - வெளிப்பக்கம். இறை - தங்குதல்.

**கொளு:** **நோக்கரும் குறும்பின் நூழையும் வாயிலும்**
**போக்கற வளைஇப் புறத்துஇறுத் தன்று.**

பிறர் கண்ணால் காண்பதற்கும் அரிதாக விளங்குவது காவற்காடு. அது சிறிய வழிகளையும் பெரிய வாயில்களையும் உடையது. அவற்றின் வாயிலாக உள்ளே இருப்போர் வெளியில் தப்பித்துச் செல்லாதபடி வெட்சி மறவர் சுற்றி வளைத்து மதிற்புறத்தே தங்கினர். இதுவே புறத்திறை ஆகும். குறும்பு - காவற்காடு நூழை - குறுகிய வழி.

**6. ஊர் கொலை**

வெட்சி மறவர் பகைவரின் மதிலைத் தீயிட்டு அழித்து ஊரில் உள்ளாரைக் கொல்லுவது ஊர்கொலை என்னும் துறையாகும்.

**கொளு:** **விரைபரி கடவி வில்லுடை மறவர்**
**குரைஅழல் நடப்பக் குறும்புஎறிந் தன்று.**

வில்லை ஏந்தியவர் வெட்சி மறவர். அவர்கள் இயல்பாகவே விரைந்து செல்லும் தம் குதிரையை மேலும் விரைவுபடுத்துவர். முழங்குகின்ற தீயினைப் பகைவரின் ஊரின்கண் தவழும்படி செய்து அப்பகைவரின் அரணை அழிப்பர். இதுவே ஊர்கொலை எனப்படும். விரை - விரைவு, பரி - குதிரை. கடவுதல் - செலுத்துதல். குரை - முழக்கம்.

**7.ஆகோள்**

பகைவருடைய ஆக்களைக் கன்றுடன் கவர்வது ஆகோள் என்னும் துறையாகும். ஆ - பசு பால் ப∴கா அ∴றிணைப்பெயர். கொள் - கொள்ளுதல், கோள் முதல் நிலை நீண்ட தொழிற்பெயர்.

**கொளு :** **வென்றுஆர்த்து விறல்மறவர்**
**கன்றோடும் ஆதழீஇயன்று.**

பகைவர்களை முற்றிலுமாக ஒழித்துப் பெற்ற வெற்றியை உடையவர் வெட்சி மறவர். அவர் தம் வெற்றிக் களிப்பால் ஆரவாரித்துப் பகைவர்களின் ஆநிரைகளோடு கன்றுகளையும் கைப்பற்றுவர். இதுவே ஆகோள் ஆகும். விறல் - வெற்றி தழுவுதல் - கைப்பற்றுதல்

**8. பூசல் மாற்று**

எதிர்த்துப் போர் செய்ய வந்தோரை முற்றிலும் கொன்று இனிப் போர் இல்லை என்று சொல்லும்படி செய்வது பூசல்மாற்று என்னும் துறையாகும். பூசல் போர். மாற்றுதல் - இல்லாமல் செய்தல்.

**கொளு: கணம்பிறங்கக் கைக்கொண்டார்**
**பிணம்பிறங்கப் பெயர்த்திட்டன்று.**

வெட்சி மறவர் பகைவரின் ஆநிரைகளை மிகுதியாகக் கைப்பற்றிச் சென்றனர். அதனைப் பொறுக்காமல் சூழ்ந்து நின்று தடுக்க வந்தனர் பகை மறவர். அவர்களின் பிணங்கள் மிகுதியாகும்படி வெட்சி மறவர் கொன்று குவித்துப் போர் இல்லாமல் செய்தனர். இதுவே பூசல்மாற்று ஆகும். பிறங்குதல் - மிகுதல். பெயர்த்தல் - மாற்றுதல்,

**9. சுரத்துய்த்தல்**

தம்மால் கவரப்பட்ட ஆநிரைகளுக்குத் துன்பம் நேராமல் காட்டு வழிக்கண் ஓட்டிச் செல்லுதலே சுரத்துய்த்தல் என்னும் துறையாகும். சுரம் காடு' சுரத்து காட்டு வழியின்கண்' உய்த்தல் செலுத்துதல்,

**கொளு: அருஞ்சுரத்தும் அகன்கானத்தும்**
**வருந்தாமல் நிரைஉய்த்தன்று.**

கடந்து செல்வதற்கு அரிய வழிகளை உடையது அகன்ற காடு. அவற்றிடையே வெட்சி மறவர் தாம் கைப்பற்றிய ஆதிரைகளைத் துன்புறாத வகையில் ஓட்டிச் சென்றனர். இதுவே சுரத்துய்த்தல் ஆகும்.

**10. தலைத்தோற்றம்**

ஆதிரைகளைக் கவர்ந்து வந்த வெட்சி மறவர் பின்னே வரத் தலைவன் முன்னே வந்து ஊரார்க்கு மகிழ்ச்சியைத் தருவது தலைத் தோற்றம் என்னும் துறையாகும். தலை தலைவன். தோற்றம் - தோன்றுதல்.

**கொளு: உரவெய்யோன் இனந்தழீஇ**
**வர(வு)உணர்ந்து கிளைமகிழ்ந்தன்று.**

வலிமையினை விரும்புபவன் வெட்சிப் படைத்தலைவன். அவன் தலைமையில் ஆநிரைகளைக் கைப்பற்றி வருதலை அறிந்த வெட்சி மறவர்களின் சுற்றத்தவர் மகிழ்ச்சி கொள்வர். இந்நிலையே தலைத்தோற்றம் ஆகும். உரம் - வலிமை. வெய்யோன் -விரும்புபவன். இனம் பசுக்கூட்டம்.

**11. தந்துநிறை**

வெட்சியார் தாம் கைப்பற்றி வந்த ஆநிரைகளை ஊரின்கண் நிறுத்தியது தந்துநிறை என்னும் துறையாகும். தந்து ஆநிரைகளைக் கொண்டு வந்து' நிறை - நிறுத்துதல் அல்லது நிறைத்தல்.

**கொளு :** **வார்வலந்த துடிவிம்ம**
**ஊர்புகல நிரைஉய்த்தன்று.**

வாராலே இழுத்துக் கட்டப்பட்டது துடி என்னும் இசைக்கருவியாகும். அக்கருவி முழங்க ஊரில் உள்ளார் விரும்பும்படியாக வெட்சி மறவர் தாம் கொணர்ந்த ஆநிரைகளை ஊர்மன்றத்தின்கண் நிறுத்தினர். இதுவே தந்துநிறை ஆகும். வலத்தல் - கட்டுதல். விம்முதல் முழங்குதல், புகலுதல் - விரும்புதல்.

**12.பாதீடு**

மறவர்களின் தகுதிக்கேற்ப ஆதிரைகளைப் பங்கிட்டுக் கொடுப்பது பாதீடு என்னும் துறையாகும். பாதீடு - பகுத்து இடுதல் பகுத்தல்-பாத்து' பாத்தல் என்னும் வினையடியாகப் பிறந்த சொல் ஈடு - இடு என்னும் முதனிலை நீண்ட தொழிற்பெயர்.

**கொளு:** **கவர்கணைச் சுற்றம் கவர்ந்த கணநீரை**
**அவர்அவர் வினைவயின் அறிந்துஈந் தன்று.**

பகைவரின் உயிரைக் கவர்கின்ற அம்புகளை உடையவர் வெட்சி மறவர். சுற்றத்தாராகிய அம்மறவர் ஆநிரைகளைக் கைப்பற்றி வந்தனர். அவற்றை அவரவர் தகுதிக்கேற்பப் படைத்தலைவன் பகிர்ந்து அளித்தான். இதுவே பாதீடு ஆகும். சுவர்கணை உயிரைக் கவரும் அம்பு, சுவர்தல் - ஆவைக் கைப்பற்றுதல் வினை செயல், அறிதல் - அளவிடுதல்,

**13. உண்டாட்டு**

வெட்சி மறவர் கள்ளினை உண்டு தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது உண்டாட்டு என்னும் துறையாகும்.

**கொளு:** **தொட்டு இமிழும் கழன்மறவர்**
**மட்டுஉண்டு மகிழ்தூங்கின்று.**

ஒலிக்கின்ற வீரக்கழலை உடையவர் வெட்சி மறவர். அம்மறவர் தாம்வென்ற மகிழ்ச்சியால் கள் உண்டு களித்து ஆடுவர். இதுவே உண்டாட்டு ஆகும். தொடுதல்கட்டுதல். இமிழ்தல் ஒலித்தல். மட்டு - கள்.

**14.கொடை**

வெட்சி மறவர் தத்தம் தகுதிக்கு ஏற்பப் பகிர்ந்து கொண்ட ஆக்களைப் பிறருக்குக் கொடுப்பது கொடை என்னும் துறையாகும். கொடு என்னும் ஏவல் வினை, ஐகார ஈறு பெற்றுக் கொடை என்னும் பெயராக வழங்கப்படுகிறது.

**கொளு:** **ஈண்டியநிரை ஒழிவின்றி**
**வேண்டியோர்க்கு விரும்பிவீசின்று.**

தம்முடைய திறமைக்கேற்பத் தாம் கைப்பற்றிய ஆநிரைகளைப் பகுத்துக் கொண்டவர் வெட்சித்திணை மறவர். அவர்கள் தமக்கு உரிமையாக்கப்பட்ட ஆக்களைத் தம்மை விரும்புகின்ற அனைவருக்கும் மனம் உவந்து கொடுப்பர். இதுவே கொடை ஆகும். ஈண்டிய கூட்டம். ஒழிவின்றி - தப்பாமல், வீசுதல் - வழங்குதல்,

### 15. புலனறி சிறப்பு

ஒற்றர்களுக்குச் சிறப்புறக் கொடுத்தலைக் கூறுவது புலனறி சிறப்பு என்னும் துறையாகும். புலன்- பகைவர் நிலம். அறி - ஒற்றராய்ச் சென்று ஆராய்ந்து அறிந்து வருதல், சிறப்பு - சிறப்புச் செய்தது.

**கொளு:** **வெம்முனைநிலை உணர்த்தியோர்க்குத்**
**தம்மினும்மிகச் சிறப்புஈந்தன்று.**

மிகுந்த சினத்தை உடையவர் கரந்தை மறவர். அவருடைய நாட்டிற்கு அஞ்சாமல் சென்று அங்குள்ள நிலையை ஆராய்ந்து வந்து கூறியவர் ஒற்றர். அவ்ஒற்றர்களுக்குப் பிறரைக் காட்டிலும் மிகுதியாகக் கொடுத்துச் சிறப்புச் செய்வர். இதனைக் கூறுவது புலனறி சிறப்பு ஆகும். வெம்முனை - பகைவர் நிலம். உணர்த்தியோர் - ஒற்றர்.

### 16. பிள்ளை வழக்கு

திமித்தமாகிய குறி (சகுனம்) கூறியவர்களுக்கு ஆக்களைத் தந்து சிறப்பிப்பது பிள்ளை வழக்கு என்னும் துறையாகும். காரி என்பது ஒருவகைப் பறவை. அது தற்காலத்தில் கரிக்குருவி அழைக்கப்படுகிறது. அதனைக் காரிப்பிள்ளை என்றும் கூறுவர். அப்பறவையின் குரல் ஒலியை ஆராய்ந்து பொய்யாகாதவாறு குறி கூறுவர். அக்குறி கூறும் நிமித்திகனைப் பிள்ளை என அழைப்பர். பிள்ளை நிமித்திகன்: வழக்கு பொருளை மிகுதியாக வழங்குதல். என

**கொளு:** **வாய்யாது புள்வமாழிந்தார்க்கு**
**வையாது வழக்குஉரைத்தன்று.**

காரிப் பறவையின் ஒலியைக் கொண்டு பொய்யாகிப் போகாதவாறு விரிச்சி கூறுபவர் நிமித்திகர். அவருக்கு மனக்குறைவு தோன்றாத வண்ணம் மிகுதியாகக் கொடுப்பர். இம்முறையினைக் கூறுவது பிள்ளை வழக்காகும்.

### 17. துடிநிலை

தொன்று தொட்டு மரபு மாறாமல் துடி கொட்டுபவனுடைய குடிப்பழமையைப் புகழ்ந்து கூறுவது துடிநிலை என்னும் துறையாகும். அடி என்பது தோல் கருவியாகிய பறை வகையுள் ஒன்று. ஈண்டுத் துடி என்பது அதனைக் குறிக்காமல் கொட்டுபவனுக்கு ஆகுபெயராகி நின்றது. துடிதுடியைக் கொட்டுபவன். நிலை - பழமையைச் சொல்லுதல்.

**கொளு: தொடுகழல் மறவர் தொல்குடி மரபில்**
**படுகண் இமிழ்துடிப் பண்புஉரைத் தன்று.**

பெரிய கண்ணினை உடையதாய் முழங்குகின்ற தன்மை கொண்டது துடி அதனை முழக்குகின்றவன் தொன்மையான முதுகுடிக்கண் தோன்றியவன். அவனுடைய பண்பினை, வீரக்கழலினை அணிந்த வெட்சி மறவர் பாராட்டுவர். இதனை உரைப்பது துடிநிலையாகும். இமிழ்தல் -ஒலித்தல்.

**18. கொற்றவை நிலை**

வெற்றிக்குக் காரணமாக விளங்கும் இறைவியாகிய கொற்றவையைப் புகழ்ந்து பேசுவது கொற்றவை நிலை என்னும் துறையாகும். கொற்றம் -வெற்றி. கொற்றத்தைத் தருபவள் ஆகையால் கொற்றவை என அழைக்கப் பெற்றாள். நிலை - அருள்நிலை. கொற்றவையைத் தற்காலத்தில் துர்க்கை எனக் கூறுவர்.

**கொளு: ஒளியின்நீங்கா விறல்படையோள்**
**அளியின்நீங்கா அருள்உரைத்தன்று.**

குன்றாத ஒளியையும் வெற்றியையும் தருவது சூலப்படை அதனை உடையவள் கொற்றவை. அவ்இறைவியின் இரக்கத்தன்மையில் இருந்து நீங்காதது அருள். அவ்அருளினது சிறப்பை எடுத்துரைப்பது கொற்றவை நிலையாகும். விறல்படையோள் - கொற்றவை, அளி - இரக்கம்

**19.வெறியாட்டு**

மறக்குடி மகளிர் வேலனோடு வள்ளிக் கூத்தாடுவதே வெறியாட்டு என்னும் துறையாகும். முருகனுடைய வேலைக் கையில் கொண்டு ஆடுபவன் வேலன் எனப்படுவான். அவனோடு மகளிர் தம்மை வள்ளியாக எண்ணி வேடம் பூண்டு ஆடுவதால் வள்ளிக்கூத்து எனப் பெயர்பெற்றது. வெறியாடுதல்-வள்ளிக்கூத்தாடுதல்.

**கொளு: வால்இழையோர் வினைமுடிய**
**வேலனொடு வெறிஆடின்று.**

வெண்மையான அழகிய அணிகலன்களை அணிந்தவர் மறக்குடி மகளிர், அப்பெண்கள் தம் கணவர் மேற்கொண்ட தொழில் நன்றாக முடிய வேண்டும் என எண்ணினர். அதற்காக

வேலனோடு கூடி வள்ளிக் கூத்தை ஆடுவர். இதுவே வெறியாட்டு ஆகும். வால் - வெண்மை, இழை அணிகலன்

## 02. கரந்தைப் படலம்

வெட்சியாறால் சுவர்த்து செல்லப்பட்ட ஆதிரைகளை இடைமறித்து மீட்டுச் செல்லும் பொருட்டு மேற்கொள்கின்ற ஒழுக்கம் கரந்தை ஆகும். மீட்கச் செல்லும் மறவர் தமக்குரிய அடையாளப் பூவாகக் கரத்தைப் பூவினைச் சூடுவர். இப்பூவின் காரணமாக இத்திணை கரந்தைத்திணை எனப் பெயர் பெறுகிறது. வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம் என்பதிலிருந்து கரந்தைத் திணைக்குரிய செயல் ஆநிரைகளை மீட்டல் என்பது புலனாகிறது.

கரந்தை என்னும் செடியைத் தற்காலத்தில் கொட்டைக் கரந்தை என அழைக்கின்றனர். இவ்இனத்தில் சிவந்த நிறப்பூக்கள் உடையதனைச் சிவகரந்தை என்றும் நீலப்பூக்கள் உடையதனை விட்டுணு (விஷ்ணு) கரந்தை என்றும் சிறப்பித்துக் கூறுவர். இப்பூவானது கோடைக்காலத்தை ஒட்டிய மாசி, பங்குனி மாதங்களில் மிகுதியாகப் பூக்கும். இதிலிருந்து பண்டைக் காலத்தில் போர்த்தொடக்கம் இப்பூப் பூக்கின்ற காலத்தில் நடை பெற்றிருக்க வேண்டும் என்பதை உணர முடிகிறது.

வெட்சித் திணையைப் போலவே கரந்தைத்திணையும் குறிஞ்சி நிலத்தில் நிகழ்வதாகும். இக்கருத்துப் பற்றியே தொல்காப்பியர் நிரை மீட்டலாகிய செயலைத் தனித்துக் கூறாமல் வெட்சித்திணையினுள் அடக்கிக் கூறுகிறார். ஆனால் பன்னிருபடலத்தை அடியொற்றிச் செல்லும் இந்நூல் நிரை மீட்டலைத் தனியே சிறப்பித்துப் பேசுகிறது. இக்கரந்தைத்திணை 14 பகுதிகளை உடையது. அவற்றுள் முதல் பகுதி திணை விளக்கமாக அமைந்துள்ளது. எஞ்சியவை கரந்தைத் திணையின் துறைகள் ஆகும்.

**கரந்தைத் திணையும் அதன் துறைகளும்**

**கதமலி கரந்தை கரந்தை அரவம்**
**அதரிடைச் செலவே அரும்போர் மலைதல்**
**புண்ணொடு வருதல் போர்க்களத்து ஒழிதல்**
**ஆளெறி பிள்ளை பிள்ளைத் தெளிவே**
**பிள்ளை யாட்டொடு கையறு நிலையே**
**நெடுமொழி கூறல் பிள்ளைப் பெயர்ச்சி**
**வேத்தியன் மலிபே மிகுகுடி நிலை என**
**அருங்கலை உணர்ந்தோர் அவைபதி னான்கும்**
**காந்தையும் கரந்தைத் துறையும் என்ப.**

பகையரசன் சுவர்ந்த ஆநிரைகளை மீட்க மறவர் மிகுந்தசினம் கொண்டு கரந்தைப்பூச்சூடுவர். அக்கரந்தை மறவர் 1.ஆரவாரித்துச் செல்லுதல் 2. வெட்சி மறவர் சென்ற வழியைப் பின்பற்றிச் செல்லுதல் 3. வெட்சியாரோடு போர் செய்தல் 4. விழுப்புண்ணுடன் வருதல் 5.போர்க்களத்தில் இறத்தல் 6. அஞ்சாத கரந்தை மறவன் வெறி கொண்டு வெட்சியாரை வெட்டி

வீழ்த்துதல் 7. விழுப்புண் பட்டோன் துடி ஒலிக்கு ஏற்பக் கூத்தாடுதல் 8.வெட்சியாரின் குடரை வேலுக்கு அணிவித்து அவ்வேலைச் சுழற்றிக் கொண்டு ஆடுதல் 9. தம் தலைவன் இறந்ததால் பாணன் செயலற்ற நிலையினன் ஆதல் 10. கரந்தை மறவன் தன் மறப்பெருமையினைக் கூறுதல் 11.தீய நிமித்தத்தைப் பொருட்படுத்தாத மறவனை வேந்தன் சிறப்பித்தல் 12. மறவர் தம் அரசனைப் பலபடப் புகழ்தல் 13. கரந்தை மறவர் தமது குடிப்பெருமையினைக் கூறுதல் ஆகிய செயல்களைச் செய்வர். இப்பதின்மூன்றொடு பூச்சூடல் ஆகிய கரந்தையையும் கூட்ட உண்டாவன பதினான்கு ஆகும். இவற்றை அருமைப்பாடு வாய்ந்த போர்க்கலையினை உணர்ந்த சான்றோர் கரந்தைத் திணையாகவும் அதன் துறைகளாகவும் கூறுவர்.

**1. கரந்தை அரவம்**

வெட்சியாரால் கவரப்பட்ட ஆநிரைகளை மீட்கக் கரந்தை மறவர் ஓரிடத்தில் கூடினர். அவர்கள் கொண்ட போர் எழுச்சியினால் ஏற்பட்ட ஓசையே கரந்தையரவம் என்னும் துறையாகும். இது மீட்டலைப் பற்றிய ஆரவாரமாகும். கரந்தை - கரந்தைப் பூவைச் சூடிய மறவர். அரவம் - ஆரவாரம்' ஓசை

**கொளு :** **நிரைகோள் கேட்டுச் செய்தொழில் ஒழிய**
**விரைவனர் குழூஉம் வகைஉரைத் தன்று.**

வெட்சியார் தம் ஆநிரைகளைக் கவர்ந்து சென்றதைப் பிறர் வாயிலாக மறவர் கேட்டனர். இச்செய்தியினால் தாம்தாம் செய்து வந்த தொழிலை அப்படியே கைவிட்டு விரைந்து வந்து ஓரிடத்தில் ஓசைஎழக் கூடி நின்றனர். இதனைக் கூறுவது கரந்தையரவம் ஆகும். குழூஉம் கூடிநிற்றல்

**2. அதரிடைச் செலவு**

ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற வெட்சி மறவரைப் பின்பற்றிக் கரந்தை மறவர் செல்வது அதரிடைச் செலவு என்னும் துறையாகும். அதர் வழி'இடை இடத்து: செலவு - செல்லுதல்.

**கொளு:** **ஆற்றார் ஒழியக் கூற்றுஎனச் சினைஇப்**
**போற்றார் போகிய நெறியிடை ஏகின்று.**

ஆநிரையை மீட்கப் போர் செய்வதற்கு ஆற்றல் இல்லாதவர்கள் ஊரின்கண் தங்கினர். எஞ்சிய கரந்தை மறவர் அனைவரும் கூற்றுவன் சினத்தைப் போலச் சினம் கொண்டனர். தம் ஆதிரைகளைக் கவர்ந்து செய்கின்ற வெட்சியாரின் வழியைத் தொடர்ந்து சென்றனர். இந்நிலையே அதரிடைச் செலவு ஆகும். போற்றார் - பகைவர் நெறி வழி ஏகுதல் செல்லுதல்

**3. போர் மலைதல்**

வெட்சி மறவர்களோடு சுரந்தை மறவர் போர் செய்வது போர்மலைதல் என்னும் துறையாகும். மலைதல் -பொருதல்' எதிர்த்து நிற்றல்.

**கொளு:** **வெட்சி யாரைக் கண்ணுற்று வளைஇ**

**உட்குவரத் தாக்கி உளர்செருப் புரிந்தன்று.**

ஆநிரைகளோடு செல்லும் வெட்சி மறவரைக் கரந்தை மறவர் கண்டனர். அவர்களை மேலும் செல்லாதவாறு கரந்தை மறவர் நெருங்கி வளைத்து நின்றனர். பின்னர் வெட்சிமறவர் அஞ்சும் படியாகச் சுழன்றும் சாய்ந்தும் ஓடியும் தாக்கினர். அந்நிலையே போர் மலைதலாகும். வளைதல் - தடுத்தல். உட்கு - அச்சம், உளர்தல் பலவகைச் செயல்புரிதல்,

**4.புண்ணொடு வருதல்**

கரந்தை மறவர் விழுப்புண்ணைத் தாங்கி வருவது புண்ணொடு வருதல் என்னும் துறையாகும். விழுப்புண் - பகைவரோடு நேர் நின்று போர் செய்வதால் மார்பிலும் முகத்திலும் பெறுகின்ற புண்.

**கொளு :** **மண்ணோடு புகழ்நிறீஇப்**
**புண்ணோடு தான்வந்தன்று.**

அழியும் தன்மை கொண்ட இவ்உலகம் நீண்ட காலம் நிலைத்து நிற்பதாகும். அது அழியும் வரை கரந்தை மறவர் தான் பெற்ற விழுப்புண்ணால் தன் புகழ் நிலைத்திருக்குமாறு செய்வர். இதுவே புண்ணொடு வருதலாகும்.

**5.போர்க்களத்து ஒழிதல்**

வெட்சியாருடன் போர் செய்யச் சென்ற கரந்தை மறவர் போர்க்களத்தில் இறப்பது போர்க்களத்து ஒழிதல் என்னும் துறையாகும். போர்க்களம் -போர் நடக்கும் இடம் ஒழிதல் - இறந்துபடுதல்.

**கொளு:** **படைக்குஓடா விறல்மறவரைக்**
**கடைக்கொண்டு களத்துஒழிந்தன்று.**

கரந்தையாரின் படை எழுச்சிக்கு அஞ்சி ஓடாமல் எதிர்த்து நின்று போர்புரிந்தனர் வெட்சி மறவர். அம்மறவர்களை இறுதிவரை எதிர்த்துப் போர்புரிந்த கரந்தை மறவர் போர்க்களத்தின்கண் இறந்தனர். இந்நிலையைக் குறிப்பது போர்க்களத்து ஒழிதல் ஆகும். ஓடுதல்- புறமுதுகிடுதல்.

**6. ஆளெறி பிள்ளை**

தான் ஒருவனாக நின்று வெட்சி மறவர்களை வெட்டி வீழ்த்திய விரன் ஒருவனின் நிலையைக் கூறுவது ஆளெறி பிள்ளை என்னும் துறையாகும். -பகைவர். எறிதல் -வெட்டுதல், பிள்ளை பெருமைக்குரியவன்.

**கொளு :** **வருவாரை எதிர்விலக்கி**

**ஒருதான்ஆகி ஆள்எறிந்தன்று.**

எதிர்த்துப் போர் செய்ய இயலாத கரந்தை மறவர் புறங்கொடுத்து ஓடி வந்தனர். அவ்வாறு ஓடி வரும் தம் மறவர்களைத் தடுத்து நிறுத்தினான் ஒரு வீரன். பின்னர்த் தான் ஒருவனாகச் சென்று வெறி கொண்டவனாய் வெட்சி வீரர்களை வீழ்த்தினான். இந்நிலையே ஆளெறி பிள்ளையாகும்.

**7. பிள்ளைத் தெளிவு**

விழுப்புண்பட்ட கரந்தை மறவன் தான் பெற்ற புண்ணைக் கண்டு மகிழ்ந்து கூத்தாடுவது பிள்ளைத்தெளிவு என்னும் துறையாகும். ஒருவீரனுக்குப் பெருமை தருவதாக அமைவது விழுப்புண் ஆகும். பிள்ளை - பெருமைக்குரிய செயல், தெளிவுமறவன் தெளிவடைதல்.

**கொளு:** **கண்மகிழ்ந்து துடிவிம்மப்**
**புண்மகிழ்ந்து புகன்றுஆடின்று.**

துடியினது கண்ணின் பகுதியினைத் (ஒலியெழும் பகுதி)துடி கொட்டுபவர் மகிழ்ந்து முழக்கினர். அத்துடியொலி கேட்ட சுரத்தை மறவன் தான் பட்ட விழுப்புண்ணைக் கண்டு மகிழ்ந்து விரும்பிக் கூத்தாடினான். இந்நிலையே பிள்ளைத் தெளிவாகும். விம்மல் ஒலியெழுதல். புகன்றல் - விரும்புதல்.

**8. பிள்ளையாட்டு**

பகை மறவரின் குடரை வேலுக்கு மாலையாக அணித்து அவ்வேலைச் சுழற்றி மறவன் ஆடுவது பிள்ளையாட்டு என்னும் துறையாகும். பிள்ளை - பிள்ளைத் தன்மை கொண்டு' ஆட்டு - ஆடுதல், பெருமையுற ஆடிய ஆடலுமாம்.

**கொளு :** **கூடலர்குடர் மாலைசூட்டி**
**வேல்திரித்து விரும்பிஆடின்று.**

தம்மொடு கூடி நில்லாமல் எதிர்த்து நின்ற பகைவரைப் போர்க்களத்தில் வீழ்த்தினான் ஒரு கரந்தை மறவன். அம்மறவரின் குடரைத் தன் வேலுக்கு மாலையாகச் சூட்டினான். அவ்வேளின் நுனி அடியாகவும் அடி நுனியாகவும் சுழற்றி ஆடினான். இந்நிலையே பிள்ளையாட்டு ஆகும். கூடலர் - பகைவர், திரித்தல் - மேல் கீழாகச் சுழற்றுதல்

**9. கையறுநிலை**

தான் தலைவனின் இறப்பால் செய்வதறியாது பாணன் திகைத்து நிற்றலே கையறுநிலை என்னும் துறையாகும்.

**கொளு :** **வெருவரும் வாளமர் விளிந்தோன் கண்டு**

**கருவி மாக்கள் கையறவு உரைத்தன்று.**

வெட்சியாரும் கரந்தையாரும் மேற்கொண்ட வாட்போர் மிகவும் அச்சத்தைத் தருவதாய் அமைந்திருந்தது. அப்போரின்கண் இறந்துபட்டான் ஒரு கரந்தை மறவன். அவனைப் பார்த்து யாழ் வாசித்தலில் வல்லவர்களான பாணர்கள் வருத்தமுற்று நிலைகுலைந்தனர். இந்நிலையைக் கூறுவது கையறுநிலையாகும். வெருவுதல் - அஞ்சுதல், கருவி இசைக்கருவி பாணர்.

**10. நெடுமொழி கூறல்**

ஒரு வீரன் தன் ஆற்றலைத் (பெருமையைத்) தானே எடுத்துக் கூறுவதே நெடுமொழி கூறல் என்னும் துறையாகும். நெடுமொழி தற்புகழ்ச்சி. அதாவது ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்வது. இது குற்றம் உடையதாயினும் சில இடங்களில் குணமாகக் கொள்ளப்படும்.

**கொளு:** **மன்மேம் பட்ட மதிக்குடை யோற்குத்**
**தன்மேம் பாடு தான்எடுத்து உரைத்தன்று.**

அரசர்களுள் சிறந்தவனாக விளங்குபவன் சுரந்தை அரசன். அவன் குளிர்ந்த திங்கள் போன்ற வெண்கொற்றக் குடையினை உடையவன். அவனுடைய போர் மறவர்களுள் ஒருவன் தன் பெருமையினைத் தாலே கூறித் தம் அரசனை மகிழ்ச்சியடையச் செய்தான். இதுவே நெடுமொழி கூறல் ஆகும். மன் - மன்னர். மேம்பாடு சிறந்திருத்தல்.

**11. பிள்ளைப் பெயர்ச்சி**

தீய நிமித்தத்தைப் பொருட்படுத்தாது நிரை மீட்கச் சென்றவனுடைய ஆற்றலை அரசன் சிறப்பிப்பது பிள்ளைப் பெயர்ச்சி என்னும் துறையாகும். பிள்ளை - நிமித்தம். பெயர்ச்சி - நிரை மீட்கச் செல்லுதல்,

**கொளு:** **போர்தாங்கிப் புள்விலங்கியோனைத்**
**தார்வேந்தன் தலையளித்தன்று.**

காரிப்பறவையின் தீய நிமித்தத்தைப் பொருட்படுத்தாது பகைவருடன் போரிட்டு ஆநிரைகளை மீட்டு வந்தான் கரந்தைமறவன். அம்மறவனுக்கு வெற்றி மாலை உடைய அரசன் சிறப்புச் செய்தான். இதனைக் கூறுவது பிள்ளைப்பெயர்ச்சி ஆகும்.

**12.வேத்தியன் மலிபு**

மறவர் தம் அரசனைப் புகழ்ந்து போற்றிக் கொண்டாடுவது வேத்தியன் மலிபு என்னும் துறையாகும். வேந்தனின் இயல்பினை மிகைப்படுத்திக் கூறுதலால் இது வேத்தியன் மலிபாயிற்று. வேந்து (வேத்து) - அரசன்: இயல் - இயல்பு' மலிபு - மிகைப்படுத்திக் கூறுதல்.

**கொளு :** **தோள்வலிய வயவேந்தனை**

**வாள்வலிமறவர் சிறப்பு உரைத்தன்று.**

தோள் வலிமையால் சிறந்து விளங்குபவன் கரந்தை அரசன். அவனை வாள் வலிமையால் சிறந்த மள்ளர் சிறப்பித்துப் போற்றுவர். இதனை எடுத்துரைப்பது வேத்தியன் மலிபாகும். வய - ஆற்றல்.

### 13. குடிநிலை

கரந்தை மறவர் தம்முடைய குடிப்பெருமையினைக் கூறுவது குடிநிலை என்னும் துறையாகும். குடி -தொன்றுதொட்ட பழங்குடி: மறக்குடியுமாம்.

**கொளு :** **மண்திணி ஞாலத்துத் தொன்மையும் மறனும்**
**கொண்டுபிறர் அறியும் குடிவரவு உரைத்தன்று.**

ஐம்பெரும் பொருள்களுள் ஒன்றாகத் திகழ்வது மண். அம்மண்ணால் செறிந்து காணப்படுவது இந்நிலவுலகம். இதன்கண் பழமையும் வீரமும் கொண்டு விளங்குவது மறவர்குடியாகும். பிறரால் அறியப்படாத மாட்சிமைப்பட்ட அக்குடியின் வரலாற்றைச் சிறப்பித்துக் கூறுவர். இதுவே குடிநிலையாகும். மண்திணி ஞாலம் - பூமி.

## 03. வஞ்சிப் படலம்

தன்னை மதியாத அரசனது நாட்டைக் கைப்பற்றக் சுத்துவான் ஓர் அரசன். அதன் காரணமாக அப்பகையரசனின் நாட்டின்மீது படையெடுத்துச் செல்வான். இவ்ஒழுக்கத்திற்கு வஞ்சிப்பூவினைச் சூடிச்செல்வர். இப்பூவின் காரணமாக இது வஞ்சி எனப் பெயர் பெற்றது. வஞ்சி என்பது தற்காலத்தில் சீந்தில் கொடி என வழங்கப்படுகிறது. இத்திணையைப் பழைய செய்யுள் ‘வட்கார் மேல் செல்வது வஞ்சி என எடுத்துரைக்கிறது.

வஞ்சி என்பது மண்ஆசை காரணமாகப் பகைவர் நாட்டின் மீது படையெடுத்துச் செல்லுதலைக் குறிக்கும். பகைவர் நிலத்தைப் போர் ஆற்றலின் மூலம் சுவர்ந்து கொள்ள நினைக்கும் இத்திணை 21 பகுதிகளை உடையது. அவற்றுள் முதல் பகுதி வஞ்சித்திணையின் விளக்கமாகும். எஞ்சிய இருபதும் வஞ்சித் திணையின் துறைகள் ஆகும்.

### வஞ்சித் திணையும் அதன் துறைகளும்

**வாடா வஞ்சி வஞ்சி அரவம்**
**கூடார்ப் பிணிக்கும் குடைநிலை வாள்நிலை**
**கொற்றவை நிலையேழு கொற்ற வஞ்சி**
**குற்றமில் சிறப்பின் கொற்ற வள்ளை**
**பேராண் வஞ்சி மாராய வஞ்சி**

**நெடுமொழி வஞ்சி முதுமொழி வஞ்சி**
**உழபுல வஞ்சி மழபுல வஞ்சி**
**கொடையின் வஞ்சி குறுவஞ் சிய்யே**
**ஒருதனி நிலையொடு தழிஞ்சி பாசறை**
**பெருவஞ் சிய்யே பெருஞ்சோற்று நிலையொடு**
**நல்லிசை வஞ்சி என நாட்டினர் தொகுத்த**
**எஞ்சாச் சீர்த்தி இருபத்து ஒன்றும்**
**வஞ்சியும் வஞ்சித் துறையும் ஆகும்.**

தம்மை மதிக்காத அரசனின் மண்ணைக் கவர நினைத்துப் படையெடுக்கும் அரசனின் படைமறவர் வஞ்சிப்பூவினைச் சூடுவர். 1.போர் எழுச்சியால் ஆரவாரம் செய்தல் 2. வஞ்சியரசனின் குடையைப் படைக்கு முன்னாக எடுத்துச் செல்லுதல் 3. அரசனின் வெற்றி வாளையும் எடுத்துச் செல்லல். 4. வஞ்சியரசன் கொற்றவையின் கருணையைப் போற்றுதல் அ தோள் வலிமையா சிறப்பித்தும் கூறுதல் 6. வஞ்சியரசனின் க உறிப் பகைவர் நாட்டின் அழிவிற்கு வருந்துதல் 7. மறவர்களை க பாராட்டிச் சிறப்பித்தல் 8. சிறப்புப் பெற்ற மறவரின் மாண்ணேண ஆறுதல் 9. மறவன் தன் மறப்பெருமையைத் தானே கூறுதல் 10 ஒரு மறவன் தன் குடி முதல்வனைப் போற்றுதல் 11. பகைவர் நாட்டைத் தீயிட்டுக் கொளுத்துதல் 12. அந்நாட்டில் உள்ள செல்வங்களைக் கொள்ளை அடித்தல் 13. தன்னைப் பாடிய புலவர்களுக்குப் பரிசுப் பொருள் கொடுத்தல் 14. பகையரசன் பணிந்து திறை கொடுத்தல் 15. ஒருவனாக நின்று பகைப்படையைத் தடுத்தல் 15.அஞ்சியவரைக் கொல்லாமல் விட்ட மறவரைப் புகழ்தல் 17. பகைவர் பணிந்த பின்னும் பாசறையில் தங்கியிருத்தல் 18. மறுமுறையும் பகைவர் நாட்டைத் தீயிட்டுக் கொளுத்துதல் 19 வஞ்சி வேந்தன் தன் படை வீரர்களுக்கு உணவளித்தல் 20, வஞ்சி வேந்தனின் வெற்றியைப் பாடிப் புகழ்தல் ஆகிய இருபதும் வஞ்சித்திணையின் துறைகளாகும். இவற்றோடு வஞ்சித் திணையைக் கூட்ட உண்டாவன இருபத்தொன்றாம். இவை அனைத்தும் வஞ்சிப் போரின் மரபாக முன்னோர் தொகுத்த குன்றாத புகழினை உடைய வஞ்சித்திணையின் பகுதிகளாகும்.

**1.வஞ்சிஅரவம்**

வஞ்சிப்பூவினைச் சூடி அணி வகுத்துச் சென்ற மறவர்களின் ஆரவார ஒலியே வஞ்சியரவம் என்னும் துறையாகும். அரவம் - பேரொலி.

**கொளு:** **வள்வார் முரசமொடு வயக்களிறு முழங்க**
**ஒள்வாள் தானை உருத்துஎழுந் தன்று.**

வலிமையுடைய வாரால் கட்டப்பட்ட வீரமுரசம் முழங்கியது. வலிய யானைகள் பிளிறின. இப்பேரொலியுடன் ஒளி வீசும் வாளினை ஏந்திய படைமறவர் வெகுண்டு போருக்கு எழுந்தனர். இதுவே வஞ்சியரவம் ஆகும். வள் - வலிமை. வார் -தோலால் ஆகிய வார். வயக்களிறு - வலிய யானை உருத்தல் -வெகுளல்.

**2. குடைநிலை**

போருக்கு எழுகின்ற வஞ்சியரசன் நல்ல நாளில் தன்னுடைய வெண்கொற்றக் குடையை (படையெடுப்பிற்கு முன்னர்) எடுத்துச் செல்லச் செய்வது குடைநிலை என்னும் துறையாகும். இவ்வாறு செய்வதைப் "புறவீடு விடுதல்" என்றும் கூறுவர்.

**கொளு:** **பெய்தாமம் சுரும்பு இமிரப் பெரும்புலவர் புகழ்பாடக்**
**கொய்தார் மன்னவன் குடைநாள் கொண்டன்று.**

கத்தரிக்கப்பட்ட அழகிய மலர்களால் ஆகிய மாலையிளை உடையவன் வஞ்சியரசன். அவனுடைய குடைமேல் அணிந்த மாலையில் வண்டினங்கள் மொய்த்து ஆரவாரித்தன. மிக்க அறிவினை உடைய புலவர்கள் அக்குடையினைப் புகழ்ந்து போற்றினர். போரைக் கருதி ஒரு நல்ல நாளில் அவ்வெண்கொற்றக் குடையை அரசன் புறவீடு விடுவான். இதுவே குடைநிலை ஆகும். தாமம் மாலை, சுரும்பு - வண்டு. இமிர்தல் இசையெழுப்புதல்.

**3.வாள்நிலை**

வஞ்சியரசன் ஒரு நல்ல நாளில் தன்னுடைய வெற்றி வாளைப் புறவீடு விட்டது வாள்நிலை என்னும் துறையாகும்.

**கொளு :** **செற்றார்மேல் செலவுஅமர்ந்து**
**கொற்றவாள்நாள் கொண்டன்று.**

தம் பகைவர்மேல் படையெடுக்க விரும்பினான் வஞ்சியரசன். அதன் பொருட்டுத் தன்னுடைய வெற்றி வாளை நல்ல நாளில் புறவீடு விட்டான். இதுவே வாள்நிலையாகும். செற்றார் - பகைவர். அமர்தல் விரும்புதல். கொற்றம் - வெற்றி.

**4.கொற்றவை நிலை** -

1. வெற்றித் திருவாக விளங்கும் கொற்றவையின் அருளுடைமையை வியந்து பாராட்டிக் கூறுதல் 2. வஞ்சி மறவரின் போர்த்தொழிலைச் சிறப்பித்துக் கூறுதல் ஆகிய இரண்டும் கொற்றவை நிலை என்னும் துறையாகும். பகைவரின் மாறுபாட்டைக் கெடுத்து ஆத்திரளைக் கைப்பற்ற உதவுதலைக் கூறுவது வெட்சித் திணையின் கொற்றவைநிலை (20) என்பதை ஈண்டு அறிக.

**கொளு :** **நீள்தோளான் வென்றிகொள்கஎன**
**நிறைமண்டைவலன் உயரிக்**
**கூடாரைப் புறம்காணும்**
**கொற்றவைநிலை உரைத்தன்று.**

நீண்ட தோள்களை உடையவன் வஞ்சி மன்னன். அவன் வெற்றிபெற வேண்டுமென எண்ணி வஞ்சிமறவர் கொற்றவையை வழிபட்டனர். அதனை உள்ளத்தில் ஏற்றாள் கொற்றவை. அதன் பொருட்டுக் குருதி நிறைந்த மண்டையை வெற்றிக்கு அறிகுறியாகக் காட்டிப் பகைமன்னரைப் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்தாள். இவ்வாறு செயல்பட்ட அருள் நிலையைக்

கூறுவது கொற்றவை நிலையாகும். மண்டை - ஒருவகை மண்பாத்திரம். வலன் - வெற்றி, கூடார் - பகைவர்.

**5. கொற்ற வஞ்சி**

வஞ்சியரசனின் வாள் வலிமையைச் சிறப்பித்துக் கூறுவது கொற்ற வஞ்சி என்னும் துறையாகும். கொற்றம் -வெற்றி ஓர் அரசனுக்கு வெற்றியைத் தருவது வாள். ஆதலின் அதன் சிறப்பு முதலில் கூறப்பட்டது.

**கொளு :** **வையகம் வணங்க வாள்ஓச் சினன்எனச்**
**செய்கழல் வேந்தன் சீர்மிகுத் தன்று.**

உலகத்தில் உள்ள அரசர் எல்லாகும் அஞ்சி வணங்கும் படியாகத் தனது வாளை வீசிப் போர் செய்தவன் வஞ்சி வேந்தன். அவன் சிவந்த பொன்னாலாகிய வீரக்கழலினை உடையவன். அவனுடைய வெற்றியைச் சிறப்பித்துக் கூறுவர். இதுவே கொற்ற வஞ்சியாகும். வையகம் - உலகத்து அரசர், வணங்குதல் -ஏவல் கேட்டல்.

**6. கொற்றவள்ளை**

வஞ்சியரசனின் வெற்றிப் புகழைக் கூறி அவனுடைய பகைநாட்டின் அழிவிற்கு மனம் வருந்துவது கொற்றவள்ளை என்னும் துறையாகும். கொற்றம் - வெற்றி' வள்ளை - உலக்கைப்பாட்டு. உலக்கை எழுப்பும் ஓசைக்கேற்ற தாள அமைதியில் அரசனது புகழைப் பாடுதல்.

**கொளு :** **மன்னவன் புகழ்கிளந்து**
**ஒன்னார்நாடு அழிபுஇரங்கின்று.**

வஞ்சியரசனின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவர். அவ்அரசனின் படையெடுப்பால் பகைவர் நாட்டிற்கு ஏற்பட்ட அழிவை நினைத்து வருந்துவர். இவற்றை எடுத்துரைப்பது கொற்றவள்ளை ஆகும். கிளத்தல் கூறுதல் ஒன்னார் - பகைவர். இரங்குதல் - வருந்துதல்.

**7. பேராண் வஞ்சி**

1. பகைவென்ற மறவனை அரசன் பாராட்டிப் பரிசளித்தல் 2.தோல்வியுற்ற பகையரசனிடமிருந்து திறைப்பொருளைப் பெற்றுத் தன் நாட்டிற்குத் திரும்புதல் ஆகிய இரண்டும் பேராண் வஞ்சி என்னும் துறையாகும். பெருமை ͺஆண் ஸ்ரீ பேராண். ஆண்- போர்வலிமை. 4

**கொளு:** **கேள்அல்லார் முனைகெடுத்த**
**மீளியாளர்க்கு மிகஉய்த்தன்று.**

பகைவரை அழித்துப் போரில்லாமல் செய்தவர் பேராண்மை மிக்க வஞ்சி மறவர். அவர்களுக்கு வஞ்சியரசன் மிகுதியாகப் பொருள் கொடுத்துச் சிறப்பித்தான். இதனை

எடுத்துரைப்பது பேராண் வஞ்சியாகும். கேளல்லார் - பகைவர் முனை - போர்க்களம், மீளி - தலைவன்.

8. மாராய வஞ்சி

அரசனால் சிறப்பிக்கப்பட்ட மறவரின் மாண்பினைக் கூறுவது மாராய வஞ்சி என்னும் துறையாகும். மாராயம் -அரசனால் பெறுகின்ற சிறப்பு.

**கொளு:** **மறவேந்தனில் சிறப்புஎய்திய**
**விறல்வேலோர் நிலைஉரைத்தன்று.**

மிக்க தறுகண்மையினை உடையவன் வஞ்சி வேந்தன். அவனால் சிறப்பிக்கப் பெற்றவர் வெற்றி பொருந்திய வேலினை உடைய மறவர். அவர்தம் மாண்பினைக் கூறுவது மாராய வஞ்சி ஆகும்.

9. நெடுமொழி வஞ்சி

வஞ்சி மறவன் பகைவர்களின் முன்னே தன்னுடைய ஆண்மையைத் தானே புகழ்ந்து கூறுவது நெடுமொழி வஞ்சி என்னும் துறையாகும். நெடுமை ூ மொழி நெடுமொழி (தற்புகழ்ச்சி).

**கொளு :** **ஒன்னாதார் படைகெழுமித்**
**தன்ஆண்மை எடுத்துரைத்தன்று.**

வஞ்சிமறவன் ஒருவன் தன் பகைவரின் படையை நெருங்கி நின்றான். அவர்கள் அறியும்படியாகத் தனது ஆண்மைத் தன்மையினைத் தானே உயர்த்திக் கூறினான். இதுவே நெடுமொழி வஞ்சியாகும். கெழுமுதல் - நெருங்குதல்.

10. முதுமொழி வஞ்சி

மறவன் ஒருவன் தான் பிறந்த குடியின் முதல்வனைப் புகழ்ந்து பாடுதல் முதுமொழி வஞ்சி என்னும் துறையாகும். முதுமைூ மொழி -முதுமொழி. முதுமை என்பது ஈண்டுக் குடிமுதல்வனாகிய தந்தையைக் குறித்தது.

**கொளு:** **தொல்மரபின் வாட்குடியின்**
**முன்னோனது நிலைகிளந்தன்று.**

தொன்றுதொட்ட வரலாற்றினை உடையது வாளை ஏந்திப் போர் செய்கின்ற மறவர்குடியாகும். அக்குடிக்கண் பிறந்த முன்னோனாகிய தந்தையின் நிலைமையைப் புகழ்ந்து பேசுவது முதுமொழி வஞ்சியாகும். தொல்மரபு -பழங்குடி முன்னோன் - தந்தை..

11. உழபுல வஞ்சி

வஞ்சி மன்னன் பகைவர் நாட்டினைத் தீயிட்டுக் கொளுத்துவதைக் குறிப்பது உழபுலவஞ்சி என்னும் துறையாகும். உழல்புல வஞ்சி என்பது உழபுலவஞ்சி எனக் குறைந்து நின்றது. உழல் - உழப்புதல்' கலங்கச் செய்தல், புலம் - பகைவர் நிலம்.

**கொளு :** **நேராதார் வளநாட்டைக்**
**கூர்எரி கொளீஇயன்று.**

வஞ்சி வேந்தனால் வெற்றி கொள்ளப்பட்ட பகைவர் நாடு வளம் பொருந்தியதாகும். அப்பகைவர் நாட்டின் வளமானது கெடும்படியாகத் தீயிட்டுக் கொளுத்துவர். இதுவே உழபுல வஞ்சியாகும்.

### 13. கொடை வஞ்சி

தனது வெற்றியைப் பாடிய புலவருக்கு வஞ்சியரசன் பரிசு வழங்குதல் கொடை வஞ்சி என்னும் துறையாகும். கொடை -கொடுத்தல்.

**கொளு:** **நீடவும் குறுகவும் நிவப்பவும் தூக்கிப்**
**பாடிய புலவருக்குப் பரிசில் நீட்டின்று.**

வஞ்சி வேந்தனின் வெற்றியைப் புலவர்கள் பாடினர். இசைகெழுமிய அப்பாடலோசை 1. உயர்ந்தும் 2. தாழ்ந்தும் 3. ஒரு சீராயும் பாடப்பட்டது. இம்மூன்று நிலைகளில் வைத்துப் பாடிய இசைவாணருக்கு வஞ்சி வேந்தன் பரிசில் வழங்கினான். இந்நிலையைக் கூறுவது கொடை வஞ்சியாகும்.

### 14. குறுவஞ்சி

1.தன்னை எதிர்த்துப் போர் செய்யக் கருதும் வஞ்சியரசனுக்குப் பகையரசன் பணிந்து திறை செலுத்துவது குறுவஞ்சி என்னும் துறையாகும். குறுமை ூ வஞ்சி ஸ்ரீ குறுவஞ்சி. வஞ்சியரசனை எதிர்க்கும் ஆற்றலின்றிப் பணிந்து (குறுகி) நின்றமையால் இது குறுவஞ்சியாயிற்று. போர்மேல் விருப்பம் கொண்ட வஞ்சியரசனின் எண்ணம் பொருளைத் திறையாகப் பெற்றுக் குறுகியதால் குறுவஞ்சி என்பது பொருந்தும். 2. போர் செய்யாமல் பகைவரைப் பணிய வைத்து வஞ்சியரசன் பாசறைக்கண் தங்கி இருப்பதும் இக்குறுவஞ்சியே ஆகும்.

**கொளு:** **மடுத்துஎழுந்த மறவேந்தர்க்குக்**
**கொடுத்துஅளித்துக் குடிஓம்பின்று.**

தன்மேல் படையெடுத்து வந்த வஞ்சியரசனைக் கண்டான் ஒரு பகையரசன். தானும் எதிர்த்துப் போர் செய்யாமல் அவ்வஞ்சியரசனுக்குப் பெரும்பொருளைக் கொடுத்துத் தன் குடிமக்களைத் துன்பமின்றிக் காத்தான். இச்செயலைக் குறிப்பதே குறுவஞ்சியாகும்.

### 15. ஒருதனி நிலை

தன்னந் தனியாளாக நின்று பகைவரைத் தடுத்த வஞ்சிமறவன் ஒருவனுடைய நிலையைக் கூறுவது ஒருதனிநிலை என்னும் துறையாகும். ஒரு. தனி என்பன சிறந்து நின்ற ஒருபொருட் பன்மொழி.

**கொளு:** **பொருபடையுள் கல்சிறைபோன்று**
**ஒருவன்தாங்கிய நிலைஉரைத்தன்று.**

வெள்ளம் போலச் சீறி வந்தது பகைவர் படை அதனை வஞ்சி மறவன் ஒருவன் கண்டான். எழுந்து வரும் ஆற்று வெள்ளத்தைத் தடுக்கும் கல்லால் ஆகிய அணை போலப் பகைவரின் படைவரவைத் தான் ஒருவனாக நின்று தடுத்து நிறுத்தினான். அவ்ஒருவனின் நிலையைக் கூறுவது ஒருதனி நிலையாகும். பொருபடை - பகைப்படை சிறை - அணை.

## 16. தழிஞ்சி

போரில் அஞ்சி ஓடுபவர் மீது படை தொடுக்காத தன்மையினைக் கூறுவது தழிஞ்சி என்னும் துறையாகும். தழிஞ்சி தழுவிக்கொள்ளுதல்.

**கொளு:** **அழிகுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக்**
**கழிதறு கண்மை காதலித்து உரைத்தன்று.**

போர்க்களத்தில் வஞ்சி மறவரை எதிர்த்துப் போர் செய்ய முடியாமல் தோற்றோடினர் பலர். அப்படிப் புறங்கொடுத்து ஓடுபவரின் முதுகின்மேல் வஞ்சி மறவர் தம்முடைய வாளினை வீசாமல் நின்றனர். அப்பெருந்தன்மையாகிய மறமாண்பினை விரும்பிக் கூறுவது தழிஞ்சியாகும். அயில் - கூர்மை, கழிதறுகண்மை மிகுந்த மறப்பண்பு,

## 17. பாசறை நிலை

பகையரசன் பணிந்த பின்னரும் வஞ்சி மன்னன் தம் போர்ப் பாசறைக்கண் தங்கியிருப்பது பாசறைநிலை என்னும் துறையாகும். பாசறை படையெடுத்துச் சென்றோர் தங்கிப் போர் புரிவதற்காக அமைத்துக் கொள்ளும் இடம்.

**கொளு:** **மதிக்குடைக்கீழ் வழிமொழிந்து**
**மன்னர்எல்லாம் மறந்துறப்பவும்**
**பதிப்பெயரான் மறவேந்தன்**
**பாசறை இருந்தன்று.**

மறத்தன்மையில் சிறந்து விளங்குபவன் வஞ்சி வேந்தன். அவனைப் பகையரசர் அனைவரும் எதிர்த்துப் போர் புரியும் ஆற்றலை இழந்தனர். அதனால் திங்களைப் போல ஒளிவீசும் வஞ்சிவேந்தனின் வெண்கொற்றக் குடையினைப் புகழ்ந்து பேசிப் பணிந்து நின்றனர். பகைவர் அடிமையான பின்பும் வஞ்சிவேந்தன் தன்னுடைய நாட்டிற்குச் செல்லாமல் அப்பாசறைக்கண் தங்கியிருந்தான். இதுவே பாசறை நிலையாகும். வழிமொழிதல் - பணிதல்.

## 18. பெருவஞ்சி

வஞ்சிவேந்தன் தன் பகைவர் நாட்டை மறுமுறையும் தீயிட்டு அழிப்பது பெருவஞ்சி என்னும் துறையாகும். முன்பு தீயிட்டும் (உழுபுலவஞ்சி) பணியாத பகைமன்னன் மீது வஞ்சி வேந்தன் பெருஞ்சினம் கொள்வான். அதன் காரணமாக மறுமுறையும் தீயிட்டுக் கொளுத்துவான். பெருஞ்சினமே இதற்குக் காரணம். ஆதலால் பெருவஞ்சி எனப் பெயர் பெற்றது.

**கொளு:** **முன்அடையார் வளநாட்டைப்**
**பின்னரும்உடன்று எரிகொளீஇயன்று.**

தன்னால் வலிமை இழந்த பகையரசன் தன்னிடம் வந்து பணியாததைக் கண்டு பெருஞ்சினம் கொண்டான் வஞ்சிவேந்தன். அதனால் அவள் பணியாத அப்பகைவரின் வளநாட்டை மீண்டும் சினந்து தீயிட்டுக் கொளுத்தினான். இதுவே பெருவஞ்சி ஆகும். உடன்றல் சீனத்தம்,

**19. பெருஞ்சோற்று நிலை**

வஞ்சி வேந்தன் தனது படை மறவர்களுக்கு மிகுந்த சோற்றைக் கொடுத்தது பெருஞ்சோற்று நிலை என்னும் துறையாகும். பெருஞ்சோறு விருந்து,

**கொளு:** **திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவர்எனப்**
**பெருஞ்சோறு ஆடவர் பெறுமுறை வகுத்தன்று.**

தம் மறவர் பகை அரசனை வென்று அவருடைய நாட்டைத் தனக்கு அடிமைப்படுத்துவர் என எண்ணினான் வஞ்சியரசன், அதன் பொருட்டு அவர்களுக்கு மிகுந்த சோற்றுத்திரளைக் கொள்ளும் முறையறிந்து கொடுத்தான். இதுவே பெருஞ்சோற்று நிலையாகும். திருந்தார் - பகைவர், தெம்முனை - பகைப்புலம் தெறுகுதல் - நிலை கெடுத்தல்

**20. நல்லிசை வஞ்சி**

1 வஞ்சி வேந்தனது வெற்றியைப் புகழ்ந்து பாடுதல் 2. அவனால் அழிந்துபட்ட நாட்டிற்காக வருந்திப் பாடுதல் ஆகிய இரண்டும் நல்லிசை வருசி என்னும் துறையாகும்.

**கொளு:** **ஒன்னாதார் முனைகெட இறுத்த**
**வெல்வேல் ஆடவன் விறல்மிகுத்தன்று.**

பகைவருடைய போர்முனை அழியும்படியாகப் படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றவன் வஞ்சி வேந்தன். வெற்றியைத் தருகின்ற வேளினை உடைய அவ்வேந்தனின் புகழை மிகுத்துச் சொல்லுவர். இதுவே நல்லிசை வஞ்சியாகும். ஒன்னாதார் பகைவர் முனை போரிடும் இடம். ஆடவன்- அரசன்.

## 04. காஞ்சிப் படலம்

தன் நாட்டைக் கவருவதற்காகப் பகையரசன் (வஞ்சியரகள் படையெடுத்து வருவதை அறிந்தான் ஒரு வேந்தன். அப்படைகள் தம் நாட்டுக்குள் நுழையா வண்ணம் படைதிரட்டிச்

சென்று தம் எல்லைக் கண் நின்று தடுத்துப்போர் புரிவான். இச்செயலுக்கு அரசனாகிய தலைவனும் அவன்தன் படைமறவர்களும் காஞ்சிப்பூச் சூடிச்செல்வர் ஆகையால் இது காஞ்சித்திணை எனக் கூறப்படுகிறது. அஞ்சாமல் பகைவரை எதிர்த்து நின்று போரிடும் இந்நிலையை “உட்காது எற்சூன்றல் காஞ்சி“ என்று பழைய செய்யுள் கூறுகிறது.

காஞ்சி - ஒருவகை மரம். இது மருதத்திணையின் கருப்பொருளாக வினங்குவது. காமனைப் போலக் கரிய நிறத்தை உடைய இம்மல மணம் மிகுந்தது. இக்காஞ்சித் திணை இருபந்து இரண்டு பகுதிகளை உடையது. அவற்றுள் முதற்பகுதி காஞ்சித்திணையின் விளக்கமாகும். எஞ்சியவை துறைகளை விளக்குவனவாம்.

**காஞ்சித்திணையும் அதன் துறைகளும்**

**காஞ்சி காஞ்சி எதிர்வே தழிஞ்சி**
**பெரும்படை வழக்கொடு பெருங்காஞ் சிய்யே**
**வாள்செலவு என்றா குடையது செலவே**
**வஞ்சினக் காஞ்சி பூக்கோள் நிலையே**
**புகழ்த்தலைக் காஞ்சி தலைமா ராயம்**
**தலையொடு முடிதல் மறப்பெயர்க் காஞ்சி**
**மாற்றரும் பேயநிலை பேய்க்காஞ் சிய்யே**
**தொட்ட காஞ்சி தொடாக்காஞ் சிய்யே**
**மன்னைக் காஞ்சி கட்காஞ் சிய்யே**
**ஆஞ்சிக் காஞ்சி மகட்பாற் காஞ்சி**
**முனைகடி முன்னிருப்பு உளப்படத் தொகைஇ**
**எண்ணிய வகையான் இருபத்து இரண்டும்**
**கண்ணிய காஞ்சித் துறைஎன மொழிப.**

தன் நாட்டைக் கவரக் கருதும் வஞ்சி வேந்தனை எதிர்க்கக் காஞ்சிப் பூச்சூடிப் போருக்குச் செல்வர். 1. எதிர்த்துச் செல்லும் மறவனின் வெற்றியைப் பாராட்டுதல் 2. வஞ்சியார் படை தம் நாட்டினுள் புகாது தடுத்தல் 3. காஞ்சி வேந்தன் தன் மறவர்களுக்குத் துணைப்படை வழங்குதல் 4. காஞ்சி மறவர் வஞ்சி மறவருடன் போரிட்டுத் தன் வலிமையை வெளிப்படுத்தல் 5. காஞ்சி வேந்தன் தன் வாயினைப் புறவிறு விடுதல் 6. குடையைப் புறளீடு விடுதல் 7.காஞ்சியரசன் சூளுரைத்தல் காஞ்சி மறவர் அரசனிடமிருந்து பூவைப் பெறுதல் 9. போர்க்களத்தில் அருஞ்செயல் புரிந்து இறந்த மறவனைப் பாராட்டல் 10. போரில் இறந்த தலைவனின் தலையைக் கொண்டு வந்த மறவனுக்குக் காஞ்சியரசன் சிறப்புச் செய்தல் 11. போரில் இறந்த தலைவனது தலையைக் கண்ட மனைவி இறத்தல் 12. பகைவர் அஞ்சும்படி போர் செய்தல் 13 பொரில் புண்பட்டு வீழ்ந்த மறவனைப் பேய் காவல் காத்தல். 14.புண்பட்டோனைப் பேய் அச்சுறுத்துதல் 15. வீட்டில் வைத்துப் பாதுகாக்கப்படும் மறவனுடைய புண்ணைப் பேய் தீண்டுதல் 16.புண்ணைத் தீண்டப் பேய் அஞ்சுதல் 17. போரில் இறந்த மறவனின் புகழைப் பாராட்டி வருந்துதல் 18. காஞ்சி வேந்தன் தன் மறவருக்கும் கன்னை வழங்குதல் 19. போரில் இறந்த கணவனோடு அவன் மனைவியும் உயிர்விடுதல் 20. மகளை விரும்பும் வஞ்சிவேந்தனோடு காஞ்சியர்கள் மாறுபடுதல் 21. காஞ்சிவேந்தன் வஞ்சியரசனின் படையைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தல் ஆகிய இருபத்தொன்றும் காஞ்சித்திணையின் துறைகளாகும். இவற்றுடன் காஞ்சித்திணையைக் கூட்ட உண்டாகும் இருபத்திரண்டும் பொருந்திய மரபினை உடைய காஞ்சித் திணையின் பகுதிகளாகும்.

**1.காஞ்சி எதிர்வு**

வஞ்சி வேந்தன் படையெடுத்து வர அதனைக் கண்ட தன் வேல்மறவனின் ஆற்றலை மிகுத்துச் சொல்வது காஞ்சி எதிர்வு என்னும் துறையாகும். வஞ்சி மன்னனை எதிர்த்து நிற்கும் காஞ்சி மறவனின் ஆற்றலைக் கூறியதால் இது எதிர்வாயிற்று. இதனைக் காஞ்சியதர்வு எனவும் கூறுவர். அதிர்வு -ஆரவாரம். வஞ்சியரசனுடன் போர்செய்யக் காஞ்சிமறவர் ஆரவாரித்துச் செல்லுதலை அது குறிக்கும்.

**கொளு: மேல்வரும் படைவரல் மிகவும் ஆற்றா**
**வேல்வல் ஆடவன் விறல்மிகுத் தன்று.**

வஞ்சியரசனின் படை தம்மை எதிர்த்து வருதளைய பொறாத மனத்தினராய்க் காஞ்சி மறவர் திகழ்ந்தனரி அவர்களுள் வேற்படைத் தொழிலில் வல்லவனாகிய ஒரு மறவளின் ஆற்றலைப் புகழ்ந்து கூறுவர். இதுவே காஞ்சி எதிர்வாகும். ஆற்றா பொறுக்காத ஆடவன் மறவன்.

**2. தழிஞ்சி**

வஞ்சியரசனின் படை தம் நாட்டின் எல்லையைத் தொடாக படி காத்து நிற்பது தழிஞ்சி என்னும் துறையாகும். தழிஞ்சி என்பதற்குத் தழுவுதல் என்பது பொருள். பகைவர் தம் நாட்டு எல்லையைக் கடந்து உள்ளே புகா வண்ணம் காஞ்சியார் தழுவி நின்று காத்தலால் இப்பெயர் பெற்றது. வஞ்சித்திணையில் அமைந்த தழிஞ்சித்துறை தோற்று ஓடுபவரின்மேல் படைவிடாத மறமாண்பினை எடுத்துரைக்கிறது.

**கொளு: பரந்துஎழுதரு படைத்தானை**
**வரம்புஇகவாமைச் சுரம்காத்தன்று.**

போர்க்கருவிகளைத் தாங்கி எங்கும் பரவி மண்ணைக் கவர வருவது வஞ்சியரசனின் படையாகும். அப்படை தன் நாட்டு எல்லைக்குள் நுழையாதபடி அரிய வழியைக் காஞ்சி மறவர்கள் அடைத்துக் காத்து நின்றனர். இதுவே தழிஞ்சியாகும். பரத்தல்- பரவிநிற்றல். வரம்பு - எல்லை இகவாமை - கடந்து வராதபடி சுரம் -அரியவழி

**3. படை வழக்கு**

1. காஞ்சிவேந்தன் தன் படைமறவர்களுக்குத் துணைப்படையை வழங்குவது படைவழக்கு என்னும் துறையாகும். படை வழங்குதலால் இது படைவழக்கு ஆயிற்று. வஞ்சியாரின் வரவைக் கேட்டு அவர்களைத் தடுக்கத் தம் கையில் கிடைத்த கருவிகளை எடுத்துக் கொண்டு சென்றனர் மறவர். அவர்களுக்குப் போதுமான கருவிகளை அரசன் பின்னர்த் தன் கிடங்கிலிருந்து அனுப்புவான். இதுவே படை வழங்குதல் எனச் குறிக்கப்படுகிறது. 2. படைக்கருவிகளைப் பெற்ற மறவன் தன் ஆற்றலைத் தானே கூறுதலும் படைவழக்காகும்.

**கொளு : முத்துஅவிர்பூண் மறவேந்தன்**
**ஒத்தவர்க்குப் படைவழங்கின்று.**

மறப்பண்பினை உடையவனாக விளங்குபவன் காஞ்சியாசன். அவன் ஒளி வீசும் முத்துக்களால் ஆகிய மாலையை அணிந்தவன். அவ்வரசன் தம்முள் இனமொத்த படைமறவர்களுக்குப் போர்க்கருவிகளை வழங்கினான். அச்செய்தியை எடுத்துரைப்பதே படைவழக்காகும். அவிர்தல் ஒளிர்தல். பூண் -அணி, படை - பல்வகைப் போர்க்கருவிகள்

**4. பெருங்காஞ்சி**

காஞ்சி மறவர் போரின்கண் தமது மறப்பெருமையை வெளிப்படுத்துவது பெருங்காஞ்சி என்னும் துறையாகும் பெருமைகாஞ்சி-பெருங்காஞ்சி. பெருமை -மறப்பெருமை.

**கொளு:** **தாங்குதிறல் மறவர் தத்தம் ஆற்றல்**
**வீங்குபெறும் படையின் வெளிப்படுத் தன்று.**

பகைவராகிய வஞ்சி மறவரின் படையைத் தடுக்கும் ஆற்றலினை உடையவர் காஞ்சி மறவர். அவர்கள் தங்களுடைய பேராற்றலை வஞ்சியாரை எதிர்த்துப் போர் செய்யும் வகையால் வெளிப்படச் செய்வர் இதுவே பெருங்காஞ்சியாகும். தாங்குதல் - தடுத்தல், திறல்- ஆற்றல்,

**5. வாள் செலவு**

காஞ்சியரசன் தன் வாளைப் போர்க்களத்திற்கு எடுத்துச் செல்லுமாறு செய்தது வாள்செலவு என்னும் துறையாகும்.

**கொளு :** **அருமுனையான் அறைகூவினபின்**
**செருமுனைமேல் வாள்சென்றன்று.**

வெல்லுதற்கு அரிய போரினை உடையவன் வஞ்சியரசன். அவன் தன்னிடம் போருக்கு வருமாறு காஞ்சியரசனுக்கு அறைகூவல் (அழைப்பு) விடுத்தான். அதனைக் கேட்ட காஞ்சியரசன் தன் வாளைப் போர்க்களத்திற்கு அனுப்பினான். இதுவே வாள்செலவு என்று கூறப்படும். அருமுனையான் - வஞ்சியரசன். செருமுனை -போர்.

**6. குடை செலவு**

காஞ்சியரசன் தன் குடையைப் போர்க்களத்திற்குச் செல்ல விடுவது குடைசெலவு என்னும் துறையாகும்.

**கொளு :** **முதுகுடி மறவர் முன்னுறச் சூழக்**
**கொதிஅழல் வேலோன் குடைசென் றன்று.**

கொதிக்கின்ற நெருப்பினைப் போன்ற வேலினை உடையவன் காஞ்சியரசன். அவன் தொன்றுதொட்ட மறக்குடியில் பிறந்த மறவர் சூழ்ந்து செல்லத் தன் குடையைப் புறவீடு செய்வான். இதுவே குடைசெலவு என்று கூறப்படும்.

**7.வஞ்சினக் காஞ்சி**

காஞ்சி மன்னன் சூளுரைப்பது வஞ்சினக்காஞ்சி என்னும் துறையாகும். வன்மை ூ சினம் - வஞ்சினம். உறுதிபடச் சினந்து கூறுதல் இதனை இக்காலத்தில் சபதம் செய்தல் எனக் கூறுவர்.

**கொளு:** **வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப**
**வஞ்சினம் கூறிய வகைமொழிந் தன்று.**

கொடிய சினத்தினைக் கொண்டவன் காஞ்சிவேந்தன். அவன் தன் நாட்டை விரும்பிப் படையெடுத்து வந்த வஞ்சி வேந்தனை வென்று தன் காலடியில் பணியச் செய்வேன் எனச் சூளுரைத்தான். இவ்வாறு குளுரைப்பதே வஞ்சினக் காஞ்சியாகும். வேற்றவர்-பகைவர் பணித்தல்-அடிமைப்படுத்துதல்.

**8. பூக்கோள் நிலை**

மறவர் தம் அரசனிடமிருந்து காஞ்சிப்பூவினைப் பெறுதல் பூக்கோள் நிலை என்னும் துறையாகும். பூவினைக் கொள்வதால் பூக்கோளாயிற்று. இதனை அரசனுக்கு ஏற்றிக் கூறின் போர்ப்பூ வழங்கல் என்னும் துறையாகக் கொள்ளலாம்.

**கொளு :** **கார்எதிரிய கடல்தானை**
**போர்எதிரிய பூக்கொண்டன்று.**

இடி போன்ற முழக்கத்தையும் கடல் போன்ற பரப்பையும் கொண்டது காஞ்சி வேந்தனின் படையாகும். அப்படைமறவர் வஞ்சியாருடன் போர் செய்வதற்காகத் தம் அரசன் வழங்கிய காஞ்சிப் பூவினைப் பெற்றுக் கொண்டனர். அதனை விளக்குவது பூக்கோள் நிலை ஆகும். கார் எதிர்தல் - இடிபோன்று முழங்குதல். தானை - படை

**9. தலைக் காஞ்சி**

போர்க்களத்தில் செயற்கரும் செயல் செய்து இறந்த மறவனின் தலையைப் பாராட்டுவது தலைக்காஞ்சி என்னும் துறையாகும்.

**கொளு:** **மைந்துஉயர மறம்கடந்தான்**
**பைந்தலைச் சிறப்புஉரைத்தன்று.**

பகைவரின் வலிமையைக் கெடுத்துத் தம் வளிமை வெளிப்படும் படியாகப் போர்த்தொழிலைச் செய்தவன் காஞ்சி மறவன். அவன் போர்க்களத்தில் பகைவரால் இறந்துபட்டான். குருதி சொரிய வெட்டி வரப்பட்ட அவனுடைய தலையை அரசல் பாராட்டினான். இதனை எடுத்துரைப்பதே தலைக்காஞ்சி ஆகும்.

**10. தலை மாராயம்**

ஒரு மறவனின் தலையைக் கொண்டு வந்த மற்றொரு மறவனுக்குக் காஞ்சி வேந்தன் பெரும்பொருள் கொடுத்துச் சிறப்பிப்பது தலைமாராயம் என்னும் துறையாகும். மாராயம் செய்யப்படுகின்ற சிறப்பு. அரசனால்

**கொளு:** **தலைகொடுவந்தான் உள்மலியச்**
**சிலைஉடைவேந்தன் சிறப்புஈந்தன்று.**

போர்க்களத்தில் விழுப்புண்பட்டு இறந்த வீரமறவனின் தலையைக் கொண்டு வந்தான் வேறொரு காஞ்சி மறவன். அவன் உள்ளம் மகிழும்படியாகக் காஞ்சி வேந்தன் பொருளைக் கொடுத்துச் சிறப்புச் செய்தான். இதுவே தலைமாராயம் என்று கூறப்படும். உள்-உள்ளம்: மனம் மலிதல் - மகிழ்தல், சிலை - வில், சிறப்பு - செல்வம்

**11. தலையொடு முடிதல்**

இறந்த தலைவனின் தலையைக் கண்டு அவனுடைய மனைவி இறந்துபடுவதே தலையொடு முடிதல் என்னும் துறையாகும். தலை தன் தலைவனின் தலை, முடிதல் உயிர விடுதல்.

**கொளு:** **மண்டுஅமருள் மாறாமைந்தின்**
**கொண்டான் தலையொடு கோல்வளை முடிந்தன்று.**

மறவர் நெருங்கிப் போரிடும் இடம் போர்க்களம் ஆகும். அப்போர்க்களத்தின்கண் இறந்தான் ஒரு மறவன். மாறுபடாத வலிமையினை உடைய அம்மறவனாகிய கணவனின் (வெட்டி வரப்பட்ட) தலையினை வளையல் அணிந்த கைகளை உடைய அவன் மனைவி கண்டாள். அத்தலையோடு தன் தலையினைச் சேர்த்து வைத்துத் தன் உயிரினை விட்டாள். இதனை எடுத்துரைப்பதே தலையொடு முடிதலாகும். கொண்டான் கணவன் கோல் திரட்சி வளை வளையல்,

**12. மறக்காஞ்சி**

1.வஞ்சிமறவர் அஞ்சும்படியாகப் போர் செய்தல் 2. ஒரு மறவன் தன்னுடைய புண்ணைத் தானே கிழித்துக் கொண்டு உயிர்விடுதல் ஆகிய இரண்டும் மறக்காஞ்சி என்னும் துறையாகும். மறம் பேராண்மை. காஞ்சியாரின் பேராண்மையே மறக்காஞ்சியாகும்.

**கொளு :** **இலைப்பொலிதார் இகல்வேந்தன்**
**மலைப்புஒழிய மறம்கடாயின்று.**

வஞ்சியாருடன் மாறுபாட்டைக் கொண்டவன் காஞ்சி வேந்தன். அவ்வேந்தன் பச்சிலையால் பொலிவு பெற்ற சிறந்த மாலையை அணிந்தவன். அவன் தன்னை எதிர்த்து நிற்கும் வஞ்சிமறவர் இல்லை என்று சொல்லும்படி போர்த்தொழிலைச் செய்தான். இந்நிலையினைக் கூறுவது மறக்காஞ்சியாகும். இலை-பசுமையை உடைய தழை, தார் - மாலை. இகல்-மாறுபாடு, மலைதல் போர்புரிதல். கடாதல் - செலுத்துதல்,

**13.பேய்நிலை**

புண்பட்டு வீழ்ந்த மறவனைப் பேய் காவல் காப்பது பேய்நிலை என்னும் துறையாகும். அச்சத்தைச் செய்வது பேயின் தன்மையாகும். அதனை விடுத்துப் புண்பட்ட மறவனைப் பிற உயிர்கள் வருத்தாவண்ணம் பேய் காத்த நல்இயல்பைக் கூறுவதால் பேயநிலையாயிற்று.

**கொளு :** **செருவேலோன் திறம்நோக்கிப்**

**பிரிவின்றிப் பேய்ஓம்பின்று.**

கையில் வேலினை ஏந்திய காஞ்சி மறவன் போர்க்களத்தில் விழுப்புண்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்தான். அவனைப் பேயொன்று சுண்டு அன்பு கொண்டு அகலாமல் பாதுகாத்து நின்றது. இதுவே பேய்நிலையாகும். செருவேலோன் - காஞ்சி மறவன் ஓம்புதல் -பாதுகாத்தல்,

**14. பேய்க் காஞ்சி**

புண்பட்டுக் கிடப்பவனைப் பேய் அச்சுறுத்துவது பேய்க்காஞ்சி என்னும் துறையாகும்.

**கொளு :** **பிணம்பிறங்கிய களத்துவீழ்ந்தார்க்கு**
**அணங்குஆற்ற அச்சுறீஇயன்று.**

போர்க்களத்தின்கண் மிகுதியாகப் பிணங்கள் கிடந்தன. அங்கு விழுப்புண்பட்டு வீழ்ந்து கிடந்தாள் மறவன் ஒருவன். அவனை நெருங்கி ஒருபேய் மிகவும் அச்சுறுத்தியது. இதனை எடுத்துரைப்பது பேய்க் காஞ்சியாகும். பிறங்குதல் - மிகுதல், அணங்கு-பேய் ஆற்ற- மிகுதி

**15. தொட்ட காஞ்சி**

மறவனின் புண்ணைப் பேய் தீண்டுவது தொட்ட காஞ்சி என்னும் துறையாகும். தொடுதல் தீண்டுதல்

**கொளு :** **வியன்மனை விடலை புண்காப்பத்**
**துயன்முலைப் பேழ்வாய்ப் பேய்தொட்டன்று.**

போர்க்களத்தின்கண் விழுப்புண் பெற்றான் மறவன். அவனை அகன்ற வீட்டின்கண் வைத்து அப்புண்ணுக்கு மருந்திட்டுச் சுற்றத்தார் காத்து வந்தனர். அப்புண்ணைத் தொங்கும் மார்பையும் பெரிய வாயினையும் உடைய பேய்மகள் தொட்டுப் பார்த்தாள். இதுவே தொட்ட காஞ்சி ஆகும். வியன்மனை - பெரியவீடு, விடலை -போர்த்தலைவன். துயலுதல் - தொங்குதல். பேழ் -பெரிய

**16.தொடாக் காஞ்சி**

மறவனுடைய புண்ணைத் தீண்டப் பேய் அஞ்சுவது தொடாக் காஞ்சி என்னும் துறையாகும். தொடாமை தீண்டுவதற்கு அஞ்சுதல்.

**கொளு :** **அடல்அஞ்சா நெடுந்தகைபுண்**
**தொடல்அஞ்சித் துடித்துநீங்கின்று.**

போர்க்களத்தின்கண் கொலைத் தொழிலைச் செய்வதற்கு அஞ்சாத மறமாண்பினை உடையவள் காஞ்சி மறவன். அவன் போர்க்களத்தில் பகைவரால் பெரிய விழுப்புண்ணைப் பெற்றான். அதனால் உறவினர் அவனை வீட்டில் வைத்துப் பாதுகாத்தனர்.அம்மறவனின் புண்ணைத் தீண்டச் சென்ற பேய் அப்புண்ணைத் தீண்ட முடியாமல் அஞ்சி நடுங்கி அவ்விடத்தை விட்டுச் சென்றது. இதுவே தொடாக்காஞ்சியாகும். அடுதல்-கொல்லுதல், நெடுந்தகை - காஞ்சிமறவன்.

**17.மன்னைக் காஞ்சி**

இறந்த மறவனின் புகழைப் பாராட்டி மனம் வருந்துவது மன்னைக் காஞ்சி என்னும் துறையாகும். மன் என்னும் இடைச்சொல் நிகழ்ந்ததை உணர்த்தும் சொல்லாகும். அது மன்னை என ஈறு திரிந்து நின்றதால் மன்னைக் காஞ்சி என வழங்கப்படுகிறது. நடந்தது கூறி இரங்குதலே இத்துறையாகும்.

**கொளு: வியல்இடம்மருள விண்படர்ந்தோன்**
**இயல்புஏத்தி அழிபுஇரங்கின்று.**

அகன்ற உலகத்தில் உள்ளோர் வியந்து போற்றும்படி போரிலே இறந்தான் காஞ்சி மறவன். விண்ணுலகம் சென்ற அவனுடைய பண்பினைப் புகழ்ந்து கூறுவர். அம்மறவனின் இறப்பினை எண்ணியும் வருந்திப் புலம்புவர். இவற்றைக் கூறுவது மன்னைக் காஞ்சி ஆகும். வியல்- அகன்றிருத்தல், மருள் - மயக்கம்' வியப்பு, விண் - வீரசுவர்க்கம்,

**18. கட்காஞ்சி**

காஞ்சி வேந்தன் தன் வீரருக்குக் கள்ளினை வழங்கியது கட்காஞ்சி என்னும் துறையாகும். கள்ஃகாஞ்சி-கட்காஞ்சி.

**கொளு: நறமலியும் நறுந்தாரான்**
**மறமைந்தர்க்கு மட்டுஈந்தன்று**

தேன் மிகுந்து நறுமணம் வீசும் மலர்களால் ஆகிய மாலையினை அணிந்தவன் காஞ்சி வேந்தன். அவன் தன்னுடைய படைமறவருக்குக் கள்ளினை வழங்கினான். இதுவே கட்காஞ்சியாகும். நறவு - தேன். மலி மலிந்திருத்தல், நறு மணம் மட்டு -கள்.

**19.ஆஞ்சிக் காஞ்சி**

கணவனின் இறப்பிற்குப் பின்னர் அவனுடைய மனைவி வாழ அஞ்சுவது ஆஞ்சிக்காஞ்சி என்னும் துறையாகும். அது 1. போரில் இறந்த கணவனுடன் மனைவியும் உயிர்விடுதல் 2. கணவனை அழித்த கருவியால் தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளல் என்னும் இரு தன்மைகளை உடையது. அஞ்சி ஢ காஞ்சி -ஆஞ்சிக்காஞ்சி, அஞ்சி என்பது முதனிலை நீண்டு ஆஞ்சியாயிற்று.

**கொளு : காதற் கணவனொடு கனைஎரி மூழ்கும்**
**மாதர் மெல்லியல் மலிபுஉரைத் தன்று.**

போரின்கண் இறந்துபட்ட காஞ்சி மறவனை முழங்கி எரியும் தீயிடை வைத்தனர். தன் அன்புக் கணவனை எரிக்கும் அத்தீயினுள் புகுந்து மறத்தி ஒருத்தி தன் உயிரை மாய்த்துக் கொண்டாள். மென்மைத் தன்மை கொண்ட அப்பெண்ணின் இயல்பினை மேம்படுத்திக் கூறுவது ஆஞ்சிக் காஞ்சியாகும். கனை முழங்குதல் எரி - தீ. மாதர் - பெண். மலிபு -மிகுதி

**20. மகட்பாற் காஞ்சி**

தன் மகளைக் கேட்கும் வஞ்சியரசனோடு காஞ்சியரசன் மாறுபட்டு நிற்பது மகட்பாற் காஞ்சி என்னும் துறையாகும். மகளை அடிப்படையாகக் கொண்டு மாறுபட்டு நிற்பதால் இது மகட்பாற் காஞ்சியாயிற்று. மகள்ௗபால்ௗகாஞ்சி - மகட்பாற் காஞ்சி.

**கொளு: ஏந்திழையாள் தருகஎன்னும்**
**வேந்தனோடு வேறுநின்றன்று.**

காஞ்சியரசனின் மகள் அழகிய அணிகலன்களை அணிந்தவள். அவளைத் தனக்கு மணம் முடித்துத் தருக என்று வஞ்சி வேந்தன் கேட்டான். அதற்குக் காஞ்சியரசன் உடன்படவில்லை. இதனை விளக்குவதே மகட்பாற் காஞ்சியாகும். இழை - அணிகலன் வேறு நிற்றல் மறுத்தல்

**21. முனைகடி முன்னிருப்பு**

காஞ்சி வேந்தன் வஞ்சியரசனின் படையைப் புறமுதுகிட்டு ஓ செய்வது முனைகடி முன்னிருப்பு என்னும் துறையாகும். முனை போர்க்களம் கடிதல் - நீக்குதல். முள்ளிருப்பு முன் இருத்தல், முன்னே இருந்த போர்க்களத்திலிருந்து ஓடச் செய்ததால் முனைகடி முன்னிருப்பாயிற்று.

**கொளு: மன்னர் யாரையும் மறம்காற்றி**
**முன்இருந்த முனைகடிந்தன்று.**

வஞ்சி வேந்தனுக்குத் துணையாக வந்த அரசர் பலராவ சினந்து நின்று வெளிப்படுத்திய அவர்களுடைய வலிமை கெடும்படியாக எதிர்த்துப் பெரும்போர் செய்தான் காஞ்சி வேந்தன். அதன் காரணமாக முன்னே இருந்த போர்க்களத்திலிருந்து அவர்களை ஓடும்படியாகச் செய்தான். இந்நிலையை உரைப்பது முனைகடி முன்னிருப்பாகும். மறம் -சினம், காற்றுதல் (காலுதல்) வெளிப்படுத்தல்.

## 05. நொச்சிப் படலம்

ஓர் அரசன் பிறிதோர் அரசவின் கோட்டையைக் கைப்பற்றத் கருதுவான். அதன் காரணமாகப் படையெடுத்துச் சென்று பகைவரின் மதிலை வளைத்துக் கொள்வாள். அப்படிச் சுற்றி வளைத்தயே முற்றுகையிடுதலாகும். அவ்வாறு முற்றுகையிடப் பெற்ற அரசன் கோட்டைக்குள் இருந்து தன் மதிலைப் பகையரசன் கைப்பற்றாதவாறு காத்துக் கொள்வான். இது நொச்சி ஒழுக்கம் என்று கூறப்படும். இவ்ஒழுக்கத்திற்கு உரியோர் நொச்சி மாலை சூடிப் போர் செய்வர். ஆதலால் இதனை நொச்சித்திணை என முன்னோர் குறித்தனர். இக்கோட்டைப் போர் நொச்சி, உழிஞை என்னும் இரு பகுதிகளை உடையதாகும். இதனை எயில் காத்தல் நொச்சி அது வளைத்தலாகும் உழிஞை என்னும் பழம்பாடல் தொடர் எடுத்துரைக்கிறது.

கோட்டையின் அமைப்பு : கோட்டையைச் சுற்றி அரணாக விளங்குவது மதில், அம் மதிலுக்கு முன்பாகக் காவற்காடு அமைந்திருக்கும். இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாய் மதிலைச் சூழ்ந்து ஆழமுடையதாயும் முதலை திரிவதாயும் விளங்கும் நீர் நிலையே அகழியாகும்.

**நொச்சி :** இது மருத நிலத்திற்கு உரியதொரு சிறுமரம். இது

நிலநொச்சி. நீர்நொச்சி, கருநொச்சி என்னும் மூன்று வகைகளை உடையது. இதன் இலைகள் ஒரு காம்பில் மூன்றாகவும் ஐந்தாகவும் அமைந்திருக்கும். அவை பார்ப்பதற்கு மயிலின்

கால்கள் போலத் தோன்றும் (குறுந்தொகை பா. 138). இதன் பூக்கள் கொத்துக் கொத்தாகக் காணப்படும். இந் நொச்சித்திணை ஒன்பது பகுதிகளை உடையது. அவற்றுள் முதற்பகுதி திணை விளக்கம். எஞ்சியவை துறையை விளக்குவனவாம்.

**நொச்சித் திணையும் அதன் துறைகளும்**

**நுவலரும் காப்பின் நொச்சி ஏனை**
**மறனுடைப் பாசி“ ஊர்ச்செரு என்றா**
**செருவிடை வீழ்தல்” திண்பரி மறனே**
**எயிலது போரே எயில்தனை அழித்தல்**
**அழிபடை தாங்கல்“ மகள்மறுத்து மொழிதல் என**
**எச்சம் இன்றி எண்ணிய ஒன்பதும்**
**நொச்சி திணையும் துறையும் ஆகும்.**

சொல்லுதற்கு அரிய கட்டுக்காவலை உடையது நொச்சித்திணை ஆகும். 1. பகைவருக்குப் புறங்கொடாமல் போர் செய்து மடிதல் 2. உழிஞையாரை மதிற்புறத்திற்கு வெளியில் எதிர்த்தல் 3. போரில் இறந்த நொச்சி மறவரின் செயலைப் பாராட்டல் 4.நொச்சியாரின் குதிரை மறத்தைப் போற்றுதல் 5. மதில்காக்கும் மறவரின் போர்த்திறத்தைப் புகழ்தல் 6. நொச்சி மறவர் இறந்துபடுதல் 7. அழிந்த காவற்படைக்கு மாறாகக் காவலை மேற்கொள்ளுதல் 8.பகையரசனுக்கு மகளைக் கொடுக்க மறுத்தல் ஆகிய எட்டும் நொச்சித் திணையின் துறைகளாகும். இவற்றுடன் நொச்சித் திணையைக் கூட்ட உண்டாகும் எஞ்சுதல் இல்லாத ஒன்பதும் நொச்சியின் திணையும் அதன் துறைகளும் ஆகும்.

**1. மறனுடைப் பாசி**

உழிஞை மறவர்களுக்குப் புறங்கொடாமல் நொச்சி மறவர் போர் செய்வது மறனுடைப்பாசி என்னும் துறையாகும். பாசி -இது பெரும்பாலும் நீர்நிலைகளில் பரவிக் கிடக்கும் ஒரு வகைத் தாவரம் ஆகும். அதனைப் போலப் பகைப்படை மறவரை எதிர்த்துப் போர் செய்வதற்காகப் பரவிச் செல்வதால் இது பா எனப்பட்டது. மறத்தை அடிப்படையாகக் கொண்டு பரவி நிற்பதால் இது மறனுடைப் பாசி எனப் பெயர் பெற்றது.

**கொளு :** **மறப்படை மறவேந்தர்**
**துறக்கத்துச் செலவுஉரைத்தன்று.**

மறத்தன்மை வாய்ந்தது நொச்சி வேந்தனின் படையாகும். அதற்கு மறமாண்பினை உடையோர் தலைமை தாங்கி நின்றனர். அவர்கள் பகைப்படையோடு போரிட்டு விண்ணுலகத்திற்குச் சென்றனர். இதனை எடுத்துரைப்பது மறனுடைப்பாசி ஆகும். மறப்படை - நொச்சிப்படை வேந்தர் படைத்தலைவர், துறக்கம் வீரசுவர்க்கம்.

**2. ஊர்ச்செரு**

அரணுக்குப் புறத்தே உள்ள ஊரின்கண் பகைவரோடு நொச்சியார் போர்புரிவது ஊர்ச்செரு என்னும் துறையாகும். செரு - போர். இது ஊரின்கண் நடக்கும் போரைக் குறித்தது.

**கொளு : அருமிளையோடு கிடங்குஅழியாமைச்**
**செருமலைந்த சிறப்புஉரைத்தன்று.**

கோட்டைக்குக் காவலாக அமைந்திருப்பது காவற்காடு. இது பகைவர் புகுந்து செல்வதற்கு அரியதாய் விளங்குவது. இதனை அடுத்திருப்பது அகழி. இவ்விரண்டையும் பகைவர் சிதைக்காதபடி நொச்சி மறவர் போர் செய்து காப்பர். அக்கடும்போரின் சிறப்பினை எடுத்துரைப்பது ஊர்ச்செரு என்று அழைக்கப்படும். மிளை காவற்காடு. கிடங்கு -அகழிமலைதல் - போர்புரிதல்.

### 3. செருவிடை வீழ்தல்

பகைவர் உள்ளே நுழைய முடியாதபடி அரணைக் காக்கப் போரிட்டு இறந்த மறவரைப் பாராட்டுவது செருவிடை வீழ்தல் என்னும் துறையாகும். செரு ு இடை ு வீழ்தல் செருவிடை வீழ்தல். போர்க்களத்தின்கண் இறந்துபடுதல்.

**கொளு : ஆழ்ந்துபடு கிடங்கோடு அருமிளை காத்து**
**வீழ்ந்த வேலோர் விறல்மிகுத் தன்று.**

ஆழமுடைய அகழியையும் அரிய காவற்காட்டையும் காப்பதற்காகப் போர் செய்தனர் நொச்சி மறவர். அப்போரில் வேலினைக் கையில் ஏந்திய நொச்சி மறவர் இறந்துபட்டனர். அம்மறவர்களின் மறப்பெருமையைச் சிறப்பித்துக் கூறுவர்.இதுவே செருவிடை வீழ்தலாகும்.

### 4. குதிரை மறம்

குதிரைப்படையின் மறமாண்பினைப் பாராட்டிக் கூறுவது குதிரை மறம் என்னும் துறையாகும்.

**கொளு : ஏமாண்ட நெடும்புரிசை**
**வாமானது வகைஉரைத்தன்று.**

அம்புகளை எய்யும் தொழிலால் சிறப்புற்று விளங்குவது நொச்சியாரின் நீண்ட மதிலாகும். அம்மதிலகத்துத் தாவுகின்ற குதிரையின் சிறப்பைச் சொல்வது குதிரை மறமாகும். ஏ-அம்பு, புரிசை -மதில், வாவுதல் தாவுதல்.

### 5. எயிற்போர்

மதிலைக் காத்து நிற்கும் நொச்சி மறவரின் மறமாண்பினைச் சிறப்பித்துக் கூறுவது எயிற்போர் என்னும் துறையாகும். எயில் ுபோர் எயிற்போர். எயிலைக் (மதிலைக்) காப்பதற்காகச் செய்யும் போர்.

**கொளு : அயிற்படையின் அரண்காக்கும்**

**எயிற்படைஞர் இகல்மிகுத்தன்று.**

கூர்மையான படைக்கருவிகளைக் கொண்டு நொச்சி மறவர் மதிலினைக் காத்து நிற்பர். அம்மதிற்படை மறவர் பேராற்றல் மிக்கவர்கள். அவ்வாற்றலைச் சிறப்பித்துச் சொல்வது எயிற்போர் ஆகும். அயில் கூர்மை. படை கருவி மிகுத்தல் - பாராட்டுதல்.

**6. எயில்தனை அழித்தல்**

எயிலைக் காக்கின்ற நொச்சி மறவரைப் பகைவர் வீழ்த்துதலே எயில்தனை அழித்தல் என்னும் துறையாகும். எயில் என்பது ஈண்டு அதனைக் காக்கும் மறவருக்கு ஆகுபெயராயிற்று. எயில் மதில்.

**கொளு: துணிவுஉடைய தொடுகழலான்**
**அணியுரிசை அழிவுஉரைத்தன்று.**

பகைவரை எதிர்த்துப் போர் செய்யும் துணிவினையும் வீரக்கழலினையும் உடையவன் நொச்சி மறவன். அவன் அழகிய மதிலைக் காத்து நின்றான். அதனைக் கவர வந்த பகைமறவரோடு போரிட்டு இறந்தான்.இதனைக் கூறுவது எயில்தனை அழித்தலாகும். தொடுகழலான் நொச்சிமறவன். அழிவு - இறந்துபடுதல்.

**7. அழிபடை தாங்கல்**

பகைவரால் காவற்படை மறவர் அழிந்தனர். அதனைக் கண்டு பிற மறவர் அத்தொழிலை மேற்கொள்வது அழிபடை தாங்கல் என்னும் துறையாகும். அழிந்துபட்ட படைக்கு மாறாகப் பிறர் நின்று தடுத்ததால் இது அழிபடை தாங்கல் எனப் பெயர் பெற்றது. தாங்கல் - தடுத்தல்.

**கொளு: இழியுஉடன்று இகல்பெருக**
**அழிபடை அரண்காத்தன்று.**

பகைவரால் தம்படை சிதைந்து ஓடியது. அல்இழிபினைக் கண்டு நொச்சி மறவர் சினந்தனர். பகைவரோடு மாறுபாடு கொண்டு அம்மதிலை மனஉறுதியோடு காத்து நின்றனர். இதுவே அழிபடை தாங்கலாகும்.

**8. மகள் மறுத்து மொழிதல்**

தன் மகளை வேண்டும் பகையரசனுக்கு நொச்சி வேந்தன் பெண்கொடுக்க மறுப்பது மகள் மறுத்து மொழிதல் என்னும் துறையாகும்.

**கொளு: வெம்முரணான் மகள்வேண்ட**
**அம்மதிலோன் மறுத்துரைத்தன்று.**

கொடிய பகையினை உடையவன் உழிஞையரசன் அவன் நொச்சி வேந்தனின் மகளைத் தனக்கு மணம் செய்து தரும்படி கேட்டுக் கொண்டான். அழகிய மதிலகத்து உள்ள நொச்சியரசன் உழிஞையரசனின் அவ்விருப்பத்தை மறுத்துக் கூறுவான். இதுவே மகள் மறுத்து மொழிதலாகும். வெம்முரணான் நொச்சிவேந்தன். உழஞையரசன். அம்மதிலோன்

# 06.உழிஞைப் படலம்

பகைவரின் கோட்டையைக் கவரக் கருதும் அரசன் அதனை முற்றுகையிடுவான். அப்பகையரசனின் கடத்தற்கரிய காவற்காட்டினையும் அகழியையும் கடந்து கோட்டையின் உள்ளே செல்வான். இதுவே உழிஞை ஒழுக்கம் என்று கூறப்படும். இவ்ஒழுக்கத்தினை மேற்கொள்ளும் பிறவர் உழிஞைப் பூவினைச் சூடிச் செய்வர். ஆதலால் இது உழிஞை எனப்பெயர் பெறுகின்றது. நொச்சித்திணைக்கு மாறாக அமைவது உழிஞைத் திணை ஆகும்.

உழிஞை என்பது பாலைத்திணைக்கு உரிய மரமாகும். இதனை உழிஞை பாலை இருப்பை (நா.21) என்னும் அகப்பொருள் விளக்கத் தொடரால் அறியலாம். இவ்உழிஞைத்திணை இருபத்தொன்பது பகுதிகளை உடையது. அவற்றுள் முதற்பகுதி உழிஞைத் திணையின் விளக்கமாகும். எஞ்சியவை துறைகளை விளக்குவனவாம்.

**உழிஞைத் திணையும் அதன் துறைகளும்**

**உழிஞை ஓங்கிய குடைநாட் கோளே**
**வாள்நாட் கோளே முரச உழிஞை**
**கொற்ற உழிஞையோடு அரச உழிஞை**
**சுந்தழி என்றா முற்றுழி ஞையே**
**காந்தள் புறத்திறை ஆரெயில் உழிஞையொடு**
**அருந்தோல் உழிஞை குற்றுழி ஞையோடு**
**கோட்புறத்து உழிஞை பாசி நிலையே**
**ஏணி நிலையே இலங்குஎயிற் பாசி**
**முதுஉழி ஞையே முந்துஅகத்து உழிஞை**
**முற்று முதிர்வேயானைகைக் கோளே**
**வேற்றுப்படை வரவே உழுதுவித் திடுதல்**
**வாள்மண்ணு நிலையே மண்ணுமங் கலமே**
**மகட்பால் இகலே திறைகொண்டு பெயர்தல்**
**அடிப்பட இருந்தல் தொகைநிலை உளப்பட**
**இழுமான் சீர்த்தி இருபத்து ஒன்பதும்**
**உழிஞை என்மனார் உணர்ந்திசி னோரே.**

பகைவரது அரணினைக் கைப்பற்ற எண்ணும் அரசன் உழிஞைப் பூவினைச் சூடிச் செல்வான். இவ்ஒழுக்கம் 1. குடையைப் புறவீடு விடுதல் 2. வாளைப் புறவிடு விடுதல் 3. முரசை வழிபடுதல் 4. தன் படை வீரர்களுடன் போருக்கு எழுதல் 5. உழிஞைவேந்தனின் புகழைப் பாராட்டுதல் 6. அவ்அரசனைத் திருமாலாகக் கொண்டாடுதல் வு.சிவபெருமாள் குடிய உழிஞை மாலையினைப் புகழ்தல் 8. முருகப் பெருமான் அணிந்த காந்தள் மாலையினைப் புகழ்தல் 9. அரணுக்குப் புறத்தே தங்குதல் 10. பகையரசனின் வலிமை கூறுதல் 11. கிடுகுப் படையைப் பாராட்டுதல் 12. உழிஞை வேந்தன் ஒருவனாக நின்று அரணைக் கைப்பற்றுதல் 13. காவற்காட்டைக் கடத்தல். 14. அகழியிடத்துப் போர் புரிதல் 15. மதில்மேல் ஏணி சாற்றுதல் 16.ஏணி மேல் ஏறுதல் 17. மதில் மேல் குதித்தல் 18 நொச்சியாரை வெல்லுதல் 19. முரசொலி

கேட்டு உழிஞையரசன் வெகுளுதல் 20. யானைகளைக் கைப்பற்றுதல் 21. நொச்சியரசனுக்குப் பிற அரசர் துணையாக வருதல் 22. பகை நிலத்தைக் கழுதை பூட்டி உழுதல் 23. வெற்றி வாளை நீராட்டுதல் 24. வேந்தன் மங்கல நீராடுதல் 25.மகளைக் கேட்டு மதிற்புறத்தில் தங்கியிருத்தல் 26. திறைப்பொருளைப் பெற்றுத் தன் ஊருக்குத் திரும்புதல் 27. பகைவரை அடக்கப் பாசறைக்கண் தங்கியிருத்தல் 28. அஞ்சிய பல அரசரும் உழிஞையரசனை அடிபணிதல் ஆகிய பகுதிகளை உடையது. இவ்வாறு கூறப்பட்ட இவ்இருபத்தெட்டும் உழிஞைத்திணையின் துறைகளாகும்.இவற்றுடன் உழிஞைத்திணையைக் கூட்ட உண்டாகும் இருபத்தொன்பதும் இனிமையான புகழை எடுத்தோதுகின்ற உழிஞைத்திணை என்று உணர்ந்தோர் கூறுவர்.

**1. குடைநாட்கோள்**

உழிஞையரசன் நல்ல நாளில் தன் வெண்கொற்றக் குடையைப் போருக்காக அனுப்புவது குடைநாட்கோள் என்னும் துறையாகும்.

**கொளு :** **செற்றுஅடையார் மதில்கருதிக்**
**கொற்றவேந்தன் குடைநாள் கொண்டன்று.**

வெற்றியை உடையவன் உழிஞைவேந்தன். அவனொடு சினந்து மாறுபாடு யாடு கொண்டான் நொச்சியரசன். அவ்வரசனின் அரணைக் கைப்பற்றக் கருதினான் உழிஞையரசன். அதற்காக நல்ல நாளில் தன் குடையினைப் போர்க்களத்தை நோக்கிச் செலுத்தினான். இதுவே குடைநாட்கோளாகும். செற்றம் செருக்கு கொற்றவேந்தன் - உழிஞை அரசன்,

**2. வாள்நாட்கோள்**

உழிஞையரசன் தன்னுடைய வெற்றி வாளை நல்ல நாளில் புறவீடு விட்டது வாள்நாட்கோள் என்னும் துறையாகும்.

**கொளு :** **கலந்து அடையார் மதில்கருதி**
**வலந்தருவாள் நாள்கொண்டன்று.**

உழிஞையரசனோடு உறவினை வெறுத்தவன் நொச்சியரசன். அவனுடைய அரணைக் கைப்பற்றக் கருதினான் உழிஞை அரசன். அதன் காரணமாக வெற்றியைத் தருகின்ற வீரவாளினைப் போர்க்களத்திற்குச் செல்ல விடுத்தான். இதனை எடுத்துரைப்பது வாள்நாட்கோள் ஆகும்.

**3. முரசஉழிஞை**

பொன்னால் ஆகிய உழிஞைப் பூக்களை அணிவித்து முரசினை வழிபடுவது முரசவழிஞை என்னும் துறையாகும். முரசம் - தோற்கருவி. போரில் இதற்குத் தனிமரியாதை செலுத்தப்படும். அரசனும் மறவர்களும் முரசினைத் தெய்வமாகப் போற்றுவர்.

**கொளு:** **பொன்புனை உழிஞை சூடி மறிஅருந்தும்**
**திண்பிணி முரச நிலைஉரைத் தன்று.**

உழிஞையரசனின் போர்முரசம் வலிமையான வாரால் கட்டப்பட்டது. அது ஆட்டுக்குட்டியைத் தனக்குப் பலியாகக் கொள்கின்ற சிறப்புடையது. அத்தகு பெருமை வாய்ந்த முரசத்திற்கு அரசன் பொன்னால் செய்யப்பட்ட உழிஞைப்பூ மாலையைச் சூட்டினான். அந்நிலையினை எடுத்துரைப்பது முரசவுழிஞை ஆகும். மறி ஆட்டுக்குட்டி பிணித்தல் - கட்டுதல்.

**4. கொற்ற உழிஞை**

பகைவரின் அரணத்தைக் கைக்கொள்ள உழிஞை வேந்தன் படையெடுத்துச் செல்வது கொற்ற உழிஞை என்னும் துறையாகும். கொற்றம் - வெற்றி.

**கொளு :** **அடையாதார் அரண்கொள்ளிய**
**படையோடு பரந்துஎழுந்தன்று.**

உழிஞைவேந்தன் தனக்குப் பகையாயினாரின் மதிலைக் கைப்பற்றக் கருதினான். அதன் பொருட்டுத் தன் படைவீரர்கள் பரவித் திரண்டு வரப் புறப்பட்டான். இதனை எடுத்துரைப்பது கொற்ற உழிஞையாகும். அடையாதார் - பகைவர். கொள்ளுதல் - கைப்பற்றுதல்.

**5. அரச உழிஞை**

உழிஞை வேந்தனது புகழினைப் பாராட்டுவது அரச உழிஞை என்னும் துறையாகும்.

**கொளு:** **தொழில்காவல் மலிந்துஇயலும்**
**பொழில்காவலன் புகழ்விளம்பின்று.**

காவல் தொழிலில் சிறந்து விளங்குபவன் உழிஞையரசன். அவனுடைய நாடு காக்கும் ஆற்றல் புகழ்தற்கு உரியதாகும். அதனை எடுத்துரைப்பது அரச உழிஞை ஆகும்.

**6. கந்தழி**

உழிஞை வேந்தனைத் திருமாலாகக் கொண்டு புகழ்ந்துரைப்பது கந்தழி என்னும் துறையாகும். கந்து - தூண். அழி - அழித்தல் இது பகைவரின் பற்றுக்கோடாக விளங்கும் மதிலை அழித்தல் என்னும் பொருளைத் தருவதாகும்.

**கொளு :** **மாஉடைத்தார் மணிவண்ணன்**
**சோஉடைத்த மறநுவலின்று.**

வண்டுகள் மொய்க்கும் மலர்மாலை அணிந்தவன் திருமால் அவன் நீலமணி போன்ற மேனியை உடையவன். அத்திருமால் முன்னொரு காலத்தில் வாணாசுரனின் சோ என்னும் மதிலை அழித்தான். அம்மறப் பண்பினை எடுத்துரைப்பது கந்தழி ஆகும். மா- வண்டு மணிவண்ணன்- நீலமணி போன்ற நிறத்தினன். சோ (வீரசோர்) - மதில் உடைத்தல் அழித்தல்.

**7. முற்றுழிஞை**

சிவபெருமான் சூடிய உழிஞைப்பூவின் சிறப்பைக் கூறுவது முற்றுழிஞை என்னும் துறையாகும்.

**கொளு :** **ஆடுஇயல் அவிர்சடையான்**
**சூடியபூச் சிறப்புஉரைத்தன்று.**

ஆடுகின்ற தொழிலைச் சிறப்புறச் செய்பவன் சிவபெருமான். அவன் விளங்குகின்ற சடையினை உடையவன். அப்பெருமான் உழிஞைப் பூவினைச் சூடித் திரிகின்ற மூன்று மதில்களை அழித்தான். அவ்உழிஞைப் பூவின் சிறப்பினை எடுத்துரைப்பது முற்றுழிஞையாகும். ஆடியல்- கூத்தாடும் இயல்பு. அவிர்தல் - ஒளிர்தல். சூடியபூ -உழிஞைப்பூ.

**8.காந்தள்**

முருகப்பெருமான் சூடிய காந்தள் பூவின் சிறப்பினை எடுத்துரைப்பது காந்தள் என்னும் துறையாகும். இது குறிஞ்சி நிலத்திற்குரிய பூ. ஆகையால் அந்நிலத் தெய்வமாகிய முருகனுக்குச் சூடும் பூவாயிற்று.

**கொளு :** **கருங்கடலுள் மாத்தடிந்தான்**
**செழுங்காந்தள் சிறப்புஉரைத்தன்று.**

கரிய கடலிடத்தே மாமரமாகி நின்றவன் சூரபதுமன். அவனைக் கொன்று அழித்தவன் முருகப்பெருமான். அதற்காக அப்பெருமான் சூடிச் சென்ற பூ சிவந்த காந்தள் பூவாகும். அதனுடைய சிறப்பைக் கூறுவது காந்தள் ஆகும். மா - மாமரம். தடிதல் - அழித்தல்.

**9. புறத்திறை**

பகைவர் நாட்டின் மதிலுக்குப் புறத்தே தங்குவது புறத்திறை என்னும் துறையாகும். புறம் - அரணிற்கு வெளியில் இறை - தங்குதல். வெட்சித் திணையில் அமைந்த புறத்திறை (5) உள்ளே இருப்போர் வெளியில் போகாதபடி ஊருக்குப் புறத்தே வளைத்து நிற்பதாகும்.

**கொளு:** **மறத்துறை மலிந்து மண்டி மாற்றார்**
**விறல்கொடி மதிலின் புறத்து இறுத் தன்று.**

போர் செய்வதில் விருப்பம் மிகுந்தவர் உழிஞை மறவர். அவர்கள் அணி வகுத்துப் பகைவரின் மதிலை அழிக்கச் சென்றனர். அதற்காக வெற்றிக்கொடி அசையும் மதிலின் புறத்தே தங்கி இருந்தனர். இத்தன்மையைக் கூறுவது புறத்திறையாகும். மறம் -போர். மலிதல் விரும்புதல், மண்டுதல் - நெருங்குதல்,

**10.ஆர்எயில் உழிஞை**

நொச்சியரசனுடைய அரண் வலிமையை மறவர் எடுத்துக் கூறுவது ஆரெயில் உழிஞை என்னும் துறையாகும். அருமை ௸ எயில் ௸ உழிஞை ஸ்ரீஆரெயில் உழிஞை. கைக்கொள்ளுவதற்கு அருமைப்பாடு வாய்ந்த வலிமையினை உடைமையால் ஆரெயில் உழிஞையாயிற்று.

**கொளு : வாஅள்மறவர் வணங்காதார்**
**நீஇள்மதிலின் நிலை உரைத்தன்று.**

வாட்படையினை உடையவர் உழிஞை மறவர். அம்மறவர் தம் அரசனை வணங்காத நொச்சியாரின் அரணினைச் சூழ்ந்து நின்றனர். நீண்ட அம்மதிலின் வலிமையை எடுத்துக் கூறினர்.

இதுவே ஆரெயில் உழிஞையாகும். வாள்மறவர் உழிஞை மறவர் வணங்காதார் - நொச்சிவேந்தன்.

## 07. தும்பைப் படலம்

பகையரசர் இருவர் ஓரிடத்தைப் போர்க்களமாகக் கொண்டு வெற்றியைக் குறிக்கோளாக வைத்துக் கடும்போர் செய்வர். இப்போர் தத்தம் ஆற்றலை வெளிப்படுத்துவதாக அமையும். இவ்வொழுக்கத்தை மேற்கொள்வதற்குத் தும்பைப் பூவினைச் சூடுவர். ஆகையால் இது தும்பைத் திணை ஆயிற்று. வலிமையை வைத்துச் செய்யும் இப்போரில் வெற்றி பெற்றவர் வாகைப் பூவினைச் சூடுவர்.

தும்பைப்பூ இதனை நெய்தல் நிலத்திற்கு உரிய பூவெனக் கூறுவர்.

ஆயினும் இது இடவரையறை இன்றி எல்லா இடங்களிலும் வளரும் தன்மை வாய்ந்தது. இதன் மலர் மிகச் சிறியது. வெண்மை நிறங்கொண்டது. இச்செடி மணம் கமழும் இயல்புடையது. பசுமை நிறத்துடன் கூடிய எண்ணற்ற புல்லிவட்டம் பந்து போல உருண்டு காணப்படும். அதன்மீது வெண்மை இதழுடன் அல்லி வட்டம் காணப்படுவதால் இது பசுந்தும்பை எனக் குறிப்பிடப் பெறுகிறது. இப்பூ சிவபெருமானும் விநாயகரும் விரும்பி அணியும் பூக்களுள் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது. தும்பைத்திணை 24 பகுதிகளை உடையது. அவற்றுள் முதற்பகுதி திணையின் விளக்கமாகும். எஞ்சியவை துறைகளை விளக்குவனவாம்.

**தும்பைத்திணையும் அதன் துறைகளும்**

**துன்னரும் கடும்போர்த் தும்பை தும்பைஅரவம்**
**தன்னிகர் இல்லாத் தானை மறமே**
**யானை மறத்தொடு குதிரை மறமே**
**தார்நிலை தேர்மறம் பாணது பாட்டே**
**இருவரும் தபுநிலை எருமை மறமே**
**ஏம் எருமை நூழில் என்றா**
**நூழில் ஆட்டே முன்தேர்க் குரவை**
**பின்தேர்க் குரவை பேய்க்குர வையே**
**களிற்றுட னிலையே ஒள்வாள் அமலை**
**தானை நிலையே வெருவரு நிலையே**
**சிருங்கார நிலையே உவகைக் கலுழ்ச்சி**
**தன்னை வேட்டல் தொகைநிலை உளப்பட**
**நன்பொருள் தெரிந்தோர் நால்இரு மூன்றும்**
**வண்பூந் தும்பை வகைான மொழிப**

தும்பைப் பூவினைச் சூடி நெருங்குவதற்கு அருமைப்பாடு வாய்ந்த ம்போரினைச் செய்வது தும்பைத் திணையாகும். 1.மறவர்க்குப் பொருள் கொடுத்து மகிழ்வித்தல் 2. மறவரின் வீரத்தைக் கூறுதல் இயானையின் தறுகண்மையை வியத்தல் 4. குதிரையின் போராற்றலைக் கூறுதல் 5.தூசிப்படையைத் தடுப்பேன் என மறவன் கூறுதல் 6.தேர் வலிமையைக் கூறுதல் 7. இறந்தவருக்குப் பாணர் கடன் ஆற்றுதல் மாறுபட்ட தும்பையரசர் இருவரும் போர் செய்து மடிதல்

9. அஞ்சும் தன் படைக்கு முன் நின்று பகைவரை எதிர்த்தல் 10. மறவன் ஒருவன் தன் வலிமையால் பிறரை வெல்லுதல் 11 வெற்றியால் வேலைச் சுழற்றி ஆடுதல் 12. தன் மார்பில் புகுந்த வேலைப் பிடுங்கிப் பகைவர் மீது வீசுதல் 13. தேர் முன் மறவர் ஆடுதல் 14. தேருக்குப் பின் மறவரும் விறலியரும் ஆடுதல். 15. தேருக்கு முன்னும் பின்னும் பேய்கள் ஆடுதல் 16. யாளையும் மறவனும் ஒருங்கே இறத்தல் 17. போரில் விழுந்த அரசரைச் சுற்றி நின்று ஆடுதல் 18. மறவன் ஒருவன் இரண்டு படைகளாலும் புகழப்படுதல் 19. ஒருவனின் உடம்பு நிலத்தில் விழாதபடி உடல் புகுந்த அம்புகள் தடுத்தல் 20. இறந்த மறவளின் உடலை அவன் மனைவி தழுவுதல் 21. கணவனின் விழுப்புண் கண்டு மனைவி மகிழ்தல் 22. மாய்ந்த அரசனுக்காக மறவன் தன் உயிரை நீத்தல் 23, இருதிறப் படைகளும் அழிதல் ஆகிய இருபத்து மூன்றும் தும்பைத் திணையின் துறைகளாகும். இவற்றுடன் தும்பைத் திணையையும் சேர்க்க உண்டாவன இருபத்து நான்கு (4× 2× 3 ஸ்ரீ 24) பகுதிகளாகும். இவ்வாறு அமைந்த நாள்களோடு உறழப்பட்ட இருமூன்று துறைகளையும் நன்மை தரும் புறப்பொருளை ஆராய்ந்தோர் அழகிய புகழ்பொருந்திய தும்பைத்திணையின் வகைகளாகக் கூறுவர்.

**1. தும்பை அரவம்**

அரசனிடமிருந்து பொருள் பெற்ற படைமறவர் மகிழ்ந்து ஆரவாரம் செய்வது தும்பை அரவம் என்னும் துறையாகும்.

**கொளு :** **பொன்புனைந்த கழல்அடியோன்**
**தன்படையைத் தலையளித்தன்று.**

பொன்னாலாகிய வீரக்கழலினை அணிந்த அடியினை உடையவன் தும்பை வேந்தன். அவன் தன் படைமறவர்களின் தகுதியினை அறிந்து அதற்கேற்பப் பொருள் வழங்கி மகிழ்விப்பான். இதனை எடுத்துரைப்பது தும்பை அரவமாரும். அளி -கொடுத்தல்

**2. தானை மறம்**

1. இருகிறத்துப் படைகளும் போர் செய்து அழியாமல் காத்தது (127) தானைமறம் என்னும் துறையாகும். 2. போரினை விரைந்து மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்துவதும் இத்துறைக்கு உரியதாகும். வேற்படை மறவரின் சிறப்பினை எடுத்துக் கூறுவதும் இத்தானைமறம் ஆகும்.

**கொளு:** **தாம்படைத் தலைக்கொள்ளாமை**
**ஓம்படுத்த உயர்புகூறின்று.**

ஒத்த வலிமை கொண்ட படைகள் வெகுண்டு போர் செய்தால் ஒருவகும் மிஞ்சாமல் போர்க்களத்தின்கண் இறந்துபடுவர். அதன் காரணமாக இருதிறப் படைகளுக்கும் போர் ஏற்படாமல் பாதுகாப்பர். அவ்உயர்வுத் தன்மையை விளக்குவது தானைமறமாகும். ஓம்படுத்தல் பாதுகாத்தல்.

**3.யானைமறம்**

தும்பையர்சனுடைய யானையின் தறுகண்மையைக் கண்டோர் வியந்து போற்றியது யானை மறம் என்னும் துறையாகும்.

**கொளு:** **எழும்அரவக் கடல்தானையான்**
**மழகளிற்றின் மறம்கிளந்தன்று.**

மிகுந்து எழுகின்ற பேரொலியை உடையது பரந்த கடல் அக்கடல் போன்ற படையினை உடையவன் தும்பை வேந்தன். அவனுடைய இளம் களிறு மிகுந்த வீரத்தைக் கொண்டது. அதனைப் புகழ்ந்து கூறுவது யானைமறம் ஆகும். மழ - இளமை

**4. குதிரை மறம்**

தும்பை அரசனுடைய குதிரைகளின் திறத்தை மிகுத்துச் சொல்லுவது குதிரை மறம் என்னும் துறையாகும் மதிலகத்துப் பாய்கின்ற குதிரையின் சிறப்பினைக் கூறும் தொச்சித்திணையின் குதிரை மறத்தை ஈண்டு ஒப்பிட்டு அறிக

**கொளு:** **எறிபடையான் இகல்அமருள்**
**செறிபடைமான் திறம்கிளந்தன்று.**

எறிந்து கொல்லும் வேற்படையால் சிறந்தவன் தும்பை வேந்தன். அவன் தன்னை எதிர்த்து வந்த பகைவருடன் பெரிய போரினைச் செய்தாள். அவனுடைய குதிரை போராற்றல் மிகுந்தது. அதன் இயல்பினைக் கூறுவது குதிரை மறமாகும். எறிபடை - வேல், மா(ன்) - குதிரை: னகரம் எழுத்துப்பேறு

**5. தார்நிலை**

1.பகைவரின் தார்ப்படையைத் தான் ஒருவனாக நின்று தடுப்பேன் எனக் கூறுவது தார்நிலை என்னும் துறை ஆகும். உதம் அரசரைத் தனிமைப்படுத்திப் பகைவர் சூழ்ந்து நின்று போர் செய்ய அவரை எதிர்த்துப் போர் புரிந்து காத்தலும் தாரநிலை என்னும் அத்துறையே ஆகும். தார் கொடி போர்க்களத்தில் அரசனுக்குரிய அடையாளக் கொடியைத் தாங்கி வருவது தார்ப்படை

**கொளு:** **முன் எழுதரு படைதாங்குவன்என**
**மன்னவற்கு மறம்கிளந்தன்று.**

அணிவகுத்து வருகின்ற படையினுள் முதலில் வருவது தார்ப்படை ஆகும். அப்படையைத் தான் ஒருவளே தடுப்பேன் என மறவன் ஒருவன் அரசனிடம் கூறினான். அவனுடைய மறத்தன்மையினை எடுத்துக் கூறுவதே தார்நிலை ஆகும். முன்எழுதருபடை தூசிப்படை தாங்குதல் -தடுத்தல்

**6. தேர்மறம்**

தும்பை அரசனின் தேர் வலிமையைக் கூறுவது தேர்மறம் என்னும் துறையாகும்.

**கொளு:** **முறிமலர்த்தார் வயவேந்தன்**
**செறிமணித்தேர்ச் சிறப்புஉரைத்தன்று.**

தனிர் விரவித் தொடுத்த பூமாலையினை அணிந்தவன் தும்பைவேந்தன் வலிமை மிக்க அவ்வேந்தன் மணிகள் பதித்த சிறந்த தேரினை உடையவன் அதன் இயல்பை எடுத்துரைப்பது தேர்மறமாகும். முறி - தளிர், செறிதல் -பதித்தல்,

**7. பாண்பாட்டு**

போர்க்களத்தில் இறந்துபட்ட மறவர்களுக்குரிய இறுதிக்கடனைப் பாணர் செய்வது பாண்பாட்டு என்னும் துறையாகும். மறவரின் உடலை எரித்தலே இறுதிக் கடனாகும். பாண் பண்ணிசைத்துப் பாடும் மரபினர்' பாணர்.

**கொளு:** **வெண்கோட்ட களிறுஎறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்குக்**
**கைவல்யாழ்ப் பாணர் கடன்இறுத் தன்று.**

வெண்மையான கோட்டினை உடைய ஆண்யானையை வெட்டியவன் அம்மைப் போர்மறவன். அவன் பின்னர்ப் பகைவரால் வெட்டப்பட்டு அப்போர்க்களத்தில் இறந்தான். அவனுடைய உடலுக்கு யாழிசையில் கைதேர்ந்த பாணர் இறுதிக்கடனைச் செய்தனர். அந்நிலையை எடுத்துரைப்பது பாண்பாட்டாகும். கோடு தந்தம் கைவல் கையினது திறம். கடன் - ஈமக்கடன்

**8. இருவரும் தபுநிலை**

போர்க்களத்தில் இருதிறப் படைகளோடு அரசகும் இறந்துபடுவது இருவரும் தபுநிலை என்னும் துறையாகும். தபுதல் - சாதல்'

**கொளு:** **பொருபடை களத்துஅவிய**
**இருவேந்தரும் இகல்அவிந்தன்று.**

போர்க்களத்தின்கண் நின்ற இருதிறத்துப் படைமறவரும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்காமல் போர் செய்ததால் அனைவரும் இறந்தனர். இதனைக் கண்டு இருதிறத்து பகைவேந்தரும் போர்செய்து மாறுபாடுகெட அக்களத்தில் இறந்தனர் இந்நிலையை எடுத்துரைப்பது இருவரும் தபுநிலை ஆகும் பொருதல் போர்செய்தல் அவிதல் - அழிதல்: கெடுதல்

**9. எருமை மறம்**

புறமுதுகிட்டு ஓடும் தன்படை மீது சினந்து. எதிர்த்து வரும் பகைவரைத் தடுத்து திறுத்துவது எருமைமறம் என்னும் துறையாகும். தன்னைக் கொன்று தின்ன வரும் வலிமையுடைய

புலி சிங்கங்களை எதிர்த்து மூர்க்கத்தனமாகப் போர் செய்யயல்லது எருமை. அதனைப் போலப் பகைவரை எதிர்த்து நின்று தடுக்கும் மறவனின் ஆண்மையைக் கூறுவது எருமை மறம

**கொளு: வெயர்பொடிப்பச் சினம்கடைஇப்**
**பெயர்படைக்குப் பின்நீன்றன்று.**

பகைவரின் படைக்குத் தோற்றோடும் தம் மறவரைக் கண்டான் மறவன் ஒருவன். அதனால் அவன் வியர்வை தோன்றும்படியாக மிகுந்த சினம் கொண்டான். புறமுதுகிட்டு ஓடும் தன் படைக்குப் பின்னாக நின்று பகைப்படை முன்னேறி வரமுடியாதபடி போரிட்டான். இந்நிலையை எடுத்துரைப்பது எருமை மறமாகும். வெயர் -வியர்வை. பொடித்தல் - துளிர்த்தல்

**10. ஏம் எருமை**

தன் வேலினை யானை மீது எறிந்த மறவன் தன் தோன் வலிமையால் பகைவரை வெற்றி கண்டது ஏம எருமை என்னும் துறையாகும் தன் கொம்புகளைக் கொண்டு போரிடுவது எருமை அதனைப் போலக் கருவியிழந்த மறவன் தன் தோள்களைக் கொண்டு பகைவருடன் போரிடுவது ஏம் எருமையாகும். ஏமம் என்பது பலபொருள் ஒருசொல் அதுண்டுச் செருக்கு (மதர்த்தல்) என்னும் பொருள் தருகிறது.

**கொளு : குடைமயங்கிய வாள்அமருள்**
**படைமயங்கப் பாழிகொண்டன்று.**

குடைகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து நின்று வாடபோர் செய்தற்குரிய இடமாக விளங்குவது போர்க்களம். அக்களத்தில் போர்மறவன் ஒருவன் தன் வேலைப் பகையானையின் மத்தகத்தின் மீது எறிந்தான். பின்னர்ப் படைக்கருவி இன்றித் தன் தோள் வலிமையால் போர் செய்து பகைவரை வீழ்த்தினான். இதனைக் கூறுவது ஏம எருமை ஆகும். மயங்குதல் - கலத்தல்' சேர்தல். பாழி - வலிமை

## 08. வாகைப் படலம்

ஓரிடத்தைப் போர்க்களமாகக் கொண்டு நேருக்கு நேர் தின்று தன் உடன் வளிமையால் வெற்றியைக் குறிக்கோளாகக் கொண்டு இரு அரசபோரிடுவது தும்பையாகும். அவ்இருவருள் ஒருவன் வெற்றி பெறுவான். அவ்வாறு பகைவெல்லுதலும் வென்றவனது சிறப்பைக் கூறுகலும் வாகைக்குரிய ஒழுக்கமாகும். போரில் பகைவரை வென்றவர் வாகைப்பூவினைச் சூடி இவ்வொழுக்கத்தை வெளிப்படுத்துவதால் வாகைத்திணை எனச் சிறப்பிக்கப் படுகின்றது. வெட்சி, வஞ்சி போல இது போருக்குரிய திணையன்று. ஒவ்வொரு துறையிலும் ஒருவர் பெறும் வெற்றியினைக் குறிக்கும் குறியீடே வாகை எனக் கூறுவர். இதிலிருந்து வாகை என்பதற்கு வெற்றி என்னும் பொருள் புலப்படுகிறது. வெற்றியின் பொருட்டுச் சூடுகின்ற வாகைப்பூ ஒரு குறிப்பிட்ட நிலத்திற்கு உரியதன்று எனக் கூறுவர். ஆயினும் இது தளக்கென நிலமற்ற பாலைத் திணைக்கு உரியதாகும். இதனை வாகை வெண்ணெற்று ஒலிக்கும் என்னும் தொடர் அமைந்த பாலைத்திணைக் குறுந்தொகைப் பாடலால் (பா. 7) அறியலாம். வாகைத்திணை 33 பகுதிகளை உடையது அவற்றுள் முதற்பகுதி திணைவிளக்கமாகும். எஞ்சியவை துறைகளை விளக்குவனவாம்.

**வாகைத் திணையும் அதன் துறைகளும்**

**சீர்சால் வாகை வாகை அரவம்**
**அரச வாகை முரச வாகை**
**மறக்கள வழியொடு களவேள் விய்யே**
**முன்தேர்க் குரவை பின்தேர்க் குரவை**
**பார்ப்பன வாகை வாணிக வாகை**
**வேளாண் வாகை பொருந வாகை**
**அறிவன் வாகை தாபத வாகை**
**கூதிர்ப் பாசறை வாடைப் பாசறை**
**அரச முல்லை பார்ப்பன முல்லை**
**அவைய முல்லை கணிவன் முல்லை**
**மூதின் முல்லை ஏதாண் முல்லை**
**வல்லாண் முல்லை காவல் முல்லை**
**பேராண் முல்லை மறமுல் லையே**
**குடைமுல் லையொடு கண்படை நிலையே**
**அவிப்பலி என்றா சால்பு முல்லை**
**கிணைநிலை ஏனைப் பொருளொடு புகறல்**
**அருளொடு நீங்கல் உளப்படத் தொகைத்**
**மூன்று தலையிட்ட மூகர் ஐந்தும்**
**வானதோய் வாகைத் திணையது வகையே**

பகையரசனைக் கொன்று வெற்றிபெற்ற அரசன் வாகை மாலையைச் சூடி மகிழ்தலே வாகைத்திணையாகும். வாகைப் பூவினைச் சூடி ஆரவாரித்தல் 2. அரசனின் இயல்பைப் போற்றுகள் வெற்றி முரசைச் சிறப்பித்தல் 4. செங்கோல் உழவனாக்குதல் களவேள்வி செய்தல் 6 தேரின்முன் பேய்கள் கூத்தாடுதல் வு.அத்தேரில் பின் பேய்கள் கத்தாடுதல் . பார்ப்பன்னைப் போற்றுதல் 9.வணிகரின் மேம்பாடு கூறுதல் 10. வேளாளரைச் சிறப்பித்துக் கூறுதல் 11அறிஞர் மன்னனுக்கு அறிவுறுத்துதல் 12 முக்காலத்தை உணரும் பேரறிவாளரின் இயல்பை உரைத்தல் 13. தவநெறியாரைப் புகழ்நல் 14. கூதிர்காலத்தும் அரசன் பாசறைக்கண் தங்குதல் 15.வாடைக்காற்று விசும்போது பாசறைக்கண் தங்கியிருத்தல் 16. நடுவுநிலைமையின் நல்லியல்பினைக் கூறுதல் 17.பார்ப்பனனின் மேன்மையைக் கூறுதல் 18 அறம் கூறும் சான்றோரின் தன்மை தல் 19. நாழிகைக் கணக்கரின் இயல்பைக் கூறுதல் 20. மறக்குடி மகளிரின் மாண்பினைக் கூறுதல் 11. மறக்குடியின் ஒழுக்கம் கூறுதல் 22. மறவனின் புகழைக் கூறுதல் 23, அரசனது காத்தல் தொழிலைச் சிறப்பித்தல் 24. பிற நாட்டைக் கைப்பற்றிய அரசனைச் சிறப்பித்துக் கூறுதல் 25 எதனையும் எதிர்பார்க்காத மறவனின் மேன்மையைக் கூறுதல் 26. அரசனின் வெண்கொற்றக் குடையைப் புகழ்தல். 27. அரசனின் உறக்கத்தைச் சிறப்பித்துக் கூறுதல் 28 மறவன் தன் உயிரைப் பலியாகக் கொடுத்தல் 29. சான்றோரின் நல்இயல்பைச் கூறுதல் 30. வேளாளனைக் கிஸ்ண கொட்டுபவன் புகழ்கள் 31 மெய்ப் பொருளை எடுத்துரைத்தல் 32.உலகப் பற்றிலிருந்து தீவகுதல் என்னும் முப்பத்திரண்டும் வாகைத் திணையின் துறைகளாகும்.

**1.வாகை அரவம்**

போர் மறவர் வாகைப்பூச் சூடியும் வீரக்கழல் அணிந்தும் ஆரவாரிப்பது வாகை அரவும் என்னும் துறையாகும்.

**கொளு:** **வெண்கண்ணியும் கருங்கழலும்**
**செங்கச்சும் தகைபுனைந்தன்று.**

போரில் பகைவரை வென்று வாகை சூடினான் அரசன். அவனுடைய படைமறவர் வெண்மையான வாகை மாலை சூடினர். கரிய வீரக்கழலைக் கட்டினர். சிவந்த நிறமுடைய இடைக் கச்சினை அணிந்தனர். இந்நிலையைக் கூறுவது வாகை அரவமாகும். வெண்மை வாகைப்பூவின் நிறம் கருமை - வலிமையுமாம்.

**2. அரச வாகை**

வாகை வேந்தனின் செங்கோல் சிறப்பை எடுத்துரைப்பது அரசவாகை என்னும் துறையாகும்.

**கொளு :** **பகல்அன்ன வாய்மொழி**
**இகல்வேந்தன் இயல்புஉரைத்தன்று.**

நுகத்தடியின்கண் நடுவில் அமைவது பகலா. அது போன்று வாய்மையில் பிறழாத நடுவுநிலைமை உடைய சொல்லைக் கூறுபவன் வாகை வேந்தன். அவன் மாறுபாட்டால் சிறந்தவன்: அவ.அரசனின் இயல்பினைக் கூறுவது அரசவாகை ஆகும்.

**3. முரச வாகை**

வாகை வேந்தனின் வெற்றி முரசைச் சிறப்பிப்பது முரசவாகை என்னும் துறையாகும். முரசம் - வெற்றிமுரசம்.

**கொளு:** **ஒலிகழலான் அகல்நகருள்**
**பலிபெறுமுரசின் பண்புஉரைத்தன்று.**

ஒலிக்கின்ற வீரக்கழலினை அணிந்தவன் வாகைவேந்தன். அவனுக்கு உரிமையுடையது அகன்ற அரண்மனை. அங்கு இடம் பெற்றிருப்பது வெற்றி முரசம். அது மறவரிடம் பலியைப் பெறுகின்ற தன்மை கொண்டது. அதன் இயல்பைக் கூறுவது முரசவாகை எனப்படும். அகல்நகர் - அகன்ற அரண்மனை,

**4. மறக்களவழி**

செங்கோல் மன்னனை உழவனாக உருவகம் செய்து பாடுவது மறக்களவழி என்னும் துறையாகும்.

**கொளு: முழவுஉறழ் திணிதோளானை**
**உழவனாக உரைமலிந்தன்று.**

முழவு போன்ற திண்மை வாய்ந்த தோளினை உடையவன் வாகைவேந்தன். அவன் உலகத்தைக் காக்கும் செயலைச் செய்பவன். அவனை உலகிற்கு உதவுகின்ற உழவனாக எடுத்துரைப்பர். அதனைக் கூறுவது மறக்களவழியாகும். முழவு - மத்தளம். உறழ் ஒத்தல்

**5. களவேள்வி**

வாகை குடிய அரசன் வேள்வி செய்ததை விளக்குவது களவேள்வி என்னும் துறையாகும். போர்க்களத்தை வேள்வி செய்யும் இடமாகக் கொண்டதால் இது களவேள்வி எனப் பெயர் பெற்றது. களம் போர்க்களம். வேள்வி -வேட்டல்.

**கொளு: அடுதிறல் அணங்கார**
**விடுசிறலான் களம்வேட்டன்று.**

மிகுந்த வலிமையினை உடைய வாகைவேந்தன் பகைவரை பிணமாகுமாறு வெட்டி வீழ்த்தினான். அவற்றைக் கொல்லும் ஆற்றல் வாய்ந்த பேய்களுக்கு வயிறார உண்ணக் கொடுத்தான். இதனைக் கூறுவது களவேள்வியாகும். அடுதல் கொல்லுகின்ற ஆற்றல், அணங்கு - பேய். திறல் - வலிமை.

**6. முன்தேர்க் குரவை**

வெற்றி பெற்ற அரசனுடைய தேரின்முன் பேய் கூத்தாடுவது முன்தேர்க்குரவை என்னும் துறை ஆகும். தேர்முன் என்பது முன்தேர் என நின்றது. தும்பை மறவர் தேர் முன்பாக ஆடுவதைத் தும்பைத்திணையின் முன்தேர்க்குரவவை (3)என்பதை ஈண்டு ஒப்பிட்டு அறிக

**கொளு: வென்றுஏந்திய விறல்படையோன்**
**முன்தேர்க்கண் அணங்குஆடின்று.**

தன் பகைவனை வீழ்த்தி வெற்றி பெற்றவன் வாகையரசன் அவ்வரசன் வெற்றியான் மிக்க படைக்கலன்களை உடையவன். அவன் ஏறி வந்த தேரின் முன்பாகப் பேய்கள் மகிழ்ந்து கூத்தாடின இதனை எடுத்துரைப்பது முன்தேர்க்குரவை ஆகும்.

**7.பின்தேர்க் குரவை**

வாகையரசனின் தேரின் பின்னர் விறலியரும் மறவரும் கூத்தாடுவது பின்தேர்க்குரவை என்னும் துறையாகும். தேர்ப்பின் என்பது பின்தேர் என நின்றது. தும்பைத் திணையில் அமைந்த பின்தேர்க் குரவை (14) வெற்றிபெறுவதற்கு முன் ஆடும் கூத்து என்பதை ஈண்டு ஒப்பிட்டு அறிக

**கொளு: பெய்கழலான் தேரின்பின்**
**மொய்வளைவிறலியர் வயவரொடுஆடின்று.**

வீரக்கழலினை அணிந்த வாகையாசன் தேரின்மீது ஏறி வந்தான். அத்தேரின் பின் வளையலை அணிந்த விறலியர் போர் மறவரோடு சுத்தாடினர். இதனை விளக்குவது பின்தேர்க்குரவை ஆகும்.

**8. பார்ப்பன வாகை**

வேதம் உணர்ந்த பார்ப்பனனின் மேம்பாட்டைக் கொண்டாடுவது பார்ப்பன வாகை என்னும் துறையாகும்.

**கொளு:** **கேள்வியான் சிறப்புஎய்தியானை**
**வேள்வியான் விறல்மிகுத்தன்று.**

கேட்கத் தக்க மறைகளைக் கேட்டுணர்ந்த பார்ப்பனருள் தலைவனாய் மேம்பட்டு நின்றான் ஒருவன். அத்தகையோன் பெற்ற வெற்றியை வேள்விமண்டபத்தின்கண் வைத்துப் போற்றுவர். அவ்அந்தணனின் சிறப்பினைக் கூறுவது பார்ப்பன வாகையாகும்.

**9.வாணிக வாகை**

அறுவகைத் தொழிலினையும் சிறக்கச் செய்கின்ற வணிகர் தம் மேம்பாட்டைக் கூறுவது வாணிக வாகை என்னும் துறையாகும்.

**கொளு :** **செறுதொழிலின் சேண்நீங்கியான்**
**அறுதொழிலும் எடுத்துரைத்தன்று.**

பொல்லாத வினையிலிருந்து விலகி நீண்ட தொலைவு சென்றவர் வணிகர். அவர் அறுவகைத் தொழிலினைச் செய்பவர், அத்தொழிலின் சிறப்புக்களை மிகுத்துக் கூறுவது வாணிக வாகை ஆகும்.

**10. வேளாண் வாகை**

வேளாளரைச் சிறப்பித்துக் கூறுவது வேளாண் வாகை என்னும் துறையாகும். வேளாண் வேளாளர் : உபகாரம் செய்பவர்.

**கொளு :** **மேல்மூவரும் மனம்புகல**
**வாய்மையான் வழிஒழுகின்று.**

இவ்உலகில் மேம்பட்டு நிற்கின்ற வருணமாகத் திகழ்பவர் மூவர். அம்மூவரும் மனம்மகிழும்படி மெய்ம்மையாய் ஏவல் செய்வோர் வேளாளர், அவ்வேளாளரைச் சிறப்பிப்பது வேளாண் வாகையாகும்.

## 09. பாடாண் படலம்

ஓர் ஆண்மகனுடைய உயர்ந்த ஒழுகலாறுகளைப் புகழ்ந்து கூறுவது பாடாண் என்னும் திணையாரும். பாடு ஆண் திணை என்னும் சொற்கள் சேர்ந்து பாடாண்திணை என்றாயின. ஆண் என்பதற்கு ஆண்பால் எனப் பொருள் கூறப்படுகிறது. அவ்வாறு பொருள் கொள்ளாமல் ஆளும்தன்மை (ரீசளழயெடவைல) எனப் பொருள் கொள்வது பொருந்துவதாகும். தொல்காப்பியரும் ஆண்மை என்பதனை ஆளும்தன்மை என்னும் பொருளில் கையாண்டுள்ளதைப் ”பிறப்பே குடிமை ஆண்மை” (மெய்ப்பாட்டியல் நூ.25) என்பதிலிருந்து அறியலாம். இதிலிகுந்து ஆண், பெண் என்னும் வேறுபாடின்றி ஒருவருடைய வலிமை, வீரம், ஆற்றல், கொடை, அருள் போன்றவற்றைப் பாடுவதே பாடாண்திணை ஆகும். பாடாண் திணைக்கென எந்தப் பூவும் குறிக்கப் பெறவில்லை. இத்திணையைத் தொல்காப்பியர் கைக்கிளை என்னும் அகத்திணைக்குப் புறனாகக் காட்டுகிறார். பாடாண் திணை 48 பகுதிகளை உடையது. அவற்றுள் முதற்பகுதி திணைவிளக்கமாகும். எஞ்சியவை துறைகளை விளக்குவனாம்.

**பாடாண் திணையும் அதன் துறைகளும்**

**பாடாண் பாட்டே வாயில் நிலையே**
**கடவுள் வாழ்த்தொடு பூவை நிலையே**
**பரிசில் துறையே இயல்மொழி வாழ்த்தே**
**கண்படை நிலையே துயில்எடை நிலையே**
**மங்கல நிலையொடு விளக்கு நிலையே**
**கபிலை கண்ணிய புண்ணிய நிலையே**
**வேள்வி நிலையொடு வெள்ளி நிலையே**
**நாடு வாழ்த்தொடு கிணையது நிலையே**
**களவழி வாழ்த்தே**
**வீற்றுஇனிது இருந்த பெருமங் கலமே**
**குடுமி களைந்த புகழ்சாற்று நிலையே**
**மணமங் கலமே பொலிவுமங் கலமே**
**நாள்மங் கலமே பரிசில் நிலையே**
**பரிசில் விடையே ஆள்வினை வேள்வி**
**பாணாற்றுப் படையே கூத்தராற்றுப் படைய**
**பொருநராற்றுப் படையொடு விறலியாற்றுப் படையே**
**வாயுறை வாழ்த்தே செவியறி வுறூஉக்**
**குடைமங் கலமொடு வாள்மங் கலமே**
**மண்ணுமங் கலமே ஓம்படை ஏனைப்**
**புறநிலை வாழ்த்தும் உளப்படத் தொகைஇ**
**அமரர்கண் முடியும் அறுவகை யாகிய**
**கொடிநிலை கந்தழி வள்ளி குணம்சால்**
**புலவரை அவர்வயின் புகழ்ந்தாற்றுப் படுத்தல்**
**புகழ்ந்தனர் பரவல் பழிச்சினர் பணிதல்**
**நிகழ்ந்த காமப் பகுதியுள் தோன்றிய**
**கைக்கிளை வகையும் பெருந்திணை வகையும்**
**நல்துனி நவின்ற பாடாண் பாட்டும்**
**கடவுள் பக்கத்தும் ஏனோர் பக்கத்தும்**
**மடவரல் மகளிர் மகிழ்ந்த பக்கமும்**

**மாதர் மகிழ்ந்த குழவியும் ஊரின்**
**கண்ணே தோன்றிய காமப் பகுதியொடு**
**ஆங்க ஆறுஎண் பகுதிப் பொருளும்**
**பாங்குற உரைப்பது பாடாண் பாட்டே**

பல்லாற்றானும் சிறப்புப்பெற்று விளங்கும் ஒருவனின் புகழை எடுத்துரைப்பது பாடாண்திணையாகும். 1.வாயிற்காவலனிடம் கூறுதல் 2. அரசன் வணங்கும் தெய்வத்தை வாழ்த்துதல் 3. திருமாலைக் காயாம்பூவோடு ஒப்பிடுதல் 4. தான் விரும்பிய பொருளை இரவலன் கேட்டல் 5. பிறன் போலக் கொடுப்பாய் எனக் கூறுதல் 6. அரசனின் துயில்நிலையைப் பாராட்டுதல் 7. உறக்கத்திலிருந்து எழுவித்தல் ரூஎழுந்த அரசனுக்கு மங்கலம் கூறுதல் 9. திருவிளக்கு நிலையைக் கூறுதல் 10.அரசன் கொடை கொடுக்கும் பசுவின் சிறப்பைக் கூறுதம் 11.அவனுடைய வேள்வியைச் சிறப்பித்தல்.

12. செங்கோன்மையைப் புகழ்தல் 13. அரசனின் நாட்டை வாழ்த்துதல் 14. கிணைவன் தான் பெற்ற வளத்தைக் கூறுதல் 15. போரில் பெற்ற செல்வத்தைப் புகழ்தல் 16. அரியணையில் வீற்றிருந்த சிறப்பைக் கூறுதல் 17. பகையரசனின் குடுமியைக் களைதல் 18 மகளிை மணந்தமையைக் கூறுதல் 19.மகப்பேற்றினைச் சிறப்பித்தல் 20 பிறந்தநாளைக் கொண்டாடுதல் 21. பரிசு பெற்றோல் ஊருக்குச் செல்ல நினைத்தல் 12.அரசன் பரிசு வழங்குதல் 23 அரசனின் இல்லறசிறப்ப கூறுதல் 34. பனைப் பாணன் ஆற்றுப்படுத்தல் கூத்தரைக் கூத்தர் ஆற்றுப்படுத்தல் 26. பொருநனைப் பொருநன் ஆற்றுப்படுத்தல் 27.விறலியை விறலி ஆற்றுப்படுத்தல் 28. பெரியோர் மொழியின் சிறப்பினைக் கூறுதல் 29. நிலைபெற்ற கருத்தினை அறிவுறுத்தல் 30. குடையைப் புகழ்தல் 31. வாளைப் புகழ்தல் 32. மங்கல நீராடுதலைச் சிறப்பித்தல் 33. அரசனுக்குச் சான்றோர் அறிவுரை கூறுதல் 34. வழிபடு தெய்வம் காக்குமாறு வாழ்த்துதல் 35. அரசனின் கொடியைத் தெய்வக் கொடியோடு ஒப்பிடுதல் 36. திருமாலின் வெற்றியைப் புகழ்தல் 37.மகளிர் வெறியாடுதல் 38. புலவனைப் புலவன் ஆற்றுப்படுத்தல் 39. நினைத்ததைப் பெறுவதற்காக இறைவனைத் தொழுதல்.

40. உலக இன்பம் வேண்டி இறைவனைத் தொழுதல் 41. தலைவனின் மாலையைப் பெண் விரும்புதல் 42. தன்னை விரும்பாத தலைவனை ஒருத்தி தழுவ விரும்புதல் 43. தலைவனை இனிக் கூடோம் எனக் கூறுதல் 44. கடவுள் பெண்டிர் கடவுளை விரும்புதல் 45. இறைவனை மானிடப்பெண் விரும்புதல் 46. சிறுவனை மங்கை காமுறுதல் 47. தலைவனின் ஊரைச் சிறப்பித்தல் என்னும் நாற்பத்தேழும் பாடாண் திணையின் துறைகளாகும். இவற்றுடன் பாடாண் திணையைச் சேர்க்க உண்டாகும் (6× 8- 48) நாற்பத்தெட்டையும் பாங்குடன் உரைப்பது பாடாண் திணையாகும்.

**1.வாயில் நிலை**

புலவன் ஒருவன் தன் வருகையை மன்னனுக்கு உரைப்பாய் என வாயிற்காவலனிடம் கூறுவது வாயில்நிலை என்னும் துறையாகும். வாயில் வாயிலைக் காப்பவன் நிலை புலவனின் நிலை.

**கொளு:** **புரவலன் நெடுங்கடை குறுகிய என்நிலை**
**கரவின்று உரைஎனக் காவலற்கு உரைத்தன்று.**

புலவன் ஒருவன் ஒரு மன்னனின் நெடிய அரண்மனை வாயிலை அடைந்தான், அதனைக் காவல் காத்து நின்ற வாயிற்காவலரைக் கண்டு என்னுடைய நிலையை மறைவின்றி அரசனுக்குச் சொல்வாயாக எனக் கூறினான். இதனை எடுத்துரைப்பது வாயில்நிலையாகும். புரவலன் - வள்ளல் (அரசன்) கடை- வாயில், குறுகுதல் - அடைதல் கரத்தல் - மறைத்தல்,

**2. கடவுள் வாழ்த்து**

அரசனால் வணங்கப்படுகின்ற கடவுளருள் ஒருவரை உயர்த்திக் கூறுவது கடவுள் வாழ்த்து என்னும் துறையாகும்.

**கொளு : காவல் கண்ணிய கழலோன் கைதொழும்**
**மூவரில் ஒருவனை எடுத்துரைத் தன்று.**

உலகத்தைக் காக்கின்ற தொழிலைக் குறிக்கோளாகக் கொண்டவன் அரசன். வீரக்கழல் அணிந்த அவ்அரசன் முக்கடவுளரை வணங்கும் இயல்புடையவன். அம்மூவருள் ஒருவரை உயர்த்திக் கூறுவது கடவுள் வாழ்த்து எனப்படும். மூவர் - பிரமன், திருமால், சிவன்

**3. பூவைநிலை**

காயாம்பூவினைப் புகழ்ந்து கூறுவது பூவைநிலை என்னும் துறையாகும். பூவைப்பூ காயாம்பூ, இது தற்காலத்தில் காசாம்பூ என வழங்கப்படுகிறது.

**கொளு: கறவை காவலன் நிறனொடு பொரீஇப்**
**புறவுஅலர் பூவைப் பூப்புகழ்ந் தன்று**

ஆதிரைகளைக் காத்தவன் திருமால். அவனுடைய நிறத்தொடு ஒத்துக் காணப்படுவது காயாம்பூ அது காட்டின்கண் மலருகின்ற தன்மை கொண்டது. அப்பூவினைப் புகழ்ந்து கூறுவது பூவைநிலையாகும். கறவை மாடு கறவை காவலன் - திருமால், பொரீஇ : பொரு -ஒப்பிடுதல், புறவு காடு.

**4. பரிசில் துறை**

இரவலன் தான் விரும்பிய பொருளை அரசனிடமிருந்து கேட்பது பரிசில் துறை என்னும் துறையாகும்.

**கொளு: மண்ணகம் காவல் மன்னன் முன்னர்**
**எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று.**

இம்மண்ணுலகைக் காக்கும் தொழிலைச் செய்பவன் அரசன். அவன் முன்னர்ச் சென்றான் ஓர் இரவலன் தான் விரும்பிய பொருள் இதுவென அம்மன்னனிடம் சுட்டிக் கூறினான். இதனை எடுத்துரைப்பது பரிசில் துறையாகும்.

**5. இயல்மொழி வாழ்த்து**

1. முன்னோர் கொடுத்ததைப் போல நீயும் கொடுக்க வேண்டும் எனக் கூறுதல் 2. அரசனுடைய இயல்பினை எடுத்துக் கூறுதல் ஆகிய இரண்டும் இயல்மொழி வாழ்த்து என்னும் துறையாகும். இயல்பு - முன்னோர் இயல்பு' குடி இயல்பு.

**கொளு:** **இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும்**
**அன்னோர் போல அவைஎமக்கு ஈகுஎன**
**என்னோரும் அறிய எடுத்துரைத் தன்று.**

இந்நாட்டை ஆண்ட மன்னர் பலர். அவர்களுள் இன்னின்னவர் இன்னின்ன பொருளைக் கொடுத்தார். அவரைப்போல நீயும் இரவலர் பவருக்குப் பொருளைக் கொடுப்பாயாக என்று பலரும் அறியக் கூறுவர். இதனை எடுத்துரைப்பது இயல்மொழி வாழ்த்தாகும்

**6. கண்படை நிலை**

அரசனுடைய ஆழ்ந்த உறக்கத்தைச் சிறப்பிப்பது கண்படைநிலை என்னும் துறையாகும்.

**கொளு :** **நெடுந்தேர்த் தானை நீறுபட நடக்கும்**
**கடுந்தேர் மன்னவன் கண்படை மலிந்தன்று.**

விரைந்து செல்லும் தேரினை உடையவன் அரசன். அவன் நெடிய தேரினை உடைய பகைவர் படை துகளாகிச் சிதறும்படி ஓடச் செய்தான். அதனால் பகையின்றி இனிதே உறங்கினான். அவ்உறக்கத்தைச் சிறப்பித்துச் சொல்லுவது தேர்ப்படை நீறு - பொடி கண்படை நிலையாகும். தேர்த்தானை

**7. துயில் எடைநிலை**

உறங்கும் அரசனை அவ்உறக்கத்திலிருந்து எழுப்புவது துயில்எடை நிலை என்னும் துறையாகும். தயில் உறக்கம் எடை எடுத்தல் எழுப்புதல்

**கொளு :** **அடுதிறல் மன்னரை அருளிய எழுகஎனத்**
**தொடுகழல் மன்னனைத் துயில்எடுப் பின்று.**

கொல்லும் வலிமை உடையவர் மகைவேந்தர், அத்தன்மையோர்க்கு அருள்புரிய வேண்டுமெனப் படைமறவர் வீரக்கழல் சுட்டிய மன்னனை உறக்கத்திலிருந்து எழுப்புவர். இதுவே துயில்எடை நிலையாகும்.

**8. மங்கல நிலை**

1. துயில் எழுந்த அரசனுக்கு வாழ்த்துக் கூறுதல் 2. ஓர் அரசன் இயல்பாக ஆக்கத்தைப் பெற்றான் எனக் கூறுதல் ஆகிய இரண்டும் மங்கலநிலை என்னும் துறையாகும். மங்கலம் - பெருக்கமாகிய நன்மை.

**கொளு :** **கங்குல் கனைதுயில் எழுந்தோன் முன்னர்**

**மங்கலம் கூறிய மலிவுஉரைத் தன்று.**

இரவுப்பொழுதில் மிகுந்த உறக்கத்தில் ஆழ்ந்தான் அரசன். அவன் விடியற்காலையில் துயில் எழுந்தான். அவ்அரசனின் முன்னர் மேலும் ஆக்கம் உண்டாகட்டும் என வாழ்த்துக் கூறுவர். இந்நிலையை எடுத்துரைப்பது மங்கலநிலையாகும். கங்குல் - இரவு கனை - மிகுதி.

### 9. விளக்கு நிலை

1. அரசனுடைய திருவிளக்கு நிலையைக் கூறுதல் 2.அரசனைக் கதிரவனோடு ஒப்பிட்டுக் கூறுதல் ஆகிய இரண்டும் விளக்கு நிலை என்னும் துறையாகும்.

**கொளு:** **அளப்பரும் கடல்தானையான்**
**விளக்குநிலை விரித்துஉரைத்தன்று.**

அளத்தற்கு அரிய பெரும்பரப்பினை உடையது கடல். அக்கடலைப் போலப் பெரிய படையினை உடையவன் அரசன். அவனுடைய விளக்கு ஒளிமிக்கது. அதன் சிறப்பினைக் கூறுவது விளக்குநிலை ஆகும்.

### 10. கபிலை கண்ணிய புண்ணியநிலை

அரசன் கொடையாகக் கொடுக்கும் பசுவினுடைய சிறப்பினைக்
கூறுதல் கபிலை கண்ணிய புண்ணியநிலை என்னும் துறையாகும். கபிலை கருமை நிறம் கொண்ட பசு கண்ணுதல் கருதுதல்.

**கொளு:** **அண்ணல் நான்மறை அந்தணா ளர்க்குச்**
**கண்ணிய கபிலை நிலை உரைத் தன்று.**

நான்கு வேதத்தினை உணர்ந்தவர் அந்தணர். அவருக்குப் பசுவினைத் தானமாகக் கொடுப்பர். அவ்வாறு கொடுக்கக் கருதிய ஆவினது தன்மையைக் கூறுவது கபிலை நிலையாகும். அண்ணல்- அரசன் கண்ணிய புண்ணிய

### மாதிரி வினாக்கள்

1. வெட்சி, வெட்சி அரவம் குறித்து எழுதுக.
2. வஞ்சித் திணையும் அதன் துறைகளையும் குறித்து விவரிக்க.
3. வெட்சி திணையின் கொற்றவை நிலையைக் கூறுக.
4. பேக்காஞ்சி குறித்து எழுதுக.

5. நொச்சி திணையும் அதன் துறைகளையும் விளக்குக.

6. உழிஞை திணையின் தானை மறம், யானை மறம், குதிரை மறம் குறித்து விவரிக்க.

7. அரசவாகை, முரசவாகை குறித்து ஆராய்க.

8. பாடாண் திணையின் மங்கள நிலைக்குறித்து கட்டுரைக்க.

9. தும்பைத் திணையின் நூழில், நிழில் ஆட்டு குறித்து விவரி.

10. பாடாண் திணையில் இடம் பெறும் ஆற்றுப்படை துறைகள் குறித்து கட்டுரைக்க.

**இயல் -05**

**01. அரச வாகை**

வாகை வேந்தனின் செங்கோல் சிறப்பை எடுத்துரைப்பது அரசவாகை என்னும் துறையாகும்.

**கொளு :** **பகல்அன்ன வாய்மொழி**
**இகல்வேந்தன் இயல்புஉரைத்தன்று.**

நுகத்தடியின்கண் நடுவில் அமைவது பகலா. அது போன்று வாய்மையில் பிறழாத நடுவுநிலைமை உடைய சொல்லைக் கூறுபவன் வாகை வேந்தன். அவன் மாறுபாட்டால் சிறந்தவன்: அவ.அரசனின் இயல்பினைக் கூறுவது அரசவாகை ஆகும

**02. உண்டாட்டு**

வெட்சி மறவர் கள்ளினை உண்டு தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது உண்டாட்டு என்னும் துறையாகும்.

**கொளு:** **தொட்டு இமிழும் கழன்மறவர்**
**மட்டுஉண்டு மகிழ்தூங்கின்று.**

ஒலிக்கின்ற வீரக்கழலை உடையவர் வெட்சி மறவர். அம்மறவர் தாம்வென்ற மகிழ்ச்சியால் கள் உண்டு களித்து ஆடுவர். இதுவே உண்டாட்டு ஆகும். தொடுதல்கட்டுதல். இமிழ்தல் ஒலித்தல். மட்டு - கள்.

**03. இயல்மொழி வாழ்த்து**

1. முன்னோர் கொடுத்ததைப் போல நீயும் கொடுக்க வேண்டும் எனக் கூறுதல் 2. அரசனுடைய இயல்பினை எடுத்துக் கூறுதல் ஆகிய இரண்டும் இயல்மொழி வாழ்த்து என்னும் துறையாகும். இயல்பு - முன்னோர் இயல்பு' குடி இயல்பு.

**கொளு:** **இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும்**
**அன்னோர் போல அவைஎமக்கு ஈருஎன**
**என்னோரும் அறிய எடுத்துரைத் தன்று.**

இந்நாட்டை ஆண்ட மன்னர் பலர். அவர்களுள் இன்னின்னவர் இன்னின்ன பொருளைக் கொடுத்தார். அவரைப்போல நீயும் இரவலர் பவருக்குப் பொருளைக் கொடுப்பாயாக என்று பலரும் அறியக் கூறுவர். இதனை எடுத்துரைப்பது இயல்மொழி வாழ்த்தாகும்

**04. ஏறாண்முல்லை**

மறக்குடியின் மேலோங்கும் ஒழுக்கத்தினைச் சிறப்பித்துக் கூறுவது ஏறாணமுல்லை என்னும் துறையாகும். ஏறுஆண்டீ ஏதாண். ஏறு மென்மேல் உயர்தல், ஆண் ஆளும்தன்மை.

**கொளு:** **மாறுஇன்றி மறம்கனலும்**
**ஏறாண்குடி எடுத்துஉரைத்தன்று.**

பகைவரைப் பெறாத பொழுதும் மிகுந்த சினம் கொள்வது மறக்குடி ஆகும். அக்குடி மேன்மேல் உயர்கின்ற ஆண்மைத் தன்மையினை உடைய குடியாகும். அக்குடியின் ஒழுக்கத்தினைச் சிறப்பித்துக் கூறுவது ஏறாண் முல்லையாகும். மாறு இன்றி - பகைவர் இல்லாமல்

**05. எருமை மறம்**

புறமுதுகிட்டு ஓடும் தன்படை மீது சினந்து. எதிர்த்து வரும் பகைவரைத் தடுத்து திறுத்துவது எருமைமறம் என்னும் துறையாகும். தன்னைக் கொன்று தின்ன வரும் வலிமையுடைய

புலி சிங்கங்களை எதிர்த்து மூர்க்கத்தனமாகப் போர் செய்யயல்லது எருமை. அதனைப் போலப் பகைவரை எதிர்த்து நின்று தடுக்கும் மறவனின் ஆண்மையைக் கூறுவது எருமை மறம

**கொளு: வெயர்பொடிப்பச் சினம்கடைஇப்**
**பெயர்படைக்குப் பின்நீன்றன்று.**

பகைவரின் படைக்குத் தோற்றோடும் தம் மறவரைக் கண்டான் மறவன் ஒருவன். அதனால் அவன் வியர்வை தோன்றும்படியாக மிகுந்த சினம் கொண்டான். புறமுதுகிட்டு ஓடும் தன் படைக்குப் பின்னாக நின்று பகைப்படை முன்னேறி வரமுடியாதபடி போரிட்டான். இந்நிலையை எடுத்துரைப்பது எருமை மறமாகும். வெயர் -வியர்வை. பொடித்தல் - துளிர்த்தல்

**06. கடவுள் வாழ்த்து**

அரசனால் வணங்கப்படுகின்ற கடவுளருள் ஒருவரை உயர்த்திக் கூறுவது கடவுள் வாழ்த்து என்னும் துறையாகும்.

**கொளு : காவல் கண்ணிய கழலோன் கைதொழும்**
**மூவரில் ஒருவனை எடுத்துரைத் தன்று.**

உலகத்தைக் காக்கின்ற தொழிலைக் குறிக்கோளாகக் கொண்டவன் அரசன். வீரக்கழல் அணிந்த அவ்அரசன் முக்கடவுளரை வணங்கும் இயல்புடையவன். அம்மூவருள் ஒருவரை உயர்த்திக் கூறுவது கடவுள் வாழ்த்து எனப்படும். மூவர் - பிரமன், திருமால், சிவன்

**07. குடைமங்கலம்**

அரசனுடைய குடையினைச் சிறப்பித்துக் கூறுவது குடைமங்களம் என்னும் துறையாகும். குடை - வெண்கொற்றக் குடை

**கொளு : நாற்றிசையும் புகழ்பெருக**
**வீற்றிருந்தான் குடைபுகழ்ந்தன்று.**

நான்கு திசைகளிலும் தம்முடைய புகழைப் பரவச் செய்தவன் அரசன். அவன் வெண்கொற்றக் குடையின்கீழ் அமைந்த அரியணைமீது செம்மாந்து வீற்றிருந்தான். அக்குடையினது சிறப்பை எடுத்துரைப்பது குடைமங்கலம் ஆகும்.

**08. குதிரை மறம்**

தும்பை அரசனுடைய குதிரைகளின் திறத்தை மிகுத்துச் சொல்லுவது குதிரை மறம் என்னும் துறையாகும் மதிலகத்துப் பாய்கின்ற குதிரையின் சிறப்பினைக் கூறும் தொச்சித்திணையின் குதிரை மறத்தை ஈண்டு ஒப்பிட்டு அறிக

**கொளு: எறிபடையான் இகல்அமருள்**
**செறிபடைமான் திறம்கிளந்தன்று.**

எறிந்து கொல்லும் வேற்படையால் சிறந்தவன் தும்பை வேந்தன். அவன் தன்னை எதிர்த்து வந்த பகைவருடன் பெரிய போரினைச் செய்தாள். அவனுடைய குதிரை போராற்றல் மிகுந்தது. அதன் இயல்பினைக் கூறுவது குதிரை மறமாகும். எறிபடை - வேல், மா(ன்) - குதிரை: னகரம் எழுத்துப்பேறு

**08. குதிரை மறம்**

குதிரைப்படையின் மறமாண்பினைப் பாராட்டிக் கூறுவது குதிரை மறம் என்னும் துறையாகும்.

**கொளு : ஏமாண்ட நெடும்புரிசை**
**வாமானது வகைஉரைத்தன்று.**

அம்புகளை எய்யும் தொழிலால் சிறப்புற்று விளங்குவது நொச்சியாரின் நீண்ட மதிலாகும். அம்மதிலகத்துத் தாவுகின்ற குதிரையின் சிறப்பைச் சொல்வது குதிரை மறமாகும். ஏ-அம்பு, புரிசை -மதில், வாவுதல் தாவுதல்.

**09. கையறுநிலை**

தான் தலைவனின் இறப்பால் செய்வதறியாது பாணன் திகைத்து நிற்றலே கையறுநிலை என்னும் துறையாகும். கை செயல்' அறு- அற்றுப் போதல்.

**கொளு : வெருவரும் வாளமர் விளிந்தோன் கண்டு**
**கருவி மாக்கள் கையறவு உரைத்தன்று.**

வெட்சியாரும் கரந்தையாரும் மேற்கொண்ட வாட்போர் மிகவும் அச்சத்தைத் தருவதாய் அமைந்திருந்தது. அப்போரின்கண் இறந்துபட்டான் ஒரு கரந்தை மறவன். அவனைப் பார்த்து யாழ் வாசித்தலில் வல்லவர்களான பாணர்கள் வருத்தமுற்று நிலைகுலைந்தனர். இந்நிலையைக் கூறுவது கையறுநிலையாகும். வெருவுதல் - அஞ்சுதல், கருவி இசைக்கருவி மாக்கள் பாணர்.

**10. செருவிடை வீழ்தல்**

பகைவர் உள்ளே நுழைய முடியாதபடி அரணைக் காக்கப் போரிட்டு இறந்த மறவரைப் பாராட்டுவது செருவிடை வீழ்தல் என்னும் துறையாகும். செரு ¸ இடை ¸ வீழ்தல் செருவிடை வீழ்தல். போர்க்களத்தின்கண் இறந்துபடுதல்.

**கொளு :** **ஆழ்ந்துபடு கிடங்கோடு அருமிளை காத்து**
**வீழ்ந்த வேலோர் விறல்மிகுத் தன்று.**

ஆழமுடைய அகழியையும் அரிய காவற்காட்டையும் காப்பதற்காகப் போர் செய்தனர் நொச்சி மறவர். அப்போரில் வேலினைக் கையில் ஏந்திய நொச்சி மறவர் இறந்துபட்டனர். அம்மறவர்களின் மறப்பெருமையைச் சிறப்பித்துக் கூறுவர்.இதுவே செருவிடை வீழ்தலாகும். வீழ்ந்த வேலோர் - வேலினை உடைய நொச்சி மறவர்.

### 11. செவியறிவுறூஉ

ஓர் அரசனுக்கு அறிவுரை கூறுவது செவியறிவுறூஉ என்னும் துறையாகும். செவிக்கு அறிவுறுத்துவதால் இப்பெயர் பெற்றது.

**கொளு:** **மறந்திரிவு இல்லா மன்பெரும் சூழ்ச்சி**
**அறம்தெரி கோலாற்கு அறிய உரைத்தன்று.**

அறத்தினை ஆராய்ந்து ஆட்சி புரிபவன் செங்கோல் அரசன். அவனுக்கு மறமும் பிறழ்ச்சியும் இவ்வாத நல்லுரைகளை உணரும்படியாகச் சான்றோர் கூறுவர். இதுவே செவியறிவுறூஉ ஆகும். பெரும்சூழ்ச்சி - நற்கருத்து.

### 12. தாபத வாகை

துறவியரின் தவநெறி பிறழாத வாழ்வினைப் போற்றி உரைப்பது தாபத வாகை என்னும் துறையாகும். தாபதர் - தவம் செய்யும் முனிவர்.

**கொளு :** **தாபத முனிவர் தவத்தொடு முயங்கி**
**ஓவுதல் அறியா ஒழுக்குஉரைத் தன்று.**

தலத்தினைச் செய்பவர் தாபதர். முனிவராகிய இவரி, தாம் மேற்கொண்ட ஒழுக்கத்தில் பிறழாது பொருந்தி நிற்பர். அவ்வொழுக்க மேம்பாட்டினைச் சிறப்பிப்பது தாபத வாகையாகும். முயங்குதல் ஒழுக்கங்களைத் தழுவி நிற்றல். ஓவுதல் - பிறழ்தல்,

தொன்றுதொட்டு சிறந்து விளங்குவது மறக்குடி. அக்குடியில் தோன்றியவர் கொல்லும் வேலினை ஏந்திய மறவர் அவ்ஆடவரே அல்லாமல் அக்குடிக்கண் பிறந்த பெண்களும் மறமாண்பில் சிறந்து விளங்கினர். அப்பெண்டிரின் மறத்தன்மையினை மிகுந்துக் கூறுவது மூதின்முல்லையாகும்.

**14.தானை நிலை**

இருபக்கத்து மறவர்களும் தன் புகழைப் பேசும்படி மறவன் ஒருவன் மேம்பட்டு நிற்றலைச் சிறப்பித்துக் கூறுவது தானை நிலை என்னும் துறையாகும். தானை - படை: படைமறவரைக் குறித்தது.

**கொளு: இருபடையும் மறம்பழிச்சப்**
**பொருகளத்துப் பொலிவுஎய்தின்று.**

போர்க்களத்தின்கண் இருபக்கத்துப் படைகளும் மாறுபட்டு நிற்பன. அவை ஒருசேரத் தன் வீரத்தைப் பாராட்டும் படி மேம்பட்டு நின்றவனைச் சிறப்பித்துக் கூறுவது தானைநிலை ஆகும். மறம் வீரம். பழிச்சுதல் - புகழ்தல்,

**15.தானை மறம்**

1. இருகிறத்துப் படைகளும் போர் செய்து அழியாமல் காத்தது (127) தானைமறம் என்னும் துறையாகும். 2. போரினை விரைந்து மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்துவதும் இத்துறைக்கு உரியதாகும். வேற்படை மறவரின் சிறப்பினை எடுத்துக் கூறுவதும் இத்தானைமறம் ஆகும்.

**கொளு: தாம்படைத் தலைக்கொள்ளாமை**
**ஓம்படுத்த உயர்புகூறின்று.**

ஒத்த வலிமை கொண்ட படைகள் வெகுண்டு போர் செய்தால் ஒருவகும் மிஞ்சாமல் போர்க்களத்தின்கண் இறந்துபடுவர். அதன் காரணமாக இருதிறப் படைகளுக்கும் போர் ஏற்படாமல் பாதுகாப்பர். அவ்உயர்வுத் தன்மையை விளக்குவது தானைமறமாகும். ஓம்படுத்தல் பாதுகாத்தல்.

**16. தொகைநிலை**

உழிஞை வேந்தனின் ஆற்றலைக் கண்ட பகைவேந்தர் பலரும் அவனிடம் தஞ்சம் புகுவது தொகைநிலை என்னும் துறையாகும். அடிபணிய அரசர் பலரும் தொகுதியாக (கூட்டமாக)வந்ததால் இது தொகை நிலையாயிற்று.

**கொளு: எம்மதிலின் இகல்வேந்தரும்**
**அம்மதிலின் அடிஅடைந்தன்று.**

உழிஞை வேந்தன் ஒரு நொச்சி வேந்தனை வீழ்த்தி வெற்றி கண்டான். அதனை அறிந்த நொச்சியரசர் பலரும் அவ்அரசனிடம் வந்து தம் மாறுபாட்டைக் கைவிட்டுப் பணிந்து நின்றனர். இதனை எடுத்துரைப்பதே தொகை நிலையாகும். அடி அடைதல் - பணிதல்,

**19. நெடுமொழி கூறல்**

ஒரு வீரன் தன் ஆற்றலைத் (பெருமையைத்) தானே எடுத்துக் கூறுவதே நெடுமொழி கூறல் என்னும் துறையாகும். நெடுமொழி தற்புகழ்ச்சி. அதாவது ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்வது. இது குற்றம் உடையதாயினும் சில இடங்களில் குணமாகக் கொள்ளப்படும்.

**கொளு:** **மன்மேம் பட்ட மதிக்குடை யோற்குத்**
**தன்மேம் பாடு தான்எடுத்து உரைத்தன்று.**

அரசர்களுள் சிறந்தவனாக விளங்குபவன் சுரந்தை அரசன். அவன் குளிர்ந்த திங்கள் போன்ற வெண்கொற்றக் குடையினை உடையவன். அவனுடைய போர் மறவர்களுள் ஒருவன் தன் பெருமையினைத் தாலே கூறித் தம் அரசனை மகிழ்ச்சியடையச் செய்தான். இதுவே நெடுமொழி கூறல் ஆகும். மன் - மன்னர். மேம்பாடு சிறந்திருத்தல்.

## 20. நூழில் ஆட்டு

தன் உடலில் புகுந்த வேவைப் பறித்துப் பகைவர் ஓட ஏறிவது நூழில் ஆட்டு என்னும் துறையாகும்.

**கொளு :** **களம்கழுமிய படைஇரிய**
**உளம்கிழித்தவேல் பறித்துஓச்சின்று.**

ஒரு தும்பை மறவன் தன் பகைவர்களை எதிர்த்துப் போரிட்டான். அப்பகைவர் எறிந்த வேல் ஒன்று அம்மறவனின் மார்பைக் கிழித்து உள்ளே சென்றது. அந்த வேலைப் பறித்துத் தன் பகைவர் போர்க்களத்தை விட்டு ஓடும்படியாக விசினான். இதுவே நூழில் ஆட்டு ஆகும். கழுமுதல் நிறைந்திருத்தல், இரிதல் - நீங்குதல், உளம் உள்ளம்' மார்பு

## 21. பரிசில் துறை

இரவலன் தான் விரும்பிய பொருளை அரசனிடமிருந்து கேட்பது பரிசில் துறை என்னும் துறையாகும்.

**கொளு:** **மண்ணகம் காவல் மன்னன் முன்னர்**
**எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று.**

இம்மண்ணுலகைக் காக்கும் தொழிலைச் செய்பவன் அரசன். அவன் முன்னர்ச் சென்றான் ஓர் இரவலன் தான் விரும்பிய பொருள் இதுவென அம்மன்னனிடம் சுட்டிக் கூறினான். இதனை எடுத்துரைப்பது பரிசில் துறையாகும்.

1. அரசனுடைய திருவிளக்கு நிலையைக் கூறுதல் 2.அரசனைக் கதிரவனோடு ஒப்பிட்டுக் கூறுதல் ஆகிய இரண்டும் விளக்கு நிலை என்னும் துறையாகும்.

**கொளு:** **அளப்பரும் கடல்தானையான்**
**விளக்குநிலை விரித்துஉரைத்தன்று.**

அளத்தற்கு அரிய பெரும்பரப்பினை உடையது கடல். அக்கடலைப் போலப் பெரிய படையினை உடையவன் அரசன். அவனுடைய விளக்கு ஒளிமிக்கது. அதன் சிறப்பினைக் கூறுவது விளக்குநிலை ஆகும்.

**22. புலவராற்றுப்படை**

அருள்பெற்ற புலவன் அது பெறாத மற்றொரு புலவனை ஆற்றுப்படுத்துவது புலவராற்றுப்படை என்னும் துறையாகும்.

**கொளு:** **இருங்கண்வானத்து இமையோர்உழைப்**
**பெரும்புலவனை ஆற்றுப்படுத்தன்று.**

பெரிய இடமாக விளங்குவது விண்ணுலகம். அங்கு வாழ்வோர் தேவர். அவரிடத்துச் செல்லுமாறு ஓர் அறிவாளனை மற்றொரு பேரறிவாளன் வழிப்படுத்துவான். இதனை எடுத்துரைப்பது புலவராற்றுப்படையாகும்.

**23. தொகைநிலை**

இருநாட்டு அரசர்களும் இறந்துபட அவர்தம் போர் மறவர் தொடர்ந்து போர் செய்து இறப்பது தொகைநிலை என்னும் துறையாகும். எல்லோரும் தொகுதியாக இறந்ததால் இது தொகைநிலை எனப்பெயர் பெற்றது. உழிஞை அரசனுடன் போரிட இயலாமல் நொச்சி வேந்தர் பலரும் அடிபணிவது உழிஞைத் திணையின் தொகைநிலை (28) என்பதை ஈண்டு ஒப்பிட்டு அறிக

**கொளு:** **அழிவின்று புகழ்நிறீஇ**
**ஒழிவின்று களத்துஒழிந்தன்று.**

நிலையில்லாதது இவ்உலகம் இதில் நிலைத்த புகழைப் பெற இருபெரும் வேந்தரும் போர் செய்து அழிந்தனர். அவர்களோடு அவர்தம் மறவருள் ஒருவரும் தப்பாமல் அப்போர்க்களத்தில் இறந்தனர். இந்நிலையைக் காட்டுவதே தொகைநிலை ஆகும். ஒழிவின்று தப்பாமல்.

**23. பூவைநிலை**

காயாம்பூவினைப் புகழ்ந்து கூறுவது பூவைநிலை என்னும் துறையாகும். பூவைப்பூ காயாம்பூ, இது தற்காலத்தில் காசாம்பூ என வழங்கப்படுகிறது.

**கொளு:** **கறவை காவலன் நிறனொடு பொரீஇப்**
**புறவுஅலர் பூவைப் பூப்புகழ்ந் தன்று.**

ஆதிரைகளைக் காத்தவன் திருமால். அவனுடைய நிறத்தொடு ஒத்துக் காணப்படுவது காயாம்பூ அது காட்டின்கண் மலருகின்ற தன்மை கொண்டது. அப்பூவினைப் புகழ்ந்து கூறுவது பூவைநிலையாகும். கறவை மாடு கறவை காவலன் - திருமால், பொரீஇ : பொரு -ஒப்பிடுதல், புறவு காடு.

**25. பேய்க் காஞ்சி**

புண்பட்டுக் கிடப்பவனைப் பேய் அச்சுறுத்துவது பேய்க்காஞ்சி என்னும் துறையாகும்.

**கொளு :** **பிணம்பிறங்கிய களத்துவீழ்ந்தார்க்கு**
**அணங்குஆற்ற அச்சுறீஇயன்று.**

போர்க்களத்தின்கண் மிகுதியாகப் பிணங்கள் கிடந்தன. அங்கு விழுப்புண்பட்டு வீழ்ந்து கிடந்தாள் மறவன் ஒருவன். அவனை நெருங்கி ஒருபேய் மிகவும் அச்சுறுத்தியது. இதனை எடுத்துரைப்பது பேய்க் காஞ்சியாகும். பிறங்குதல் - மிகுதல், அணங்கு-பேய் ஆற்ற- மிகுதி

**26. பெருங்காஞ்சி**

காஞ்சி மறவர் போரின்கண் தமது மறப்பெருமையை வெளிப்படுத்துவது பெருங்காஞ்சி என்னும் துறையாகும் பெருமைகாஞ்சி-பெருங்காஞ்சி. பெருமை -மறப்பெருமை.

**கொளு:** **தாங்குதிறல் மறவர் தத்தம் ஆற்றல்**
**வீங்குபெறும் படையின் வெளிப்படுத் தன்று.**

பகைவராகிய வஞ்சி மறவரின் படையைத் தடுக்கும் ஆற்றலினை உடையவர் காஞ்சி மறவர். அவர்கள் தங்களுடைய பேராற்றலை வஞ்சியாரை எதிர்த்துப் போர் செய்யும் வகையால் வெளிப்படச் செய்வர் இதுவே பெருங்காஞ்சியாகும். தாங்குதல் - தடுத்தல், திறல்- ஆற்றல்,

**27. மகட்பால் இகல்**

நொச்சியரசனின் மகளை விரும்பி உழிஞையரசன் மதிற்புறத்தில் தங்கியிருத்தலே மகட்பால் இகல் என்னும் துறையாகும்.

**கொளு :** **மயில்சாயல் மகள்வேண்டிய**
**கயில்கழலோன் நிலைஉரைத்தன்று.**

மூட்டுவாயால் சிறந்த வீரக்கழலினை உடையவன் உழிஞை வேந்தன். அவன் மயில் போன்ற சாயலினை உடைய நொச்சியாரின் மகளை மணம் செய்ய விரும்பினான். அந்நிலையை உரைப்பது மகட்பால் இகல் என்பதாகும். கயில் மூட்டுவாய்,

**28. மகட்பாற் காஞ்சி**

தன் மகளைக் கேட்கும் வஞ்சியரசனோடு காஞ்சியரசன் மாறுபட்டு நிற்பது மகட்பாற் காஞ்சி என்னும் துறையாகும். மகளை அடிப்படையாகக் கொண்டு மாறுபட்டு நிற்பதால் இது மகட்பாற் காஞ்சியாயிற்று. மகள்ூபால்ூகாஞ்சி - மகட்பாற் காஞ்சி.

**கொளு:** **ஏந்திழையாள் தருகஎன்னும்**
**வேந்தனோடு வேறுநின்றன்று.**

காஞ்சியரசனின் மகள் அழகிய அணிகலன்களை அணிந்தவள். அவளைத் தனக்கு மணம் முடித்துத் தருக என்று வஞ்சி வேந்தன் கேட்டான். அதற்குக் காஞ்சியரசன் உடன்படவில்லை. இதனை விளக்குவதே மகட்பாற் காஞ்சியாகும். இழை - அணிகலன் வேறு நிற்றல் மறுத்தல்

**29. மூதின் முல்லை**

பழமை வாய்ந்த மறக்குடியில் பிறந்த பெண்டிரின் மறப்பண்பினைச் சிறப்பித்துக் கூறுவது மூதீன்முல்லை என்னும் துறையாகும்.

**கொளு:** **அடல்வேல் ஆடவர்க்கு அன்றியும் அவ்இல்**
**மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று.**

**30. வஞ்சினக் காஞ்சி**

காஞ்சி மன்னன் சூளுரைப்பது வஞ்சினக்காஞ்சி என்னும் துறையாகும். வன்மை ூ சினம் - வஞ்சினம். உறுதிபடச் சினந்து கூறுதல் இதனை இக்காலத்தில் சபதம் செய்தல் எனக் கூறுவர்.

**கொளு:** **வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப**
**வஞ்சினம் கூறிய வகைமொழிந் தன்று.**

கொடிய சினத்தினைக் கொண்டவன் காஞ்சிவேந்தன். அவன் தன் நாட்டை விரும்பிப் படையெடுத்து வந்த வஞ்சி வேந்தனை வென்று தன் காலடியில் பணியச் செய்வேன் எனச் சூளுரைத்தான். இவ்வாறு குளுரைப்பதே வஞ்சினக் காஞ்சியாகும். வேற்றவர்-பகைவர் பணித்தல்-அடிமைப்படுத்துதல்.

**31. வல்லாண் முல்லை**

மறவன் ஒருவனின் ஆண்மைத் தன்மையை எடுத்துரைப்பது மல்லாண்முல்லை என்னும் துறையாகும். வன்மை ூஆண்டீ வல்லாண்: வலிமையுடைய ஆண்மைத் தன்மை.

**கொளு:** **இல்லும் பதியும் இயல்பும் கூறி**
**நல்லாண் மையை நலம்மிகுத் தன்று.**

1. குடி 2. ஊர் 3. இயல்பு ஆகியவற்றால் தன்மை பொருந்தி நிற்பவன் மறவன். அந்தல்லோனின் ஆண்மைத் தன்மையின் நலத்தைச் சிறப்பித்துக் கூறுவது வல்லாண் முல்லையாகும். இல்-குடி பதி-ஊர்

**33. விறலியாற்றுப் படை**

பரிசில் பெற விரும்பும் ஒரு விறலியை ஒரு வள்ளலிடம் ஆற்றுப்படுத்தியது விறலியாற்றுப்படை என்னும் துறையாகும். திறம்பட ஆடும் ஆற்றல் கொண்டோர் விறலி இவர் கூத்தரின் மனைவியர் ஆவார்.

**கொளு:** **திறல்வேந்தன் புகழ்பாடும்**
**விறலியை ஆற்றுப்படுத்தன்று.**

வெற்றியால் அமைந்த புகழினை உடையவன் ஒரு வேந்தன். அவனுடைய புகழைப் பாடும் தன்மை கொண்டவள் விறலி. அவ்விறலியை ஒரு வள்ளலிடம் பரிசில் பெறுமாறு ஆற்றுப்படுத்துவர். இதனை எடுத்துரைப்பது விறலியாற்றுப் படையாகும்.

**மாதிரி வினாக்கள்**

1. அரச வகை குறிப்பு தருக.

2. இயன்மொழி வாழ்த்து – விளக்குக

3. கையறுநிலை குறித்து எழுதுக.

4. உடண்பாட்டு நிலைகளை வரையறுக்க.

5. பூவை நிலை குறித்து எழுதுக.

6. ஏறாண் முல்லை, வல்லாண் முல்லை மூதின் முல்லை விவரிக்க

7. செருவிடை வீழ்தல், செவியறிவுறூஉ பற்றிக் கட்டுரைக்க.

8. பேய்க் காஞ்சி, பொருண்மொழிக் காஞ்சி, குறித்து ஆய்க.

9. எருமை மறம், குதிரை மறம், தானை மறம் குறித்து விளக்குக.

10. தாபத நிலை, தபுதார நிலை – கட்டுரைக்க

**பாட நூல்கள்**

1. நம்பிஅகப்பொருள், கழக வெளியீடு, சென்னை.

2. புறப்பொருள் வெண்பாமாலை, கழக வெளியீடு, சென்னை.

3. புறப்பொருள் வெண்பாமாலை, தமிழ்ண்ணல் (பதி), மீனாட்சி புத்தக நிலையம், மதுரை 2013.

4. நம்பியகப்பொருள், வித்வான் எம். நாராயணவேலுப்பிள்ளை, பாரி புத்தகப் பண்ணை, சென்னை 2001.

முனைவர் செ. சரவணபெருமாள்
உதவிப்பேராசிரியர்
தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி - 12
கைபேசி : 9047929744
மின் அஞ்சல்: saravanaperumalmsu@gmail.com